சதகங்களின் சிறப்பு

சதகங்களின் சிறப்பு

ஆசிரியர்

இளங்கீரன்

L. இராமனாதன், M.A.,M.Phil
தமிழ் பேராசிரியர்
தமிழ் துறைத் தலைவர்
அரசு கலைக் கல்லூரி
இராமநாதபுரம்
(இ) அரண்மனை சிறுவயல்

மணிவாசகர் நூலகம்

சிதம்பரம்

வெளியீடு : 2
முதற்பதிப்பு : 1962

விலை ரூ. 3 – 50

அச்சிட்டது : ராமன்ஸ் பிரிண்டிங் பிரஸ், சென்னை – 17

முன்னுரை

செந்தமிழ் மொழிக்கண் சிறந்து விளங்கும் இலக்கியத் தொகுதியுள் பிற்காலத்தில் எழுந்த சதக வகையும் ஒன்றாகும். இவை வழிபடு கடவுளர் களைத் துதிக்கவும், வரலாறு உரைக்கவும், அற முறை விளக்கவும் எழுந்து எண்ணிலவாகப் பெருகி யுள்ளன.

சதக இலக்கியங்களை விரும்பிக் கற்பாரின்மை யினால் அவற்றின் அழகும் சுவையும் இலைமறை காயாக இருந்தன. அவற்றைப் பற்றிய இச்சிறு ஆராய்ச்சி நூலைத் தமிழன்னையின் தளிரடிகளில் சூட்டுவதில் பெரு மகிழ்ச்சி எய்துகின்றேன்.

இந்நூல் வெளிவருவதற்குப் பல்லாற்றானும் துணை புரிந்த பண்புமிகு நண்பர் திரு.மிகு. ச. மெய்யப்பன் எம். ஏ., அவர்களுக்கு என் இதயம் நிறைந்த நன்றி. யான் சோர்வுற்ற பொழுதெல் லாம் ஊக்கமளித்தும், கையெழுத்துப் பிரதியைப் படித்து இன்றியமையாத் திருத்தங்கள் செய்து

உதவியும், அழகுற அமைவதில் பெரும் பங்கு கொண்டும் இத்தகைய சிறந்ததொரு பணியைச் செம்மையுறச் செய்த அப் பெருந்தகையாளருக்குத் தமிழுலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

இந்நூலை வெளியிடுவதில் பெரும் பொறுப் பேற்றுக் கொண்ட சிதம்பரம் மணிவாசகர் நூலக உரிமையாளர்கட்கு நன்றி. நூலை அழகுற அச் சிட்டுத் தந்த சென்னை ராமன்ஸ் அச்சகத்தாருக் கும் நன்றியுடையேன்.

சிறியேன் செய்த இப்பணியில் பிழைகள் இருந் தாலும் அவற்றை நீக்கி, குணத்தைக் கொள்ளு மாறு முத்தமிழ்த்துறையின் முறைபோகிய வித்தகர் களை மிகவும் பணிவன்புடன் வேண்டிக் கொள்ளு கின்றேன்.

இளங்கீரன்

2—3—62

பதிப்புரை

சிற்றிலக்கிய வகையுள் அடங்கும் சதகங்களைப் பற்றிய முதல் ஆராய்ச்சி நூலான இந்நூலினை ஆசிரியர் இளங்கீரன் அரிதின் முயன்று இனிது ஆக்கி நமக்கு அளித்துள்ளார்.

இந்நூலின்கண் சதகங்களின் தோற்றம், குறிக்கோள், காலம், வளர்ச்சி முதலியவற்றின் விரிவான விளக்கங்களுடன் பல்வேறு சதகங்களிடையே தனித் தனியே அமைந்திலங்கும் சிறப்பியல்புகளும், மற்றும் அவற்றிடை மிடைந்து கிடக்கும் பிற மொழிகள் முதலியனவும், தெள்ளிதின் ஆராயப்பெற்றுள்ளன. இறுதியாகப் பிற்காலத்து 96 வகைப் பிரபந்தங் களும் விளக்கிக் கூறப்பட்டுள்ளன. இந்நூல் சதக இலக்கியங்களை ஆராய்வாருக்கு ஒரு சிறந்த முன் னோடியாகவும் வழிகாட்டியாகவும் அமைந்துள்ளது. இஃது ஆசிரியரின் முதன் முயற்சியெனினும் இந் நூலின்கண் அவர்தம் செவ்வியும் சீரியவுழைப்பும் அறிந்து போற்றுதற்குரியன.

இந்நூல் வெளியிடும் வாயிலாக நல்லதோர் ஆசிரியரை நந்தமிழ் நாட்டுக்கு அறிமுகம் செய்து வைப்பதில் மகிழ்வுறுகின்றோம். ஆசிரியரையும் எங்களையும் ஆதரித்து எங்கள் பணிக்குதவுமாறு தமிழ்ப் பெருமக்களை வேண்டுகின்றோம்.

மணிவாசக நூலகத்தார்.

உள்ளுறை

5715

1. சிற்றிலக்கியங்கள்

தமிழ் மொழியின் சீரிளமைத் திறத்தைச் செயல் மறந்து வாழ்த்துகின்றூர் சுந்தரம்பிள்ளை. 'பல்லுயிரும் பல வுலகும் படைத்து, அளித்துத் துடைக்கினும்' எல்லையில்லாப் பரம்பொருள் இருந்தபடியே இருக்கின்றது. அங்ஙனமே 'கன்னடமும் களிதெலுங்கும், கவின் மலையாளமும் தன் னுதரத்திலிருந்து உதித்தெழவும் தமிழன்னை சீரிளமை குன்ருது என்றுங் கன்னியாக நின்று பொலிகின்ருள்.

தமிழ் மொழியின் இலக்கியச் செல்வம் கண்டு இன்புருதார் இல்லை. ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியமும் எட்டுத் தொகையும் பத்துப் பாட்டும், பதினெண் கீழ்க்கணக்கும், ஐம் பெருங் காப்பியங்களும், ஐஞ்சிறு காப்பியங்களும், பக்தி இலக் கியங்களும், சிற்றிலக்கியங்களும் இன்ன பிற கலைக் கருவூலங் களை ஈன்றெடுத்துத் தன் சீரிளமையை நிலையாக்கிக்கொண்டது தமிழ் மொழி. இத்துணை அளவு இலக்கியவளம் பெற்றுத் திகழும் மொழி முத்துறையும் அணி செய்யும் நந்தமிழ் மொழியே யாம்.

ஏறத்தாழ இரண்டாயிரத்து. ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே செந்தமிழ் மொழியில் இலக்கியங்கள் தோன்ற வாரம்பித்தன. அன்று முதல் இன்று வரை என்றும் நின் றிலங்கும் ஏற்றமிகு இலக்கியங்கள் தமிழ் மொழியில் பல தோன்றி வந்துள்ளன. காலத்தையும் சூழ்நிலையையும் ஒட்டி இலக்கியங்கள் பல்வேறு வகையினவாக எழுந்தன.

தமிழ் மொழியின் வளமைக்குச் சான்று பகரும் பல்வேறு இலக்கியங்களிடையே சிற்றிலக்கிய வகையும் இடம் பெறுகின் றது. உலக வழக்கினும் பாடல் சான்ற புலனெறி வழக்கினும் இயன்ற இச் சிற்றிலக்கியங்கள் வாயிலாகப் பல்வேறு புலவர் பெருமக்களின் கற்பனை வளத்தையும் இலக்கிய நலத்தையும்

நாம் அறிகின்றோம். பல்வேறு காலங்களின் அரசியல் சூழ்நிலையையும் அவ்வக் காலங்களில் வாழ்ந்த மக்கள் உளப் பண்பையும் நாம் அறிகின்றோம். இத்தகு சிற்றிலக்கியங்களிலே நாம் உளமொன்றி ஈடுபட்டோமாயின் அவற்றில் உள்ள காவியச் சுவைகள் நம் கண்முன்னே களிநடம் புரியக் காணலாம். அவற்றின் உவமை, உருவகம், தற்குறிப்பேற்றம் முதலிய அணிநலங்கள் நம் உள்ளத்தைக் கவரும் காட்சியைக் காணலாம்.

பிரபந்தம் : சிற்றிலக்கியங்களை வடமொழியில் பிரபந்தம் என்று வழங்குவர். பிரபந்தம் என்ற வடசொல்லுக்கு நன்கு கட்டப்பட்ட நூல் என்பது பொருள். யாப்பு, செய்யுள் என்ற தமிழ்ச் சொற்களும் இப் பொருளைத் தருவனவே. எழுத்து முதலிய பல்வகை உறுப்புக்களால் அகமும் புறமும் ஆகிய பொருளுக்கு இடமாக இயற்றப்பட்டு உள்ளமையின் சிற்றிலக்கியங்கள் பிரபந்தம் என்ற சொல்லால் குறிக்கப் பட்டன.

எண் வரையறை : பிரபந்தங்கள் இத்துணை என்று வரையறுக்கப்பட்டுள்ளதாகக் கூறுகின்றனர்; 'தொண்ணூற்றாறு வகை பிரபந்தங்கள்' எனக் கூறி அவை இன்னின்னவை எனவும் கூறுகின்றனர். ஆனால் இத்தகைய வரையறை தமிழ்ச் சிற்றிலக்கியங்கட்கு எவ்வாற்றானும் பொருந்துவதாக இல்லை. தொண்ணூற்றாறு என்ற வரையறைக்குட்படாத வேறு பல சிற்றிலக்கிய வகைகள் தமிழில் இடம் பெற்றுள்ளதை இன்று காண்கின்றோம். சிற்றிலக்கிய எண் வரையறைக்குள் அடக்கிக் கூறப்பட்ட பல்வேறு சிற்றிலக்கியங்களை இன்று நாம் காணவும் இயலவில்லை.

மேலும் சிற்றிலக்கியங்களின் இலக்கணங்களை விளக்க வெழுந்த பல்வேறு பாட்டியல் நூல்களில் ஒன்றிலேனும் இத்தகைய எண்வரையறையை நாம் காணவில்லை. எண்வரையறைக்குள் அடக்கப்பட்ட சில சிற்றிலக்கியங்களுக்குச் சில பாட்டியல் நூல்களில் இலக்கணமே கூறப்படவில்லை. சிற்றிலக்கிய வகைக்கு இலக்கணம் கூற எழுந்த பாட்டியல் நூல்

களான பன்னிரு பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், இலக்கண விளக்கப் பாட்டியல் ஆகிய நூல்களில் நாம் வரையறைக்குட்பட்ட ஒற்றுமையையும் காணவில்லை. ஒரு பாட்டியல் நூலில் இலக்கணம் கூறப் பட்ட ஒரு சிற்றிலக்கிய வகைக்குப் பிறிதொரு பாட்டியல் நூலில் இலக்கணம் கூறப்படவில்லை. ஆனால் அப்பாட்டியல் நூலில் இலக்கணம் கூறப்படாத பிறிதொரு சிற்றிலக்கியத் திற்கு இரண்டாம் வகைப் பாட்டியல் நூலில் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. எனவே சிற்றிலக்கிய வகை இத்துணைதான் என்று அளவிட்டுக் கூற இயலாதவாறு சிற்றிலக்கியங்களின் எல்லை பரந்துள்ளது என்பது போதரும். இதுவரை வரையறைக்குள் அகப்படாத சிற்றிலக்கியங்கள் பல எழுந்துள்ளன. இனியும் பல எழவிருக்கின்றன. இந்நிலையில் இத்தகைய எண் வரை சிற்றிலக்கியத்திற்குப் பொருந்தாது. பிற்காலத்தில் யாரோ ஒருவர் 'தொண்ணூற்றாறு வகை சிற்றிலக்கியங்கள்' என்ற வழக்கைத் தொடங்கியுள்ளார் போலும்! இவ்வழக்கு எவ்வகையிலும் பொருந்தாது என்பதறிக.

தோன்றிய காலம் : சிற்றிலக்கியங்கள் இன்ன காலத்தில் தான் எழுந்தன என்றும் வரையறுக்க முடியாத அளவுக்கு அவற்றின் தொன்மை அமைந்துள்ளதும் நோக்கத் தக்கது. சிற்றிலக்கியங்கள் கி. பி. ஆறும் நூற்றாண்டில்தான் எழுந்தன என்றும் கி.பி. எட்டாம் நூற்றாண்டில்தான் எழுந்தன என்றும் சிலர் கூறுவர். ஆயினும் காலத்தைப் பற்றிய இவ்வரையறையும் சிற்றிலக்கியங்கட்குப் பொருந்துவதாக இல்லையென்றே கூறவேண்டியுள்ளது. தொல்காப்பியர் காலத்திலேயே சிற்றிலக்கியங்களின் வித்தானது தோன்ற வாரம்பித்துவிட்டது.

பிற்காலத்தில் நாம் காணுகின்ற கைக்கிளை, கையறுநிலை, முதுகாஞ்சி, இயன்மொழி வாழ்த்து, பெருமங்கலம், ஆற்றுப் படை, தும்பை, வாகை, வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ, புறநிலை வாழ்த்து முதலிய சிற்றிலக்கியங்கள் தொல்காப்பியர் காலத்திலேயே பொருளிலக்கணத் துறைகளாக விரித்துக் கூறப்பட்டுள்ளன. அதுவேயன்றியும் மேற்குறித்த துறைகளில் அமைந்த பல்வேறு தனிப் பாடல்களையும் புறநானூறு,

பத்துப்பாட்டு முதலிய புற நூல்களில் நாம் காண்கின்றோம். சங்க இலக்கியங்களில் பிற நூல்களிலும் மேற்குறித்த துறையில் இயன்ற பல்வேறு பாடல்கள் காணப்படுகின்றன.

மேலும் பொருளதிகாரப் புறத்திணையியலில் கூறப்பட்ட

'குழவி மருங்கினும் கிழவ தாகும்'

என்ற சூத்திர இலக்கணமும்,

'ஊரொடு தோற்றம் உரித்தென மொழிப
வழக்கொடு சிவணிய வகைமை யான'

என்ற சூத்திர இலக்கணமும் காலப்போக்கில் வளர்ச்சியடைந்து தனிச் சிற்றிலக்கியங்களாக முறையே பிள்ளைத் தமிழாகவும், உலாவாகவும் உருப்பெற்றன. இந்த இருவகைச் சிற்றிலக்கியங்களும் எழுதற்குத் தொல்காப்பியத்தில் காணப் படும் வித்துக்களே காரணமாகும். தொல்காப்பியத்தில் இத் தகைய இலக்கணம் கூறப்பட்ட பின்னர் இத்துறையமைந்த பாடல்களையும் சில நூல்களில் காண்கின்றோம். காவியங்களில் இத்துறைகளின் இலக்கணம் அமையப் பெற்ற பகுதிகள் காப்பிய உறுப்புக்களாக அமைந்தன. காப்பிய உறுப்புக் களாக அமைந்ததுடன் மட்டுமின்றி, தனி நூல்களாகவும் இவை பிற்காலத்தில் உருப்பெற்றன.

இவையேயன்றி, தொல்காப்பியர் காலந்தோறும் சூழ் நிலையை ஒட்டிப் பிறக்கவிருக்கும் அனைத்து வகைச் சிற்றிலக் கியங்களுக்கும் பொருந்துமாறு பொது விதியும் அமைத்துள் ளார். தொல்காப்பியரின் எதிரதாக் காக்கும் கூர்த்த மதி நலத்தையே இது காட்டுகின்றது.

தொடர்நிலைச் செய்யுட்கு உரியனவாகத் தொல்காப்பியத் தில் கூறப்பட்ட 'வனப்பு' எட்டனுள் 'விருந்து' என்பதும் ஒன்று.

'விருந்தே தானும்
புகுவது கிளந்த யாப்பின் மேற்றே'

(பொருள் : 551)

என்பது தொல்காப்பியச் சூத்திரம். புலவர்கள் தாம்தாம் வேண்டியவாறு தனித்தும் தொடர்ந்தும் வரப் புதிதாகப்

பாடுவது 'விருந்து' எனப்படும். இச் சூத்திரத்துக்கு உரை யெழுதிய பேராசிரியரும் "புதுவது கிளந்த யாப்பின் மேற்றென்னையெனின், புதிதாகத் தாம் வரவேண்டியவாற்ருற் பல செய்யுளுந் தொடர்ந்து வரச் செய்வது; அது முத்தொள் ளாயிரமும் பொய்கையார் முதலாயினேர் செய்த அந்தாதிச் செய்யுளுமென உணர்க. கலம்பகம் முதலாயினவும் சொல் லுப" என்று கூறுகின்ருர்.

எனவே, தொல்காப்பியர் காலத்திலேயே இன்று காணப் படும் அனைத்து வகைச் சிற்றிலக்கியங்கட்கும் பொருந்தும் பொது விதி காணப்படுகிறது. இதுவரை எழுந்துள்ள சிற் றிலக்கியங்கள் அனைத்தும் இவ்விதிக்குள்ளே அடங்குவதுடன் மட்டுமின்றி இனி எழவிருக்கும் பல்வேறு சிற்றிலக்கியங்களும் இவ்விதிக்குள் அடங்கி விடும்.

சிற்றிலக்கியங்களுக்குத் தொல்காப்பியர் காலத்திலேயே வித்திடப் பெற்ருலும் அது முழு வளர்ச்சியுற்று, தனி நூலாக அமையப் பல நூற்ருண்டுகளாயின. கி.பி. ஆரும் நூற்ருண் டில் காரைக்காலம்மையார் எழுதிய அற்புதத் திருவந்தாதியே முதல் சிற்றிலக்கியமாகக் கருதப்படுகின்றது. ஆயினும் இந்த இலக்கணம் அமைந்த பல்வேறு பாடல்கள் இதற்கு முன்னரே காப்பியம் போன்ற இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டுள் ளன என்பதை நாம் மறத்தலாகாது. இங்ஙனமே பிற சிற் றிலக்கியங்கள் முழு வளர்ச்சியுடன் தனி நூலாக எழுந்த காலத்திற்கு முன்னரே அந்த இலக்கணங்கள் பிற சிற்றிலக்கி யங்களில் ஆங்காங்கே பயின்று வந்துள்ளன என்பதையும் நாம் மறத்தலாகாது.

கி. பி. ஆரும் நூற்ருண்டு முதலே சிற்றிலக்கியங்கள் மெல்ல மெல்ல வளர்ச்சியுறத் தலைப்பட்டன. உலா இலக் கணம் தொல்காப்பியர் காலத்திலேயே காணப்பட்டாலும் கி.பி. ஒன்பதாம் நூற்ருண்டில்தான் முழு வளர்ச்சியுற்ற தனிச் சிற்றிலக்கியமாகக் காண்கின்ருேம். கி. பி. ஒன்பதாம் நூற் ருண்டில் வாழ்ந்த சேரமான் பெருமாள் நாயனர் இயற்றிய 'திருக்கைலாய ஞான வுலா'வே உலா இலக்கியத்தில் முதல் நூலாகக் கருதப்படுகின்றது. இக்காரணம் பற்றியே இவ்

வுலா 'ஆதியுலா' என்றும் சிறப்பித்துப் பேசப்படுகின்றது. உலா இலக்கணம் தனி நூலாக உருவெடுத்த பின்னரும்கூட கம்பராமாயணம் போன்ற காவியங்களில் உலா இலக்கணம் அமைந்த பகுதி தனியே காப்பிய உறுப்பாக அமைந்துள்ள தைக் காணலாம். காவியத் தலைவன் உலா வருவதாகவும் எழுவகைப் பருவப் பெண்டிரும் அவனது வடிவழகில் ஈடு பட்டு நெடிதுயிர்த்தனர் எனவும் வரும் காட்சிகள் பலவற்றைக் கம்பராமாயணம் போன்ற காப்பியங்களில் காண்கின்றோம். 'உலாவியற் படலம்' எனத் தனியே இவ்வகை இலக்கணத்தைக் கருவாக அமைத்துத் தனித் தனியே, படலங்களே பாடப் பெற்றன. கம்ப ராமாயணம் எழுந்த காலத்திலும் கூட 'மூவருலா'ப் போன்ற நூல்கள் எழுந்துள்ளதை நோக்கத் தனி நூலாக அமைத்துப் பாடுவதிலும் கவிஞர்களிடையே ஆர்வம் இருந்த செய்தியை உணரலாம்.

இங்ஙனமே கோவை என்ற சிற்றிலக்கிய வகை கி.பி. எட்டாம் நூற்றாண்டிலும், கலம்பகம் என்ற நூல்வகை கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டிலும் முழு நூல்களாக உருப்பெற்றன பாண்டிக் கோவையும், நந்திக் கலம்பகமும் இவ்வகைச் சிற் றிலக்கியங்களின் முதல் நூல்களாகக் கருதப்படுகின்றன.

சிற்றிலக்கியங்களில் காணும் பகுப்பு முறை : சிற்றிலக் கிய நூல்கள் எந்த அடிப்படையில் எழுந்தன என்பதை நோக்குவோம். பெரும்பாலான சிற்றிலக்கியங்கள் பாடல் களின் எண்ணிக்கை அடிப்படையில் பெயர் பெற்று விளங்கு கின்றன. இங்ஙனம் எண் அடிப்படையில் நூல்களுக்குப் பண்டைக் காலத்தில் பெயரிடப் பெற்றிருந்ததும் நோக்கத் தக்கது. புறநானூறு, அகநானூறு, நற்றிணை நானூறு, ஐங்குறு நூறு, பதிற்றுப் பத்து போன்ற நூல்கள் இங்ஙனம் அடியால் பெயர்பெற்றனவேயாம். பண்டைத் தமிழரிடத்தில் காணு கின்ற இதேபண்பைப் பிற்காலத்திலும் காண்கின்றோம். ஒருபா ஒருபது, இருபா இருபது, நாற்பது, பதிகம், சதகம் முதலிய சிற்றிலக்கிய வகைகள் பாடல்களின் எண்ணிக்கை அளவால் பெயர் பெற்றனவாகும். பரிபாடல், கலித்தொகை போன்ற நூல்கள் இயன்ற செய்யுளான் பண்டு பெயர் பெற்றிருப்பது

போலவே ஊரின்னிசை, ஊர்நேரிசை, பெயரின்னிசை, பெயர் நேரிசை, ஊர் வெண்பா, கடிகை வெண்பா போன்ற சிற்றிலக்கியங்களும் தாம் இயன்ற செய்யுளால் பெயர் பெற்றுள்ளன.

இனி, சங்க இலக்கியங்களில் புறப்பொருள் துறைகளாக நாம் காணுகின்ற பல்வேறு துறைகள் தனித்தனியே சிற்றிலக்கியங்களாக எழுந்துள்ளன. போர்க்கு எழுவஞ்சி, வரலாற்று வஞ்சி, செருக்களவஞ்சி, காஞ்சி மாலை, நொச்சி மாலை, உழிஞை மாலை, தும்பை மாலை, வாகை மாலை, கண்படை நிலை, துயிலெடை நிலை, கைக்கிளை, செவியறிவுறூஉ, வாயுறை வாழ்த்து, புறநிலை வாழ்த்து, சின்னப் பூ, இயன்மொழி வாழ்த்து, பெருமங்கலம் முதலிய சிற்றிலக்கியங்கள் பண்டு புறப்பொருள் துறைகளாக இருந்தவை யாம்.

இவையன்றி, சங்க இலக்கியங்களில் நாம் காணுகின்ற கேசாதி பாதம், பாதாதி கேசம் போன்ற பகுதிகளும் தனித் தனியே சிற்றிலக்கியங்களாக எழுந்துள்ளன.

அந்தாதித் தொடையால் இயன்ற நூல்களுக்குள்ளேயே பல பிரிவுகள் பற்பல பெயர்களால் வழங்கப்படுகின்றன. அனைத்துக்கும் மேலாகத் தனித் தனியே யமைந்த பல சிற்றிலக்கிய வகைகள் காப்பியங்களின் உறுப்புக்களாகக் காணக் கிடக்கின்றன. இவற்றையெல்லாம் நோக்கும்பொழுது சிற்றிலக்கிய வகைகளிடையே எவ்வித இயைபும் இல்லாதது பெறப் படும். அகப்பொருளோ, புறப்பொருளோ எந்தப் பொருளை வேண்டுமாயினும் எடுத்துக் கொண்டு கவிஞன் பாடத் தொடங்கினன். அதற்கு ஒரு பெயரைச் சூட்டிச் சிற்றிலக்கியமாக வழங்கினன் என்றே கொள்ள வேண்டியுள்ளது.

தமிழில் இது வரையிலும் பல்வேறு சிற்றிலக்கியங்கள் எழுந்திருப்பினும் பொருளால் சிறப்புற்ற சில சிற்றிலக்கியங்களே பெயர் பெற்று விளங்குகின்றன. சதகம், உலா, அந்தாதி, பிள்ளைத் தமிழ், கோவை, கலம்பகம், பரணி முதலிய சிற்றிலக்கியங்களே பெரும்பாலும் அதிகமாக வழங்குகின்றன. பிற சிற்றிலக்கியங்கள் என்னவென்றோ அவற்றைப் பற்றிய பிற செய்திகள் என்னவென்றோ, பலர் அறிய இயலவில்லை. அவற்றின் சிறப்பின்மையே இதற்குக் காரணம்.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள மக்களிடையே சிற்றிலக்கியங்கள் கடவுள் நம்பிக்கையை வளர்த்தன. மக்களிடம் சமய வுணர்ச்சி தழைத்துப் பெருகத் தொடங்கியது. பல்வேறு வரலாற்றுக் குறிப்புகள் இலக்கியங்களாக எழுத்து வடிவம் பெற்றுப் பிற்காலத்தோருக்கு உதவும் பெருமையைப் பெற்றன. அளவிலும் பொருண்மையிலும் பல்வேறு நிலையினவாக இச் சிற்றிலக்கியங்கள் அமைந்திருத்தலால் மக்களும் தத்தம் அறிவின் மென்மை வன்மைகட்கேற்ப அவற்றைப் பயிலுவதில் ஆர்வம் கொண்டனர். சிற்றிலக்கியங்களைப் படித்து இன்புறுதல் நம் தலையாய கடனாகும்.

2. சதகங்களின் அமைப்பு

செந்தமிழ் மொழிக்கண்ணே சிறந்து விளங்கும் இலக்கியத் தொகுதிகளில் சதகமும் ஒன்றும். மக்கள் மக்களாக வாழ் வதற்கு இன்றியமையாத உலகியல் நெறிகளும், அறமுறை களும் அமைந்து பிற்காலத்தில் புகழ்பெற்ற இலக்கியச் செல்வ மாகத் திகழுகின்றது சதகம். சதக நூல்களின் அமைப்பு முறைகளைப் பல்வேறு கோணங்களில் ஆய்வதே இக்கட்டுரை.

சொல்லமைப்பு

சதகம் என்னும் சொல் வடமொழிச் சொல் என்பர். வடமொழியில் சதம் என்றால் நூறு என்று பொருள்படும். சதம் என்ற சொல்லுடன் 'க' என்ற எழுத்துச் சேர்ந்து 'சதகம்' என்றாயிற்று. இங்ஙனம் 'க' என்ற ஓர் எழுத்தைப் பெற்றுக் கூட்டியுரைத்தலை வடமொழியாளர் 'பிரத்தியயம்' என்று கூறுவர். சதம் என்ற சொல் 'க' பிரத்தியயம் பெற்று, சதகம் என்றாயிற்று. சதம் என்றால் நூறு என்பது பொருளாதலின் சதகம் என்ற சொல்லுக்கு நூறு கொண்டது என்பது பொருளாகும்.

எனவே, நூறு பாடல்களைக் கொண்ட நூலுக்கும் 'சதகம்' என்ற பெயர் வழங்கலாயிற்று. சதக இலக்கியங்கள் அனைத்தும் நூறு நூறு பாடல்கள் கொண்டவையே யாம்.

சதகம் தோன்றிய காலம்

சதகம் என்ற சிற்றிலக்கிய வகை முழுவளர்ச்சியுற்றுத் தனி நூலாக அமைந்த காலம் கி.பி. பதினொன்றும் நூற்றாண்டு எனக் கொள்ளலாம். ஆராய்ச்சியாளர் சிலர் சதகச் சிற் றிலக்கியம் எழுந்த காலம் கி. பி. பதினேழாம் நூற்றாண்டு என் றுரைப்பர். ஆயினும் கார்மண்டல சதகம் என்னும் நூல் கி.பி. பதினொன்றும் நூற்றாண்டிலேயே எழுந்ததாகக் கருதப்படு

கிறது. இந்நூலினை இயற்றிய ஆசிரியர் ஆறைகிழார் என்பார் கி. பி 1025-1070இல் வாழ்ந்தவர் என்பது ஆராய்ச்சியாளர் கருத்து.

கார்மண்டல சதகத்துக்கு உரை எழுதி வெளியிட்ட காழி வித்துவான் திரு. ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளை தமது உரைப் பாயிரத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்:

"இதனை ஆக்கியோர் கொங்கு வேளாளரும்
வைதிக சைவரும் ஆகிய அவிநாசி
ஆறைகிழார் என்பார் (கி. பி 1025–1070)"

கலைக் களஞ்சியத்திலும் இக்கருத்தே கூறப்பட்டுள்ளது. எனவே ஆறைகிழார் வாழ்ந்த காலம் கி. பி. பதினொன்றும் நூற்றாண்டெனவும் அக்காலத்திலேயே முதல் சதக நூலாகிய கார்மண்டல சதகம் எழுந்தது என்பதும் போதரும். காலத்தை வரையறுப்பது நமக்குக் கருத்தன்றாயினும் சதகச் சிற்றிலக்கிய வகை எழுந்த நூற்றாண்டைக் காண, மேற்கூறிய கருத்துக்களைக் கூறவேண்டியது இன்றியமையாததாக உள்ளது. ஆயினும் இதனையே முடிந்த முடிபாகக் கொள்ளாது மேலும் ஆய்தல் அறிஞர் கடன்.

சதகத்தின் இலக்கணம்

சிற்றிலக்கியங்களின் இலக்கணங்களைத் தொகுத்துரைக்கும் பாட்டியல் நூல்கள் சிலவுண்டு. இவற்றுள் குணவீர பண்டிதர் எழுதிய வச்சணந்தி மாலை என்னும் வெண்பாப் பாட்டியல், பரஞ்சோதியார் எழுதிய சிதம்பரப் பாட்டியல், நவநீதன் இயற்றிய நவநீதப் பாட்டியல், இந்திரகாளியார் முதலிய பன்னிருவர் பாடிய பன்னிரு பாட்டியல், வைத்திய நாத தேசிகர் எழுதிய இலக்கண விளக்கம் முதலிய பாட்டியல் நூல்கள் குறிப்பிடத் தக்கனவாகும்.

இந்நூல்களில் இலக்கண விளக்கம் என்ற நூலில் மட்டும் சதகத்தின் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. பிற பாட்டியல் நூல்களுக்கு முன்னரே சதக இலக்கியம் புதிதாக எழுந்ததாயினும் சதகத்தின் இலக்கணம் பிற பாட்டியல் நூல்களில் காணப்

படவில்லை. சதகம் போன்றே புதிதாக எழுந்த வேறு சில சிற்றிலக்கியங்கட்கும் இந்நூல்களில் இடம் இல்லை. ஆயினும் நன்கு வளர்ச்சிபெறாத வேறுசில சிற்றிலக்கியங்கட்கு இந் நூலில் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. இவற்றை நோக்கும் போது இப்பாட்டியல் நூல்களிடையில் ஒரு வரையறை யின்மையைக் காணலாம்.

'தொண்ணூற்றாறு வகை பிரபந்தங்கள்' என்று வழக்கில் காணப்படும் வரையறையையும் சிற்றிலக்கிய இலக்கணங் கூறும் இப்பாட்டியல் நூல்களில் எவற்றிலும் நாம் காணவில்லை. சிலசில சிற்றிலக்கியங்கட்கு வரையறையற்ற நிலையில் பாட் டியல் நூல்கள் இலக்கணம் கூறுகின்றனவேயன்றி, தெளிவான அமைப்பையும், வரையறையையும் அவற்றில் நாம் காண இயலவில்லை. எனவே, சதக இலக்கணம்பற்றி, பிற பாட்டியல் நூல்கள் கூறாமல் விடுத்திருப்பதில் வியப்பொன்றும் இல்லை.

கி. பி பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த வைத்தியநாத தேசிகர் தமது இலக்கண விளக்கம் என்ற நூலில் சதகத்தின் இலக்கணத்தை வரையறுத்துச் சூத்திரம் செய்துள்ளார்.

"விளையும் ஒருபொருள் மேலொரு நூறு
தழைய வுரைத்தல் சதக மென்ப"

என்பது சதகத்தின் இலக்கணமாகும். அகப்பொருள் அல்லது புறப்பொருள் இரண்டனுள் யாதானும் ஒரு பொருள்மீது நூறு பாடல்களைப் பாடுவது சதகத்தின் இலக்கணமாகும். சதகம் என்ற பெயரையொட்டிய பொருளமைப்பைவிடப் பாடல்களின் எண்ணமைப்புக்கே முதலிடம் கொடுக்கப்பட் டிருத்தலைக் காணலாம்.

திருவாசகத்தின் திருச்சதகம்

சதகம் என்ற பெயரை முதன் முதலாக அறிமுகப் படுத்தியவர் மாணிக்கவாசகரே என்று கருதப்படுகின்றது. தொல்காப்பியர் காலத்திலும் சங்க காலத்திலும், அதற்குப் பிற்பட்ட காலத்திலும் சதகம் என்ற பெயர் பெற்ற நூலை நாம் காணவில்லை. முதன் முதலாக மாணிக்கவாசகர் காலத்தில்

தான் நாம் சதகம் என்ற பெயரைக் கேட்கின்றோம். பழைய சங்க நூல்களில் சதகம் என்ற பெயர் பெற்ற நூல் ஒன்றும் காணப்படாமையானும், மாணிக்கவாசகரது திருவாசகத் திலேயே திருச்சதகம் என்ற பெயர் முதன் முதல் காணப்படு தலாலும் தொல்காப்பியர் காலம் சங்க காலங்கட்குப் பின்னும் மாணிக்கவாசகர் காலத்துக்கு முன்னும் சதகம் என்ற பெயர் தோன்றியிருத்தல் வேண்டும் என்று நாம் துணியலாம்.

இனி, மாணிக்கவாசகரது திருவாசகத்தின்கண் அமைந் துள்ள திருச்சதகத்தின் அமைப்பு பற்றிச் சிறிது காண்போம். திருச்சதகம் என்ற தொடருக்குத் "தெய்வத்தன்மை வாய்ந்த நூறு திருப்பாட்டுக்களைத் தன்னகத்துக்கொண்ட ஒரு பகுதி" என்று பொருளுரைப்பார் பண்டிதமணி.

இப்பகுதி அந்தாதித் தொடையான் அமைந்துள்ளது. 'மெய்தான் அரும்பி' என்று முதல் பாடல் தொடங்கப்பட்டு 'மெய்யர் மெய்யனே' என்று நூறுவது பாடல் முடிக்கப் பட்டுள்ளது.

எனவே, மாணிக்கவாசகரே இப்புதுவகைப் பெயரை அறிமுகப்படுத்தினர் என்றே கொள்ளலாம். மாணிக்கவாசகர் காலம் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டென்பது பெரும்பாலோர் முடிவாதலின் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டிலேயே சதகம் என்ற பெயர் ஆட்சிக்கு வந்துள்ளமையை அறிகின்றோம். எண் அடிப்படையில் எழுப்பப்பட்ட இப்பெயருக்கு ஏற்பவே 'திருச் சதகம்' என்ற பகுதியும் நூறு பாடல்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குவதைக் காணலாம்.

கார்மண்டல சதக அமைப்பு

நமக்குக் கிடைத்துள்ள சான்றுகளின் அடிப்படையில் நோக்க, கார்மண்டல சதகமே பழைய சதகமாகக் கொள்ள வேண்டியுள்ளது. எண் அடிப்படையில் எழுந்ததே சதகம் என்ற பெயர் என்பதற்கேற்ப முதல் சதகமான கார்மண்டல சதகத்தில் நூறு பாடல்களையே காண்கின்றோம். பெயர், எண்

ஆகிய இரண்டில் மட்டுமே மாணிக்கவாசகரது திருச்சதகத்திற்கும் பிற சதக இலக்கியங்களுக்கும் ஒற்றுமையுள்ளது.

கார்மண்டல சதகம் என்னும் நூலில் அம்மண்டலத்தில் வாழும் காராளரின் குலப்பெருமையும், அங்கு வாழ்ந்த மன்னர்களது பெருமையையும், மற்றுமுள்ள வள்ளல்கள் முதலியோரது பெருமையையும் குறித்து விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. கார் மண்டலத்தில் வாழ்ந்த புகழ்பெற்ற கவிஞர்கள் நீதியுடன் ஆண்ட மன்னர்கள், புனித ஞானிகள், செயற்கரியன செய்த செம்மல்கள் ஆகியோரது வரலாறுகளை விரித்துரைக்குமுகத்தான் அந்நாட்டுச் சிறப்பு புகழ்படக் கூறப்பட்டுள்ளது. எனவே கார் மண்டலத்தின் வரலாற்றுச் சுருக்கமாக இந்நூல் அமைந்துள்ளது.

எனவே சதகம் என்ற நூல்வகை இத்தகைய அமைப்போடுதான் இருக்க வேண்டும் போலும் என்று பின்னே வந்த ஆசிரியர்கள் கருதினர்கள். அந்த அளவுக்குச் சதக இலக்கியத்திற்கு ஓர் அடிப்படை அமைப்பைக் கொடுத்த பெருமை கார் மண்டல சதக ஆசிரியர் அவிநாசி ஆறைகிழாரையே சாரும்.

பிற சதகங்களின் அமைப்பு

கார் மண்டல சதகத்தை ஒட்டி வேறு பல சதகங்கள் எழுந்தன. தொண்டைமண்டல சதகம், சோழமண்டல சதகம், பாண்டி மண்டல சதகம், கொங்குமண்டல சதகம், ஈழ மண்டல சதகம், நந்தமண்டல சதகம் எனப் பல சதகங்கள் இந்நூல் அமைப்பிலேயே எழுந்துள்ளன.

தொண்டை நாட்டின் வரலாற்றுச் சுருக்கமாகத் தொண்டைமண்டல சதகமும், பாண்டி நாட்டு வரலாற்றுச் சுருக்கமாக பாண்டிமண்டல சதகமும், இங்ஙனமே பிற சதகங்களும் அவ்வம் மண்டலங்களின் வரலாற்றுச் சுருக்கங்களாக அமைந்துள்ளன. இச்சதக நூல்களைப் படித்தால் ஓரளவு அந்தந்த நாட்டு வரலாறுகளை நாம் அறியலாம். ஆங்காங்கே வாழ்ந்த மன்னர்கள், வள்ளல்கள், கவிஞர்கள் ஆகியோரது வரலாறுகள் பற்றியும் அறியலாம்.

வரலாறு கூறல் என்ற பொருளமைதியுடன் திருத்தொண்டர்கள் வரலாறுகளை விரித்துரைக்கும் திருத்தொண்டர் சதகத்தையும் சதக இலக்கியத்தில் காண்கின்றோம்.

சதக இலக்கியத்தில் வேறு பல அமைப்புகளும் எழுந்தன. யாதானும் ஒரு தலத்தில் எழுந்தருளியுள்ள கடவுளை முன்னிலைப் படுத்தி அக்கடவுள் மீது பாடப்பட்ட துதி நூலாகச் சில சதகங்கள் அமைந்துள்ளன. அவையாம்பிகை சதகம், அருணசல சதகம், எம்பிரான் சதகம், வடவேங்கட நாராயண சதகம், குருநாத சதகம், சிவசங்கர சதகம், கோகுல சதகம் முதலிய சதகங்கள் இம்முறையில் அமைந்தவை யாகும்.

கடவுளைத் துதிப்பதுடன் மட்டுமின்றி, தமக்கு உதவி செய்த வள்ளல்கள் பெயரையும் அத்துடன் இணைத்துச் சில சதகங்கள் பாடப் பெற்றன. அவற்றுள் அறப்பளீசுர சதகம், அண்ணமலையார் சதகம், திருவேங்கட சதகம் ஆகியன குறிப்பிடத் தக்கன. அறப்பளீசுர தேவனை வணங்கும் இடத்திலெல்லாம் மதவேள் என்னும் வள்ளல் தொடர்பு படுத்தப்பட்டுள்ளார். அண்ணமலையாருடன் சேர்த்து வசந்தராயர் என்னும் வள்ளல் தொடர்புபடுத்தப்பட்டுள்ளார். திருவேங்கடத்தானை வணங்கும் இடமெல்லாம் மணவாள நாராயணன் என்னும் வள்ளல் இணைக்கப்பட்டுள்ளார். இவற்றுள் அண்ணமலையார் சதகமும், திருவேங்கட சதகமும் முறையே வசந்தராயர் சதகம், மணவாள நாராயண சதகம் என்ற மாற்றுப் பெயர்களும் பெற்று விளங்குகின்றன.

இறைவனைப் பற்றிய துதிநூலாக அமைந்துள்ள சதகங்களுள் வேறு ஓர் அமைப்பையும் காண்கின்றோம். இறைவனைத் துதிப்பதுடன் மட்டுமின்றி உலகில் வழங்கும் பழமைத்தாகிய பழமொழிகளை செய்யுள்தோறும் தொடர்புபடுத்தி அமைத்து பாடப் பெற்ற நூல்களும் சதக இலக்கியத்தில் உள. அவற்றுள் தண்டலையார் சதகம், கோவிந்த சதகம் என்பன குறிக்கத் தக்கவை யாகும்.

இவற்றுக்கும் மேலாக அமைந்துள்ளது செயங்கொண்டார் சதகம் போன்ற நூல்கள். இதில் தண்டலையார் சதகம் போன்று பழமொழிகளை அமைத்துத் தொடர்புபடுத்தி இறைவனைத் துதிப்பதுடன் மட்டுமின்றி, பழமொழிகளுக்கேற்ற கதைகளும் வரலாறுகளும் உதாரணமாகக் காட்டியும் விளக்கப்பட்டுள்ளன.

ஆயினும் இந்த நால்வகை அமைப்புகளைக் கொண்ட அனைத்து நூல்களையும் துதி நூலாக அமைந்த சதகங்கள் என்னும் தலைப்பில் வகைப்படுத்தலாம்.

இனி பிறிதொரு அமைப்பினையும் சதக இலக்கியங்களில் காண்கின்றோம். கடவுளை முன்னிலைப்படுத்தி மக்கள் மக்களாக வாழ வேண்டுதற்குரிய அறிவுநெறிகளையும், அறமுறைகளையும் தொகுத்துக் கூறும் நீதி நூல்களாகச் சில சதகங்கள் அமைந்துள்ளன. இவற்றுள் குறிப்பிடத்தக்கவை குமரேச சதகம், கைலாச நாதர் சதகம் போன்றவை யாகும்.

இவற்றுள்ளும் கைலாசநாதர் சதகத்தில் நீதி முறைகள் மட்டுமின்றி மக்கள் அறியத்தக்க சோதிடம், சுகாதாரம், அசுவ சாஸ்திரம், காமநூல் முதலிய செய்திகளும் விளக்கப் பட்டுள்ளன.

எனவே சதக இலக்கிய வரிசையில் எழுந்துள்ள நூல்கள் அனைத்தையும் முப்பெரும் பிரிவுகளாக வகுத்துக் காட்டலாம். வரலாற்றினை யுரைக்கும் நூல்கள், இறைவனைத் துதிப்பதாக அமைந்த நூல்கள், நீதிநெறி யுரைக்கும் நூல்கள் என்று இந்த முப்பெரும் பிரிவுக்குள்ளே அனைத்து நூல்களும் அடங்கிவிடு கின்றன. துதி நூலாக அமைந்தவற்றுள் தனியே யமைந்த துதி நூல்கள், வள்ளல் பெயருடன் இணைந்த துதி நூல்கள், பழமொழி அமைந்த துதி நூல்கள், பழமொழியும் உதாரணக் கதையும் அமைந்த துதி நூல்கள் என்ற நால்வகை உட்பிரிவை யும் நாம் கொள்ளலாம்.

செய்யுளிறுதியமைப்பு

சதக நூல்களில் பிற இலக்கிய வகைகளில் காணப் பெறாத ஒரு புது வகை அமைப்பைக் காண்கின்றோம். ஒவ்வொரு சதக

நூலும் செய்யுள் இறுதிதோறும் ஒரே வகையாக முடிபு பெற்று அமைந்துள்ளன. எந்தக் கடவுளின் பெயரால் நூல் அமைந்துள்ளதோ அந்தக் கடவுளின் பெயரைச் செய்யுள் தோறும் இறுதியடியில் அமைத்தும் மண்டலங்களின் பெயரை இறுதியில் அமைத்தும் எல்லாச் சதகங்களும் இயற்றப் பட்டுள்ளன.

துதி நூலாக அமைந்த நூல்களில் முன்னிலைப்படுத்திப் பாட எடுத்துக்கொண்ட கடவுளின் பெயர் இறுதிதோறும் அமைக்கப்பட்டுள்ளது. கைலாசநாதர் சதகத்தில் 'கங்கை புனை யீசனே மங்கை மகிழ் நேசனே, கயிலை யங்கிரி வாசனே' என்ற தொடர் செய்யுள்தோறும் அமைந்துள்ளது. இங்ஙனமே செயங் கொண்டார் சதகத்தில் 'செயங் கொண்டாரே' என்பதும், குருநாத சதகத்தில் 'குருநாதனே குருநாதனே' என்பதும், அவையாம்பிகை சதகத்தில் ''மயிலாபுரியில் வளர்சன் வாழ்வே அவையாம் பிகைத்தாயே'' என்பதும், அருணசல சதகத்தில் 'அருணசலா அருணசலா' என்பதும், கோகுல சதகத்தில் 'கோகுலரே' என்பதும் மகுடங்களாக அமைந்துள்ளன.

நீதிநெறியுரைப்பனவாக அமைந்துள்ள கைலாச நாதர் சதகம், குமரேச சதகம் என்பவற்றிலும் துதி நூல்களைப் போலவே இறுதியில் இறைவன் பெயர் மகுடமாக அமைக்கப் பட்டுள்ளது அறியத்தக்கது.

சதக இலக்கியத்தில் பிறிதொரு வகையான வரலாறு கூறும் சதக நூல்களில் எடுத்துக்கொண்ட மண்டலத்தின் பெயர் செய்யுள் இறுதிதோறும் மகுடமாக அமைந்துள்ளது. கார்மண்டல சதகம், 'காராளர் மண்டலமே' என்ற மகுடத்தையும், தொண்டைமண்டல சதகம், 'தொண்டை மண்டலமே' என்ற மகுடத்தையும், சோழமண்டல சதகம், 'சோழ மண்டலமே' என்ற மகுடத்தையும் பெற்று விளங்குகின்றன.

இறைவனைத் துதிப்பதாக அமைந்து பழமொழிகளையும் இணைத்துப் பாடப்பெற்ற நூல்களுள் தண்டலையார் சதகத் தில் மட்டும் செய்யுள் இறுதிதோறும் மகுடம் காணப்பட

வில்லை. மாருகச் செய்யுள் இறுதியில் இறைவன் பெயர் மகுடமாக அமைய வேண்டிய இடத்தில் பழமொழிகள் இடம் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இதுபோன்றே பழமொழியுடன் இணைத்துக் கூறப்படும் மற்ெருரு துதி நூலான கோவிந்த சதகத்தில் பழமொழியும் இடம் பெற்று இறைவன் திருப்பெயரும் இறுதிதோறும் மகுட மாக அமைந்துள்ளதும் அறியத்தக்கது.

எனவே சதக இலக்கியங்களில் இறைவன் பெயர் மகுட மாக அமையப் பெற்ற நூல்களையும், நாட்டின் பெயர் மகுட மாக அமையப் பெற்ற நூல்களையும் ஆக இருவகை நூல்களை யும் காண்கின்றோம்.

பொருள்

காலத்திற்கேற்றவாறு சதக நூல்களின் அமைப்புமுறை யும் மாறியது. சூழ்நிலைக்கு ஏற்றவாறு தனியேயமைந்த அமைப்புகளிலும் உட்பிரிவுகள் ஏற்பட்டன.

சதகங்களுக்குப் பொருள் அமைப்பு முக்கியமில்லை; யாதானும் ஒரு பொருள்பற்றிப் பாடலாம்; அது அகப்பொரு ளாயினும் புறப்பொருளாயினும் பரவாயில்லை என்ற பொது விதி காரணமாகவே இத்தகைய பல்வேறு பொருள் அமைப்பு களைக் கொண்ட சதக நூல்கள் தழைத்தன.

யாப்பமைதி

காலத்துக்கேற்றவாறு சதகங்களின் பொருளமைப்பு மாறியது போன்றே அவற்றின் யாப்பமைப்பும் மாறுபட்டன. ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம், கட்டளைக்கலித்துறை முதலிய பல்வேறு யாப்பமைப்புகளையும் சதக இலக்கியங்களில் காண் கின்றோம்.

தொண்டைமண்டல சதகம், கோகுல சதகம், கோவிந்த சதகம் போன்ற நூல்கள் கட்டளைக் கலித்துறையிலும், குருநாத சதகம் போன்ற நூல்கள் கலிவிருத்தத்திலும் பிற

நூல்களுள் பெரும்பாலானவை ஆசிரிய விருத்தத்திலும் அமைந்துள்ளன. எனினும் பொதுவகையால் நோக்கும்போது சதக இலக்கியத்தில் ஆசிரிய விருத்தமே பெருஞ் செல்வாக்குப் பெற்றிருத்தலைக் காணலாம்.

எண்ணிக்கை

சதகம் என்ற பெயரைக் கொண்டே சதக நூல் நூறு பாடல்களால் அமையவேண்டும் என்பது போதரும். ஆயினும் புலவர்களின் உள்ள நிலைக்கேற்ப இந்த எண்ணிக்கை அமைப்பு சற்றே விரிந்தும் சிற்சில நூல்களில் காணப்பெறுகின்றது. சில சதகங்கள் காப்புச் செய்யுள் அல்லாது இறுதியில் அமைந்த வாழ்த்துச் செய்யுளுடன் நூறு பாடல்களைக் கொண்டு விளங்குகின்றன.

கைலாசநாதர் சதகம் முதலான நூல்களுள் காப்புச் செய்யுளும், இறுதியில் வாழ்த்துச் செய்யுளுமல்லாது நூறு செய்யுட்கள் உள்ளன. தண்டலையார் சதகம், குருநாத சதகம், சிவசங்கர சதகம் போன்றவற்றுள் காப்புச் செய்யுளாக இரு செய்யுட்கள் காணப்படுகின்றன.

நூலுள் நூற்றி ஒன்று என்ற எண்ணிக்கையையும் கடந்து குருநாத சதகம், கோகுல சதகம், கோவிந்த சதகம் போன்றவற்றுள் நூற்றிரண்டு பாடல்கள் உள்ளன. தண்டலையார் சதகம், அண்ணுமலைச் சதகம், செயங்கொண்டார் சதகம் போன்ற நூல்களில் அவையடக்கமாக ஒவ்வொரு செய்யுள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் சில நூலின் முற்பகுதியிலும் சில பிற்பகுதியிலுமாக அமைந்துள்ளன.

இவற்றுக்கு மேலாகத் தண்டலையார் சதகத்தில் அதிகப் பாடல்களாக ஒன்பது பாடல்கள் காணப்படுகின்றன. பழமொழியுடன் இணைத்துப் பாடப்பெற்ற நூல் தண்டலையார் சதகமாதலால் பிற்காலத்தில் வேறுசில பழமொழிகளையும் இணைத்துப் பாடி இந்நூலுடன் சேர்த்து விட்டனர் போலும்! எனவே, இந்நூலில் ஒன்பது பாடல்கள் அதிகமாகக் காணப்படுகின்றன.

மொழியமைப்பு

பொதுவாகச் சதக இலக்கியங்கள் அனைத்தும் பிற்காலத்தில் எழுந்தவையே யாதலால் வழக்கில் இடம் பெற்றிருந்த பல்வேறு வடமொழிச் சொற்களும் இந்நூற்களில் இடம் பெற்றுள்ளன. வடமொழிச் செல்வாக்கு மிகுந்திருந்த காலத்திற்குன் அதிக சதக இலக்கியங்கள் எழுந்தன. எனவே அவற்றில் அதிக அளவு வடமொழிச் சொற்களும் ஆளப்பட்டுள்ளன.

இங்ஙனமே பேச்சுவழக்கில் திரிந்து வழங்கும் சொற்களும் இந்நூலுள் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன. பொதுமக்களுக்கு நீதியுரைக்கவேண்டி எழுந்த சதகங்களில் இத்தகைய பேச்சு வழக்குச் சொற்கள் அதிக இடம் பெற்றுள்ளன. மக்களுக்கு நீதியுரைக்கவேண்டியது அவற்றின் குறிக்கோளாயிருத்தலால் அவர்களது பேச்சு மொழிகளையும் ஆங்காங்கே பயன் படுத்தவேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டுள்ளது போலும்!

சங்க இலக்கியங்களைப் போன்று கடினமான மொழியமைப்பை உடையதாயிராமல் மிகவும் எளிய மொழியமைப்பைப் பெற்றுள்ளன சதக இலக்கியங்கள். தான் எழுகின்ற காலத்தில் வாழும் மக்களின் மொழியமைப்புக் கேற்பத் தனது மொழியமைப்பையும் மாற்றி மக்கள் விரும்பிப் படிப்பதற்கு ஏற்றவையாக அமைந்தன சதகஇலக்கியங்கள். எளிய இனிய நடையில் அமைந்ததால்தான் சதக இலக்கியங்களை அனைவரும் விரும்பிக் கற்றனர்.

மக்களுக்கு நீதிநெறி முறையையும் அறத்தையும் கூறி அவர்கள் செம்மையாக வாழக் கற்றுக்கொடுத்தது சதக இலக்கியம். மக்கள் வாழ்வோடு பிணைந்து மக்களுக்குத் தேவையான உறுதிப்பொருள்களையும் கூறி அவர்களுக்கு நல்வாழ்வை அளித்தது சதக இலக்கியம்.

இனிய மொழியமைப்பும், கருத்துச் செறிவும் பெற்றுச் சிறந்து விளங்கும் சதக இலக்கியங்களைக் கற்றுணர்தல் நம் அனைவரது கடனுமாகும்.

3. சதகங்களின் சிறப்பு

தமிழக இலக்கியவரிசையில் சதக இலக்கியங்கள் தனிச் சிறப்புடையன. வரலாறு உரைப்பதிலும், நீதி நெறி யுணர்த் தலிலும், இறைவனைத் துதித்தலிலும் சதக இலக்கியங்கள் பிற இலக்கியங்களின்றும் தனியிடம் பெற்றுத் திகழ்கின்றன. கி. பி. பதினைன்ரும் நூற்ருண்டிலிருந்து தொடங்கிய சதக இலக்கிய வரலாறு இன்னும் முற்றுப் பெறவில்லை. பிற்காலத் திலும் சதக இலக்கியங்கள் பெருஞ்சிறப்புப் பெற்றுப் பொலியும் என்பதில் ஐயமில்லை.

மகுடம் பெறுதல்

சதக இலக்கியங்களில் காணப்படும் சிறப் பியல்புகளை நோக்குவோம். சதக இலக்கியங்கள் அனைத்தையும் நுணித் துணரும்போது அவற்றிடையே ஒருவகையான பொதுச் சிறப்பு இருத்தலைக் காண்கின்ரேம். ஒவ்வொரு சதகத்திலும் செய்யுள்தோறும் ஒரு மகுடம் அமைந்து விளங்குவதே சதக இலக்கியங்களுக்குள்ள பொதுச் சிறப்பாகும். இவற்றில் காணப்பெறும் மகுடங்களை இருவகையில் பகுக்கலாம். ஏதேனும் ஓர் இறைவர் பெயரையோ அல்லது ஒரு மண்டலத் தின் பெயரையோ சதக நூல்கள் அனைத்தும் தமக்கு மகுட மாகப் பெற்றுள்ளன. பெரும்பாலும் அம்மகுடத்திற்கு ஏற்ற வாறே நூலின் தலைப்பும் அமைந்துள்ளமை நோக்கத்தக்கது. உதாரணமாக,

மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே.

என்ற மகுடம் அமைந்துள்ள நூல் குமரேச சதகம் என்ற பெயரையும் 'சோழ மண்டலமே' என்னும் மகுடம் பெற்ற நூல் சோழமண்டல சதகம் என்றும் வழங்கப் பெறுதல்

காணலாம். இப் பொது விதிக்கு உட்படாது ஓரிரு நூல்கள் வழங்குவதையும் காண்கின்றோம். எடுத்துக்காட்டாக

'வந்தடிமை கொண்ட கயிலை
வாசனே யிராசலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலை நாதனே'

என்னும் மகுடம் பெற்றிருந்தும் திருத்தொண்டர் சதகம் என்னும் பெயர் பெற்று விளங்குகின்றது ஒரு சதகம்.

இனி ஒருசில சதக நூல்கள் எத்தகைய மகுடம் பெற்று விளங்குகின்றன என்பதை விரிவாகக் காண்போம்.

வரலாறு உரைக்கும் கார்மண்டல சதகம் 'காராளர் மண்டலமே' என்றும், கொங்குமண்டல சதகம் 'கொங்கு மண்டலமே' என்றும், சோழமண்டல சதகம் 'சோழ மண்டலமே' என்றும் தொண்டைமண்டல சதகம் 'தொண்டை மண்டலமே' என்றும் இவ்வாறே பிற சதகங்களும் மகுடங்கள் பெற்று விளங்குகின்றன.

நீதிநெறியுரைப்பனவும் இறைவனைத் துதிப்பனவுமாய சதகங்களில் குமரேச சதகம் 'மயிலேறி விளையாடு குகனேபுல் வயல் நீடு மலைமேவு குமரேசனே' என்றும் சிவசங்கர சதகம் 'சிவசங்கரா சிவசங்கரா' என்றும், கோவிந்த சதகம் 'அச்சு தாநந்த கோவிந்தனே' என்றும், கைலாசநாதர் சதகம் 'கற்பகவிராசமேவுங் கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே கயிலையங் கிரி வாசனே' என்றும், குருநாத சதகம் 'குருநாதனே குருநாதனே' என்றும், அவையாம்பிகை சதகம் 'மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அவையாம்பிகைத்தாயே' என்றும், அருணசல சதகம் 'அருணசலா அருணசலா' என்றும், கோகுல சதகம் 'கோகுலரே' என்றும் மகுடம் பெற்றுத் திகழ்கின்றன.

இத்தகைய மகுடங்களைப் பெரும்பாலும் நான்காம் அடியில்தான் எல்லாச் சதகங்களும் பெற்று விளங்குகின்றன எனினும் செயங்கொண்டார் சதகம் போன்ற ஓரிரு நூல்கள் மூன்றும் அடியிலேயே 'செயங்கொண்டாரே' என்ற ஒரு

சொல் பயின்று வருவதாய் அமைந்துள்ளதும் குறிபிடத் தக்கது.

மகுட அமைப்பிலே இறைவனது பெயருடன் தன்னை யாதரித்த வள்ளல் பெயரையும் இணைத்து பாடப்பெற்ற ஒருசில சதகங்களும் சதக இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன. அண்ணுமலைச் சதகம் வசந்தராயர் என்னும் வள்ளல் பெயரும் இணைந்த 'அருள் பெறு வசந்தராயர் அண்ணுவினிற் றுதி செயுண்ணுமுலைக்குரிய அண்ணுமலைத் தேவனே' என்ற மகுடத்தையும், அறப்பளீசுர சதகம் மதவேள் என்னும் வள்ளல் பெயரும் இணைந்த 'எமதருமை மதவேள் அனுதினமும் மனதினினை தருசதுர கிரிவளரறப்பளீ சுர தேவனே' என்ற மகுடத்தையும் திருவேங்கட சதகம் மணவாள நாராயணன் என்னும் வள்ளல் பெயரும் இணைந்த 'மணவாள நாராயணன் மனதிலுறையலர்மேலு மங்கைமண வாளனே வரதவேங் கடராயனே' என்ற மகுடத்தையும் பெற்று விளங்குகின்றன.

சதக இலக்கியங்கள் மகுடம் பெற்று வருவன என்ற பொது விதிக்குள் அடங்காத தண்டலையார் சதகம் போன்ற வற்றையும் சதக இலக்கியங்களில் காண்கின்றோம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வரலாறு கூறுவதில் பங்கு பெறும் சிறப்பு: கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு என்று கூறுவதுபோல சிறந்த அறிஞர்களை ஒவ்வொரு சதக நூலும் பாராட்டுகின்ற சிறப்பைச் சதக நூல்களிடையில் காண்கின்றோம்.

எடுத்துக்காட்டாக இங்கு ஓரிரு வரலாறுகளைக் காண்போம். தொல்காப்பியத்திற்குப் பின்னே எழுந்த இலக்கிய அமைதிகளைக் கொண்டு எழுந்த நூல் நன்னூல். இந் நூலினை இயற்றிய பவணந்தி முனிவர் கொங்கு மண்டலத்தில் உள்ள குறுப்பி நாட்டில் சனகாபுரம் என்னும் ஊரில் பிறந்து வளர்ந்தவர். இதனைப் 'பவணந்தி மாமுனி தோன்றிவளர்... சனகாபுரமுங் கொங்கு மண்டலமே' எனவரும் கொங்கு மண்டல சதகச் செய்யுளாலும் உணரலாம். ஆனுல் தொண்டை மண்டல சதகத்தில்,

தன்னூர்ச் சனகையிற் சன்மதி மாமுனி தந்தமைந்தன்
நன்னூ லுரைத்த பவணந்தி மாமுனி நற்பதியுங்
சின்னூ லுரைத்த குணவீர பண்டிதன் சேர்பதியும்
மன்னூ புரத்திரு வன்னமின் னேதொண்டை மண்டலமே

என்று பாடப் பெற்றுள்ளதை நோக்க இரு சதகங்களிடையேயும் முரண்பாடு உள்ளதுபோல் தோன்றுகிறது. ஆயினும் இரண்டும் முரண்பாடில்லாத கருத்தேயாம். பவணந்தி முனிவர் பிறந்து வளர்ந்தது கொங்கு மண்டலமும், சன்மதி முனிவரிடம் உபதேசம் பெற்றுத் துறவு பூண்டிருந்தது தொண்டை மண்டலமும் எனக் கொள்ளல் வேண்டும். இச் செய்தியை அறிந்தால் இரண்டு கருத்துக்களுக்கும் இடையே வேறுபாடின்மை புலப்படும்.

பவணந்தி முனிவர் கொங்கு மண்டலத்தே பிறந்தவராயினும் தொண்டைமண்டலத்தே வந்து சன்மதி முனிவனிடம் உபதேசம் பெற்றுத் துறவறம் பூண்டமையால் இரு சதக நூல்களாலும் பாராட்டப் பெற்றுள்ளார். 'பவணந்தி பிறந்த கொங்குமண்டலம்' எனக் கொங்குமண்டல சதகமும் 'பவணந்தி துறவு பூண்ட தொண்டைமண்டலம்' எனத் தொண்டைமண்டல சதகமும் கூறிக்கொள்கின்றன.

பவணந்தி முனிவர் பிறந்து வளர்ந்த சனகை யென்னும் சீனபுரம் கோவை மாவட்டம் பெருந்துறைப் புகைவண்டி நிலையத்திற்கு அண்மையில் உள்ளதாகவும், சன்மதி முனிவர் வாழ்ந்த சனகை யென்னும் சனநாதபுரம் காவிரியின் வடகரையிலுள்ள மாவிலங்கையாக இருத்தல் வேண்டும் என்றும் கொங்குமண்டல சதக உரையாசிரியர் தி. அ. முத்துச்சாமிக் கோனூர் கருதுகின்றூர். இதற்குச் சான்றுக, 'முடிகொண்ட சோழமண்டலத்து கங்கைகொண்ட சோழவள நாட்டு இடைநாட்டு ஜனநாத புரத்து . . . .' எனவரும் கல்வெட்டுத் தொடரையும் அவர் மேற்கோள்காட்டி விளக்கியுள்ளார்.

சோழ நாட்டுத் திருப்பதியான காழிப்பதியில் உதித்து நாளும் இன்னிசையால் நற்றமிழ் வளர்த்தவர் ஞான

சம்பந்தர். இவரும் அப்பரும் சோழ நாட்டுத் திருவீழி மிழலையில் பஞ்சந் தீர்க்கப் படிக்காசு பெற்ற வரலாற்றைக்

"கன்னி பாகர் வீழியினிற் கனிவா யப்பர் சம்பந்தர்க்
கன்ன தானஞ் செயவேண்டி யளித்த படிக்காசு"

என்று சோழமண்டல சதகம் பாடுகின்றது. சம்பந்தர் தமது தல யாத்திரையின்போது திருச்செங்கோடு வந்திருந்தார். அங்கே குளிர் சுரம் அடியார்களைத் தீண்டவே,

'அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லு மதுவறியீர்
உய்வினை நாடா திருப்பது முந்தமக் கூனமன்றே
கைவினை செய்தம்பி ரான்கழல் போற்றுது நாமடியேஞ்
செய்வினை வந்தெமைத் தீண்டப் பெறுதிரு நீலகண்டம்!

என்னும் பதிகத்தை யோதவே அடியார்கள் கூட்டத்தில் மட்டுமின்றி அந்நாட்டை விட்டே குளிர் சுரம் நீங்கியது என்றும் ஒரு வரலாறு உள்ளது. திருச்செங்கோடு என்பது கொங்குமண்டலத்தே உள்ள ஊராகும். எனவே,

"திருக்கூட்டத் தாரையுஞ் சேர்ந்த நளிர்சுரந் தீரவன்பின்
பெருக்காக 'வவ்வினைக் கிவ்வினை யாமெனப்' பீடுபெறத்
திருக்காழிப் பிள்ளையார் நற்றமிழ் பாடவத் தேயமுற்றும்
வருந்தாதந் நோயின்னும் நீங்கியதுங்
கொங்கு மண்டலமே"

எனக் கொங்குமண்டல சதகமும் பாடிக் கொங்குமண்டலத்தின் பெருமையைக் கூறுகின்றது.

ஞான சம்பந்தர் தொண்டை மண்டலத்தே உள்ள திருமயிலை சென்று எலும்புருவைப் பெண்ணுக்கி அற்புதஞ் செய்தார். இப்பெண் சிவநேசர் என்னும் வணிகரது மகளான பூம்பாவை என்னும் பெயருடைய நல்லாள். இவ் வரலாற்றைப் பெரிய புராணத்தில் நாம் விரிவாகக் காணலாம். ஞான சம்பந்தர் அற்புதஞ் செய்த திருமலைப்பதி உள்ளதும் சிவநேசர் வாழ்ந்ததும் தொண்டைமண்டலமே எனத் தொண்டை மண்டல சதகமும் பின்வருமாறு பாராட்டுகின்றது :

'சயிலைத் திருமுலைப் பாலுறு மட்டுண்ட தண்டமிழாற்
குயிலைப் பணிகொண்டு வெந்தற மாண்ட குடத்தி
லென்பை
யயிலைப் பொருகண் ணதிருப மென்கிளி யாக்குவித்த
மயிலைப் பதியுஞ் சிவநேச ருந்தொண்டை மண்டலமே'
என்பது தொர்ண்டைமண்டல சதகப் பாடலாகும். இங்ஙனமே பிற சதகங்களும் பாடுகின்றன.

சேக்கிழார் முதலிய புலவர்கள் பலரது வரலாறுகளையும் இங்ஙனமே பல்வேறு சதக நூல்களும் கூறுதலைக் காண்கின்றோம். இவற்றினின்று நாம் ஒரு பேருண்மையை அறிகின்றோம். கற்றறிந்த பெரும் புலவர்களோடு தமக்குத் தொடர்புள்ளது என்று கூற ஒவ்வொரு மண்டலமும் விழைகின்றது. எனவே, எவ்விதத்திலாவது தமக்கும் பேரறிஞர்களுக்குமிடையே ஒரு தொடர்பைக் கூறித் தனது நாட்டின் பெருமையை உயர்த்திக் கூறுகின்றனர் கவிஞர்கள். பல்வேறு மண்டலங்களின் வரலாறுகளை விரித்துக் கூறும் இச் சதகங்களினிடையே காணப்படும் இப் பண்பையே நீதி கூறும் சதகங்களிலும் நாம் காண்கின்றோம்.

நீதியுரைத்தல் : உலகினர்க்குப் பயன்படும் பொது நீதியை உரைப்பதில் நீதியுரைக்க எழுந்த ஒவ்வொரு சதகமும் பங்கு பெற்றுள்ளது. இதனால் ஒரு சதகத்தில் காணப்படும் நீதியே வேறு பல சதகங்களிலும் இடம் பெறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதைக் காண்கின்றோம்.

எடுத்துக்காட்டாக ஓரிரண்டு செய்திகளை இங்கே நோக்குவோம். கற்புடைய பெண்டிரது இயல்பு என்ன என்பதை விளக்க ஒவ்வொரு நீதி கூறும் சதகங்களும் விரும்பின. அந்தச் செய்தியைப் புகுத்தினால்தான் தனது நீதி கூறும் பணி செம்மையாக முடிவுறும் எனக் கவிஞர்கள் எண்ணினர் போலும்!

"தங்கணு யகரினிற் றெய்வம்வே றிலையெனச்
சந்தத நினைந்தவர் சொலைத்
தட்டாது கோபம்வர வொட்டாது திட்டமாகச்
சாற்று பணி விடைகள் செய்தே . . . . . .

திங்கள்வத னத்திலே தங்குபொட் டிட்டுமெய்த்
தேசுற வலங்க ரித்துத்
தினமுநா யகனுண்ட பின்னுண்டு முன்னெழுஞ்
செல்விகற் புடைய ளாவாள் . . . . . .''

எனக் கைலாசநாதர் சதகமும்,

''...நாதனைக் கருதியவ னுண்டகுறை யமுதாக
நவில்வதே யுபதேசமாம்
நதியாடல் பலநோன்பு தேவதா தரிசன
நயந்த பல விரதமுமவன்
பாததரி சனமாக்கொள் சுத்தியாய்ப் புத்தியாய்ப்
பத்தியாய்க் கடலினுழம்
பாரென்று கனவிலுறை செய்கினுஞ் செய்கின்ற
பதிவிரத மார்க்கமான
மாதர் புகழ் நீதியே துதிபெற்ற தல்லவோ . . . .''

எனத் திருவேங்கட சதகமும்,

''முக்கணர்தண் டலைநாட்டிற் கற்புடைமங்
கையர் மகிமை மொழியப் போமோ ?
ஒக்குமெரி குளிரவைத்தா ளொருத்தி வில்வே
டனையெரித்தா ளொருத்திமூவர்
பக்கமுற வமுதளித்தா ளொருத்தியெழு
பரிதடுத்தா ளொருத்தி பண்டு
கொக்கெனவே நினைந்தனையோ கொங்கணவா
வென் றொருத்தி கூறினளே''

என்று தண்டலையார் சதகமும் கற்புடைப் பெண்டிரின் பெருமையையும் இயல்பையும் பாராட்டிக் கூறுகின்றன.

பிறசெய்திகள் : இங்ஙனமே வேறுபல செய்திகளையுரைப் பதிலும் பல்வேறு சதகங்களிடையில் ஒற்றுமையுள்ளது. நன்னகரது இலக்கணம் அறப்பளீசுர சதகம், கைலாசநாதர் சதகம், திருவேங்கட சதகம் ஆகிய நூல்களில் கூறப் பட்டுள்ளது. அசுவ இலக்கணம் கைலாசநாதர் சதகம் அண்ணாமலைச் சதகம் ஆகிய நூல்களில் விளக்கப்பட்டுள்ளது. திருமகள் வாழிடங்கள் இன்னின்னவை யெனக் கைலாசநாதர்

சதகம், குமரேச சதகம், அறப்பளீசுரர் சதகம் ஆகிய நூல்களில் கூறப்பட்டுள்ளன. நல்ல மருத்துவன் இயல்புபற்றி அறப்பளீசுர சதகம், கைலாசநாதர் சதகம், திருவேங்கட சதகம் ஆகிய நூல்கள் உரைக்கின்றன. மேலும் பல பொது நீதிகளை விரித்துரைப்பதில் பல சதக நூல்கள் ஒற்றுமை பெற்று விளங்குகின்றன.

தொல்காப்பியர் காலத்திலேயே காணப்படும் நால்வகைச் சாதிப்பிரிவு பற்றியும் சதக நூல்கள் விரித்துரைக்கின்றன. நால்வகைச் சாதியார் இன்னின்னவர், அவர்களுக்குரிய இயல்புகள் இன்னின்னவை, அவர்களது தொழில்முறை இன்னின்னவை என்ற செய்திகளை அறப்பளீசுர சதகம், அண்ணுமலைச் சதகம், குமரேச சதகம், திருவேங்கட சதகம், கைலாசநாதர் சதகம் ஆகிய நூல்களில் காண்கின்ருேம். இவை கூறுகின்ற செய்தியிலும் எத்தகைய வேற்றுமையும் இல்லை. நால்வகை வருணத்தாருக்கும் வரையறுக்கப்பட்ட முறையில் இவை அனைத்தும் ஒரே தன்மையில் கூறுகின்றன.

சதக இலக்கியங்களுக்கு முன்னர்த் தோன்றிய நூல்களில் நீதியுரைக்கும் பல்வேறு நூல்கள் எழுந்துள்ளன. அவற்றுள் சிறப்புடையன திருக்குறள் நாலடியார்போன்ற நூல்களாகும். பிற்காலத்தில் நீதியை யுரைக்க எழுந்த இச்சதக நூல்களும் தமக்கு முன்னே வழங்கிய நீதிகளையும், அறமுறைகளையும் அந் நூல்களினின்று எடுத்து ஆண்டுள்ளன. இவற்றைப் பற்றிய விளக்கங்களை இந்நூலின் பிறிதொரு பகுதியில் காணலாம். ஆயினும் சுவையுடைய ஓரிரு நீதிக்கருத்துக்களை இவண் நோக்குவோம்.

நன்மக்கட் பேறு பற்றி விளக்கவந்த வள்ளுவர்,

> 'எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
> பண்புடை மக்கட் பெறின்'

என்று கூறியுள்ளார். "பழிபிறங்காப் பண்புடை மக்கள்" என்னுந் தொடருக்குப் "பிறரால் பழிக்கப்படாத நற்குணங் யுடைய புதல்வர்கள்" என்று பரிமேலழகர் விளக்கம் கூறுகின்ருர்.

இக்கருத்தினைச் சதக நூலாசிரியர் நன்கு விளக்கியுள்ளனர். அறப்பளீசுர சதகத்தை எழுதிய அம்பலவாணக் கவிராயர்,

"தங்குலம் விளங்கிடப் பெரியோர்கள் செய்துவரு
தருமங்கள் செய்து வரலுந்
தன்மமிகு தானங்கள் செய்தலுங் கனயோக
சாதக னெனப் படுதலும்
மங்குத விலாததன் றந்தைதாய் குருமொழி
மருதுவழி பாடு செயலும்
வழிவழி வருந்தமது தேவதா பத்திபுரி
மார்க்கமுந் தீர்க்கா யுளும்
இங்கித குணங்களும் வித்தையும் புத்தியு
மீகையுஞ் சன்மார்க் கமும்
இவையெலா முடையவன் புதல்வனும் அவனையே
ஈன்றவன் புண்யவா னும்...."

என்று கூறி, 'பழிபிறங்காப் பண்புடை மக்கள்' இயல்பைத் தெளிவாக விளக்கியுள்ளார்.

இக்கருத்தினையே தண்டலையார் சதகம் எழுதிய படிக்காசுப்புலவர் தமக்கே உரிய நடையில் விளக்கிச் செல்லுகின்றார்

"நன்றிதரும் பிள்ளையொன்று பெற்றாலுங்
குலமுழுது நன்மை யுண்டாம்
அன்றியறி வில்லாத பிள்ளையொரு
நூறுபெற்று மாவ துண்டோ?"

என்று படிக்காசுப் புலவர் கூறுவதில் 'நன்மக்கட் பேற்றின் பெருமையை உணரலாம்.

திருவேங்கட சதகம் எழுதிய நாராயண பாரதி இக்கருத்தினையே மேலும் விளக்கியுள்ளார்.

"அரிதான மாதவஞ் செய்கின்ற முனிவரோ
ரடைந்திடுவ ரந்தனைப் போ
லடுத்தவர் தமைக்காத்து மிக்கமே வலர்தமை
யடக்குமுன் சக்கரம் போல்

பெரியோ ரிருக்கின்ற சபையினிற் கவிராஜர்
பேசும்ப்ர சங்கமது போல்
பேருலக மெய்க்கவரு மனுநீதி முடிவேந்தர்
பெறுகின்ற மாகீர்த்தி போல்
ஒருகோடி நட்சத்தி ரங்கஞட னடுவே
யுதித்தசந் திரோதயம்போ
லுபயகுல சுத்தனும் பகிரதன் போலவே
யொருபிள்ளை போதும் அவனுல்
மரபெலா நன்மையே யடையுமென் பார்கள்காண்"

என்று வள்ளுவர் கருத்தினை வண்ணமுற விளக்குகின்ருர் நாராயண பாரதி.

இங்ஙனம் வள்ளுவர் காலத்தில் கூறப்பட்ட ஒரு செய்தியைப் பிற்காலத்தில் வாழ்வோர்க்கும் பயன்படும் முறையில் நல்ல விளக்கங்களோடு கூறும் சதக இலக்கியங்களின் பெருமை சாற்றற்கரியது. முன்னோர் மொழி பொருளைப் பொன்னே போல் போற்றும் சதக நூலாசிரியர்களின் பண்பு போற்றற்குரியது.

உவமைநலமும் உருவகவளமும்: நீதிக் கருத்துக்களை உரைக்கவும் இறைவனைத் துதிக்கவும் எழுந்த சதக இலக்கியங்களில் உவமை நலம் மலிந்து கிடக்கக் காண்கின்ருேம். நீதி நூல்களில் அணிநலங்கள் வாய்க்கப் பெறுவதற்குப் பொன் மலர் நாற்றம் பெற்றதை உவமையாகக் கூறலாம்.

இத்தகு சிறப்பிற்குச் சான்ருக ஒன்றை இவண் காண்போம். இறைவனைத் துதிப்பதையே தமது குறிக்கோளாகக் கொண்டு எழுந்தது குருநாத சதகம். இதில்

காற்ருடி கயிறுபோலவுங் கண்ணுடியி னிழல்
போலவுஞ்
சேத்தாடியும் ரசம்போலவுஞ் சிறியோர்கள்பம்
பரம்போலவும்
பத்தாடிலுன் ருெழிலொப்பிடிற் பகல்ராவினு
மிலையன்றியிற்
கூத்தாடியுடன் ருெழிலார்சொலுங் குருநாதனே
குருநாதனே

என வரும் உவமை நலம் கனிந்து விளங்கும் செய்யுளைக் காண்கின்றோம். ஒரு கருத்தை விளக்குவதற்கு உவமைகள் பல அடுக்கி வரும் வளத்தை இதில் காண்கின்றோம். இங்ஙனம் நலமும் வளமும் நிரம்பப் பெற்ற பல்வேறு உவமைகள் சதக இலக்கியங்களில் காணப்படுகின்றன. விரிவஞ்சி அவை இங்கு எடுத்துக்காட்டப்படவில்லை.

இனி இறைவனைப் பல்வேறு நிலைகளில் உருவகித்துப் பாடப்பெற்ற ஒரு செய்யுளையும் இங்குக் காண்போம். இறைவனைத் திருவாகவும் திறமாகவும், கதிரவனாகவும், மதியாகவும், உருவாகவும், உருவமற்றவனாகவும், ஊனோடு உயிரோடும் கலந்த உறவாகவும், மலராகவும், குருவாகவும் உருவகித்து வழுத்துகின்றார் குருநாத சதக ஆசிரியர். சுவை நலம் மலிந்த இப்பாடலைக் கீழே காணலாம் :

‘திருவாகினாய் திறமாகினாய் திகழ்பானுமா மதியாகினாய்
உருவாகினா யருவாகினா யூனோடுயி ருறவாகினாய்
மருவாகினாய் மலராகினாய் மனமாதியெண் வடிவாகினாய்
குருவாகினா யெனையாண்டவா குருநாதனே குருநாதனே

என வரும் இப்பாடலில் இறைவனை பல்வேறு நிலையினனாக உருவகித்துப் பக்திச்சுவை நனி சொட்டச்சொட்டப் பாடியுள்ள நயத்தைக் காணலாம்.

இங்ஙனமே சதகச் சிறப்புகளை எவ்வளவு வேண்டுமாயினும் கூறலாம். ஆயினும் அவற்றைச் சுவையுணர்ந்து படித்தற் கொப்பாக அதனைக் கூறமுடியாது.

பாண்டியர் வரலாற்றை விரித்துக்கூறக் கோவையும் சோழர் வரலாற்றைக் கூற உலாவும் பல்லவர் வரலாற்றைக் கூறக் கலம்பகமும் இருத்தல்போல மண்டலங்கள் வரலாற்றைக் கூறுவனவாகச் சதகநூல்கள் விளங்குகின்றன. ஆயினும் பிறநூல்வகைகளைப் போலன்றி ஒரு தெளிவான வரலாற்றை

மண்டல வரலாறு கூறுவனவாக அமைந்த இச்சதக நூல்களில் காண்கின்றோம்.

பொதுவகையில் நோக்குங்கால் நாட்டு வரலாற்றை நயம்பட வுரைப்பதிலும் மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையா நீதிநெறிகளைக் கூறுவதிலும், இறைவனைத் துதிப்பதிலும் இச்சதக நூல்கள் இணையற்று விளங்குகின்றன.

4. சதகங்களின் குறிக்கோள்

சதக இலக்கியங்கள் பல்வேறு காலங்களில் பல்வேறு குறிக்கோள்களின் அடிப்படையில் எழுந்தன. முதல் சதகம் தோன்றியதாகக் கருதப்படும் கி. பி. பதினொன்றும் நூற்றூண்டிலிருந்து கி. பி. இருபதாம் நூற்றூண்டு வரை சதக இலக்கியங்கள் எழுந்துள்ளனவென்று கருதுவர். இடைப்பட்ட காலத்தில் சதகங்கள் அனைத்தும் காலத்துக் கேற்ற பொருளமைதிகளுடன் பாடப்பட்டன. சூழ்நிலைக் கேற்றவாறு அவற்றின் குறிக்கோளும் மாற்றம் பெற்றது.

முதல் சதகம் எழுந்த சூழ்நிலை

நமக்குக் கிடைத்திருக்கும் சதகங்களில் காலத்தால் முந்திய சதகம் கார்மண்டல சதகமே என்று கருதப் படுகின்றது. இச் சதக நூல் கார்மண்டலம் என்னும் பகுதியில் வாழ்ந்த அரசர்கள், புலவர்கள் ஆகியோர்களைப் பற்றியும், கார்மண்டலத்தில் வாழ்ந்த வேளாளர் குலப் பெருமை, தொழில்முறை ஆகியவற்றைப் பற்றியும் விரித் துரைக்கின்றது. இச் சதகம் எழுந்த காலத்தில் நிலவிய சூழ்நிலையைப் பற்றி நாம் சிறிது அறிதல் வேண்டும்.

அக்காலத்திற்றூன் சமய எழுச்சி நாடெங்கும் பரவி வளர்ந்து கொண்டிருந்தது. சைவ சமய நாயன்மார்களும், வைணவ ஆழ்வார்களும் தோன்றி நாடெங்கும் சமய உணர்ச்சியைத் தூண்டி வந்தனர். தேவாரம் திருவாசகம் முதலிய சைவ சமய இலக்கியங்களும், ஆழ்வார்களின் பாசுரங் களும் தோன்றியது இக்காலத்தில்தான்.

இக்காலத்தில் கார்மண்டலத்தின் வரலாற்றுச் சுருக்கம் என்று கருதத்தக்க இந்நூல் எழுந்தது. தமிழில் இத்தகைய வரலாற்று நூல் இதற்கு முன்னர் எழவில்லை.

புதிய பாதையில் புதிய இலக்கிய வடிவத்துடன் எழுந்தது இந்நூல்.

கார்மண்டல சதகத்தின் குறிக்கோள்

முதன் முதலாக எழுந்த இந் நூலில் ஒரு மண்டலத்தின் வரலாறு மட்டுமே விரித்துரைக்கப்பட்டுள்ளதை நோக்க, வரலாறு கூறுதலே இச் சதக நூலின் குறிக்கோள் என வரையறுத்துக் கூறலாம்.

இந் நூலின் அமைப்பு முறையில் ஒரு பொது இயைபு இருத்தலைக் காண்கின்றோம். மண்டலச் சிறப்பு, தசாங்கம், வேளாளர் வகை, வேளாளர் வரலாறு, சமயநெறி, மொழியும் நூலும், வள்ளல்களும் புலவர்களும், மங்கையர் மாண்பு என்ற இத் தலைப்புகளுக்குள்ளே இந்நூல் நுவலுகின்ற செய்தியை வகுத்துக் காட்டலாம்.

எனவே மண்டலத்தின் வரலாற்றை விரித்துரைப்பதே இந் நூலின் குறிக்கோளாக விளங்கியது. இதனை இந் நூலுக்கு இடப்பட்ட பெயரானும் அறியலாம். கார் மண்டலத்தின் பெருமையை விரித்துரைக்கும் இந்நூல் கார் மண்டல சதகம் என வழங்கப்பட்டது. இம் மண்டலத்தே வாழ்ந்த வேளாளர் குலப் பெருமை பற்றி இந் நூலில் பரக்கப் பேசப்படுகின்றது.

முதல் சதகமாகிய இக் கார்மண்டல சதகம் எழுந்த காலத்தில் ஒரு மண்டலத்தின் பெருமையை விரித்துரைப்பதே சதக நூலின் குறிக்கோளாகக் கருதப்பட்டது. இக் கொள்கையை ஆதரித்து, கி. பி. பதினேழாம் நூற்றுண்டில் வாழ்ந்த புலவர்கள் கார்மண்டல சதகத்தை அடியொற்றி வேறு சதக நூல்களும் செய்யத் தலைப்பட்டனர்.

ஒட்டி எழுந்த பிற சதகங்கள்

கார்மண்டல சதகம் என்ற பெயரை ஒட்டி வேறு பல சதக நூல்களும் இதே அடிப்படையில் எழுந்தன. அவற்றுள் பாண்டிமண்டல சதகம், தொண்டைமண்டல சதகம்,

கொங்குமண்டல சதகம், சோழமண்டல சதகம், நந்த மண்டல சதகம் போன்ற நூல்கள் குறிக்கத்தக்கன.

பாண்டிமண்டல சதகம் பாண்டி நாட்டின் வரலாற்றை விளக்கும் நூலாகவும், தொண்டைமண்டலத்தின் வரலாற்றை விளக்கும் நூலாகத் தொண்டைமண்டல சதகமும் அமைந்துள்ளன. இங்ஙனமே கொங்குமண்டல சதகம், சோழமண்டல சதகம் முதலிய பிற நூல்கள் ஒவ்வொரு மண்டலத்தின் வரலாற்றையும் விரித்துரைக்கும் நூல்களாக அமைந்துள்ளன. இவற்றையெல்லாம் நோக்க, வரலாற்றை விரித்துரைக்கும் குறிக்கோளுடன் இச்சதக இலக்கியங்கள் எழுந்துள்ளன வென்பது தெற்றென விளங்கும்.

திருத்தொண்டர் சதகம் என்ற நூலும் இக்குறிக்கோளுடன் எழுந்ததுதான். மண்டலங்களின் வரலாற்றை மேற்கண்ட சதக நூல்கள் விரித்துரைப்பதைப் போலவே, இச்சதகம் தொண்டர்களின் வரலாற்றை விரித்துரைக்கின்றது.

வரலாற்றை விரித்துரைக்கும் பிற சதகங்களுக்கும் இச்சதகத்திற்கும் குறிக்கோள் ஒன்ருயினும், அமைப்பு முறையில் இந்நூல் பிற சதகங்களுடன் மாறுபடுகின்றது.

திருத்தொண்டர் சதகத்தில் முதற்கண் நாயனர் தொகை, அவர்கள் திருமரபு, அவர்களுள் குருவருளால் முத்தி பெற்ருேர், இலிங்கத்தால் முத்தி பெற்ருேர், வேடத்தால் முத்தி பெற்ருேர் இன்னின்னர் என்ற விளக்கங்களும் அதற்குப் பின்னே ஒவ்வொரு நாயன்மார்களும் பற்றிய வரலாறும் விரித்துக் கூறப்படுகின்றன.

மண்டலங்களின் வரலாற்றை விரித்துரைக்கும் நூல்களிலும் அந்தந்த மண்டலங்களில் வாழ்ந்த நாயன்மார்கள் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன. ஆயினும் எல்லா நாயன்மார்களது வரலாற்றையும் ஒருங்கே திரட்டித் தருகின்றது திருத்தொண்டர் சதகம் எனவே பிற சதகங்கள் மண்டலங்களின் வரலாற்றை விரித்துரைத்தல் போன்று இச் சதகமும் தொண்டர்கள் வரலாற்றை விரித்துரைப்பதால்

வரலாறு கூறுகின்ற குறிக்கோளேயே இந் நூலும் கொண்டுள்ளதாகக் கூறலாம்.

இரண்டாம் வகைக் குறிக்கோள்

சதக இலக்கியங்களில் இரண்டாவதாக வேருெரு குறிக் கோளேயும் நாம் காண்கின்ருேம். மக்களிடையில் பக்திநெறி குறைந்ததையொட்டி இத்தகைய குறிக்கோளுடன் சில சதகங்கள் எழுந்தன போலும்!

கடவுளின் பல்வேறு குணங்களேயும் அவரது பெருமை களேயும் பலபடப் பாராட்டி எழுந்தன சில சதகங்கள். இவற்றில் எவ்வித வரலாற்றையும் காண இயலவில்லே. நூல் முழுதும் ஒரு தலத்தில் எழுந்தருளியுள்ள கடவுளின் பெருமைகள் விரித்துக் கூறப்பட்டுள்ளன. கடவுளின் பெருமைகளே விரித்துக் கூறுகின்ற துதி நூல்களாகப் பல்வேறு சதகங்கள் சதக இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன.

குருநாத சதகம், அவையாம்பிகை சதகம், அருணுசல சதகம், சிவசங்கர சதகம் முதலியன இக் குறிக்கோளுடன் எழுந்தன.

இச் சதகங்களில் கடவுளர் அருட் பெருமைகள் பற்றிப் பரக்கப் பேசப்படுகின்றது. கடவுளின் திருக் குணங்கள் இன்னின்னவை என்று விளக்கப்படுகின்றன. கடவுளேப் பரவுதல் என்பதைத் தவிர இந் நூல்களில் வேறு எவ்வித மான குறிக்கோளும் கிடையாது.

காலப் போக்கில் கடவுளேத் துதிக்க எழுந்த நூல்களில் வேறு சில நோக்கங்களும் இடம் பெற்றன. தனக்கு உதவி செய்தோர்களிடம் தமது நன்றி பாராட்ட அவர்கள் பெய ரையும் இணைத்துப் பாடப்பட்டன சில சதகங்கள். அறப் பளீசுர சதகம், அண்ணுமலேச் சதகம் போன்ற சதகங்கள் இவ் வகையில் எழுந்தன.

கடவுளேத் துதிப்பதுடன் மட்டுமின்றிப் பழமொழிகளே மக்களிடையே பரப்பவும் முற்பட்டன சில சதகங்கள். தண்டலேயார் சதகம், செயங்கொண்டார் சதகம், கோவிந்த

சதகம் போன்ற நூல்களில் கடவுள்களைத் துதிப்பதுடன் மட்டுமின்றிப் பழமொழிகளும் பயின்றுவருதலைக் காணலாம்.

இங்ஙனம் கடவுளைத் துதிப்பனவாக எழுந்த சதக நூல்களில் காலந்தோறும் சிறு சிறு மாற்றங்கள் ஏற்பட்டாலும் அவற்றில் முக்கிய குறிக்கோளும் பின்பற்றப்பட்டிருத்தலைக் காணலாம். இவை அனைத்தும் ஒரே குறிக்கோளுடன் எழுந்தவையே என்று கொள்ளலாம். காலத்துக்கேற்றவாறு சிற்சில மாற்றங்கள் இடம் பெற்றிருந்தாலும் அவை அனைத்தும் கடவுளைப் பரவுதல் என்ற குறிக்கோளைக் கொண்டனவாகவே விளங்கின.

பிறிதொரு குறிக்கோள் : வேறு சில சதகங்கள் மக்களுக்கு நீதியுரைக்கவும் எழுந்தன. ஆயினும் இறைவனைப் பரவி அதற்கு மேலும் நீதியுரைக்க முற்பட்டன இவை. கடவுளைப் பரவுதல் என்ற குறிக்கோளுடன் மக்களுக்கு நீதியுரைத்தல் என்ற குறிக்கோளையும் இச் சதகங்கள் கொண்டு விளங்கின என்பதை அறியலாம். இவ்வகையில் எழுந்தவை குமரேச சதகம், கைலாசநாதர் சதகம் போன்றவை. இவற்றுள் இறைவன் துதி காணப்பட்டாலும் அவற்றுக்கு மேலாக நூல் முழுதும் நீதியுரைத்தலும் அமைந்திருத்தலால் இதுபோன்ற சதக நூல்களை நீதியுரைக்கும் சதக நூல்கள் எனக் கொள்ளலாம். இவற்றுள் மக்கள் மக்களாக வாழ வேண்டியதற்கு இன்றியமையாத பல்வேறு நீதிகள் உரைக்கப்படுகின்றன. பிற்காலத்தில் எழுந்த நீதி நூல்களில் இச் சதகங்களுக்கு முதலிடம் உண்டு.

மேற்கூறியவாறு மூவகைக் குறிக்கோள்களை யுடையனவாகச் சதக இலக்கியங்கள் அமைந்துள்ளன. ஆயினும் இதுவரை எழுந்துள்ள சதக நூல்களில் இறைவனைப் பற்றித் துதி நூலாக அமைந்த சதகங்களே மிகுதியாக எழுந்துள்ளன என்பது இவண் குறிப்பிடத்தக்கதாகும்.

சதக நூல் எழுந்த காலத்தில் அதன் குறிக்கோள் ஒன்றுக இருந்து, பின் காலப்போக்கில் அது மாறுபட்டு வந்துள்ளது. இவற்றை நோக்கச் சதக இலக்கியங்களில் குறிக்கோளுக்கு

எவ்வித முதன்மையும் கிடையாது என்ற செய்தியை நாம் உணரலாம். எந்தப் பொருளை வேண்டுமாயினும் எடுத்துக் கொண்டு அப்பொருளைப் பற்றி நூறு பாடல்கள் பாடவேண் டியதே சதகத்தின் முக்கிய இலக்கணமாகக் கருதப்பட்டது. எண்ணிக்கைக்குத்தான் முதன்மை கொடுக்கப்பட்டதே தவிர அதன் பொருளமைதிக்கு எவ்வித முதன்மையும் தரப்பட வில்லை என்பது கருதத்தக்கது. அவ்வக்காலத்தில் வாழ்ந்த புலவர்கள் தாம் எதைப் பற்றிப் பாட விரும்பினும், அப் பொருள் பற்றிய நூறு பாடல்கள் செய்து அதற்குச் சதகம் என்ற பெயரை அமைத்துவிட்டனர் போலும் என்றே நாம் கருத வேண்டியுள்ளது.

இக் கருத்துப் பற்றியேதான் சதகத்தின் இலக்கணம் இன்னது என்று வரையறுக்க வந்த இலக்கண விளக்க நூலாசிரியர்,

> 'விளையும் ஒருபொருள் மேலொரு நூறு
> தழைய வுரைத்தல் சதக மென்ப'

என்று விதி செய்தார். இவ்விதியினுள்ளும் நூலின் பொருண் மைக்கு முதன்மை தாராது, அதன் எண்ணிக்கைக்கே முதன்மை தரப்பட்டுள்ளதை அறியலாம்.

ஆயினும் இதுவரை வெளி வந்த சதகங்கள் அனைத்தும் சிறந்த குறிக்கோள்களுடன் இயற்றப்பட்டுள்ளன என்பதை நாம் மறத்தலாகாது. அவற்றிற்குப் பொருள் வரையறை இல்லாது இருந்ததனால்தான் பல்வேறு சுவை மலிந்த சதகங் களை நாம் காண்கின்றோம். சதகங்கள் உயர்ந்த குறிக்கோள் களுடன் எழுந்த நூல்கள். அவற்றின் குறிக்கோள்கள் நூல் முழுதும் அமைந்து விளங்குகின்றன. இங்ஙனம் சிறந்த குறிக்கோள்கள்கொண்டு சுவை கனியப் பாடப் பெற்ற சதக இலக்கியங்களை நாம் அறிந்து இன்புறுதல் வேண்டும்.

5. சதகங்களின் வளர்ச்சி

சதகங்கள் தோன்றிய காலத்திலிருந்து இன்றுவரை அவற்றிடையே உள்ள வளர்ச்சியை ஈண்டு நோக்குவோம்.

தொல்காப்பியத்தில் காணப்படும் விருந்து என்னும் இலக்கண வகையுள் அடக்கப் பெறுவது சதக இலக்கியம். சங்க காலத்திற்குப் பின்னர் மாணிக்கவாசகர் காலமான கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டில்தான் சதகம் என்ற பெயரைக் காண்கின்ரேம். மாணிக்கவாசகரது திருவாசகத்தின்கண்ணே காணப் பெறும் 'திருச் சதகம்' என்பதில் தான் முதன் முதல் 'சதகம்' என்ற பெயரைக் காண்கின்ரேம்.

மாணிக்கவாசகரது காலமான கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டிற்கு முன்னரே வடமொழி இலக்கியத்தில் சதகம் என்ற இலக்கிய வகை எழுந்துள்ளமையைக் காண்கின்ரேம்.

வடமொழி இலக்கியத்தில் காணப் பெறும் சதகத்திற்கும் தமிழ் இலக்கிய வரிசையில் காணப் பெறும் சதகத்திற்கும் அடிப்படையில் ஒரு சில வேறுபாடுகள் உள்ளன

வடமொழியில் மஹா காவ்யங்கள் என்றும் கண்ட காவ்யங்கள் என்றும் இரு வகையினவாகக் காவியங்களே வகைப்படுத்திக் கூறுவர். மஹா காவ்யங்களுக்கு வரையறுக்கப்பட்ட இலக்கணத்தில் ஒன்ரே பலவோ குறைந்து வரின் அவை கண்ட காவ்யங்சள் என்ற பகுப்பில் அடங்கும். எனவே, கண்ட காவ்யம் என்ற பகுதியில் சதக இலக்கியங்கள் அனைத்தும் அடங்குகின்றன.

வடமொழியில் காணப் பெறும் சதகங்கள் தர்மம், காமம், மோட்சம் ஆகிய புருஷார்த்தங்களே விளக்கி நூறு நூறு சுலோகங்களால் யாக்கப்பட்டுள்ளன. தர்மத்தைக் கூறும் சதகத்தை நீதி சதகம் எனவும், காமத்தைக் கூறும்

சதகம் சிருங்கார சதகம் எனவும், மோக்ஷ ஸாதனத்தைக் கூறும் சதகம் வைராக்ய சதகம் எனவும் பெயர் பெற்று விளங்குகின்றன. வடமொழியில் ஏராளமான சதக நூல்கள் காணப்படுகின்றன.

வடமொழியில் காணப் பெறும் நீதி சதகங்களும் வைராக்ய சதகங்களும் மகாபாரதத்தில் உள்ள சாந்தி பர்வத்தையே விளக்குவனவாக அமைந்துள்ளன என்பது பி. எஸ். சுப்பிரமணிய சாஸ்திரியாரின் கருத்தாகும். சாந்தி பர்வத்தில் உள்ள ஒவ்வொரு சுலோகத்தையும் மூலமாகக் கொண்டு மூவகைப் புருஷார்த்தங்களுள் ஒன்றை விளக்கு வனவாக நூறு சுலோகங்களால் அவை இயன்றுள்ளன.

'தமிழில் 96 வகைப் பிரபந்தங்கள்' என்ற வரையறை காணப்படுவதுபோல் வடமொழியில் எவ்வித வரையறையும் இல்லை என்பது இவண் கருதத்தக்கது. வடமொழியில் கண்ட சாவ்யங்கள் என்னும் பகுப்பின்கீழ், சதகம்போன்ற பல்வேறு இலக்கியங்கள் இடம் பெற்றுள்ளன.

வடமொழியில் எழுந்துள்ள சதகங்கள் ஒரு சிலவற்றைப் பற்றி ஈண்டுக் காண்போம்.

கி. பி. ஆறும் நூற்றுண்டில்—தமிழ் இலக்கிய வரிசையில் சதக இலக்கியம் தோன்ருத காலத்திலேயே—வடமொழியில் பர்த்ரு ஹரி எழுதிய நீதி சதகத்தை ம. மாணிக்கவாசகம் பிள்ளை என்பவர் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். அங்ஙனமே பர்த்ருஹரியின் வைராக்கிய சதகமும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

கி. பி. ஒன்பதாம் நூற்ருண்டில் வாழ்ந்த பல்லடர் என்பார் பல்லட சதகம் என்ருெரு நூலை எழுதியுள்ளார்.

வடமொழி இலக்கியங்களில் காணப் பெறும் ஒரு சில சதகங்களையும் அவற்றின் ஆசிரியர்களையும் காணலாம்:

கோஸவாமி நார்த்தன பட்டர்—	வைராக்ய சதகம்
நர ஹரி —	சிருங்கார சதகம்
அமருகர் —	அமருக சதகம்

நாகராஜகவி	—	பாவ சதகம்
பட்ட பாணர்	—	சண்டீ சதகம்
ஆநந்த வர்த்தனர்	—	தேவீ சதகம்
அவதார கவி	—	ஈச்வர சதகம்
ஸுந்த ரரசார்யர்	—	கீதி சதகம்
கோகுலநாதர்	—	சிவ சதகம்
ராமபத்ர தீக்ஷிதர்	—	ராமபத்ர சதகம்
மயூரன்	—	ஸுர்ய சதகம்
உத்ப்ரேஷாவல்லபர்	—	ஸுந்தரீ சதகம்

இவையேயன்றி வடமொழியில் மேலும் பல சதகங்கள் உள்ளன. தர்மம், காமம், மோக்ஷம் முதலிய புருஷார்த் தங்களை விளக்கும் சதகங்களேயன்றி இறைவனைப் பற்றிய துதி நூலாகவும் ஒரு சில சதகங்கள் அமைந்துள்ளன என்பதை மேலே காண்கின்ற பட்டியலில் காணலாம். இவையேன்றி வடமொழியில் மேலும் பல சதகங்கள் எண்ணிலவாக வுள்ளன என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

கி. பி. ஆரும் நூற்றுண்டு முதலே காணுகின்ற இச் சதகங்கள் கி. பி. பதினேழாம் நூற்றுண்டு வரை வடமொழி இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன என்பதை அறிகின்றோம். தஞ்சை அரசனுக இருந்த ஸகஜியின் காலம் கி. பி. 1684-1711 ஆகும். இம் மன்னனுல் போற்றப்பட்டுத் திருவிசலூரில் மான்யம் பெற்ற வித்வான் ராமபத்ர தீக்ஷிதர். எனவே இவர் இயற்றிய ராமபத்ர சதகத்தின் காலம் கி. பி. பதினேழாம் நூற்றுண்டின் பிற்பகுதி என அறியலாம். இம் மன்னனது காலத்தில் வாழ்ந்தவரே சோழமண்டல சதக ஆசிரியரான ஆத்மநாத தேசிகர் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

வடமொழியில் காணப்படும் சதக இலக்கியங்களே தமிழ் மொழியில் காணப்படும் சதக இலக்கியங்களுக்கு மூலம் என்று கூறுவது பொருந்தாது. தமிழ் இலக்கியத்தில் எழுந்த சதகங்களுள் முதல் நூல் என்று கருதத் தக்கது கார் மண்டல சதகமே. இந்நூலில் ஒரு நாட்டின் வரலாற்றை விரித்துரைப்பதே குறிக்கோளாக அமைந்துள்ளதைக் காண்

கின்றோம். எனவே வடமொழிச் சதகங்களின் குறிக்கோளும் தமிழ்ச்சதக இலக்கியங்களின் குறிக்கோளும் ஒன்றையொன்று ஒவ்வாதனவாய் உள்ளன. ஆயினும் எண் அடிப்படையில் மட்டும் இருமொழிச் சதகங்களும் ஒன்றுபட்டுள்ளன.

தமிழில் கி. பி. பதின்ேறும் நூற்ருண்டில்தான் முதன் முதலாகச் சதகம் என்ற பெயரில் அமைந்த தனிநூலைக் காண்கின்றோம். அதற்கு முன்னர் சதகம் என்ற பெயரை மட்டுமே ஒன்பதாம் நூற்ருண்டில் காண்கின்றோம். சதக இலக்கியம் முழு உருப்பெற்றுத் தனி நூலாக அமைந்தது கி. பி. பதின்ேறும் நூற்ருண்டில்தான் ஆகும்.

கி. பி. பதின்ேறும் நூற்ருண்டிற்குப் பிறகு கி. பி. பதினேழாம் நூற்ருண்டின் பிற்பகுதியில்தான் சதக நூல்கள் இரண்டாவது முறையாக எழுந்துள்ளன. இடைப்பட்ட காலத்தில் வேறு பல சிற்றிலக்கியங்கள் தோன்றியிருந்தாலும் சதக இலக்கியங்கள் என்ன காரணத்திஞலோ தோன்ற வில்லை. புதுவகைச் சிற்றிலக்கியமான கார்மண்டல சதகத்தை அடியொற்றிப் பாடக் கவிஞர்கள் முன்வரவில்லை போலும்!

ஐந்து நூற்ருண்டுகளுக்குப் பின்னரே முதன் முதலில் படிக்காசுப் புலவர் சதக இலக்கியத்தை வளர்க்க முன் வந்தார். தமக்கு முன் இயற்றப் பெற்ற கார்மண்டல சதகத்தை அடியொற்றித் தொண்டைமண்டல சதகம் என்ற நூலை அமைத்தார். அத்துடன் மட்டும் அமையாது சதக இலக்கியத்தில் மற்ெருரு திருப்பத்தையும் உண்டுபண்ணிஞர். பழமொழிகளைச் செய்யுள் தோறும் தொடர்பு பெற அமைத்தும் இறைவனைப் பற்றிய துதி நூலாக அமைத்தும் தண்டலையார் சதகத்தை இயற்றிஞர். இங்ஙனம் சதக இலக்கியம் என்பது நாட்டு வரலாற்றை விரித்துரைப்பது மட்டும் பொருளாகக் கொண்டு எழுவதன்று; வேறு எப் பொருளை வேண்டுமாயினும் கொண்டு நூறு பாடல்களால் வரலாம் என்ற மாற்றத்தை ஏற்படுத்திய பெருமை படிக்காசரையே சாரும். எனவேதான் படிக்காசரது ஆசிரியர் என்று கருதப்படும் இலக்கண விளக்க ஆசிரியர் வைத்தியநாத தேசிகர் தமது நூலில்,

'விளையு மொருபொருள் மேலொரு நூறு
தழைய வுரைத்தல் சதக மென்ப'

என்று சதகத்திற்கு இலக்கணம் அமைத்துள்ளார் போலும். இலக்கியம் கண்டதற்கேற்பவே இலக்கணம் இயம்பப்படு மாதலால் படிக்காசரது தண்டலையார் சதகம் வெளிவந்த பின்னரே இவ்விதி எழுந்திருக்கக் கூடும்.

சதக இலக்கியத்திற்குப் பாடப்படும் பொருள் அவசிய மன்று. எண்ணிக்கையே அவசியம் என்ற படிக்காசரது கொள்கை அந்த நூற்றுண்டு முழுதும் வெற்றி பெறவில்லை என்றே தெரிகின்றது.

பதினேழாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் எழுந்ததாகக் கருதப்படும் சோழமண்டல சதகம், கொங்குமண்டல சதகம் ஆகிய நூல்கள் முதல் சதகத்தைப் போன்றே ஒவ்வொரு மண்டலத்தின் வரலாற்றை விரித்துரைப்பனவாகவே எழுந்தன.

ஆயினும் பதினெட்டாம் நூற்றுண்டில் படிக்காசர் காட்டிய வழியில் ஒரு சில சதகங்கள் இறைவனைத் துதிப்பன வாக அமைந்தன. திருவேங்கடசதகம், எம்பிரான் சதகம், பழனியாண்டவர் சதகம் முதலியன இறைவனைத் துதிக்க எழுந்தன. கோவிந்த சதகம் என்றெரு நூல் தண்டலையார் சதகம்போன்றே பழமொழிகளைச் செய்யுள் தோறும் தொடர்பு படுத்திப் பாடப் பெற்றது. இங்ஙனம் புது வகையில் வெவ்வேறு பொருள்களை அடிப்படையாகக் கொண்டு எழுந்த சில சதகங்களைக் கண்டு உலகில் மக்களுக்கு நீதியுரைப்பதைப் பொருளாகக் கொண்டு சில சதகங்கள் எழுந்தன. இறைவனைத் துதிப்பதுடன் மட்டுமின்றி மக்கள் மக்களாக வாழ்வதற்கு இன்றியமையாத நீதிகளை உரைப்பது அவற்றின் கருப் பொருளாக அமைந்தன. அவ்வகையில் எழுந்தனவே குமரேச சதகம், அறப்பளீசுர சதகம் போன்றவை. இவை இறைவனைத் துதிப்பதுடன் மட்டு மின்றி மக்களுக்குத் தேவையான நீதிகளையும் உரைக் கின்றன.

இங்ஙனம் பதினெட்டாம் நூற்ருண்டில் பல்வேறு பொருளமைதிகளை அடிப்படையாகக் கொண்டு எழுந்தன சதக நூல்கள். இதே அடிப்படையில் மேலும் வளர்ச்சியுற்ற நிலையில் பல்வேறு சதக நூல்கள் பத்தொன்பதாம் நூற்ருண்டில் எழுந்தன.

கார்மண்டல சதகம் தொண்டைமண்டல சதகம் போன்ற நூல்களை அடியொற்றி ஈழமண்டல சதகம், நந்த மண்டல சதகம் போன்ற நூல்கள் எழுந்தன. இறைவனைத் துதிப்பதாகவும் நீதியுரைப்பதாகவும் எழுந்த குமரேச சதகம் போன்று கைலாசநாதர் சதகம் முதலியன எழுந்தன. தண்டலையார் சதகம்போன்று செயங்கொண்டார் சதகம் பழமொழிகளைத் தொடர்புபடுத்திப் பாடப் பெற்றது.

இறைவனைத் துதிப்பனவாக சிவசங்கர சதகம் போன்ற நூல்கள் எழுந்தன. இந்த நூற்ருண்டில் மனுநீதி சதகம், மனுவியாக்கியான சதகம் ஆகிய நூல்கள் எழுந்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

தண்டலையார் சதகம் பழமொழிகளையும் அவற்றிற்கு உதாரணமாக நீதியையும் உரைக்கின்றது. ஆனல் இந்த நூற்ருண்டில் அதே அடிப்படையில் எழுந்த செயங்கொண்டார் சதகத்தில் பழமொழிகளையும் அவற்றை விளக்க இதிகாசங்களினின்றும் புராணங்களினின்றும் வரலாறுகள் உரைக்கப்படுதலைக் காண்கின்ரேம்.

இங்ஙனமே நீதியுரைக்க எழுந்த சதகங்களில் கைலாச நாதர் சதகத்தில் மேலும்மேலும் பல சிறப்புகளைக் காண்கின்ரேம். மக்களுக்கு நீதியுரைப்பதுடன் மட்டுமின்றி மக்கள் அறியத்தக்க சுகாதாரம், மருத்துவம், அசுவ சாஸ்திரம் முதலிய கலைகளைப் பற்றிய விளக்கங்களும் இந் நூலில் இடம் பெற்றுள்ளன.

இருபதாம் நூற்ருண்டின் முற்பகுதியில் சிறப்பித்துக் கூறத்தக்க முறையில எந்தச் சதகமும் எழவில்லை. பழைய அமைப்புகளை அடியொட்டிப் பிறந்த அண்ணுமலையார்

சதகம், அருணசல சதகம், பாண்டிமண்டல சதகம், மெய் கண்ட வேலாயுத சதகம் முதலிய நூல்களைக் காண்கின்றோம்.

பொது வகையால் நோக்கும்பொழுது சதக இலக்கியங்கள் தமிழகத்தில் சிறப்புற்று இருந்த காலம் சுமார் முந்நூறு ஆண்டுகளே யாகும். 17, 18, 19 ஆகிய மூன்று நூற்றாண்டுகளில் மட்டுமே சதக இலக்கியங்கள் தழைத்து விளங்கியதைக் காண்கின்றோம்.

கி. பி. இருபதாம் நூற்றாண்டில் சதக இலக்கியங்கள் தழைத்துப் பெருகவில்லை. புது வகையில் இடம் பெற்ற வேறு சிற்றிலக்கியங்களும் பெரும்பாலும் தோன்றவில்லை. சதக இலக்கியங்களின் சுவையுணர்ந்து அவற்றை விரும்பிக் கற்பாரின்மையால் சதக இலக்கியங்கள் நலிந்து வருகின்றன.

இத்தகைய அரிய இலக்கியச் செல்வங்களை இயன்ற அளவு ஊக்கத்துடன் படித்து அவற்றின் சுவைகளை யறிதல் வேண்டும்.

பழங்காலக் கல்வி முறையில் சதக இலக்கியங்கள் படித்த பலர் இன்று நம்மிடையே உள்ளனர். பழங்காலக் கல்வி முறை அழிந்ததோடு இத்தகைய அரிய இலக்கியங்களைக் கற்கும் வாய்ப்பும் நமக்குக் கிட்டவில்லை என்பதை வருத்தத் தோடு கூறவேண்டியுள்ளது.

6. புகழ் பெற்ற சதகங்கள்

1. அறப்பளீசுர சதகம்

பெயர்க் காரணம்

அறப்பளீசுர சதகம் என்பது அறப்பள்ளி என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள கடவுள்மீது நூறுபாடல்களால் பாடப் பெற்ற நூல். அறப்பள்ளி என்ற ஊர் சதுரகிரி என வழங்கும் கொல்லிமலையில் உள்ள ஒரு சிற்றூர். இக்கொல்லிமலை சேலம் மாவட்டத்தில் நாமக்கல் நகரிலிருந்து ஆறு கல் தொலைவில் உள்ளது. சதுரகிரிக்கே அறப்பள்ளி எனப்பெயருண்டு என்பர் சிலர். அறப்பள்ளியில் எழுந்தருளியுள்ள கடவுள் அறப்பளீசுரன் என்னுந் திருப்பெயருடையார். இந்நூலில் உள்ள ஒவ்வொரு செய்யுளும் 'சதுரகிரிவளர் அறப்பளீசுரதேவனே' என்னும் மகுடம் பெற்று விளங்குகின்றது.

ஆசிரியர் வரலாறு

இந்நூலை இயற்றியவர் அம்பலவாணக் கவிராயர் என்னும் நல்லிசைப் புலவராவார். தமிழகத்தின் தவக்குறையால் இப்பெருமகனின் விரிவான வரலாறு கிட்டவில்லை. இவரைச் சீகாழி அருணாசலக் கவிராயரின் புதல்வர் என்று கூறுவர். இராம நாடகம், சீகாழித் தலபுராணம், சீகாழிக்கோவை, அனுமார்பிள்ளைத்தமிழ், அசோமுகி நாடகம் முதலிய நூல்களை யாத்த பெரும்புலவர் அருணாசலக் கவிராயர். இவரது புதல்வர் என்று கூறப்படும் அம்பலவாணக் கவிராயரும் வளமான புலமைபெற்று வாழ்ந்ததில் வியப்பில்லை.

அம்பலவாணக் கவிராயரை ஆதரித்தவர் மதவேள் என்னும் பெயருடைய வள்ளல் என்ற செய்தியை இந்நூலினின்று நாம் அறிகின்றோம்.

'மோழைபூ பதிபெற்ற அதிபன் எமதருமை மதவேள்'
(அறப். சதகம். 1)

'மோழை தரு, மழகன் எமதருமை மதவேள்'
(அறப். சதகம். 7)

என வரும் தொடர்களால் மதவேளின் தந்தையார் பெயர் மோழை பூபதி என்று தெரிகின்றது. இவர் சிறந்த கொடை வள்ளல் என்றும், தமிழ்ப் புலவர்களை அன்போடு ஆதரித்த பண்புடையார் என்றும் தெரிகின்றது. மதவேளின் உயர் குணத்தை அம்பலவாணக் கவிராயர் ஒல்லும்வாயெல்லாம் புகழ்ந்து போற்றுகின்றார்.

'கற்பக தரு வாகுமெம தருமை மதவேள்'
என்றும், (அறப். சதகம். 10)

'அவனிபுக ழருமை மதவேள்' (அறப். சதகம். 47)
என்றும் இவ்வாறு நூல்முழுதும் மதவேளின் உயர் பண்பைப் பாராட்டுகின்றார் கவிராயர். இனி,

'ஆழிபுடை சூழுலகில் வேளாளர் குலதிலகன்
ஆகும்எம தருமை மதவேள்' (அறப். சதகம். 73)
என்று வருவதால் இவ்வள்ளல் வேளாளர் குலத்தினர் என்பது போதரும்.

மதவேள் கொல்லிமலையிலுள்ள குண்டுணி நாட்டுத் தலைவராகிய கருமக்கவுண்டர் என்றும், இவர் தந்தையார் பெயர் மோழைக் கவுண்டர் என்றும் சிலர் கூறுவர். 'அருமை மதவேள்' என்னும் தொடரே நூல்முழுதுங் காணப்படுதலால் இவ்வள்ளலின் பெயர் 'அருமைக்கவுண்டர்' என்று இருக்க வேண்டும் என்பாரும் உளர். இன்றும் சேலம், கோவை மாவட்டங்களில் உள்ள வேளாள மரபினர் கவுண்டர் எனக் கூறப்படுவதை இவர்கள் சான்றாகக் கூறுவர். தனக்கு உதவி புரிந்த மதவேளிடம் தனக்குள்ள நன்றியைத் தெரிவிக்கு முகத்தான் மதவேளைச் செய்யுள்தோறும் தொடர்புபடுத்திப் பாடியுள்ளார். இந்நூலாசிரியர் வேறு நூல்கள் ஏதும் செய்ததாகத் தெரியவில்லை.

ஆசிரியர் காலம்

சீகாழியில் வாழ்ந்து பெரும்புகழ் எய்திய அருணசலக் கவிராயர் காலம் கி. பி. 1712-1779 எனக் கூறுவர் ஆராய்ச்சி யாளர். அருணசலக் கவிராயரின் புதல்வர் அம்பலவாணக் கவிராயர் என்று கூறுவதால் இவரது காலம்பற்றி ஐயப்பாடு இல்லை. கி. பி. பதினெட்டாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர் இக்கவிஞர் எனக் கூறலாம்.

நூலாராய்ச்சி

இந்நூல் முழுதும் மக்கள்தம் வாழ்க்கையில் கைக்கொண் டொழுகவேண்டிய ஒழுகலாறுகள் விரித்துரைக்கப்படுகின்றன. பிற்காலத்தில் எழுந்த நீதி நூல்களில் முதலிடம் பெற்று விளங்கும் பெருமையுடையது இந்நூல்.

பிறவிகள் ஏழு என்று சொல்லப்படுகின்றது. வானவர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பன அவை. இவற்றுள் மக்கட் பிறவியே இவ் வுலகத்து உயர் பிறப்பு ஆகும். 'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்று கூறினர் ஔவைப் பிராட்டியார். இக்கருத்தினை,

> 'எழு பிறப்பினுள் மிக்க, காட்சிபெறு நரசன் மமாய்க்
> கருதப் பிறத்த லரிது'

என்று இந்நூல் கூறுகின்றது. எனவே 'அன்றறிவா மென்னுது' 'ஒல்லும் வாயெல்லாம்' அறம்செய்து இசைபட வாழ்வது மக்கட்கு இன்றியமையாதது. அறிவுசான்ற மக்களாய்ப் பிறந்து அழகு, திரு, ஒழுக்கம், இறைவழிபாடு ஆகியன உடையாராய் வாழ்தல்வேண்டும் என்றும் இந்நூல் மக்களுக்கு அறிவுகொளுத்துகின்றது.

நன்மக்கட்பேறுபற்றிக் கூறவந்த வள்ளுவர் 'பெறும வற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த மக்கட் பேறல்ல பிற' என்று கூறினர். இக்கருத்தை உள்ளடக்கிய கவிராயரும்

நன்மக்கள் யார் என்றும் அவர்தம் இயல்பு இன்னது என்றும் சுவைபட விளக்கியுள்ளார்.

நன்மாணுக்கர் இயல்புகள் இன்னவை என்று நன்னூலாசிரியர் பவணந்தியார் தம் பாயிரத்தில் கூறிப்போந்தார். முன்னோர் மொழிபொருளைப் பொன்னேபோல் போற்றும் கவிராயரும் நன்மாணுக்கரியல்பு பற்றி விளக்கியுள்ளார். 'ஏக்கற்றும் கற்றார்' என்ற வள்ளுவர் கூற்றிற்கு விளக்கவுரை போன்று அமைந்துள்ளது இந்நூலில் நன்மாணுக்கர் இயல்பு பற்றிக்கூறும் செய்யுள். கொடுமைசெய்தாலும் இகழ்ந்தாலும் மனம் கோணாது, மாதாபிதா நீயே என்று பணிவிடை செய்து, பொருளுடலாவி நின்னதே யெனப் போற்றிப் பரவுதல் நன்மாணுக்கர் கடன் என்று கவிராயர் கூறியுள்ளார்.

''வென்றியாக்கலும் மேதகவாக்கலும்... செல்வம்'' என்று கூறுகின்றார் தேவர்.

'பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்' (குறள். 751)

என வள்ளுவர் பொருளின் பெருமையையும் இன்றியமையாமையையும் கூறுகின்றார். 'பொருளிலார்க் கிவ்வுலகமில்லை' என்று பின்னரும் கூறி உலக வாழ்வில் பொருள் பெற்ற பெரும் பங்கை அவர் விளக்குகின்றார். கவிராயரும் பொருளைச் சேர்த்துக் காத்து, செலவிடவேண்டிய முறைகளை தமது நூலில் கூறுகின்றார். பாடுபட்டுப் பணந்தேடிப் புதைத்து வைத்திழக்கும் அறியா மக்களை நோக்கி ஔவைப்பிராட்டி இரக்கமுற்றுப் பாடினார். கவிராயரும்,

'வறிதிற் புதைத்துவைத் தீயாத பேர்களே
மார்க்க மறியாக் குருடராம்'

எனக் கூறி அத்தகையோரை 'வழியறியாக் குருடர்' என வசைபாடுகின்றார்.

கவிராயர் பல கருத்துக்களை ஒரே பாடலில் பொதிந்துரைக்கும் புலமையாளர்.

கோவில்இல் லாதவூர், நாசியில் லாமுகம்
கொழுநன்இல் லாத மடவார்
குணமதில் லாவித்தை மணமதில் லாதமலர்
குஞ்சரம் இலாத சேனை
சுாவல்இல் லாதபயிர் பாலர்இல் லாதமனை
கதிர்மதி யிலாத வானம்
கவிஞர்இல் லாதசபை, சுதிலயை இலாதபண்
காவலர் இலாத தேசம்
ஈவதில் லாததனம் நியமம்இல் லாதசெபம்
இசைல வணம் இல்லா வூண்
இச்சையி லாதபெண் போகநலம்......

ஆகிய இவற்ருல் பலன் ஏதும் கிடையாது என்று விளக்கு கின்ருர். எனவே மேற்கூறிய அனைத்தும் தத்தமக்குரிய அழகு களைப் பெற்றிலங்க வேண்டும் என்றும் உய்த்துணர வைத் துள்ளார்.

நாநலம் என்றும் நலனுடைமை பற்றி வள்ளுவர் பத்துக் குறள்களால் விளக்குகின்ருர். கற்றதைப் பிறர் உணருமாறு விரித்துரையாதவர் 'இணரூழ்த்தும் நாரு மலரனையர்' குறள் (650) என்று உவமை காட்டிச் சொல் வன்மைக்குச் சிறப்புக் காட்டுவார் அவர். வள்ளுவர் கூறியதை மனத்தில் கொண்ட கவிராயரும்

'மாருத கலைகற்றும் நிலைபெற்ற சபையிலே
வாயிலா தவனொரு பதர்' (அறப். 12)

என்று கூறி அத்தகையோரைப் 'பதர்' என்ற சொல்லால் குறிக்கின்ருர்.

இங்ஙனம் வள்ளுவர் கருத்துக்களை தம் காலத்து வாழ்ந்த பெருமக்களுக்கு உணர்த்துவார்போல் திருக்குறள் கருத் துக்களை நூலெல்லாம் புகுத்தியுள்ளார் கவிராயர். வள்ளுவர் கூறிய அறமுறைகளையெல்லாம் அறப்பளீசுர சதகத்தில் அமைத்துப் பாடி மகிழும் இயல்பினர் அம்பலவாணக் கவிராயர்.

'கற்றபின் நிற்க அதற்குத் தக' என்னும் குறள் கருத்து 'கற்ற வழியிலே நிற்கவேண்டும்' எனவரும் தொடரிலும், 'அறவினை யோவாதே செல்லும் வாயெல்லாஞ் செயல்' என்ற கருத்து 'வளரறஞ் செய்யவேண்டும்' என்னும் தொடரிலும் 'அறிவுடையார் கேண்மை திறனறிந்து தேர்ந்து கொளல்' என்னும் கருத்து 'சீலம் உடையோர்களைச் சேரவேண்டும்' என்ற தோடரிலும் குறளின் குரலாய் ஒலிப்பது கண்டு இன்புறலாம்.

> ''காமிக்கு முறையில்லை ; வேசைக்கு நாணில்லை ;
> கயவர்க்கு மேன்மை யில்லை
> கன்னமிடு கள்வருக்கு இருளில்லை; விபசார
> கன்னியர்க்கு ஆணை யில்லை'' (அறப். 18)

என வரும் தொடர்களில் இன்றைய சமுதாய அமைப்பும் அதிலும் முறையற்ற செயல்களும் பின்னிக் கிடத்தலைக் காணலாம்.

சான்றோரின் பெருமையை அற்பரால் அழிக்க முடியாது என்ற கருத்தைப் பிறிதுமொழிந்து ஆசிரியர் விளக்குகின்ற நயம் அறிந்து இன்புறற்பாலது.

> தறிபட்ட சந்தனக் கட்டைபழு தாயினும்
> சார்மணம் பழுதா குமோ !
> தக்கபால் சுவறிடக் காய்ச்சினும் அதுகொண்டு
> சாரமது ரங்கு றையுமோ (அறப். 23)

என வரும் அடிகளில் ஆசிரியரின் மதிநலத்தையும் கவிவளத்தையும் காண்கின்றோம்.

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் புல்லர்களின் செயலை வெறுத்த தாயுமானவர் அத்தகையோர் உறவு கலவாமை வேண்டும் என்று இறைவனிடம் உள்ளமுருக வேண்டுகின்றார். அம்பலவாணக் கவிராயரும் தாயுமானவர் அடிச்சுவட்டில் நின்று சதுரகிரிவளர் அறப்பளீசுர தேவனை மனத்தில் இருத்தி 'உள்ளன்பிலாதவர் தித்திக்கவே பேசி உறவாடும் உறவும் உறவோ?' என்று வினவெழுப்புகின்றார்.

சிந்துநதியின்மிசை நிலவினிலே, சேர நன்னாட்டிளம் பெண்களுடனே, சுந்தரத் தெலுங்கினிற் பாட்டிசைத்துத் தோணிகளோட்டி விளையாடி வரும் காலமே ஒற்றுமை பெற்ற சமுதாயம் உருவாகும் காலம் என்பதைக் கண்டவர் அமரகவி பாரதியார். பாரதி காண விரும்பும் இத்தகைய ஒற்றுமையுற்ற சமுதாயத்தைக் காண இந்நூலாசிரியரும் விரும்பியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. 'செத்தைபல கூடியொரு கயிருயின் அதுகொண்டு திண்கரியை யும் கட்டலாம்' என்று அந்த ஒற்றுமைச் சக்தியின் பெருமைக்குச் சான்றும் கூறியுள்ளார்.

'நல்குரவென்னும் இடும்பை' என்று கூறி வள்ளுவர் வறுமையின் கொடுமையை விளக்குகின்ருர். 'இன்றும் வருவது கொல்லோ நிரப்பு' என உள்ளம் வருந்தும் ஏழையை நம் கண்முன் நிறுத்தி 'இன்மையின் இன்னுதது இன்மையே' என்று உறுதி கூறுகின்ருர் அவர். வறுமையின் கொடுமையை அம்பலவாணக் கவிஞரும் அறிந்து அதனைக் கூறுகின்ருர்.

மேலான சாதியில் உதித்தாலும் அதிலென்ன?
வெகு வித்தை கற்றும் என்ன ?
'மிக்கஅதி ரூபமொடு சற்குணம் இருந்தென்ன ?
மிகு மானி ஆகில் என்ன ?
பாலான மொழியுடையன் ஆய்என்ன ? ஆசார
பரனய் இருந் தும்என்ன ?
பார்மீது வீரமொரு ஞானவான் ஆய்என்ன ?
பாக்கியம் இலாத் போது ;

என்று வருகின்ற பாடலில் ஒவ்வொரு சொல்லும் ஆசிரியரின் அநுபவ முத்திரை பெற்று விளங்கக் காணலாம்.

நீதியைக் கூறும் நூலாயினும் வெற்று வார்த்தைகளின் சேர்க்கையாக இராமல் நலம் பெற்ற கவிதைகளாகவும் பாடல்கள் விளங்கும் பண்பை இந்நூலிலும் நாம் காண் கின்ருேம்.

'வெகுமானம் ஆகிலும் அவமானம் ஆகிலும்
மேன்மையோர் செய்யில் அழகாம்!
விரகமே ஆகிலும் சரசமே யாகிலும்
விழைமங்கை செய்யில் அழகாம்'

என வரும் செய்யுளில் கவிதை நலமும் கருத்து வளமும் தம்முள் இயைந்து நிற்றல் காணலாம்.

இந்த நீதியுரைக்கும் நூலில் உவமை நலமும் ஆங்காங்கே மிளிரக் காண்கின்றோம். உடன்பிறந்தோர் அனைவரும் ஒத்து உயிரொன்று உடல் வேறு என வாழ வேண்டிய இன்றி யமையாமையை உணர்த்தப் புகுந்த ஆசிரியர் அழகிய உவமை வாயிலாக அக்கருத்தை விளக்குகின்றார்.

'ஐந்தலைச் சீறரவம் மணிவாய் தொறும்
கூடுற்ற இரையெடுத்து ஒருடல் நிறைத்திடும்
கொள்கை போல்' (அறப். 4)

என்று கூறுகின்றார். ஐந்தலை நாகம் தனது ஐந்து வாய் களானும் உணவு பற்றித் தனது ஒரே உடலை நிறைத்திடுவது போல உடன்பிறந்தார் அனைவரும் தனித்தனியே பொருள் தேடினும் அனைவரும் கூடி வேற்றுமையின்றி ஒருங்கிருந்து உண்டு வாழவேண்டும் என்று கூறுகின்றார் ஆசிரியர்.

இவை மட்டுமின்றி, சகுன பலன், முழுக்கு நாள், புத் தாடை அணியும் நாள், மனைகால் கொள்ளுதற்குரிய மாதம், மாணிக்க இலக்கணம், மழைநாள் குறிப்பு முதலிய செய்தி களைப் பற்றிய விளக்கங்கள் இந்நூலில் காணக் கிடக்கின்றன.

அந்தணர், அரசர், வைசியர், வேளாளர் என்ற நால்வகை வருணத்தாரியல்பும் சிறப்பும் பற்றி இவர் நான்கு செய்யுட் களில் விளக்கியுள்ளார்.

மேலும் முப்பத்திரண்டு அறங்கள் இன்னின்னவை, புராணங்கள் இன்னின்னவை, திருமாலின் அவதாரங்கள் இன்னின்னவை என்பன போன்ற செய்திகளும் இந்நூலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

வடமொழியின் செல்வாக்கு தமிழ் மொழியில் மிகுதி யாக இருந்த பிற்காலத்தில் இந்நூல் எழுந்துள்ளது. எனவே இந்நூலிலும் வடமொழிச் சொற்கள் பலவற்றை நாம் காண்கின்றோம்.

புண்யம், மிருதுபாஷி, லீலே, சத்யம், வித்யா, மந்த்ரம், தந்த்ரம், வஸ்த்ராபரணம், லவணம், த்யாகம், ப்ரவாகம், வர்க்கம் என இவ்வாறு பல்வேறு வடசொற்கள் இந்நூலுள் பயின்று வந்துள்ளன.

வட சொற்களாயினும் தமிழ் மொழியில் பயின்று வருங் காலே, தமிழ்மொழி யமைப்புக் கேற்றவாறு மாற்றம் பெற்று இந்நூலுடன் இடம் பெற்றுள்ள சொற்களும் பலவுள.

விகடக்கவி, தேசச் சூனியம், கிரகச் சாரம் போன்ற சொற்கள் தமிழ்மொழி விதிப்படி புணர்ச்சியில் வல்லெழுத்து மிக்கு வந்துள்ளனவென்பதை நாம் காணலாம்.

இலக்கிய வழக்குச் சொற்களேயன்றி, பேச்சு மொழியில் பயன்பட்ட சிற்சில சொற்களும் இந்நூலுள் ஒரோவழி இடம் பெற்றுள்ளன. வாசல், போது, ஏலாத போன்ற சொற்களே இதற்குச் சான்று காட்டலாம்.

இத்தகு சிறப்புப் பல எய்திய இந்நூல் சதக இலக்கிய வரிசையில் தனியிடம் பெற்று விளங்குகின்றது. நீதி கூறும் சதக நூல்களுக்கு முன்னோடியாகத் திகழ்கின்றது. வட மொழிச் சொற்கள் கலந்து இடையிடையே வரினும் இச் சதக நீதி இலக்கியத்தில் தமிழின் தனித் தன்மை குறையாது பீடுடன் விளங்கும் பான்மை அறிந்து இன்புறத்தக்கதாம்.

2. குமரேச சதகம்

பெயர்க் காரணம்

குமரேச சதகம் என்பது குமரக் கடவுளாகிய முருகன்மீது நூறுபாடல்கள் பாடப்பட்டவொரு நூல். சோழவள நாட்டில்

புதுக்கோட்டையை அடுத்துள்ள திருப்புல்வயல் என்னுந் திருப்பதியில் எழுந்தருளியுள்ள குமரக்கடவுள்மீது எழுந்தது இந்நூல். திருப்புல்வயல் சோழநாட்டைச் சார்ந்தது என்று கூறுதற்கு நமக்குச் சில அகச்சான்றுகளும் உள.

'மாடமிசை யன்ன கொடித்திரள்கொள் சோணுடு
வாழ வந் திடு முதல்வனே' (கும. சத. 51)

'மதிலுடன் கோபுரமும் வாவியும் புடைசூழ
மருவுசோ ணுட்டதிபனே' (கும. சத. 68)

என வரும் அடிகளால் இப்பதி சோழநாட்டைச் சார்ந்தது எனக் கூறலாம். இத்திருப்பதிமீது அருணகிரிநாதரும் பாடல் பல புனேந்துள்ளார் என்றும் கூறுவர். இந்நூலாசிரியர் தான் விரும்பி வழிபடும் திருப்புல்வயல் குமரேசக் கடவுளை முன்னிலேப்படுத்தி, உலக இயல்புகளையும் மனிதன் நல்வாழ்வுக் கேற்ற அறவுரைகளையும் எடுத்துக்கூறும் தன்மையில் அமைந் துள்ளது இந்நூல். இந்நூலில் காணப்படும் செய்யுட்களின் இறுதிதோறும்

மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலேமேவு குமரேச னே —

என்ற மகுடம் காணப்படுகின்றது.

நூலாசிரியர் வரலாறு

இந்நூலே இயற்றிய ஆசிரியர் குருபாததாசர் என்னும் **புலமையாளர்** என்ற செய்தியை,

பன்னிய புல்வயலில் வாலகும ரேசர்மேல்
பரிந்து குரு பாததாசன் (கும. சத. 100)

என்று வரும் இந் நூலின் செய்யுளால் அறியலாம். இவரது இயற்பெயர் முத்துமீனுட்சிக் கவிராயர் என்றும், கூறுவர். இவர் சைவ மதத்தைச் சார்ந்தவர் என்றுரைப்பர் அறிஞர்.

இதனை

'வல்லமையினுல், எண்ணத்தி ஞலொன்றும் வாராது
பரமசிவன் எத்தனப்படி முடியுமாம்'
(கும. சத. 44)

'வாடாம லிவையெலாஞ் சிவன்செயல்க ளல்லாது
மனச்செயலி ஞலும் வருமோ' (கும. சத. 85)

என வரும் அடிகளால் உணரலாம். சிவ வழிபாட்டில் நம்பிக்கையும், முருகனிடத்துப் பேரன்பும் கொண்ட சிறந்த சிவபக்தர் இவர்.

இவர் வேளாள குலத்தைச் சார்ந்தவர் என்றுரைப்பர். ஆனுல் இதனை வலியுறுத்திக் கூற நமக்கு அகச்சான்றுகள் எதுவும் கிட்டவில்லை. புறநானூறு, திருக்குறள், நாலடியார் போன்ற நூல்களையும், தம்காலத்து வழங்கிய பிறநூல்களையும் நன்கு பயின்று ஆழ்ந்த புலமை வளம் பெற்றவர் இந் நூலாசிரியர்.

இவர் சுமார் 170 வருடங்களுக்கு முன்பு வாழ்ந்தவர் என்று அறிஞர் கூறுவர். எனவே இவர் பதினெட்டாம் நூற்ருண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர் என்று கொள்ளலாம்.

நூலாராய்ச்சி

மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்குப் பயன்படற் கேற்ற அறவுரைகள் மலியப் பெற்றது இந்நூல். அறிவுநெறிகளும், சிறந்த ஒழுக்கமும் கூறுகின்ற இந்நூல் சதக இலக்கியத்தில் சிறப்பிடம் பெற்று விளங்குகின்றது.

அந்தணர் அரசர் வைசியர் வேளாளர் என்ற நால்வகை வருணத்தார் இயல்பும் அவர்தம் ஒழுகலாறுகள் பற்றியும் முதற்கண் விரித்துரைத்துள்ளார்.

'நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்'

என்று வரும் புறநானூற்றுச் செய்யுள் கருத்தையும்,

'வையம் மன்னுயி ராகவம் மன்னுயிர்
உய்யத் தாங்கு முடலன்ன மன்னவன்'

என வரும் கம்பராமாயணச் செய்யுள் கருத்தையும் பொதிந்து

"பல்லுயிர் எலாந்தன் உயிர்க்குநிக ரென்றே
பரித்தல்"

என்று அரசர் இயல்பு கூறுகின்ருர். திருக்குறளில் மன்னர்க் குரியனவாகக் கூறப்படும் எல்லாக் கருத்துக்களையும் உள் ளடக்கி ஒரே பாடலில் மன்னன் இயல்பு இன்னது என விளக்குகின்ருர் இந்நூலாசிரியர்.

பெற்றெடுத்தவனும், வளர்த்தவனும், வித்தை கற்பித் தோனும், துன்பம் நீக்கியாளும் அரசனும், ஆபத்துவேளையில் அஞ்சேலென்று துயர்தீர்த்தோனும், இன்னபிறரும் தந்தைக்கு ஒப்பாவர் என்று ஆசிரியர் கூறுகின்ற கருத்து இன்பம் பயக் கின்றது.

'உண்டிகொடுத்தோர் உயிர்கொடுத்தோரே' என்று பாராட்டுகின்ருர் சீத்தலைச் சாத்தனர். சாத்தனர் காட்டும் வழியிலே நிற்கும் இந்நூலாசிரியரும் 'ஆதுலர்க்கு அன்னம் கொடுத்தவர்களே தெய்வம்' என்று கூறுகின்ருர். 'தெய்வந் தொழாது கொழுநற் ரெழுதெழும்' கற்புடைப் பெண்டிரை 'காதல்உறு கற்புடை மங்கையர் தமக்கெல்லாம் கணவனே மிக்க தெய்வம்' என்ற தொடரில் காட்டுகின்ருர் ஆசிரியர்.

'முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்'

என்ற குறள் கருத்தை,

'காசினியில் மன்னுயிர் தமக்கெலாம் குடிமரபு
காக்குமன் னவர் தெய்வமாம்'

என்ற தொடரில் ஆசிரியர் விளக்கியுள்ளார்.

பிறருக்குப் பயன்படும் செல்வமுடையாரை வள்ளுவர் பாராட்டுகின்ருர்.

'பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்றுற் செல்வம்
நயனுடைய யான்கட் படின்.'

'ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு'

என்ற குறள்களில் நல்லோர் செல்வம் பிறருக்கு உள்ளூரில் பழுத்த பழமரமாக, நீர்நிறைந்த ஊருணியாகப் பயன்படுவ தாகக் கூறியதைக் காணலாம். வள்ளுவர் கருத்திளே உள்ளடக்கி இந்நூலாசிரியரும் பலர்க்கும் பயன்படுவன இன்னின்னவை என்று கூறுமிடத்தில் 'ஊருணியின் நீரும்' 'கண்டவர்கள் எல்லாம் வரும் பெருஞ் சந்தியிற் கனிபல பழுத்த மரமும்' 'வெகுசனர்க்கு உபகாரமாம்' எனக்கூறி முடிக்கின்றுர். வள்ளுவர் இத்தகைய செல்வர்களுக்கு நய னுடையான், பேரறிவாளன் என்பன போன்ற பெயர்களைச் சூட்டி மகிழ்தல் போலவே இந்நூலாசிரியரும் இத்தகைய செல்வருக்கு 'விவேகி' என்ற பட்டஞ் சூட்டி மகிழ்கின்றுர்.

'விவேகி யெனும் நல்லோ ரிடத்திலுறு செல்வமும்
வெகுசனர்க்கு உபகார மாம்'

என்று வரும் தொடரைக் காண்க.

இந்நூலாசிரியர் சிறந்த மருத்துவரைப் போல உடலே நலமாக வைத்திருக்கும் வழியையும் நமக்குக் காட்டுகின்றுர். திங்களுக்கு இருமுறை பெண்களைக் கூடுதல், ஆண்டுக்கு இருமுறை வயிற்றுக்கழிவு மருந்து உண்டல், வாரத்துக்கு இருமுறை எண்ணெய் முழுக்காடுதல், தன்னினும் இளேயா ளான பெண்ணுடன் கூடுதல், முற்றிய தயிர், காய்ச்சிய பால், நீர்மோர், உருக்கிய நெய், வழுக்கையான இளநீர் ஆகியவை உண்ணுதல், புசித்தபிறகே நீர் பருகுதல், உண்டபின் உலா வுதல் ஆகியவை உடலே ஓம்பும் நன்முறைகளாகும் என்று கூறுகின்றுர் ஆசிரியர். இதனே

'மாதத்து இரண்டுவிசை மாதரைப் புல்குவது
மறுவறு விரோசனந் தான்
வருடத்து இரண்டுவிசை தைலம் தலேக்கிடுதல்
வாரத்து இரண்டு விசையாம்

மூதறிவி னேடுதன் வயதினுக் கிளையவொரு
மொய்குழ லுடன்சை யோகம்
முற்றுதயிர் காய்ச்சுபால் நீர்மோர் உருக்குநெய்
முதிரா வழுக்கையிள நீர்
சாதத்தில் எவ்வள வாகுலும்பு சித்தபின்
தாகந் தனக்குவாங் கல்
தயையாக உண்டபின் உலாவல்இவை மேலவர்
சரீரசுகம் ஆமென்பர் காண்
மாதவகு மாரிசா ரங்கத்து உதித்தகுற
வள்ளிக்கு உகந்தசர சா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே

என்று வருகின்ற செய்யுளிலே காணலாம்.

கவிஞர்களின் சொற்களிலே சக்தியுண்டு. அவர்கள் அல்லற்பட்டு ஆற்ருது கூறிய சொல் எத்தகைய செல்வர் களையும் அழிக்கும் படையாகும். எனவேதான் வள்ளுவரும்

'வில்லே ருழவர்பகை கொளினும் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை' (குறள் 872)

என்ருர்.

இக் கருத்தினை இந் நூலாசிரியரும் வலியுறுத்துகின்ருர். ஆகாத பகைகள் இன்னின்னவை என்று அவர் கூறப் புகுந்த இடத்தில்,

'உரம் மருவு கவிவாணர் பகையும்ஆ சான்பகையும்
உறவின்முறை யார்கள் பகையும்
உற்றதிர வியமுளோர் பகையும்மந் திரிபகையும்
ஒருசிறிதும் ஆகாது காண்'

என்று கூறுகின்ருர்.

மனிதன் கண்ணுக்குத் தெரியாத பேயைப் பற்றிப் பயப் படுகின்ற இற்றைச் சமுதாயத்திற்கு அவன் கண்ணெதிரில் உலவுகின்ற பேய்களை இன்னின்னவை என்று விளக்கிக்

காட்டுகின்ருர் இந்நூலாசிரியர். மனித உருவிலே பேய்கள் உலவுவதைப் படம் பிடித்துக் காட்டுகின்ருர். கடன் கொடுத்தோர் வந்து கடனைத் திருப்பிக் கேட்கும் வேளையில் முகம் கடுகடுப்பவர் ஒரு பேய், பெரிய தனம் வந்தவுடன் இறுமாந்து கண் விழிக்காதவர் ஒரு பேய், எதிரியின் பேச்சை மதித்து அதில் அகப்பட்டுழன்றவர் ஒரு பேய், ஆசை மனையாளிடம் நேசம்கொண்டு உண்மைச் செய்திகளை உரைப்பவர் ஒரு பேய், நல்லோர்களையும் பெரியோர்களையும் சற்றும் எண்ணுதவர் ஒரு பேய், கையூட்டிற்கு ஆசைகொண்டு இடுக்கண் செய்வார் ஒரு பேய், மனையாளிருக்கப் பரத்தையரிடம் செல்வோர் ஒரு பேய்—இத்தகைய பேய்களெல்லாம் 'வசை பெற்ற பேய்களன்ருே?' என்று கூறுகின்ருர் ஆசிரியர்.

'தக்க சமயத்தில் உதவி செய்யாத நட்பாளர்களும், முறை செய்து காப்பாற்ருத மன்னனும், ஆண்மையில்லாப் பிள்ளையும், இரப்பவர்க்கு இல்லையென்பாரும் இருந்தும் பலனில்லை' என்று உலக நீதியுரைக்கின்ருர் இந்நூலாசிரியர்.

ஒருவரைக் காணுதவழி அவர் பற்றி இகழ்ந்துரைக்கும் பண்பை வள்ளுவர் கண்டித்துக் கூறியுள்ளார். புறங்கூறிப் பொய்த்து உயிர் வாழ்தலைவிடச் சாதலே அறங்கூறும் ஆக்கந் தருவது என்பது வள்ளுவர் கருத்து. எனவேதான் வள்ளுவர்,

'கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
முன்னின்று பின்னேக்காச் சொல்' (குறள் 184)

என்று கூறினர். புறங்கூறி வாழ்தலின் கொடுமையுணர்ந்த இந்நூலாசிரியரும் புறம் பேசித் திரிவாரைப் 'பதர்' என்ற சொல்லால் குறிப்பிடுகின்ருர். 'காணுத இடம் தன்னிலே புறணிபல பேசிக் களிக்கும் பதர்' என்று அவர் கூறுவதை நோக்குக.

நோய் உண்டாவதற்கு மூல காரணம் உணவுப் பொருத்தமின்மையே. உணவுஞ் செயல்களும் ஒருவன் பகுதிக் கொத்த வளவினவன்றி அதனின் மிகுமாயினும் குறையுமாயினும் நோய் உண்டாகும் என்பது குறள் கருத்து. எனவே,

''மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
தற்றது போற்றி யுணின்'' (குறள் 942)

என்று நோய்க்கு முதல் காரணம் உணவே என்று வரையறுத்துக் கூறப்பட்டுள்ளது. நோய்க்கு இன்னின்னவை காரணம் என்று கூறப் புகுந்த இந்நூலாசிரியர்,

'மீதூண் விரும்பலால் . . . . வன்பிணிக்குஇட
மென்பர்' (30)

என்று கூறினர். நோய்கள் வருதற்கு இந்நூலாசிரியர் வேறு பல காரணங்களும் கூறுகின்றார். விசாரம், மிகுதொலைவு நடத்தல், கழிவுப்பொருளை அடக்குதல், உண்டபின் மூழ்கல், உறக்கமின்மை, அளவுக்கு மீறிய கலவி விரும்பல் ஆகியவற்றாலும் ஒருவருக்கு நோய் வருவதாகக் கூறுகின்றார். இத்தகு குறைகளைக் களைந்து நல்வாழ்வு வாழவேண்டும் என இவர் உய்த்துணரவைத்துள்ளமை அறிக.

தோன்றிற் புகழொடு தோன்றி, செயற்சரிய செயல்கள் புரிந்து புகழ்பட வாழ்தல் இன்றியமையாதது. அத்தகைய பெருமக்களே 'உலகத்தார் உள்ளத்துள்' எல்லாம் நிலைத்திருப்பர். அத்தகையோர் இறந்தும் இறவாதவராக வாழ்வர். அத்தகையோர் யார் யார் என இந்நூலாசிரியர் கூறுகின்றார். பலருக்குப் பயன்படும் குளம், கிணறு ஆக்கியோர், நீதியுடன் ஆண்ட மன்னர், கோவில் கட்டியோர், போரிலே வீரம் காட்டிய மறவர், அறம் செய்தோர், காவியம் செய்த கவிஞர், கற்புடைப் பெண்டிர் என்ற இவரெல்லாம் இறந்தும் இறவாத புகழுடையராய் வாழ்வர் என்று கூறியுள்ளார்.

இரப்பவர்க்கொளித்து இலன் என்னும் எவ்வம் உரைத்து ஈர்ங்கையால் விதிர்க்காத உலோபர்கள் சமூகத்துக்கு ஒரு சிறிதும் பயன் அற்றவர் என்று நயம்பட உரைக்கின்றார். மிகுந்த இழிபொருள்கள் என்று உலகத்தாரால் கருதப்படும் பல பொருள்களைக் கூறி அவற்றால் சிறிது பயனுவது உள்ளது; ஆனல் இத்தகைய உலோபிகளால் எத்தகைய பலனும் இல்லை என்று கூறும் பாடல் மிக்க நயமுடையதாக உள்ளது:

பதரா கிலும்கன விபூதிவிளை விக்கும்
　　பழமைபெறு சுவரா கிலும்
பலருக்கும் மறைவாகும் மாடுரிஞ்சிடும் மலம்
　　பன்றிகட் குபயோகம் ஆம்
கதம்மிகு கடாஎன்னில் உழுதுபுவி காக்கும்வன்
　　கழுதையும் பொதி சுமக்கும்
கல்லெனில் தேவர்களும் ஆலயமும்ஆம் பெருங்
　　கான்புற்று அரவமனை ஆம்
இதமிலாச் சவமாகி லும்சிலர் குதவிசெயும்
　　இழிவுறு குரங்கா யினும்
இரக்கப் பிடித்தவர்க் குதவிசெயும் வாருகோல்
　　ஏற்றமா ளிகை விளக்கும்
மதமது மிகும்பரம லோபரர்ல் உபகாரம்
　　மற்றொருவ ருக்கும் உண்டோ ?
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
　　மலைமேவு குமரே சனே ! (33)

என வரும் இப் பாடல் அறிந்து இன்புறற்பாலது.

உள்ளத்தில் நிகழும் எண்ணங்களை முகக் குறிப்பினாலேயே அறியலாம்.

'அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங்
கடுத்தது காட்டு முகம்' (குறள் 706)

என்றார் வள்ளுவரும். குறளின் கருத்துக்களில் தோய்ந்த உள்ளமுடையாராகிய இப்புலவர் இக்குறள் கருத்தைத் தமது நூலிலும் ஆண்டுள்ளார்.

'தனதகம் அடுத்தது பளிங்கினால் அறியலாம்' என்று வரும் தொடரைக் காண்க.

கொடுமை செய்யும் பிராணிகளும் பூச்சிகளும் உள. ஆனால் மனித உருவிலே இருந்து கொடுமை செய்யும் பிராணிகள் இன்னின்னவை என்று ஆசிரியர் காட்டுகின்றார் :

தான் பிடித்ததையே பிடிப்பு என்று கூறி மற்ற மேலோர் கூறும் கருத்தை ஒதுக்குபவர் குரங்கிற்கு ஒப்பாவார்; எளிய வரை எதிர்ப்பாக்கிக்கொண்டு திரியும் வெறியர் குரைக்கும் நாய்க்கு ஒப்பாவார்; தம்மை நாடிவரும் விருந்தினர் முகம் நோக்காத உலோபிகள் கழுதைக்கு ஒப்பாவார்; கற்றூரவை யிலே சோம்பித் திரிபவர் எருமைக்கு ஒப்பாவார்; தன்னை நம்பி யோருக்கு வஞ்சகம் செய்வோர் கொட்டும் தேளுக்கு ஒப்பா வார் என்று இங்ஙனம் கொடுமை செய்யும் பிராணிகளை யனையார் பலர் சமுதாயத்தில் இருப்பதாகக் கூறுகின்ற கவிஞரின் நயம் அறிந்து இன்புறற்பாலது.

பெரியோர்ரைச் சேர்ந்து வாழ்தலின் இன்றியமை யாமையை,

''தக்கா ரினத்தானாய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில்'' (குறள் 446)

என்று வள்ளுவர் கூறுகின்றார். இந்நூலாசிரியரும் சந்தன மரத்தை அடுத்த வேறு மரமும் அவ்வாசனை வீசுதல்போல பெரியோரைத் துணையாகக் கொண்டு ஒழுகுவானிடம் அவரது குணங்களும் படியும் என்று கூறிப் பெரியோரைத் துணை கொள்ள வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகின்றார்.

கொல்லாமையை வலியுத்த வந்த வள்ளுவர்,

''அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று'' (குறள் 259)

என்று கூறினார். ஆயிரம் வேள்வி செய்தால் மிகுந்த நன்மை யுடைய செயல் என்று நம்பினர் மக்கள். எனவே வள்ளுவர் அதனைக் கூறி அதனினும் நல்லது ஓர் உயிரைக் கொல்லா மையே என்றார். வள்ளுவரைப்போலவே இந்நூலாசிரியரும் கூறிப் பொய்யாமையே நன்று என்றுரைக்கின்றார்.

'கனவேள்வி ஆயிரம் செய்வதிற் பொய்யுரை
கருத்தொடு சொலாமை நன்று' (52)

என்று கூறி ஆயிரம் வேள்வி செய்வதினும் பொய்யுரை யாமையே நன்மை எனக் கூறுகின்ருர்.

பிறன்மனே நோக்காத பேராண்மை வேண்டும் என்று கூறுகின்ற இந்நூலாசிரியர்,

'தம்தாரம் அன்றியே பரதார மேல்நினேவு
தனேவைத்த காமுகர்க்குத்
தயையில்லே நிசமில்லே வெட்கமிலே சமரினில்
தைரியம் சற்றுமில்லே'

என்று இடித்துரைத்துக் கூறுகின்ருர்.

மானத்தைப் பற்றிக் கூறும் வள்ளுவர்,

'மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்ன
ருயிர்நீப்பர் மானம் வரின்' (குறள் 969)

என்று கூறி மானத்தின் பெருமையை விளக்கிக் காட்டுகின்ருர். திருக்குறளே நன்கு பயின்ற நல்லிசைப் புலவரான இந் நூலாசிரியரும் மானத்தின் பெருமையைக் கூறவந்த விடத்து,

'வனம் ஏறு கவரிமான் உயிர்போகும் அளவும்தன்
மயிரின்ஒன் றும்கொடாது'

என்று வள்ளுவரைப் பின்பற்றியுரைக்கும் பெற்றி யறிந்து இன்புறத்தக்கது.

இங்ஙனமே திருக்குறள் கருத்துக்களேத் தம் நூலில் இயன்றவரையில் பயன்படுத்தியுள்ளார் இந்நூலாசிரியர்.

காலமறிதல் என்னும் அதிகாரத்தின் முதற் குறளாகிய

'பகல்வெல்லுங் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது' (குறள் 481)

என்பதை,

'காகம் பகற்காலம் வென்றிடும் கூகையை;
கனகமுடி அரசர்தாமும்.

கருதுசய காலமது கண்டு அந்தவேளையில்
சாரியம் முடித்து விடுவார்'

என வரும் அடிகளில் காணலாம்.

இடனறிதல் என்னும் அதிகாரத்தில் வரும்,

'கடலோடா கால்வ னெடுந்தேர் கடலோடு
நாவாயு மோடா நிலத்து' (குறள் 496)

என்னும் குறள் கருத்து

'தரையதனில் ஓடுதேர் நீள்கடலில் ஓடுமோ
சலதிமிசை ஓடு கப்பல்
தரைமீதில் ஓடுமோ ?'

என்று வரும் அடியில் பிரதிபலித்திருத்தலைக் காணலாம்.

இங்ஙனம் பிறநீதி இலக்கியங்களில் காணப்படும் கருத்துக்களும் இந்நூலில் மலிந்துகிடக்கக் காணலாம்.

'ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும் அந்நாளும்
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்'

எனவரும் ஆன்றோர் மொழியை,

'ஆறுதண் ணீர் வற்றி விட்டாலும் ஊற்றுநீர்
அமுதபா னம் கொடுக்கும்'

என்ற அடியிலும்,

'ஆறிடும் மேடும் மடுவும் போலாஞ் செல்வம்'

என்ற மூதுரையை,

'உற்றதோர் ஆற்றின்நடு மேடாகும் மேடெலாம்
உறுபுனல் கொள் மடுவா யிடும்'

என வரும் அடியிலும் நாம் காணலாம்.

இந்நூல்களில் மட்டுமின்றி சிலப்பதிகாரம் முதலிய காப்பியங்களிலும் இந்நூலாசிரியர் பெரும் பயிற்சியுடையவர்.

ஆய்ச்சியர் குரவையில் 'நாராயணுவென்ஞு நாவென்னநாவே' 'கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்ணென்ன கண்ணே' 'திரு மால்சீர் கேளாத செவியென்ன செவியே' என வரும் அடிகளேப் போல்

'தேவாலயஞ் சுற்றி டாதகால் என்னகால்
தெரிசியாக் கண் என்ன கண்
தினமுமே நின்கமல பாதத்தை நினையாத
சிந்தைதான் என்ன சிந்தை'

என்று தமது நூலிலும் இத்தகைய அமைப்பைப் புகுத்தி யுள்ளார் அவர்.

இந்நூலில் வடமொழிச் சொற்கள் பலவும் மிகுதியாகப் பயின்றுள்ளன. காயத்திரி, ஆகமம், யாகம், புனிதம், கர்த்தர், சுகுணம், நிக்கிரகம், உசிதம், தபோதனர் என்பன போன்று வரும் சில சொற்களே இதற்குச் சான்று காட்டலாம்.

தமிழிலக்கிய வரலாற்றில் நீதிகூறும் பிற்கால இலக்கிய வகைகளில் எழுந்த இந்நூல் பழந்தமிழ் நூல்களின் கருத்துக் களேயும் சொல்லமைப்புகளேயும் தன்னகத்தே கொண்டு விளங்கும் பெற்றியுடையதாக இலங்குகின்றது. சொற் சுவையும் பொருட்சுவையும் எளிய இனிய நடையில் அமைந்து கற்போர்க்கு இன்பம் பயக்கின்றன. இத்தகைய சிறந்த நூலேப் பெறறிருப்பது தமிழிலக்கியத்திற்கே பெருமையாகும்.

3. தண்டலேயார் சதகம்

பெயர்க் காரணம்

இது தண்டலே நீள்நெறி என்னும் திருப்பதியில் எழுந் தருளியுள்ள இறைவன்மீது நூறு செய்யுட்களால் பாடப் பெற்ற நூல். தண்டலே என்னுந் திருப்பதி சோழநாட்டில் திருத்துறைப்பூண்டிப் புகைவண்டி நிலேயத்துக்கு வடக்கே இரண்டரைக் கல் தொலேவிலுள்ளது. இங்கு எழுந்தருளியுள்ள

இறைவர் நீள்நெறி நாதர் என்னும் திருப்பெயருடையார். அறுபான்மும்மை நாயன்மார்களுள் ஒருவரான அறிவாள் தாய நாயனுர் இத்திருப்பதியில் இறைவனே வழிபட்டார். அவர் பிறந்த கணமங்கலம் என்னும் சிற்றூரும் இவ்வூருக்குக் கிழக்கே அரைக் கல் தொலேவில் உள்ளது.

இந்நூலுக்குப் பழமொழி விளக்கம் என்ற மற்ருெரு பெயரும் உண்டு.

'இசைந்த பழமொழிவிளக்கம் இயம்பத்தானே'
'விளங்கு பழமொழிவிளக்கம் அறிந்துபாட'

என வரும் காப்புச் செய்யுட்களடிகளால் இதனே அறியலாம். இச்சதகத்தில் உள்ள செய்யுட்கள் பிற சதகங்களேப்போல் ஈற்றடியில் மகுடம் பெருது உலகில் வழங்கும் யாதானும் ஒரு பழமொழியுடன் தொடர்புபடுத்திப் பாடப்பட்டுள்ளது. இங்ஙனம் நூறு செய்யுட்களிலும் நூறு பழமொழிகள் அமைத்து உலகியல் நீதியுரைத்தலால் இந்நூலுக்குப் பழமொழி விளக்கம் என்ற பெயரும் உண்டாயிற்று.

சதக இலக்கியத்தில் பழமொழி அமைத்துப் பாடப்பட்டுள்ளதை முதன்முதலாக இந்நூலில்தான் நாம் காண்கின்ருேம். எனவே, இதையொட்டிப் பின்னர் எழுந்த சயங்கொண்டார் சதகம், கோவிந்த சதகம் போன்ற நூல்களுக்கு இந்நூலே முன்னேடியாக விளங்குகின்றது.

இயற்றியவர் யார்?

இந் நூலினே இயற்றிய ஆசிரியர் படிக்காசுப் புலவர் என்னும் பெருந்தகையாவார். சிலர் இந்நூலே இயற்றியவர் சாந்தலிங்கக் கவிராயர் என்று கூறுவர், ஆயினும் படிக்காசுப் புலவர் இயற்றிய மற்ருெரு சதக நூலான தொண்டை மண்டல சதகமும் இத்தண்டலேயார் சதகமும் செய்யுள் அமைப்பு, மொழி நடை ஆகியவற்றில் ஒத்திருத்தலால் தண்டலேயார் சதகத்தை இயற்றியது படிக்காசுப் புலவரே என்றுரைப்பர் அறிஞர்.

தொண்டைமண்டல சதக நூலின் முதற்செய்யுளில் காஞ்சியில் எழுந்தருளியுள்ள விகடசக்கர கணபதிக்கு வணக்கம் கூறப்பட்டுள்ளது.

'கார்கொண்ட மும்மதத் தைங்கரந் தாங்கிக் கடவிகடப்
பேர் கொண்ட சக்கரப் பிள்ளை'

என்று வரும் தொடரைக் காண்க.

இவ் விகடசக்கர கணபதியையே தண்டலையார் சதகக் காப்புச் செய்யுளிலும் காண்கின்றோம். இரு நூல்களிலும் காஞ்சி விகட சக்கர கணபதியார் காணப்படுதலால் இரு நூல் களும் ஒருவராலேயே இயற்றப்பட்டிருத்தல் வேண்டும் என்று தெரிகிறது. எனவே தொண்டை மண்டல சதகம் பாடிய படிக்காசுப் புலவரே இத்தண்டலையார் சதகத்தையும் பாடிய தாகக் கொள்ளலாம். சாந்தலிங்கக் கவிராயர் செய்தார் என்பதற்கு நமக்குச் சான்றுகள் கிடைக்கவில்லை யாதலால் இங்ஙனம் கொள்ளுதலே ஏற்புடைத்தாகும். ஐயப்பாட்டிற்கு உரிய இச் செய்திபற்றி மேலும் ஆய்ந்து உண்மையை உணர்த்தல் அறிஞர் கடன்.

படிக்காசுப் புலவர் வரலாறு

தெண்ணீர் வயற்றொண்டை நன்னாட்டில் தென்களந் தைப் பதியில் செங்குந்த மரபில் தோன்றியவர் இப்புலவர். இவர் 'இலக்கண விளக்கம்' நூலியற்றிய திருவாரூர் வைத்திய நாத தேசிகரின் மாணவர். இவரது இயற்பெயர் என்ன வென்று அறிய இயலவில்லை. ஆயினும் சிலர் இவரது இயற் பெயர் 'களந்தையான்' என்றிருக்கக் கூடும் என்பர்.

தென்களந்தை நகருக்கு ஆதித்தேச்சுரம், களந்தேச்சுரம், பொன்விளைந்த களத்தூர் என்ற சிறப்புப் பெயர்களும் வழங்கு கின்றன. இவ்வூர் செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள ஒத்தி வாக்கம் என்னும் ஊருக்கு அண்மையில் உள்ளது. படிக்காச ரது ஊர் முதுகளத்தூர் என்பாரும் உளர்.

இவரை ஆதரித்த அரசர்கள் இராமநாதபுரம் இரகுநாத சேதுபதி, சிவகங்கை திருமலைத் தேவர், அரியலூர் ஜமீன் லட்சுமணரங்கழ வேந்திரன் ஆகியோர். மல்லை சிவந்தான் மல்லையான். வல்லம் காளத்தியப்பர், மாவண்டூர் கறுப்ப முதலியார், கீழ்க்கரை சீதக்காதி, மோரூர் குமாரசாமி சாங்கேயர், மாந்தைக்குடி மகாஜனத் தலைவர் ஆகிய கொடை வள்ளல்களும் இப்புலவருக்குப் பொருள் கொடுத்து ஆதரித்தனர்.

சோழமண்டல சதகம் பாடிய வேளூர் ஆத்மநாத தேசிகர், இலக்கண விளக்க ஆசிரியர் திருவாரூர் வைத்தியநாத தேசிகர் ஆகியோர் இவருடன் வாழ்ந்த சமகாலப் புலவர் களாவர்.

படிக்காசுப் புலவர் பல திருப்பதிகளையும் கண்டு மகிழ்ந்து வரும் வேளையில்,

'கருவ ருந்தியி ஞன்முகன் கண்ணனென்
றிருவ ருந்தெரி யாவொரு வன்னிடம்
செருவ ருந்திய செம்பியன் கோச்செங்க
ணிருபர் தண்டலை நீணெறி காண்மினே'

என்று தேவாரப்பாடல் பெற்ற தண்டலை நீணெறியையும் காண விரும்பி ஆங்கு வந்து சேர்ந்தார். அவண் வாழ்ந்த நன்மக்கள் சிலர் இவரையடுத்து, தண்டலையில் எழுந்தருளியுள்ள நீணெறி நாதர்மீது ஒரு பிரபந்தம் பாடுமாறு வேண்டிக்கொண்டனர். படிக்காசர் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்கி தண்டலையார் சதகத்தைப் பாடித் தந்தார்.

இவர் தில்லைக் கூத்தரைத் தரிசித்து வணங்கியபோது சிவகாமியம்மை யருளால் ஒரு படியினுள் ஐந்து பொற்காசுகள் வைக்கப்பட்டு 'புலவர்க்கு அம்மையின் பொற்கொடை' என்ற ஒலியுடன் இவர் அதனைப் பெற்றதால் அன்று முதல் இவர் படிக்காசுப் புலவரென வழங்கப்பட்டார்.

படிக்காசுப் புலவர் சொன்னயமும் பொருணயமும் தோன்றுமாறு பாடுவதில் வல்லவர். பலபட்டரைச் சொக்க நாதப் புலவர் இவரது கவித்திறமையைப் பாராட்டி,

'மாட்டாருந் தென்களந்தை படிக்காசன்
உரைத்ததமிழ் வரைந்த ஏட்டைப்
பட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகும்
பரிமளிக்கும் பரிந்தவ் வேட்டைத்
தொட்டாலும் கைமணக்குஞ் சொன்னாலும்
வாய்மணக்கும் துய்ய சேற்றில்
நட்டாலுந் தமிழ்ப்பயிராய் விளைந்திடுமே
பாட்டினுறு நளினந் தானே'

என்று பாராட்டியுள்ளார். இப்பாடல் கும்பன் என்னும் புலவரால் பாடப் பெற்றதென்பாருமுளர்.

தொண்டைமண்டல சதகம் தண்டலையார் சதகம் போன்ற சதக நூல்களைப் பாடிச் சதக இலக்கியத்தில் புது முறைகளைப் புகுத்தியமையால் சந்தப் பாடல்கள் பாடுவதில் படிக்காசுப் புலவர் சிறந்தவர் என்று கருதப்பட்டது. எனவே,

'வெண்பாவிற் புகழேந்தி பரணிக்குச்
செயங்கொண்டான் விருத்த மென்னும்
ஒண்பாவுக் குயர்கம்பன் கோவையுலா
வந்தாதிக் கொட்டக் கூத்தன்
கண்பாவு கலம்பகத்திற் கிரட்டையர்கள்
வசைபாடக் காள மேகம்
பண்பாகப் பகர்சந்தம் படிக்காசலா
தொருவர் பகரொ ணாதே'

என்ற தனிப் பாடலும் எழுந்தது.

இப்புலவர் 'சேதுரகுநாத சிங்கமே' 'புகழ் செய்தளவாய் குமாரன் ரகுநாதவேள்' என்று தம் பாடலில் சேதுவேந்தரைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். புலவர் பாடலில் குறிக்கப்பட்ட ரகுநாத சேதுபதி கி. பி. 1647-1672 வரை சேதுநாட்டை

யாண்டதாகக் கூறுவர். அவரால் ஆதரிக்கப்பட்ட இப்புலவர் காலமும் அதையொட்டியே அமைந்திருக்க வேண்டும். இவர் காலத்து வாழ்ந்த சீதக்காதி முதலிய பிற வள்ளல்கள் காலங்களுடன் இவருடைய காலத்தையும் ஒப்பிட்டுப் படிக்காசுப் புலவர் காலம் கி. பி. 1686-1723 என்று வரையறுக்கப் பட்டுள்ளது. எனவே கி. பி. பதினேழாம் நூற்ருண்டின் பிற்பகுதியிலும் கி. பி. பதினெட்டாம் நூற்ருண்டின் முற் பகுதியிலும் இவர் வாழ்ந்தவர் என்று தெரிகின்றது.

(படிக்காசரது வரலாறு சம்பந்தமான செய்திகளைத் தொண்டைமண்டல சதகம் பற்றிய கட்டுரையில் காண்க.)

நூலாராய்ச்சி

இந்நூலில் உலகில் வழங்கும் பழமொழிகள் செய்யுள் தோறும் அமைத்துப் பாடப்பட்டுள்ளன. உலகியல் நீதியும் கடவுள் வழிபாடும் செய்யுள்தோறும் அமைந்து ஒவ்வொருவருக்கும் ஒழுக்கத்தையும் பக்தியையும் ஊட்டும் நூலாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலில் குறள் முதலிய நீதி நூல்களின் கருத்துக்கள் ஆங்காங்கே மிளிர்கின்றன.

வான் சிறப்பைக் கூறுகின்ற வள்ளுவர்,

'தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்'
'கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்னுற்றுங் கொல்லோ உலகு'

என்று கூறியுள்ளார். இவற்றின் கருத்தை நன்கு மனத்தில் இருத்தி ஆசிரியர்,

'ஊன்செய்த உயிர்வளரத் தவம்தானம்
நடைந்தேற உதவி யாக
வான்செய்த நன்றிக்கு வையகம்என்
செய்யும்? அதை மறந்திடாதே'

என்று கூறுகின்ருர்.

இல்லற வாழ்க்கையே இனிய வாழ்க்கை ; அதுவே அறன் எனப்படுவது. துறவற வாழ்க்கையும் பிறர் பழிப்பைப் பெரு திருப்பின் இனியதாகும் என்று கூறிய வள்ளுவர் கருத்தை விளக்க இந்நூலாசிரியர் முற்படுகிறார். இல்லற வாழ்க்கையின் இனிமைக்குச் சான்று காட்ட வள்ளுவர் வாழ்க்கையையே உவமையாகக் கூறுகின்றார்.

'நல்லறமாம் வள்ளுவர்போல் குடிவாழ்க்கை
மனைவியுடன் நடத்தி நின்றான்
இல்லறமே பெரிதாகும் துறவறமும்
பழிப்பின் றேல் எழில தாமே'

என்று கூறியுள்ளார்.

வள்ளுவர் கருத்துக்களில் மட்டுமின்றி வள்ளுவர் வாழ்க்கையைப் பற்றி விளங்கும் செவிவழிச் செய்திகளிலும் இந் நூலாசிரியருக்கு ஈடுபாடு உண்டு என்பது தெரிகின்றது.

போகரின் மாணவரான கொங்கணவன் என்னும் முனிவர் தன் தவத்தின்போது மரத்தின் மேலிருந்த கொக்கு எச்ச மிட்டதால் அதனை விழித்துப் பார்த்தவளவில் சாம்பரானது கண்டு, தன் தவச் சிறப்பை வியந்து தற்பெருமைகொண்ட வனாயின். அவன் வள்ளுவர் வீட்டில் உணவு கேட்கச் சென்று நாழிகையானதால் சினமெய்தி உணவு கொணர்ந்த வள்ளுவர் மனைவி வாசுகியை உற்று நோக்கியதாகவும், அதற்கு வாசுகி யானவர் நகைத்து, 'கொக்கென்று நினைத்தனையோ கொங் கணவா' எனக் கேட்டதாகவும் ஒரு செவிவழிச் செய்தி யுண்டு.

வள்ளுவர் வாழ்க்கையோடு பிணைந்த இந்நிகழ்ச்சியில் ஈடுபாடு கொண்ட ஆசிரியர் கற்புடைய மங்கையர் மாண்பு பற்றிக் கூறவந்தபோது, "பண்டு கொக்கென்று நினைத் தனையோ கொங்கணவா என்றொருத்தி கூறினளே" என்று இந் நிகழ்ச்சியையும் இணைத்து வாசுகியின் கற்புடைமையைப் பாராட்டுகின்றார்.

அறிவு இல்லாத பல புதல்வர்களைப் பெறுவதிலும் அறிவு சான்ற ஒரே புதல்வனைப் பெறுவதே சிறப்பு எனக் கருதி வந்தனர் பண்டைத் தமிழ்ச் சான்றோர். எனவேதான்,

'பொற்பறி வில்லாதபல புத்திரப்பே றெய்தலினோர்
நற்புதல்வ னைப்பெறுதல் நன்றாமே—பொற்பிலாப்
பன்றிபல குட்டி பயந்ததனால் ஏதுபயன் ?
ஒன்றமையா தோகரிக் கென்றோது ?'

என்று நன்னெறியும் கூறுகின்றது.

இக்கருத்தினை,

'நன்றிதரும் பிள்ளைஒன்று பெற்றாலும்
குலமுழுதும் நன்மை உண்டாம்
அன்றறிவு இல்லாத பிள்ளையொரு
நூறுபெற்றும் ஆவ துண்டோ!'

என்று கூறுகின்றார் ஆசிரியர். அத்துடன் அமையாது நன்னெறியில் கூறப்படும் பழமொழியைத் தமது நூலிலும் கூறுகின்றார் ஆசிரியர்.

'வருடந்தோறும் பன்றிபல ஈன்றும்என்ன ?
குஞ்சரம்ஒன்று ஈன்றதனாற் பயன்உண்டாமே'

என்று அவர் கூறுகின்ற பான்மையில் நகைச்சுவையும் கருத்து வளமும் ஒன்றையொன்று பின்னிக் கிடத்தல் காணலாம்.

விருந்தோம்பலின் சிறப்பைப் பற்றி வள்ளுவர் பத்துக் குறள்களால் விளக்குகின்றார். தன்னிடம் சென்ற விருந்தைப் பேணிப் பாதுகாத்துப் பின் புதிதாக வருகின்ற விருந்தைப் பார்த்து வாழ்வாங்கு வாழ்க என்று வள்ளுவர் கூறியுள்ளார்.

இதனை,

'செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு' (குறள் 86)

என்னும் குறளால் அறியலாம்.

இக்கருத்தை,

'பெருவிருந்துக் குபசாரம் செய்தனுப்பி
இன்னு மெங்கே பெரியோர் என்று
வருவிருந்தோ டுண்பதல்லால் விருந்தில்லாது
உணுஞ்சோறு மருந்து தானே'

என்று இந்நூலாசிரியர் கூறுகின்றார்.

நன்றி மறப்பது நன்றன்று என்று கூறிய வள்ளுவர்,

'தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன் தெரிவார்' (குறள் 104)

என்று கூறினர். சிறிதளவு நன்றியேயாயினும் அதன் பயனை யறிந்தோர் அதனைப் பனையளவாக எண்ணுவர் என்பது இக் குறள் கருத்து. இக்கருத்தினை மேலும் விளக்க முற்பட்ட இந் நூலாசிரியர் அதனை ஓர் உவமை முகத்தான் விளக்குகின்றார். ஆலம் விதை சிறிதெனினும் அவற்றினின்று பெரிய மரம் தோன்றுவதைப் போலத் தினையளவு செய்த நன்றியும் பனை யளவாய்ச் சிறந்து தோன்றும் என்று கூறுகின்றார்.

'துப்பிட்ட ஆலம்விதை சிறிதெனினும்
பெரிதாகும் தோற்றம் போலச்
செப்பிட்ட தினையளவு செய்த நன்றி
பனையளவாய்ச் சிறந்து தோன்றும்'

என்று வருதல் காண்க.

தம்மை அகழ்ந்து துன்பஞ் செய்யும் மனிதரையும் வீழாமல் தாங்கிப் பொறுமையின் பெருமையை உணர்த்து கின்றது நிலம். எனவேதான் வள்ளுவர்,

'அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை'

என்று கூறினர். பொறுமையின் சிறப்புணர்ந்த இந்நூலாசிரி யரும், 'தங்கள் மனைவியைத் துகிலுரிந்தபோதும் பாண்டவர் பொறுமை காட்டியது போல' என்று உவமை காட்டிப்

பொறுமையின் மாண்பை விளக்குகின்றார். 'பொறுத்தார் பூமியாள்வார்; பொங்கினவர் காடாள்வார்' என்ற பழமொழியையும் இச்செய்யுளில் பொதிந்துள்ளார்.

தாம் கூறுகின்ற கருத்துக்கள் கல்வியறிவில்லாத எளிய மக்களுக்கும் புரியவேண்டும் என்ற நோக்கத்தினுல்தான் உலகியலில் சாதாரணமாக வழங்கும் பழமொழிகளைப் பொதிந்து பாடல் செய்தார் இந்நூலாசிரியர். அத்துடன் அமையாது எளிய மக்களிடையேயும் வழங்கி வரும் இராமாயணம், பாரதம் முதலிய இதிகாசக் கதை நிகழ்ச்சிகளையும் கூறித் தம் கருத்தை விளக்குகின்ற புதுமையை இவரிடம் காண்கின்றோம். மாரீசன் மாயமான் எடுத்து மாய மானதையும், சீதையைக் கவர்ந்து சென்று சிறை வைத்த இராவணன், அரசிழந்து பெருமையிழந்து மாண்டதையும் கூறித் 'தானென்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும்' என்ற வுண்மையை உணர்த்துகின்றார்.

கலிங்கத்துப் பரணியிலே புதுமையான மொழி நடையைக் காண்கின்றோம்.

'பொருதடக்கை வாளெங்கே? மணிமார் பெங்கே?
போர்முகத்தி லெவர் வரினும் புறங்கொடாத
பருவயிரத் தோளெங்கே? எங்கே? யென்று
பயிரவியைக் கேட்பாளைக் காண்மின்! காண்மின்!'

என்று வருகின்ற மொழிநடையிலே வீரவுணர்ச்சி மிகுந்து சுவை பயத்தல் காணலாம். ஒழுக்கம் குறைந்த ஒருவற்குப் புகழில்லை என்ற கருத்தை விளக்கவரும் ஆசிரியர் பரணியில் நாம் கண்ட மொழிநடையைப் பின்பற்றி ஒழுக்கத்தின் இன்றியமையாமையை விளக்குகின்றார்.

'சின்னமெங்கே? கொம்பெங்கே? சிவிகையெங்கே?
பரியெங்கே? சிவிகையார் எங்கே?'

என்று வரும் அடிகளால் ஒழுக்கம் குறைந்தவன் வெற்றிச் சின்னமும், ஊதுகொம்பும், முத்துச் சிவிகையும், குதிரைக்

கூட்டமும், சிவிகை தூக்கும் ஆட்களும் சூழ்ந்து பெருமை யுடன் உலா வரும் சிறப்பிழந்து நிற்றலைப் படம் பிடித்துக் காட்டுகின்ருர்.

மக்களுக்குக் குறைவில்லா நலம் பயந்து வாழும் மன்னனை மக்கள் இறைவன் என்று கொண்டாடினர். 'முறை செய்து காப்பாற்று மன்னவன் மக்கட்கு இறையென்று' கருதப்பட்ட தையும், 'திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்ட தாக' எண்ணியதையும் பண்டைத் தமிழ் மக்கள் வாழ்வில் காண்கின்றோம். இக் கருத்தினை இந்நூலாசிரியரும்,

'மார்க்கமுடன் நடந்து செங்கோல் வழுவாமல்
புவியாளும் வண்மை செய்த
தீர்க்கமுள்ள அரசனையே தெய்வம் என்பார்'

என்று கூறுகின்ருர்.

மிகுந்த கல்வியறிவு இல்லாதார் தம்மைச் சிறந்த புலவர் என்று எண்ணிக் கொண்டு பிறருக்கு அறிவு போதிக்கத் தொடங்குவதை இந்நூலாசிரியர் மிகவும் வெறுத்து அது குருடனுக்குக் குருடன் கோல்கொடுத்த செய்கை போலும் என்று நகைத்துக் கூறுகின்ருர். திருமூலரும்,

'குருடுங் குருடுங் குருட்டாட்டம் ஆடிக்
குருடும் குருடுங் குழிவீழ்ந்த வாறே'

என்று தம் திருமந்திரத்தில் கூறுவது இவண் ஒப்புநோக்கத் தக்கதாகும்.

சைவ அடியார்கள் உள்ளத் திண்மை யுடையவர்கள். பிறருக்கு என்றும் தலைவணங்கார்; அஞ்சார். மாநில முழுதாளும் மன்னன் மகேந்திரன் அழைப்பதாகக் கூறிய போதும் 'நாமார்க்கும் குடியல்லோம்; நமனையஞ்சோம்' என்று முழக்கினுர் திருநாவுக்கரசர். நமனே எதிர்த்தோன்றி நின்றபோதும் அஞ்சாது சிவபூசையில் மூழ்கியிருந்தார் மார்க்கண்டேயர். சைவ அடியார்களின் இத்தகைய நெஞ்சத் திண்மையைப் பாராட்டும் இவ்வாசிரியர்,

'அனங்காட்டும் தண்டலேயார் அடியா ரெல்
லாம் ஒருவர்க்கு அஞ்சுவாரோ ?'

என்று கூறுகின்ருர்.

உலகியல் என்ருல் என்ன என்பதை ஆசிரியர் மிக அழகாக விளக்கியுள்ள திறம் அறிந்து இன்புறற்பாலது. சமுதாயத்திலே ஏழையும் செல்வரும், நல்லோரும் அல்லோரும் நிறைந்தே இருப்பர். அங்ஙனமே நன்மையும் தீமையும் கலந்தே இருக்கும் உலகில் எல்லோரும் பெருவீரராகவும், பெருங்கவிஞராகவும் இருத்தல் இயலாது. பெருவீரர்கள் இருப்பதனுலேயே மற்றெவரும் போரிடப் போகாமல் இருக்கவும் முடியாது. பெருங்கவிஞர்கள் இருப்பதாலேயே ஏனேயோர் கவிதை செய்யாமலும் இருக்க முடியாது. இருவகையினரும் கலந்திருத்தலே உலகியல். இதனே விளக்கும் ஆசிரியர் இறைவன் நடனமாடிய இடுகாட்டிலே பேய்களும் ஆடுவதை எடுத்துக்காட்டி, இங்ஙனமே உலகியலும் விளங்குகின்றது என்று உய்த்துணரவைத்துள்ளார்.

'கள்ளுங் கவறும் திருநீக்கப்பட்டார் தொடர்பு' என்பது குறள் காட்டும் நெறி. இந்நெறியை இந்நூலாசிரியரும் வலியுறுத்தி, 'சொக்கட்டான் எடுத்தவர்க்குச் சொக்கான் சூது பொல்லாச் சூது' என்று கூறுகின்ருர்.

மானத்தின் பெருமையை யுணர்ந்த இந் நூலாசிரியர்,

'மயிர் நீப்பின் வாழாக் கவரிமா வன்ஞர்
உயிர் நீப்பர் மானம் வரின்'

என்ற குறள் கருத்தை யுட்கொண்டு

'கானமரும் கவரியொரு மயிர்படினும்
இறக்கும்! அது கழுதைக்குண்டோ ?'

என்று பாடி மானத்தின் மாண்பை விளக்குகின்ருர்.

இங்ஙனம் அரிய நீதிகளேயும் உலகியல் ஒழுகலாருகக் கொள்ளவேண்டிய கருத்துக்களேயும் மிகவும் எளியமுறையில்

ஆசிரியர் உலகினர்க்கு உணர்த்தும் முறை அறிந்து இன்புறற் பாலது.

இந்நூலாசிரியர் பெண்ணினத்தைக் குறைகூறும் தன்மை யார்போல் தோன்றுகிறுர். 'பெண்சென்மம் சென்மம் ஆமோ?' என்று அவர் கூறும் கூற்றிலே பெண்ணினத்திடம் எவ்வளவு தூரம் வெறுப்புக் கொண்டுள்ளார் என்பது தெரி கின்றது. 'மையிலே தோய்ந்தவிழி வஞ்சியரைச் சேர்ந்தவர்க்கு மறுமை யில்லை' என்று இன்னும் ஒருபடி மேலே சென்று பெண்ணுடன் சேர்ந்தவர்க்கு மறுமையே கிடையாது என்று அவர் கூறுவதையும்,

'உரங்காணும் பெண்ணுசை கொடிதாகும்
பெண்புத்தி உதவா தாகும்
திரங் காணும் பெண்வார்த்தை தீதாகும்!'

என்று கூறுவதையும் நோக்கப் பெண்ணினத்தின்மீது இந் நூலாசிரியர் கொண்டுள்ள காழ்ப்பு தெற்றெனவிளங்கும்.

மற்றும் வரகுணபாண்டியர் தம் மனைவியை இறைவனுக் கீந்தது, கண்ணப்பர் காளத்திநாதருக்கு ஊன் படைத்தது, சுந்தரர்க்காக இறைவன் தூது நடந்தது, இறைவன் முன்னே நக்கீரன் 'குற்றம் குற்றமே' என வழக்காடியது முதலிய புராண வரலாற்று நிகழ்ச்சிகளைக் குறிக்கும் தொடர்களும் இந்நூலுள் இடம் பெற்றுள்ளன.

பிற சதக இலக்கியங்களில் காணப்படுவது போலவே இந்நூலிலும் பூர்ணசந்திரன், போஜனம் போன்ற பல வட சொற்களும், வழக்குச் சொற்களும் இடம்பெற்றுள்ளன.

இந்நூலுள் நூறு என்ற எண்ணிக்கை வரையறையையும் கடந்து சில பாடல்கள் சில பிரதிகளில் காணப்படுசின்றன. அவை பிற்காலத்தில் யாரோ ஒருவர் இடைச் செருகலாக அமைத்தவையே என்பது சொல்லாமலே விளங்கும். சதகம் என்ற பெயருள்ள பிற நூல்களில் நூறு என்ற எண்ணிக்கை வரையறை மீறப்படா திருக்கும்போது இந்நூலில்மட்டும்

அதிகப் பாடல்கள் காணப்படுவது பொருந்தாது. எனவே அவை பிற்காலத்தில் ஏற்பட்ட இடைச் செருகலேயாம்.

பழமொழிகளைக் கூறி நீதியை உணர்த்தப் புகுந்த சதகங்களில் இந்நூல் முன்னோடியாக விளங்குகின்றது. சொல் நலமும், பொருள் நலமும் சிறக்கப்பெற்று விளங்கும் ஒருசில சதகங்களில் இந்நூலும் ஒன்றாகும்.

4. சோழ மண்டல சதகம்

பெயர்க் காரணம்

சோழநாட்டைச் சிறப்பித்து நூறு பாடல்களைப் பாடும் நூலாதலின் சோழமண்டல சதகம் என்னும் பெயர் பெற்றது. சோழநாட்டில் வாழ்ந்த புகழ்பெற்ற கவிஞர்கள், புவியாண்ட மன்னர்கள், புனித ஞானிகள், பெருங்கொடை வள்ளல்கள், பொற்புடை வீரர்கள், கற்புடை மாதர்கள் முதலாயினோரது வரலாறுகளைச் சுவைபடப் புனைந்து யாக்கப்பட்டுள்ளது இந்நூல். நூல் முழுதும் ஒவ்வொரு பாடலின் ஈற்றடியிலும் 'சோழ மண்டலமே' என்னுந் தொடர் மகுடமாக அமைத்துப் பாடப் பட்டுள்ளது.

ஆசிரியர் வரலாறு

இந்நூலினை இயற்றியவர் ஆத்மநாத தேசிகர் என்னும் புலமையாளர். திருத்துறைப்பூண்டிக்கு வடக்குத் திசையிலுள்ள வேளூரில் இவர் வாழ்ந்தமையால், வேளூர் ஆத்மநாத தேசிகர் என்றும் அழைக்கப்பட்டார். இவை சைவ ஆசாரியார் குலத்தைச் சேர்ந்தவர் என்று கருதப்படுகின்றது. இவர் தந்தையின் பெயர் அறிய இயலவில்லை. இவர் காலத்தில் வேளூருக்கு அண்மையில் உள்ள சித்தாய்மூரில் அருணாசல வேள் என்னும் பெருங் கொடைவள்ளல் ஒருவர் வாழ்ந்து வந்தார். ஆத்மநாத தேசிகரும் அருணாசல வேளும் நட்புரிமை மிகக்கொண்டு வாழ்ந்து வந்தனர். அருணாசல வேளின்

தந்தையார் பெயர் நள்ளாறு வைத்தியலிங்க மகிபன் என்று கூறப்படுகிறது. அருஞசல வேள் சிறந்த சிவபக்தர். பக்தி நெறியில் தவருது ஒழுகும் உத்தமர். அருஞசல வேள் ஆத்ம நாத தேசிகரை அணுகி, சோழமண்டலத்தில் வாழ்ந்த பெரியோர்களின் வரலாறுகளை யெல்லாம் தொகுத்தும், சோழ மண்டலத் திருப்பதிகளின் புகழினை விரித்தும் ஒரு நூல் பாடித் தருமாறு வேண்டினர். அருஞசல வேளின் வேண்டுகோளுக் கிணங்கிய தேசிகரும் 'சோழமண்டல சதகம்' என்னும் இந் நூலை ஆக்கித் தந்தார். அவ்வூர் பொன்வைத்தவர் சந்நிதியில் நூல் அரங்கேற்றப்பட்டது. இச்செய்தியையும் புலவருக்கு அருஞசல வேள் பெரும் பரிசில்கள் வழங்கிச் சிறப்பித்த செய்தியையும்,

'சுத்த குலசோ ழியருமுடி சூட்டுங் காணி யாளர்களுங்
கத்த ரெனவே வரவழைத்துக் கவிக்குக் கனக
மழைபொழிந்தே
நித்த ரெனும்பொன் வைத்தவர்சந் நிதியிற்சதக
மரங்கேற
வைத்த வருஞசல ராயன் வாழ்வாஞ் சோழ
மண்டலமே'

என வரும் பாடலால் அறியலாம்.

இந்நூலாசிரியர் வாழ்ந்த காலம் கி. பி. 1650-1728க்கு இடைப்பட்ட காலம் என்றுரைப்பர். இந்நூல் இயற்றப் பட்ட காலம் இன்னது என்பதை வரையறுக்க,

'சீர்கொள் பிரபவ வருடந் திகழு மிடபத் திங்கள்
நார்கொள் ளிருபான் றேதி நவிலும் பானுவாரம்
கார்கொள் ளமர பக்கங் கருதும் தசமி திதியே
ஏர்கொண் டிலங்கு மிருபத் தேழா நக்ஷத் திரமே'

என வரும் பாடலும் நமக்குத் துணை புரிகின்றது.

நூலாராய்ச்சி

சோழமண்டல எல்லை: ஆசிரியர் தாம் பாட எடுத்துக் கொண்ட நாட்டின் எல்லையை முதற்கண் வரையறுப்பார்

போல சோழமண்டலத்தின் எல்லைகள் இன்னின்னவை என ஒரு பாடலில் விளக்குகிறார். சோழமண்டலத்தின் கிழக்குப் பக்கம் அலைகடலும், தெற்குப் பக்கம் வெள்ளாறும், மேற்குப் பக்கம் கோட்டைக்கரை என்ற ஊரும், வடக்குப் பக்கம் மஞ்சக்குப்பம் மாவட்டத்தில் ஓடிவரும் வெள்ளாறும் எல்லைகளாக நின்று அணி செய்கின்றன என்று இவர் கூறியுள்ளார். இக்கருத்துக்குத் துணையாகக் **கம்பர்** பாடியதாகக் கருதப்படும் ஒரு வெண்பாவும் நமக்குத் துணை செய்கின்றது.

''கடல்கிழக்குத் தெற்குக் கரைபுரள் வெள்ளாறு
குடதிசையிற் கோட்டைக் கரையாம்—வடதிசையில்
ஏணாட்டு வெள்ளா றிருபத்து நாற்காதம்
சோணாட்டுக் கெல்லையெனச் சொல்''

என்பது கம்பரது வெண்பா. இப்பாடலைக் கம்பர் பாடிய பாடலாகக் கருதுவதால் கம்பர் தம் காலத்து இருந்த சோணாட்டின் எல்லையைக் கூறியிருக்க வேண்டும் என்று தெரிகிறது. அதையே பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த இந் நூலாசிரியரும் பாடியுள்ளதால் பன்னிரண்டாம் நூற்றாண்டில் கம்பர் காலத்தில் இருந்த சோணாட்டின் எல்லையே இந் நூலாசிரியரது காலத்திலும் தொடர்ந்து இருந்துவந்தது என நாம் உய்த்துணரக் கிடக்கின்றது.

ஆற்று வளம்

அடுத்து, சோழவள நாட்டைச் சோறுடைப் பெருநாடாக்கும் பெருமைகொண்ட பொன்னித் திருத் தாயைப் புலவர் புகழ்கின்றார். 'காவிரி பெருகச் செய்து நாளுஞ் செழிப்பேற, வன்பூத் தழைந்து வளர்வதன்றோ வளஞ்சேர் சோழமண்டலமே' என்றெண்ணி இறும்பூது எய்துகின்றார்.

'தண்ணீரும் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவதும் சோழ மண்டலமே'

என்ற பாராட்டு புலவர் உள்ளத்தே எழ,

'எந்த நதியைப் புகழ்ந்தாலு மிதுகாவேரிக்
கிணையென்பார்
எந்த வரசைப் புகழ்ந்தாலு மிவனே சோழற்
கிணையென்பார்
எந்த நாட்டைப் புகழ்ந்தாலு மிதுவே சோணு
டெனவியம்ப
வந்த விசிட்ட மோங்கியது வளஞ்சேர் சோழ
மண்டலமே' (8)

என்று பாடி மகிழ்கின்ருர். 'கங்கையின் கன்மந்தொலைக்கும் காவிரியே !' எனப் போற்றிக் கங்கையினும் காவிரிக்கு ஏற்றம் கூறுகின்ருர்.

புலவர் பெருமை

கம்பர்: கம்பர் இராமகாதை பாடியதையும், சடையப்ப வள்ளலால் அவர் ஆதரிக்கப்பட்டதையும் தேசிகர் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். கம்பர் இராமகாதை பாடுவதற்கு வெண்ணெய்நல்லூர் சடையப்ப வள்ளல் ஆதரவு காட்டிய தையும், நூலைத் திருவரங்கத்திலே அரங்கேற்றிய செய்தி யையும் இவர் கூறியுள்ளார். கம்பர் தமக்கு வாழ்வளித்த சடையப்ப வள்ளலைத் தம் நூலிலே ஆயிரம் பாடலுக்கு ஒரு பாடலாக இராமகாதையின் இடையிடையே பத்து இடங் களில் புகழ்ந்து பாடியுள்ளார் என்று கூறுகின்ருர்.

'திண்மை யேறுங் கம்பனிடஞ் செய்யத் தகுமென்
சிறப்பீந்து
நன்மை யேறும் **இராமகாதை** நற்பேர் புவியிற்
றழைத்தேற
உண்மை யேறுந் திருவரங்கத் தொருவன் சபையி
லுத்தரநாள்
வண்மை யேற வரங்கேற்றி வைத்தார் சோழ
மண்டலமே'

என்ற பாடலால் மேற்கூறிய செய்திகளை நாம் அறியலாம். கம்பர் திருவரங்கத்தில் திருவரங்கநாதர் முன்பு தம் நூலை

அரங்கேற்றிய செய்தியை இராமாயணத் தனியன் செய்யுளாலும் நாம் அறிகின்ருேம்.

'எண்ணிய சகாத்தம் எண்ணூற் றேழின்மேல்
சடையன் வாழ்வு
நண்ணிய வெண்ணெய் நல்லூர் தன்னிலே
கம்ப நாடன்
பண்ணிய இராமகாதை பங்குனி யுத்தர நாளில்
கண்ணிய வரங்கர் முன்னே கவியரங் கேற்றிஞனே'

என்பது இராமாயணத் தனியன் செய்யுள்.

இதனையே நூலின் பிறிதொரு இடத்திலும் 'நிதிநிகர் சடையனி ராமகாதை யரங்கேற்றி நிறுத்திக் கொண்டான்' எனக் கூறுகின்ருர்.

தம்மை வாழ்வித்த சடையப்ப வள்ளலை மட்டுமின்றி அவர் வாழ்ந்த திருவெண்ணெய்நல்லூரையும் கம்பர் பாராட்டியுள்ளார். பாண்டியன் அவைக் களத்துக்குக் கம்பர் ஒரு சமயம் சென்றிருந்தபோது மதுரையின் அலங்காரம் எவ்வாறு உள்ளது என்று பாண்டிய மன்னன் கேட்கவும், வெண்ணெய்நல்லூரில் உள்ள இடுகாட்டையொப்ப வுள்ளது என்று கம்பர் பதில் கூறியதாகவும், பின்னர், பாண்டியன் திருவெண்ணைநல்லூர் வரவும் அமராவதி நகரை ஒப்ப அந் நகர் அலங்கரிக்கப்பட்டது என்ற வரலாற்றுக் குறிப்பினையும் இந்நூலில் நாம் காண்கின்ருேம்.

ஒட்டக்கூத்தர்: இவர் சீர்காழிப் பகுதியில் செங்குந்த மரபிற் ருேன்றியவர். இவரைக் காங்கேயன் என்ற பிரபு ஆதரித்து வளர்த்துவந்தார். அந்நன்றி பாராட்டி, காங்கேயன் மீது இவர் நாலாயிரக் கோவை என்னும் நூல் செய்துள்ளார் என்ற செய்தியை இச் சதகத்தில் காணப்படும் பாடலால் அறிகின்ருேம். தஞ்சை மாவட்டத்தில் நன்னிலம் கூற்றத்தில் பூந்தோட்டத்திற்கு அண்மையிலுள்ள கூத்தனூர் என்னும் ஊர் இவரால் பெயர் பெற்றது என்றுரைப்பர். அந்நாளில்

சோழ நாட்டை ஆண்ட விக்கிரம சோழன் ஒட்டக்கூத்தரை அழைத்துத் தன் அவைக் கவிஞராகவும், தன் மகன் குலோத்துங்களின் தமிழாசிரியராகவும் இருந்து வருமாறு நியமித்தான். கூத்தர் குலோத்துங்கனுக்குப் பின்னரும் இராசராச சோழன் ஆட்சிக் காலம் வரை இருந்தார். மூன்று மன்னர்களையும் பாராட்டி **'மூவருலா'** என்னும் நூல் செய்தார். இவர் **தக்கயாகப் பரணி** என்னும் நூலை எழுதினர் என்பதற்குக் கீழ்வரும் பாடல் சான்று தருகின்றது:

''காழிக் கவுணியர்கோன், பத்தியுடனே தக்கன் மகன்
பரணி பாட''

என்ற பாடலைக் காண்க.

இவர் ஈட்டி யெழுபது என்ற நூலையும் பாடியுள்ளதாகக் கூறுவர்.

சேக்கிழார்: சைவ நாயன்மார்கள் வரலாற்றை விரித்துரைக்கும் **பெரிய புராணம்** என்னும் நூலை ஆக்கித் தந்தவர் சேக்கிழார். இவரது இயற்பெயர் அருண்மொழித்தேவர் என்பது. இவர் சோழன் வேண்டுகோளுக் கிணங்கி பெரிய புராணம் அரங்கேற்றினர் என்ற செய்தியை

'தலத்திற் பெரிய வநபாயன் றழைத்த சமூகந் தனிலேறிப்
பலத்திற் பெறுபஞ் சாக்கரநீள் படியிற்
பெரிய புராணத்தை
வலத்திற் குலவ வரங்கேற்றி'

என வரும் பாடல் அடிகளால் உணரலாம். இச்செய்தியைப் பிறிதொரு பாடலிலும் ஆசிரியர் விளக்கியுள்ளார்.

'சேக்கிழார்தந் திருவாயிற் றெளிந்த முதனூற்
செழுங்கதை'

என்று கூறியுள்ளதும் காண்க.

இரட்டையர்கள்: 'கலம்பகத்திற் கிரட்டையர்கள்' என்று பாராட்டப்பெற்ற இவர்கள் இருவரும் சிறந்த புலமை

யாளர்கள். ஒருவர் பிறவிக் குருடராகவும், மற்றொருவர் கால் முடவராகவும் இருந்தனர். முடவர் குருடர்தோள்மீது ஏறிக்கொண்டு வழிகாட்ட குருடர் தூக்கிச்செல்வார். இவர்களைப் பாரதம் பாடச்செய்த ஆட்கொண்டானும், கச்சி சம்பராயனும் பாராட்டியுள்ளனர். இவர்கள் **திருவாமாத்தூர்க் கலம்பகம், தில்லைக் கலம்பகம், ஏகாம்பரநாதர் உலா** ஆகிய நூல்களைப் பாடியுள்ளனர். இவர்களை 'ஏகாம்பரனூர் **கச்சியுலா** விசைக்கும் புலவரி ரட்டையர்கள்' என ஆசிரியர் பாராட்டிள்ளார்.

பிற புலவர்கள் : மேற்கூறிய புலவர்களேயன்றிச் சோழ மண்டலத்தில் வாழ்ந்த பிற புலவர்களையும் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். 'குருவாயிரப் ரபந்தஞ் செய்த குரவன் றிருவாரூ ருகந்த ஞானப்பிரகாசன்' (24) என்ற பாடலில் திருவாரூர் ஞானப்பிரகாசர் என்னும் புலமையாளரைப் பாராட்டி அவர் நூல் செய்துள்ளதையும் குறிப்பிட்டுள்ளார். ஞானப்பிரகாசருக்கு இன்றும் அவரது சந்ததியாரால் ஆண்டாண்டுதோறும் ஐப்பசி மாதத்தில் குருபூசை நடத்தப் பட்டு வருகிறது.

'நாளும் இன்னிசையால் தமிழ்வளர்த்த ஞானசம்பந்தன்' திருவருள்பெற்றுச் சீர்காழிப்பதியில் **கண்ணுடைய வள்ளலார்** என்னும் புலவர் வாழ்ந்தார். அவர் **'ஒழிவிலொடுக்கம்'** என்ற தத்துவ நூலினை இயற்றியுள்ளார். 'காழிக் கண்ணுடைய வள்ளல் கருணை செயுஞ் சூழல் வளஞ்சேர் சோழமண்டலமே' என்று ஆசிரியர் இவரைப் பாராட்டியுள்ளார்.

திருவாவடுதுறை ஆதினத்தின் பதின்மூன்றாவது குருமகா சந்நிதானமாக எழுந்தருளியிருந்த அம்பலவாண தேசிகரைப் பற்றி இவர் தமது நூலில் பாராட்டியுள்ளார்.

'அம்பலவாணற் கன்பு பெறுமா வடுதுறை'

என்று வரும் சொற்றொடர் காண்க.

தமிழகத்தில் வாழ்ந்த பெண்பாற் புலவர்களில் நல்லிசை வாய்ந்த ஔவைப் பிராட்டி சோழநாட்டு அம்பர் என்னும் ஊருக்கு வந்திருந்தபோது ஒரு வீட்டுச் சுவரில் இரண்டு வரிகள் மட்டும் எழுதப்பெற்று ஒரு வெண்பா பூர்த்தியடையாது இருக்கக் கண்டார். அவ்வீட்டுக்காரியான தாசி கல்வியிற் பெரியவரான கம்பரிடம் தன்னைப் பாடுமாறு வேண்டின தாகவும் அவர் ஆயிரம் பொன் அதற்குக் கேட்கவும், தன்னிட மிருந்த ஐந்நூறு பொன்னை அவள் கொடுக்க, அவர் அரைப் பாட்டுப் பாடிச்சென்ருர் என ஔவை விசாரித் தறிந்து அவ் வெண்பாவைப் பூர்த்திசெய்தாராம். இதனை ஆசிரியர் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

வீரசோழன் என்னும் சோழனது அவைக் கண்ணே புத்தமித்திரர் வீரசோழியம் என்ற இலக்கண நூல் இயற்றி அறங்கேற்றிய செய்தியை

'வீரசோழனுடனிருந்து வியந்தே வீரசோழியநூல்
வார மேற வரங்கேற்றி வைத்தார்
சோழமண்டலமே' (95)

என்ற பாடலில் கூறுகின்ருர்.

மற்றும் காளமேகப் புலவர், பொய்யாமொழியார், முதலிய புலவர்களது வரலாற்று நிகழ்ச்சிகளையும் இந்நூல் கூறுகின்றது.

அடியார்கள்

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சேந்தனுர், சண்டேசுரர், பூசலார்நாயனுர், நீலநக்கநாயனுர், மானக்கஞ்சாறர், இளையான்குடி மாறநாயனுர், தாயநாயனுர், ஏயர்கோன் கலிக்காமநாயனுர், கோட்புலிநாயனுர், முனையருவர், செருத் துணையார், சத்தியார், திருவெண்காடர், கணம்புல்ல நாயனுர் முதலான அடியார்களின் வரலாற்று நிகழ்ச்சிகளும் இந் நூலில் இடம் பெற்றுள்ளன.

வள்ளல்கள்

சடையன் : கம்பரை ஆதரித்துவந்த சடையப்ப வள்ளல் என்பாரை இந் நூலாசிரியர் பதினேரு பாடல்களால் போற்றிப் புகழ்கின்ருர். ஈழநாட்டை வருத்திய பஞ்சத்தைப் போக்க ஆயிரம் கப்பல்களில் நெல் ஏற்றிச் சடையன் அனுப்பினுர் என்ற செய்தியை இந் நூலால் நாம் அறிகின்ரும். சடையனின் வள்ளன்மைத் திறத்தை அழகிய கவியொன்ருல் ஆசிரியர் கூறுகின்ருர்.

'விருந்து நுகர்வோர் கைகழுவ விளங்கும் புனற்கா
விரியென்ருர்
தருந்தா யனைய புகழ்ப்புதுவைச் சடையன் கொடையார்
சாற்றவல்லார்
பரிந்தா ரெவர்க்கும் எப்போதும் பாலுஞ்சோறும் பசிதீர
வருந்தா தளிக்க வல்லதன்ருே வளஞ்சேர் சோழ
மண்டலமே' (43)

என வரும் செய்யுளில் சடையனின் வள்ளன்மைத் திறத்தையும் சோணுட்டுத் திருப்பதிகளின் வளமைத் திறத்தையும் ஆசிரியர் ஒருங்கே விளங்கியிருக்கும் தன்மை போற்றத்தக்கது. இராமகாதையைக் கம்பன் செய்ய ஆதரவுகாட்டி அதைத் திருவரங்கத்தில் அரங்கேற்றிவைத்த அவர் தமிழ் ஆர்வத்தை ஒரு பாடலில் போற்றுகின்ருர். இன்னும் கம்பர் **ஏரெழுபது** என்னும் நூல் பாடிய செய்தியையும் 'கம்பநாடன் களிகூர, யிணங்கும் பரிசிலீந்துபுவி யேழும் புகழே ரெழுபதெனு, மணங்கொள் பெருங்காப்பியப் பனுவல் வகித்தார் சோழ மண்டலமே' என்று கூறுகின்ருர்.

ஆலஞ்சேரிமைந்தன் : இறையனர் அகப்பொருளில் பாண்டியநாடு பன்னிருயாண்டுகள் வற்கடஞ் சென்றதாகக் கூறப்பட்டுள்ளதை அனைவரும் அறிவர். அக்காலத்தில் பாண்டிநாட்டுப் புலவர்கள் பலரும் பல்வேறு திக்குகளிலும் சென்று பிழைப்பை நாடித்தங்கினர். ஒரு கூட்டத்தினர் சோழ நாடு புகுந்து தற்போது ஆலங்குடிச்சேரி என்று வழங்கும்

ஆலஞ்சேரியில் உள்ள வள்ளல் ஒருவனிடம் தங்கி வாழ்ந்தனர். இவ்வள்ளல் சோழமன்னனுக்கு உறவினன். ஆலஞ்சேரி மைந்தனின் அரிய வண்மையை

'பயந்த மழைநீர் பெய்யாது பன்னீராண்டு பஞ்சமெலாம்
வியந்த சங்கத் தமிழோர்க்கு வெவ்வே றுதவி
விடிந்தவுடன்
நயந்த காலே யெனுந்தமிழை நாட்டுந் துரையா லஞ்சேரி
மயிந்த னுயர்பாண் டியன்புகழ வந்தோன் சோழ
மண்டலமே' (30)

என்ற பாடலால் புகழ்கின்றார்.

ஆனேப்பாக்கமுடையான்: சோழநாட்டில் வேளாளர் வகுப்பில் ஆனேப்பாக்கமுடையான் என்னும் குலத்தி லுதித்த இவ்வள்ளல் பெரிய கொடையாளியாக விருந்தான். இவன் தன்னே வந்து இரப்போருக்கு 'முட்டிலாத கடாக்க ளொடு முதிருங் கவளக் கடாக் களிறும்' தரும் பெரிய வள்ளன்மைக் குணத்தினன் என ஆசிரியர் தம் நூலில் போற்றுகின்றார்.

அம்பர்கிழான்: நன்னிலம் கூற்றம் பூந்தோட்டத் திற்குக் கிழக்கேயுள்ள அம்பர் என்னும் ஊரில் வசித்த இவன் சிறந்த கல்வித் திறமும் பெருங்கொடைத் திறமும் பெற்றிருந் தான். இவனேக் கல்லாடனார் என்னும் புலவர் புறநானூறு 384-ஆவது பாடலில் புகழ்கின்றார். இவ்வள்ளலின் இயற் பெயர் 'அருவந்தை' என்று தெரிகிறது. இவனே ஆசிரியர் தமது நூலில் பாராட்டுகின்றார்.

இவர்களேயன்றி மற்றும் சோணுட்டில் வாழ்ந்த வேறுபல வள்ளல்களும் இந்நூலின் கண்ணே பாராட்டப் பெற்றுள் ளனர்.

மன்னர்கள்

கரிகாலன்: காவிரிப்பூம்பட்டினத்தைத் தலேநகராகக் கொண்டு சங்க காலத்தில் வாழ்ந்த கரிகாலனேப்பற்றி

ஆசிரியர் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். இவன் தன்னைப் பற்றிப் பாடப்பட்ட **பட்டினப்பாலை** என்னும் நூலினை இயற்றிய கடியலூர் **உருத்திரங்கண்ணருக்குப்** பதினாறு கோடி செம்பொன் காசுகள் அளித்தான் என்ற செய்தியை,

'குணக்கின் மலைபோற் பதினாறுகோடி செம்பொன்
கொடுத்தவிலை
யிணக்கு மொருபட் **டினப்பாலை** யெவரும் புகழ்தற்
கெளிதாமோ!'

என்று பாராட்டுகின்றார். இச்செய்தியைக் கலிங்கத்துப் பரணியில்,

'தத்து நீர்வரால் குருமி வென்றதுந்
தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர்பொன்
பத்தொ டாறுநூ றாயி ரம்பெறப்
பண்டு **பட்டினப் பாலை** கொண்டதும்'
(இராசபாரம்பரியம் 12)

என வரும் பாடலாலும் நாம் அறிகின்றோம்.

கரிகாலன் காவிரிக்குக் கல்லணை கட்டினான் என்ற செய்தியை,

'செல்லார் பணியுஞ் செம்பியர்கோன் செழுங்காவிரியின்
சிறந்தகரை
கல்லா லணைகட் டுதற்கேவு கரும முடித்த சோழியர்கள்'

என வரும் அடிகளால் உணரலாம்.

திருப்பதிகள்

இந்நூலுள் தில்லை, திருவாரூர், ஸ்ரீரங்கம் முதலிய திருப்பதிகளின் பெருமைகளும் கூறப்பட்டுள்ளன.

இங்ஙனம் சோழநாட்டு வாழ்ந்த பெரியோர்களின் வரலாற்றுக் குறிப்புகளையெல்லாம் தமது நூலில் ஏற்ற இடங்களில் விளக்கிச் சென்றுள்ள ஆசிரியரின் திறம் பாராட்டுதற்குரியது.

நூலாராய்ச்சி

சோழநாட்டில் சோற்றுக்குப் பஞ்சமில்லை. கரவாது பொன்பூக்கும் பொன்னித் தாயின் பேரருளால் வளங்கொழிக்க விளங்குவது சோழமண்டலம். சோழநாட்டின் உணவு வளத்தை அறிந்தே 'சோழநாடு சோறுடைத்து' என ஔவை பாராட்டினுர். ஔவையின் கருத்தையே இந்நூலாசிரியரும் போற்றி,

'வேழமுடைத்து மலைநாடு மிகுமுத் துடைத்துத் தென்னுடு
தாழ்வில் ெருண்டை வளநாடு சான்றோ ருடைத்தென் றுரைத்த தல்லாற்
சோழன்புவி சோறுடைத் தென்னுந் துதியா லெவர்க்கு முயிர்கொடுத்து
வாழும் பெருமைத் திருநாடு வளஞ்சேர் சோழ மண்டலமே' (28)

என்ற பாடலைக் கூறுகின்றுர்.

சோழநாட்டில் கல்வியிற் பெரிய புலவர்களும் நல்லிசை பெற்ற வள்ளல்களும் வாழ்ந்தனர். ஆசிரியர்,

'சொல்லும் பெரியோர் வாழ்வுடைத்துத் துலையா தளிக்குஞ் சோறுடைத்து
வல்லம் பெரியோ ரவையுடைத்து வளஞ்சேர் சோழ மண்டலமே'

என்று பாடியுள்ளார்.

இங்ஙனமே சோழநாட்டுத் திருப்பதிகளும் வளமும் வனப்பும் பெற்று விளங்கின.

'பணக்குன் றனந்த மேருவெனப் பயில்கா விரிப்பூம் பட்டினம்போல
மணக்கும் பதிகள் பலகாணும் வளஞ்சேர் சோழ மண்டலமே' (44)

என்று ஆசிரியர் சோணுட்டுத் திருப்பதிகளின் புகழைக் கூறுகின்றுர். மேருமலையைப்போல் காவிரிப்பூம்பட்டினம்

புகழிலும் பெருமையிலும் சிறந்துவிளங்குகின்றது. காவிரிப்பூம் பட்டினம் மட்டுமல்லாமல் இத்தகைய தெய்வத் திருப்புகழ் மணக்கின்ற பதிகள் சோணுட்டில் பல உள்ளன என்றும் கூறுகின்ருர்.

இத்தகைய வளப்பம் பொருந்தியிருந்தமையால் பசித்து வந்தார் எவர்க்கும் பாலுஞ்சோறும் பசிதீரச் சோழமண்டலத் தார் அளித்தனர்.

'பரிந்தா ரெவர்க்கும் எப்போதும் பாலுஞ்சோறும் பசிதீர
வருந்தா தளிக்க வல்லதன்ருே வளஞ்சேர் சோழ
மண்டலமே' (43)

என்ருர் ஆசிரியர்.

இந்நூலை இயற்றிய ஆசிரியர் தமக்குமுன்பு வாழ்ந்த சான்ருேர்கள் கூறிச்சென்ற கருத்தெல்லாம் இயன்றவரை தம் நூலில் புகுத்திக் கூறியுள்ளார். 'முன்னேர் மொழி பொருளே யன்றி அவர் மொழியும் பொன்னேபோல் போற்றும்' ஆசிரியர் பண்பு அறிந்து இன்புறப்பாலது.

பாண்டிய நாடு பன்னிரு யாண்டுகள் பஞ்சத்தால் அவதியுற்றதைச் சங்க நூல்களான் அறிகின்ருேம். **சீத்தலைச் சாத்தனர்** எழுதிய **மணிமேகலை**யுள்,

'பன்னீ ராண்டு பாண்டி நன்ஞடு
மன்னுயிர் மடிய மழைவள மிழந்தது'
(மணி. 14-55-56)

என்று கூறப்படுகின்றது. இச் செய்தியை இறையனர் களவிய லுரைகாரரும் 'அக்காலத்துப் பாண்டிநாடு பன்னீராண்டு வற்கடஞ் சென்றது' என்று கூறுகின்ருர். இச் செய்தியை இந் நூலாசிரியர்,

'பயந்த மழைநீர்பெய்யாது பன்னீராண்டு
பஞ்சமெலாம்' (30)

எனக் கூறுகின்ருர்.

வையமெல்லாம் தமிழ்ப்பெருமை சாற்றும் தமிழ்மறையாம் திருக்குறளை ஆசிரியர் நன்கு கற்றவர் என்பதை அவரது சொல்லாட்சியால் நாம் அறியலாம்.

'எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு' (குறள் 299)

என வள்ளுவர் 'வாய்மை' என்ற அதிகாரத்தில் கூறியுள்ளார். வள்ளுவரின் 'எல்லா விளக்கும் விளக்கல்ல' என்னும் சொல்லாட்சியைத் தேசிகர் தமது நூலில் கூறியுள்ளார்.

மேலும் 'இல்வாழ்க்கை'யின் சிறப்பினைக் கூறவந்த வள்ளுவர்,

'தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லுனென்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை'

என்று இல்வாழ்வானுக்குரிய அறநெறியை விளக்குகின்றார்.

இதனைத் தேசிகர்,

'உறுந்தென் புலத்தார் தெய்வம்விருந் தொக்க லுனென்
றோரைந்தும்,
பெறுந்தென் புவியி லெட்டிலொன்று பெற்றா ரிதுவே
பெற்றதன்றோ,
சிறந்த சோழன் பெருமையினுஞ் சிறந்தோர்
வேளாண் நடுமரபோர்
மறந்தும் பொய்யா தவர்வாழ்வு வளஞ்சேர்
சோழ மண்டலமே' (66)

என்று வரும் பாடலின் முதலடியில் வள்ளுவரின் சொல்லாட்சியைப் பயன்படுத்தி மகிழ்கின்றார்.

'ஈகை'யின் புகழை விளக்குகின்ற வள்ளுவர்

'இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள' (குறள் 223)

என்று நற்குடிப்பிறந்தார் பண்பைக் கூறுகின்ருர். இத்தகைய நற்குடிப்பிறந்தார் வேளாளரேயென்றும் அவரே இலனென்னும் எவ்வம் உரையாமல் ஈயும் பண்பினர் என்பதையும்,

'உலகில் இலமென் றுரையாமே யுதவல் குணத்தோர்க்
குளதாமே' (82)

என்று கூறுகின்ருர்.

தந்தை தன் மகனுக்குக் கல்வியறிவை ஊட்டுவது கடன் என்பது நெறி. எனவே வள்ளுவரும்,

'தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்' (குறள் 67)

என்ருர். புறநானூற்றிலும் பொன்முடியார்,

'ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே
சான்ருே ணுக்குதல் தந்தைக்குக் கடனே'

என்ருர். மேலும் இக்கருத்து சிறுபஞ்சமூலத்திலும்,

'பிறப்பித்தோன் வித்தைதனைப் பேணிக் கொடுத்தோன்
சிறப்பிலுப தேசஞ் செப்பிஞேன் — அறப்பெரிய
பஞ்சத்தி லன்னம் பகர்ந்தோன் பயந்தீர்த்தோ
னஞ்சும் பிதாவென் றறி'

என்று கூறப்படுகின்றது. இக்கருத்துக்களை யெல்லாம் உள்ளடக்கி,

'பெற்று வளர்த்தும் வித்தைதனைப் பேணிக்கொடுத்தும்
பெயர்கொடுத்தும்,
பற்ற வரும்பா லமுதளித்தும் பகைத்த வறுமைப்
பயந்தீர்த்தும்'

என்று இந்நூலாசிரியர் கூறுகின்ருர்.

கம்பராமாயணத்திலும் இந்நூலாசிரியர் மிக்க பயிற்சியும் பற்றும் உடையார் என்பதை நாம் அறியலாம். தன்னை யாதரித்த திருவெண்ணெய்நல்லூர் சடையப்ப வள்ளலின் புகழுக்கு நிலவின் தண்ணெளியை கம்பர் உவமைகூறி மகிழ்கின்ருர்.

'வண்ணமாலை கைபரப்பி யுலகைவளைந்த விருளெல்லா
முண்ணவெண்ணித் தன்மதிய மொத்துநிமிர்ந்த
நெடுநிலா
விண்ணுமண்ணுந் திசையனைத்தும் விழுங்கிக்கொண்ட
விரிநன்னீர்ப்
பண்ணை வெண்ணைச் சடையன்றன் புகழ்போ லெங்கும்
பரந்துளதால்'

என்று பாடி மகிழ்கின்றார் கம்பர். தேசிகரும் சடையப்ப வள்ளலின் பெருமையைக் கூறுகின்றபோது கம்பரின் அடிச் சுவட்டிலே நடக்கின்றார்.

'எட்டுத் திசையும் பரந்துநிலா வெறிக்குங் கீர்த்தி
யேருழவர
சட்டப் படுஞ்சீர் வெண்ணைநல்லூர்ச் சடையன் கெடிலன்
சரிதமெல்லா
மொட்டிப் புகழ வயிரநா வுடையார்க் கன்றி
யொருநாவின்
மட்டுப் படுமோ வவன்காணி வளஞ்சேர் சோழ
மண்டலமே' (69)

என்று அவர் சடையன் புகழைப் பாடுகின்றார்.

மேலும் கம்பர் பாடியதாகக் கருதுகின்ற தனிக்கவி யொன்றில் 'மெய்கழுவி வந்து விருந்துண்டு மீளுமவர், கைகழுவ நீர்போதுங் காவிரியே'' என்ற தொடர் வந்துள்ளது.

இக்கருத்தை,

'விருந்து நுகர் வோர் கைகழுவ விளங்கும் புனற்கா
விரியென்றார்' (43)

என்று ஆசிரியர் தம் நூலில் கூறுகின்றார்.

மேலும் **நாலடியார்** பாடல் கருத்துக்களையும் ஆசிரியர் தனது நூலில் பொதிந்து கூறியுள்ளார். திங்கள் மறுவாற்றும் சான்றோர் அஃதாற்றார் என்னும் தொடரை இவரும்,

'தரைசூழ் மதிய மறுவாற்றுஞ் சான்ருேரஃதாற்ரு ரெனுஞ்சொல், வரையா துலகில் பெற்ருேரும் வளஞ்சேர் சோழ மண்டலமே' என்று பாராட்டியுள்ளார்.

ஒரு மண்டலம்பற்றிய சதக நூல்வகை பாடுதல் மற்றச் சதக நூல்வகை பாடுவதினும் கடினம் என்றுரைப்பர். மற்றவற்றில் தனியொருவரையோ, தனியொரு வள்ளலேயோ, இறைவனேத் துதிப்பதாகவோ பாடிவிடலாம். ஆனுல் சதக நூல்களிலோ பலரைப் பலவிடங்களேச் சேர்த்துப் பாடவேண்டி யிருக்கும். இதனே யுணர்ந்தே,

'பாரூரும் பலவாயவ் வூருடைய பலரும்
பல்கியவோர் மண்டலத்தைப் பாடுவது மெளிதோ?'

என்று ஆசிரியர் தம்மைத்தாமே வினவிக் கொள்கிருர்.

பின்னர், செய்யுள் வழக்கு, உலக வழக்கு என்ற இரண் டிற்கும் ஏற்ப நூலேச் செய்தார் என்ற கருத்தை, 'பழையன வாயிருந்த செய்யுள் வழக்கு, நிகழுலக வழக்கு நிலே நின்ற துறை வழியே' 'நான் செப்புகின்றேன்' என்று வரும் அவை யடக்கப் பாடலடியால் நாம் உணரலாம்.

இந்நூல் இயற்றிய காலத்தில் தஞ்சையைச் சகஜி என்னும் மகாராஷ்டிர மன்னர் ஆண்டு வந்தார் என்று தெரிகின்றது. தம் நூலின் இறுதிப் பாடலில் 'சத்திரபதியாஞ் சகஜி மகாராசன் வாழி, தஞ்சை நகர் வாழி, சமஸ்தானம் வாழி' என்று கூறியுள்ளார்.

இந்நூலாசிரியருக்கு முன்பே சதகநூல் வகை தமிழ் நாட்டில் தோன்றிவிட்டது. தனக்கு முன் வாழ்ந்தோர் சென்ற நெறியிலேயே புலவர் செல்கின்ருர். இவருக்கு முன்னர் வாழ்ந்த படிக்காசுப் புலவர் 'தொண்டைமண்டல சதகத்தையும் ஆறைகிழார் கார்மண்டல சதகத்தையும் ஏற்கெனவே செய்திருந்தனர். தொண்டைமண்டல சதகம்

கருப்பன் என்னும் வள்ளல் வேண்டுகோளுக்கிணங்கச் செய்யப்பட்டது என்று அந்நூல் வரலாற்ருல் நாம் அறிகின்ருேம். இதனைத் தேசிகரும் தமது சிறப்புப் பாயிரத்தில் கூறியுள்ளார். ‘துதிபெறு கோமான் கருப்பன் தொண்டைமண்டல சதகந் துலங்கச் செய்தான்’ என்று வருகின்றது.

சோழமண்டல வரலாற்றை ஒருவாருக விரித்துரைக்கும் இந்நூல் இலக்கிய வரலாற்றில் முதலிடம் பெற்று விளங்குகின்றது. வரலாற்று முறையில் தொகுத்துப் பாடப் பெற்ற இச்சதக நூலை அடியொற்றிப் பின்னரும் பாண்டிமண்டல சதகம், ஈழமண்டல சதகம் முதலிய நூல்களும் தோன்றின.

5. கார்மண்டல சதகம்

பெயர்க் காரணம்

இந்நூல் தமிழ்நாட்டின் பெரும் பகுதியாக விளங்கிய கார்மண்டலத்தின்கண்ணே வாழ்ந்த வேளாளர் குடியினரின் பெருமையையும் மற்றும் அம் மண்டலத்தில் வாழ்ந்த மன்னர்கள், வள்ளல்கள் ஆகியோரது வரலாறுகள் பற்றியும் தொகுத்துரைக்கும் நூலாகும்.

இந்நூல் சதக இலக்கியங்களில் நமக்குக் கிடைத்திருக்கும் நூல்களுள் மிகவும் பழைமையான நூல் என்று கருதப்படுகின்றது.

இந்நூலில் செய்யுள்தோறும் ஈற்றடிக் கண்ணே ‘காராளர் மண்டலமே’ என்னும் தொடர் மகுடமாக அமைக்கப்பட்டுள்ளது.

கார்மண்டலம் எது ?

பண்டைய காலத்திலிருந்தே தமிழ்நாடு சில பிரிவுகளாகப் பகுத்துப் பேசப்பட்டு வந்தது. தொல்காப்பியர்

'நாற்பெயரெல்லையகம்' என்ற பெயரால் (தொல். பொருள் செய். 79) தமிழ்நாட்டைக் குறிக்கின்றார். இவை மலைமண்டலம், சோழமண்டலம், பாண்டிமண்டலம், தொண்டைமண்டலம் என்பனவாம் என்று நச்சினார்க்கினியர் கூறுகின்றார்.

நச்சினார்க்கினியர் கூறுகின்ற மலைமண்டலத்துள்ளே இக் கார்மண்டலம் அடங்கும். இதனையே தமிழ் மண்டலம் ஐந்தென்றவற்றுளும் ஒன்று எனத் திருமூலரும் மண்டலம் பதினெட்டினுள் ஒன்று எனச் சேக்கிழாரும் வில்லிபுத்தூராரும் (சேக் - அதிப. 4; வில்லி - திரௌ. 46) கூறுகின்றனர். இது காவிரி உற்பத்தியாகும் இடத்திலிருந்து சோழநாட்டில் உய்யக்கொண்டான் வளநாடு வரையிலும் முப்பத்தாறுயிரம் சதுரமைல் விரவிய பரப்புடையதாயிருந்தது.

பாண்டியர், சோழர், கங்கர், பல்லவர், கடம்பர், சாளுக்கியர், ஹொய்சளர், மஹாராஷ்டிரர், முகம்மதியர், விஜயநகரத்து வம்சத்தினர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் ஆகியோர் பல்வேறு காலங்களில் இந்நாட்டின் பல பாகங்களையும் ஆண்டு வந்துள்ளனர்.

தகடூர் தழைக்காடு, குவளாலபுரம் போன்ற பழைய வரலாற்றுப் புகழ்பெற்ற ஊர்கள் இம்மண்டலத்தேயுள்ளன.

இந்நாடே கருநாடு, கருநாடகம் எனவும் வழங்கப்பெறுவதுமாகும். இந்நாட்டில் மலைநாடு என்றும் வெளிநாடு என்றும் இரு பகுதிகள் மேற்கிலும் கிழக்கிலுமாக அமைந்துள்ளன. இந்நாட்டிலுள்ள குடகு, நந்தி முதலிய மலைகளினின்றும் உற்பத்தியாகும் காவிரி முதலிய பல்வேறு நதிகள் பிற நாடுகளில் பாய்ந்து அவற்றை வளம்பெறச் செய்கின்றன.

ஆசிரியர் வரலாறு

இந்நூலினை இயற்றிய ஆசிரியர் ஆறைகிழார் என்னும் பெரும் புலவர். இவர் அவிநாசியைச் சூழ்ந்த ஆறைநாடு என்னும் ஊரில் பிறந்தவர். இவரது இயற்பெயர் என்ன வென்று தெரியவில்லை. இவர் வைதீக சைவர்.

இவரது ஆசிரியர் மாதவயோகி என்னும் பெரியார். அவர் திருநாராயணபுரத்தில் கார்காத்த வேளாளர் குலத்தி லுதித்த பரம வைணவர். ஆறைகிழார் கொங்குநாட்டு வேளாளராயினும் தமது ஆசிரியர் மரபான கார்காத்த வேளாளர் குலத்தைப் புகழ்ந்தே நூல் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நூலாசிரியர் கி. பி. 1025 - 1070ல் வாழ்ந்தவர் என்று கருதப்படுகின்றது. கார்மண்டல சதகத்திற்கு உரை எழுதி வெளியிட்டுள்ள காழி வித்வான் ப. அ. முத்துத் தாண்டவராய பிள்ளை தமது உரைப் பாயிரத்தில் ஆறை கிழாரின் காலத்தை மேற்கண்டவாறே குறித்துள்ளார்.* எனவே கி. பி. பதினொன்றும் நூற்றுண்டில் வாழ்ந்தவர் ஆறைகிழார் என்றே கொள்ளலாம்.

நூலாராய்ச்சி

இது காப்புச் செய்யுளொன்றும் கடவுள் வாழ்த்துச் செய்யுட்களாக ஐந்தும், அவையடக்கச் செய்யுட்களாக ஒன்றும் பெற்று அதற்கு மேல் நூறு செய்யுட்களால் அமைந் துள்ளது.

முதன் முதலில் தாம் பாட எடுத்துக்கொண்ட கார் மண்டலத்தின் எல்லையை வரையறுத்துப் பாடுகின்றுர்

---

* இந்நூலுக்கு முன்னுரை எழுதிய எஸ். அனவரத நாயகம் பிள்ளையவர்கள் 'The work is an ancient one said to have been composed in the Eleventh Century' என்று கூறியுள்ளதும் இங்குக் கருதத்தக்கது.

ஆசிரியர். இதில் மலைநாடு கருநாடகம் என்னும் இரு பிரிவுகள் உள்ளனவென்று கூறுகிறார். நாட்டின் கிழக் கெல்லையாக மாபலிவாணர் நாடும் தொண்டை நாடும் விளங்குகின்றன; தெற்கெல்லையாகக் கொங்குநாடு விளங்கு கின்றது; மேற்கெல்லையாகக் குடகடல்அமைந்துள்ளது; வடக் கெல்லையாகப் பல்லவ நாடும் கடம்ப நாடும் அமைந்துள்ளன.

இந்நாட்டில் உள்ள வேறு சிறப்புகளையும் நூலாசிரியர் விளக்குகின்றார். காவிரி தோன்றும் குடகு மலையும், முருகர் கோவில் கொண்டெழுந்தருளியுள்ள திருவேரக மலையும், பாலாறு, பெண்ணை ஆகிய நதிகள் தோன்றும் நந்திமலையும் 'சாற்றுனவிர் சிவசாகரம்' என்று பாராட்டப் பெறும் சிவசமுத்திர நீர்வீழ்ச்சியும் இந்நாட்டில் உள்ளனவென்று கார்மண்டலத்தின் பெருமையைப் பரக்கக் கூறுகின்றனர்.

கார்மண்டலத்தின்மீது இராசராசச் சோழன் படை யெடுத்து வென்று தன்னுட்சிக்குட்படுத்தினான் என்ற வரலாற்றுக் குறிப்பை இந்நூலில் காண்கின்றோம். "சேலாட மைவிழி யன்பன் சலசத் திருப்பதத்தை பாலாட லாற்றிய சீராச ராசன்" என்று இராசராசனைக் குறிப்பிடுகின்றார் ஆசிரியர்.

கங்கைகொண்ட சோழனும் இந்நாட்டை யாண்டு வந்தான் என்ற குறிப்பையும் இந்நூலில் காண்கின்றோம்.

சோழ மன்னனாகிய வீரநாராயணன் தில்லையில் உள்ள பொன்னம்பலத்திற்குப் பொன் வேய்ந்தான் என்ற செய்தி யையும், அவன் தன் பெயரால் 'வீரநாராயணன் ஏரி' என்று ஓர் ஏரியை உண்டாக்கினான் என்றும், வரலாற்றுத் தொடர் பான செய்திகள் இந்நூலில் காணப்படுகின்றன. இதனை,

"மாவீர நாரா யணப்பெரு மன்னன்பொன் மன்றழகு
மாவீர மாச்செயப் பொன்னும் வழங்கி மலிதடநீர்
மாவீர நாரா யணப்பெயர் மன்ன வகுத்தனன்"

என வரும் இந்நூற் செய்யுளடிகளால் உணரலாம்.

இந்நூலில் கார்மண்டலத்து வாழ்ந்த சிற்றரசர்களைப் பற்றிய குறிப்புகளும் உள. தோட்டி மலையைத் தன்னதாகக் கொண்டு ஆண்டு வந்தவனும் கடையெழு வள்ளல்களில் ஒருவனுமான கண்டீரக் கோப்பெரு நற்கிள்ளி இம்மண்டலத்தில் வாழ்ந்ததாகக் குறிப்பிடப்படுகின்றான். வன்பரணர், பெருந்தலைச் சாத்தனார், நத்தத்தனார் முதலிய புலவர்கள் இவனைப் பாடியுள்ளனர் என்பதை அகம், புறம் ஆகிய நூல்கள் வாயிலாக அறிகின்றோம்.

எழிற்குன்றம், பாழிச் சிலம்பு, பறம்பு மலை ஆகியவற்றின் தலைவனாக வாழ்ந்த நன்னன் வேண்மான் பற்றிய குறிப்பொன்றும் இந்நூலில் உள்ளது. இவன் பெரும்பூட் சென்னியையும், பிண்டனையும் ஆய் எயினனையும், மிஞிலி அதிகனென்பானையும் கொன்று புகழ் பெற்றவன்; களங்காய்க் கண்ணி நார் முடிச்சேரல் என்னும் அரசனால் பெருந்துறைச் செருவில் இவன் கொல்லப்பட்டான். இச்செய்திகளை அகம், புறம், குறுந்தொகை, மலைபடுகடாம் ஆகிய நூல்களினின்றும் அறிகின்றோம்.

மிழலைக் கூற்றத்துக் காவிரி நாட்டையும், முத்தூரையும் நீழல் என்னும் நெய்தல் நாட்டையும் ஆண்ட எவ்வி என்னும் சிற்றரசன் பற்றிய குறிப்பொன்றும் இந்நூலில் உள்ளது. இவன் திதியனது காவல் மரத்தைக் கடிதல் வேண்டா மென்று அன்னிக்கு அறிவுரை கூறியவன்; தலையாலங்கானத்துப் போரில் நெடுஞ்செழியனால் இவன் கொல்லப்பட்டான். இவனை அகநானூற்றிலும், குறுந்தொகையிலும் மாங்குடி கிழார், கபிலர், வெள்ளெருக்கிலையார் ஆகியோர் புகழ்ந்து பாடியுள்ளதைக் காணலாம்.

வடுக நாட்டையும், குடகுநாட்டு எருமையூரையும் ஆண்ட எருமையூரன் என்னும் வேளிர் மன்னனும் இந்நூலில் பாராட்டப் பெற்றுள்ளான். இவனை அகநானூற்றில் நக்கீரர், மாமூலர் ஆகியோர் புகழ்ந்து பாடியுள்ளனர்.

மற்றும் அன்னி, ஆதியன், இருங்கோவேண்மான், இளங் கோசர் ஆகியோர் பற்றிய குறிப்புகளும் இந்நூலில் காணப் படுகின்றன.

கார்மண்டலத்தே வாழ்ந்த புலவர்கள் பலரைப் பற்றியும் இந்நூலில் குறிப்புகள் உள்ளன.

கார்காத்த வேளாளர் குலத்தில் பிறந்த அரிசில் கிழார் என்னும் புலவர் கார்மண்டலத்தின் மேற்கே மைசூர் நாட் டில் உள்ள அரிசில் என்னும் ஊரில் வாழ்ந்தார் என்ற குறிப்பையும் இம்மண்டலத்தின் கிழக்கே உய்யக்கொண் டான் வளநாட்டு அரியில் என்ற ஊரிலும் இவருக்குக் கிழமை இருந்தது என்ற செய்தியையும் இந்நூல் வாயிலாக அறிகின்றோம்.

இவர் கண்ணகியையும் பேகனையும் இணைப்பதற்காகப் பெரு முயற்சி செய்தவர்; தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும் பொறையிடம் பெரும் பொருள் பரிசில் பெற்றதுடன் மட்டு மின்றி அவனது மந்திரியாகவும் இருந்தவர். இவரது பாடல்கள் திருவள்ளுவ மாலையிலும் தகடூர் யாத்திரையிலும் பதிற்றுப் பத்திலும், புறநானூற்றிலும் காணப்படுகின்றன. இவருடனிருந்த புலவர்கள் கபிலர், பரணர், பெருங்குன்றூர் கிழார், பொன்முடியார் முதலியோர்.

திருவாலி என்னும் ஊரில் பிறந்து சிறந்த வீரராகவும் பெரும் புலவராகவும் விளங்கிய ஆலியார் என்னும் புலவ ரைப் பற்றிய குறிப்பொன்றும் இந்நூலில் உள்ளது.

மற்றும் வேளாள மரபைச் சேர்ந்த பெரும் புலவர் உமட்டூர் கிழார் என்பவரைப் பற்றியும், சேரநாட்டு உம்பற் காட்டில் இருந்த பெரும் புலவரான உம்பற் காட்டிளங் கண்ணனார் பற்றியும், நாஞ்சில் வள்ளுவனைப்பாடிய கருவூர்க் கதப்பிள்ளை என்பார் பற்றியும், தொண்டைமான் இளந் திரையனைப் பாடிய காட்டூர் கிழார் மகனார் கண்ணனார் பற்றியும், பரங்குன்றத்துக் கடவுள்மீது பாடல் பல புனைந்த

குன்றம் பூதனுர் பற்றியும், ஐங்குறு நூற்றைத் தொகுத்த கூடலூர் கிழார் பற்றியும், அகநானூற்றில் வதுவைச் சடங்கு பற்றி வரும் பாடலைப் பாடிய நல்லூர் கிழார் பற்றியும் சேரமான் குடக்கோ இளஞ்சேரலிரும் பொறையைப் புகழ்ந்து பாடிய பெருங்குன்றூர் கிழார் பற்றியும், பாண்டி நாட்டுப் பொதும்பு என்னும் ஊரினைச் சேர்ந்த பொதும்பில் கிழான் வெண்கண்ணனுர் பற்றியும், இதே ஊரில் பிறந்த பெண்பாற் புலவராகிய பொதும்பிற் புல்லாளங் கண்ணியார் பற்றியும், வேளாள மரபினராகிய நொச்சி நியமங்கிழார் பற்றியும், ஔவையால் பாராட்டப் பெற்ற வெள்ளிவீதியார் என்ற பெண்பாற் புலவரைப் பற்றியும் இந்நூலில் பல குறிப்புகள் உள்ளன. கார்மண்டலத்தில் வாழ்ந்த பெரும் புலவர்கள் இவர்கள் என்று ஆசிரியர் இவர்களைக் குறிப்பிட்டுள்ளார்.

திருமூலதேவர் திருமந்திரம் நூல் செய்தது பற்றிய குறிப்பொன்றும் இந்நூலில் காணக் கிடக்கின்றது. கார் மண்டலத்தார் மாயையை ஒழித்து நல்பேற்றினையடைய, திருமூலர் கூறும் ஆறந்தங்களையும் ஆகமங்களையும், தந்திரங் களையும் விரும்பிக் கற்பர் என்று இந்நூலில் கூறப் பட்டுள்ளது.

ஒரு பக்கத்தில் உலகங்களை அளந்த திருமால், மற்றை யொரு பக்கத்தில் சிவன் ஆகிய இருவரது திருமேனிகளின் நிறத்தை யாம் வேறுபடுத்தி அறியமாட்டோம் என்று காரைக்காலம்மையார் கூறியுள்ளதை மேற்கோள் காட்டி அரியும் அரனும் கலந்த திருவுருவை இவர் வாழ்த்துகின்ருர்.

இதனை,

''ஒருபாலி னுலகளந்த திருமாலா மரன்மற்று
மொருபா லாவ
னிருபாலு நிறந்தெரிய மாட்டோமென் றம்மையிசை
யிறைவன் றன்னை''

என வரும் செய்யுள் அடிகளால் உணரலாம்.

இங்ஙனமே பொய்கையாழ்வார் கூறும் கூற்றையும் மேற்கோள் காட்டுகின்றார்.

"ஒருபாலின் அரனென்று மற்றைப்பா ஞரணஞ
மொருவ னென்றும்
வருபால ரெனப்பொய்கை வாய்மொழிந்த
வரியரர் தாண்
மருவி வாழ்வாம்"

என்று 'நிர்க்குணவஸ்து' எனப்படும் ஹரிஹரரைப் போற்றுகின்றார்.

திவ்வியப் பிரபந்தங்களைத் தொகுத்துதவிய நாதமுனி, தேவாரப் பாடல்களைத் திருமுறையாகத் தொகுத்துதவிய நம்பியாண்டார் நம்பி ஆகியவர்கள் பற்றிய செய்தி யொன்றும் இந்நூலில் காணப்படுகின்றது. கார்மண்டல வேளாளரான திருமுதுகுன்றத்து இருந்த சிக்கபூபதி என்னும் பெருந்தகை வீரநாராயணபுரத்து நாதமுனிவரையும், திருநாரையூர் நம்பியாண்டார் நம்பியையும் போற்றிப் பாதுகாத்து ஆதரவு அளித்து வந்தார் என்ற செய்தியை,

'தலைச்சங் கணிந்த தடக்கைப் பெரும்புயல்
தண்டமிழ்சூர்த்
தொலைச்சிக் குடுமிப் படைகொள் பரமன் சுருதிமறை
மிலைச்சிப் புகழ்பெற்ற நாத முனிநம்பி வேந்திருவர்
மலைச்சிக்க பூபதி வாழ்க்கையர் காராள மண்டலமே'

என வரும் பாடலால் அறியலாம்.

கார்மண்டலத்து வாழ்ந்த வேளாளர் இன்னின்னார், அவர் தம் தொழில், பண்பு ஆகிய செய்திகளைப் பற்றி இந் நூலாசிரியர் விளக்கமாகக் கூறுகின்றார்.

வேளாளரில் பூபாலர் முதலிய எண் வகையினரும், பூவைசியர் முதல் மூவகையினரும், சாமந்தரும், அரசர் விரும்பும் குடியினரும், காவிரி நாட்டில் மேல் நாட்டார், கீழ்நாட்டார் என்னும் இரு பிரிவினருமாகப் பலவகையினர் வாழ்ந்திருந்தனர்.

கார்மண்டலத்துள்ளே வாழும் வேளாளர்களில் உழுதுண்ணும் வேளாளர்கள் ஏரால் உழுது, எருவிட்டு, பூமியை வளப்படுத்தி, களைநீக்கி, நீர் பாய்ச்சி கதிரறுக்கும்வரை புறத்தே காவல் செய்து வருவர். பின் நெல்லையறுத்தபின் தமது இல்லாளுடன் கூடி இனிதாக இல்லறம் நடத்துவதுடன் மட்டுமின்றி அரசர்க்கும் மற்றவருக்கும் வழங்க வேண்டியவற்றை வழங்கிப் பெருமை பெறுவர். தத்தம் ஏர்த்தொழில் சிறக்கப் பணி புரிந்தோரையும் மறவாது அவர்களைப் பேணிப் பாதுகாத்து வருவர்.

அத்துடன் மட்டும் அமையாது ஏரின் வளத்தாற் பெற்ற பண்டங்களையும் பிற வினைபொருள்களையும், பிற கைத்தொழிற் பண்டங்களையும் கொண்டு செம்மையாக வாணிபம் செய்வர்; அவர்களில் சிலர் பிறநாடுகளுக்குக் கப்பல்களில் பொருள்களை ஏற்றிச் சென்று பெரும்பொருள் ஆக்குவர். பொருள் விளைத்து வளம் பெருக்குதல் போன்றே கொடையிலும் சிறந்து விளங்குவர் இவர்கள்.

தம் குடியினரை மட்டும் காத்தலோடு அமையாது பிற குடியினரையும் பாதுகாக்கும் பண்பு வேளாளரிடம் அமைந்திருந்தது. மேலும் இவர்கள் ஆணைவழியே சிறிதும் குற்றம் நிகழாதவாறு நின்று வினைவலர்களையும் இரப்போரையும் புரப்பர்.

இங்ஙனம் அனைத்துப் பண்புகளும் நிறைந்து விளங்கினர் வேளாள மரபினர். அறமுறைகளில் சிறிதும் வழுவாது நின்று தன்னுயிர்போல் மன்னுயிரைப் புரந்த அவர்கள் புகழைப் பற்றி இந்நூலாசிரியர் தம் நூலில் மேலும் விளக்கியுள்ளார்.

இந்நூலில் பிற சதக இலக்கியங்களில் காணப்படுவது போன்று வடமொழிச் சொற்கள் அதிகமாகப் பயின்று வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வேளாள மரபினரின் பழைய வரலாற்றையும், பழக்க வழக்கங்களையும், பெருமைகளையும், மண்டலச் சிறப்பையும் விளக்கும் ஒப்பற்ற கலைச் செல்வமாக இந்நூல் திகழ்கின்றது. இவருள் முற்காலத்தில் வள்ளல்களாகவும், புலவர்களாகவும் ஞானிகளாகவும் இருந்தோரது பெருமைகளையும் பிற செய்திகளையும் இந்நூல் உணர்த்துவதன் வாயிலாகத் தம் காலத்து இருந்த நாட்டு நிலைமையை நமக்கு அறிவிக்கும் ஒரு கருவியாகத் திகழ்கின்றது.

நூல் நயம்

கார்மண்டலத்தேயுள்ள திருப்பதிகளுள் திருவேரகத்தின் எழிலை விளக்க முற்படுகின்றார் நூலாசிரியர். முருகன் என்று கூறாது ஓர் அழகிய சொற்றொடரைக் கூறுகின்றார்.

பிறையை முடியிலே அணிந்த பெருமாட்டியாகிய உமையின் புதல்வனாக அவதரித்த முருகன் என்பதைக் குறிப்பிட,

'பிறைமுடிக் கண்ணிப் பெருமாட்டி தோன்றல்' என்ற சொற்றொடரை ஆளுகின்றார்.

இத்தோன்றல் ஒரு பிடியையும் ஒரு கொடியையும் தழுவி நிற்கின்றான் என்று கூறுகின்றார். அதாவது முருகன் தெய்வானையையும் வள்ளியையும் அணைத்துக் காட்சி தருவதையே புலவர் இங்ஙனம் கண்டுகளிக்கின்றார். தெய்வானையாகிய பிடியைத் தழுவி நிற்கின்றான் என்ற போது முருகனைக் களிறாகவும், புளினர் குலத்தில் உதித்த கொடிபோன்ற குறமகள் வள்ளியை அணைத்து நிற்றலைக் கூறும்போது முருகனை ஒரு மரமாகவும் உருவகித்துப் பாடும் புலவரின் கற்பனைவளம் அறிந்து போற்றத்தக்கது.

இனி, திருவேரகமலையின் வளத்தைச் சுவைபடக் கூறுகின்றார். குறைவற்ற சந்தனமும் அகிலும் நிறைந்து விளங்குகின்றது இம்மலை. அங்கே களிப்புமிகுந்த மயில்கள் அகவுகின்றன. எங்குப் பார்த்தாலும் பசுமை நிறைந்து வளம்

மல்கிக்கிடக்கின்றது. இவற்றிற்குமேலாக திருவேரகமலை பற்றி வேதத்திலேயே குறிப்பு உள்ளது. இத்தகைய வளம் பொருந்திய திருவேரக மலையில் முருகன் வள்ளிதெய்வானை உடனிருக்கக் காட்சி தருகின்ருன். புலவரின் கற்பனை வளத்தையும் புலமை நலத்தையும்,

'பிறைமுடிக் கண்ணிப் பெருமாட்டி தோன்றல்
பிடிதழுவக்
கறையில் புளிஞர் குலக்கொடி தாவக் கவினியது
குறைவருஞ் சந்தகில் தாங்கிக் குலாஞ்சிகி
கூய்வளஞ்சால்
மறைவரு மேரகக் கோத்திரங் காராளர் மண்டலமே'

என வரும் பாடலிலே கண்டு மகிழலாம்.

வேளாளர் பெருமைபற்றிக் கூறும் இந்நூலில் திருவள்ளுவர் நூலில் காணப்படும் உழவு பற்றிய பல்வேறு செய்திகளும் எடுத்தாளப்பட்டுள்ளன.

இங்ஙனம் பல்வேறு வகையாலும் நலம் கனிந்து விளங்கும் இந்நூலே சதக இலக்கியத்தின் முதல் நூலாக அமைந்துள்ளது. பின்னே எழுந்த பல்வேறு நூல்களுக்கும் ஒரு முன்னேடியாக அமைந்து வழிகாட்டுகின்றது. இத்தகைய பெருமை பல நிறையப் பெற்ற இவ்விலக்கித்தின் சுவையுணரவேண்டியது அனைவரது கடனுமாகும்.

6. தொண்டை மண்டல சதகம்

தொண்டை நாட்டைச் சிறப்பிக்கும் முகத்தால் அந்நாட்டில் வாழ்ந்த பல்வேறு பெருமக்களின் வரலாறுகளைத் தொகுத்து நூறு பாடல்களால் பாடப்பெற்றது இந்நூல்.

சதக இலக்கிய வகையில் இந்நூலே முதல் நூலாகும் என்றும் கூறுவர் சிலர். தொண்டை மண்டலத்தே வாழ்ந்த புலவர்கள், வள்ளல்கள் மன்னர்கள் ஆகியோரைப்பற்றிய வரலாற்றுச் சுருக்கமாக இந்நூல் விளங்குகின்றது.

நூலில் ஒவ்வொரு பாடலின் இறுதிதோறும் 'தொண்டை மண்டலமே' என்ற மகுடம் காணப்படுகின்றது.

தொண்டை மண்டலம்

தொண்டைமண்டலம் பல அறிஞர்கள் வாழ்ந்த பெருமை பெற்றது. ஔவை பாடியதாகக் கருதப்படும் தனிப்பாடல் ஒன்றில்,

'தெண்ணீர் வயற்றொண்டை நன்னாடு சான்றோ ருடைத்து' என்று புகழ்ந்து கூறப்பட்டுள்ளது. இந்நாடு கிழக்கே கடலும் மேற்கே பவளமலையும் வடக்கே வேங்கட மலையும் தெற்கே பிநாகிநதியும் எல்லைகளாகவுடையது என்று கூறப்படுகிறது.

இந்நாட்டுக்கு 'சீர்கொண்ட கச்சி' என்று பாராட்டப் பெறும் காஞ்சிபுரம் தலைநகராக அமைந்திருந்தது.

தொண்டைமண்டலம் பழங்காலத்தில் சோழநாட்டின் ஒருபகுதியாக இருந்தது. சோழனொருவன் நாகலோகஞ் சென்று நாககன்னிகை ஒருத்தியை மணந்து அவள் வயிற்றில் பிறக்கும் மகனுக்கு தனது நாட்டில் பாதி தருவதாக உறுதி கூறிவந்தான். நாககன்னிகை தனது புதல்வனை எவ்வாறு அவனிடம் அனுப்புவதென்று வினவவும் அவன் தொண்டைக் கொடியை அடையாளமாகக் கட்டித் தெப்பத்திலேற்றி யனுப்புமாறு கூறினான். அவ்வண்ணமே அப்புதல்வன் தொண்டைக்கொடியால் சுற்றப்பட்டு அலைகளால் செலுத்தப் பட்டு நாகைக் கடற்கரையைச் சேர்ந்தான். சோழமன்னன் அவனை வளர்த்து, தொண்டைமான் என்னும் பெயரும் சூட்டி, தற்போது தொண்டைநாடு என்று வழங்கும் பகுதியை அவனுக்கு ஆண்டுவருமாறு தந்தான். அதுமுதல் அந்நாடும் அவனது பெயராலேயே தொண்டைமண்டலம் என வழங்கு வதாயிற்று என்றும் ஒரு வரலாறு கூறப்படுகின்றது.

இம் மண்டலத்தில் பெரும்புலவர்களும், வள்ளல்களும் வாழ்ந்தனர்.

நூலாசிரியர் வரலாறு

இந்நூலினை இயற்றிய ஆசிரியர் படிக்காசுப் புலவர் என்னும் புலமையாளர். இவர் தொண்டை நாட்டில் பொற்களந்தைப்பதி என்று புகழ்ந்து கூறப்படும் தென் களத்தூரில் தோன்றினர். இவரது இயற்பெயர் இன்னதென்று தெரியவில்லை. ஆயினும் இவரது இயற்பெயர் களந்தையான் என்றிருக்கக்கூடும் என்பர் சிலர்.

இவர் திருவாரூர் வைத்தியநாத நாவலரிடம் கற்றுத் தேர்ந்தவர். வல்லமாநகரில் வாழ்ந்த காளத்திபூபதி என்னும் கொடை வள்ளலைப் புகழ்ந்து பாடி, தம் வறுமையைப் போக்கிக்கொண்டார்.

மாவண்டூரில் வாழ்ந்த கத்தூரி முதலியார் மகன் கறுப்ப முதலியார் என்னும் நல்லார் படிக்காசரிடம் தொண்டை மண்டலத்தின் பெருமைகளைத் தொகுத் துரைக்கும் நூலொன்று பாடித்தருமாறு வேண்ட படிக்காசரும் இவ் வழகிய நூலை யாத்தளித்தார். இச்செய்தியை,

'காவைவென் றிடுகத்தூரி கண்மணிக் கறுப்பனென்னு
மாவையம் பதியான் றொண்டை மண்டலசதகங்
கேட்டு
நாவலர் புகழ்ந்து மெச்ச நவநிதி பொழிந்து நன்றுப்
பூவுலகெங்கும் போற்ற புகழ்நிலை நிறுத்தினனே'

என வரும் தனிச் செய்யுளொன்றால் உணரலாம்.

படிக்காசர் இந்நூலினை இயற்றி அரங்கேற்றிய காலத்து கறுப்பமுதலியார் புலவர் பெருமகனுருக்குப் பல்வகைச் சிறப்புகள் செய்ததுடன்மட்டுமின்றி, தன் தம்பியருடன் படிக்காசரின் பல்லக்கையும் தூக்கினர் என்ற செய்தியை,

'கன்மாரி காத்தமுகிற் கத்தூரி யருண்மாவைக்
கறுப்ப னென்னு
மின்மாரி தனதுகிளை யத்தனையுஞ் சபைகூட்டி
வியந்து கேட்டுச்

சொன்மாரி பொழிந்திடுவே சிரகரகம் பிதஞ்செய்து
சுருளுந் தந்து
பொன்மாரி பொழிந்துதந்தப் பல்லக்குச் சுமந்துமிகு
புகழ்பெற் ருனே'

என வரும் தனிச் செய்யுளொன்ருல் அறிகின்ருேம். கறுப்ப முதலியாரின் வள்ளன்மையைப் பாராட்டி,

'ஓர்கறுப்பு மில்லாத தொண்டைவள நன்னுட்டி
லுசித வேளைச்
சீர்சறுப்பொன் றில்லாத கத்தூரி மன்னனருள் சேயைப்
பார்மேல்
ஆர்கறுப்ப னென்றுசொல்லி யழைத்தாலு நாமவனை
யன்பினுலே
பேர்கறுப்ப னிறஞ்சிவப்பன் கீர்த்தியினுல் வெளுப்ப
னெப் பேசுவோமே'.

என்று படிக்காசுப் புலவர் பாராட்டிக் கூறியதாகவும் ஒரு தனிச் செய்யுள் வழங்குகின்றது.

படிக்காசுப் புலவர் இராமநாதபுரம் மன்னர், வள்ளல் சீதக்காதி ஆகியோரைப் பாராட்டிப் பலவேறு பரிசுகளும் பெற்றுள்ளார். படிக்காசரின் கவிவளத்தைப் பாராட்டிப் பலபட்டடைச் சொக்கநாதர் என்னும் புலவர் புகழ்ந்துள்ளார்.

படிக்காசர் தண்டலையார் சதகம் என்னும் பிறிதொரு சதக நூலையும் யாத்துள்ளார். இவரது காலம் கி. பி. 1686-1723 என்று கூறுவர். (படிக்காசரது வரலாற்றின் பிற செய்திகளைத் தண்டையார் சதக ஆசிரியர் வரலாறு என்னும் பகுதியில் காண்க.)

நூலாராய்ச்சி

இந்நூலில் தொண்டை மண்டலத்தோடு தொடர்புடைய புலவர் பலரது வரலாறுகள் விரித்துரைக்கப்படுகின்றன.

தொண்டர் பெருமையை விரித்துரைக்கும் பெருமை கொண்ட திருத் தொண்டர் புராணம் எழுதிய சேக்கிழார் தொண்டை மண்டலத்தில் பிறந்த செய்தியை,

'ஊரார்மலி புலியூர்க் கோட்டநற் குன்றத் தூரிலுள்ள
தீராவள மலிபாக் கிழவோன் புகழ்ச் சேக்கிழவோன்'

என வரும் இந்நூலின் செய்யுளடிகளால் உணரலாம். சேக்கிழார் பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய பெரியபுராணம் பற்றியும் இந்நூலில் குறிப்பொன்று காணக் கிடக்கின்றது.

'விண்ணிற் பிறக்கும் புகழ்க்குன்ற நாடன்
விளங்கு தமிழ்ப்
பண்ணிற் பிறக்கும் பெரிய புராணம் பகர்ந்த பிரான்'

என்று சேக்கிழாரைப் பாடிப் பரவுகின்ருர் இந்நூலாசிரியர்.

சோழநாட்டில் ஆலந்துறையில் பிறந்த இரட்டையர் என்ற புலவர்கள் தொண்டை நாட்டிற்கு வந்து கச்சி ஏகம்பர நாதர்மீது உலா பாடியதையும் அவர்கள் பாடிய பிற செய்யுள்களையும் இந்நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

'மேதைப் புலவரெண் ணேகாம்பரசம்பு மெச்சநெடுங்
காதைப் புலவரிரட்டையர் பாடுங் கலம்பகமும்
ஓதற் கரியநல் லேகம்ப வாண ருலாவுமந்த
மாதைப் பனுவலும் பாராட்டிடுந் தொண்டை
மண்டலமே'

என வரும் பாடலில் இச்செய்தியை நாம் காண்கின்ருேம்.

தொண்டைமண்டலத்தில் வாழ்ந்த பிறிதொரு புலமையாளர் 'புகழேந்தி' என்ற பெயர் கொண்டவர். இவரே 'தஞ்சைவாணன் கோவை' என்னும் அகப்பொருள் நூலை யாத்தவர். இவரது பாடல்களின் சொற்சுவையிலும் பொருட் சுவையிலும் ஈடுபாடுகொண்ட இந்நூலாசிரியர் 'கேட்டாலும் இன்பங் கிடைக்கும் கண்டீர் கொண்ட சீர்த்தி

யொடு பாட்டாலுயர்ந்த புகழேந்தி' என்று பாராட்டு கின்ருர்.

புகழேந்திப் புலவர் ஒரு சமயம் குலோத்துங்க சோழன் முன்னிலையில் திருநெய்த்தானம் என்னும் பதியில்,

தற்கோ லிப்பூ சற்பா சத்தே தப்பா மற்சா கைக்கே
நிற்பீர்
முற்கோ லிக்கோ லிப்பூ சித்தே முட்டா மற்சே வித்தே
நிற்பீர்
வற்ரு நெட்டோ டைப்பா ரச்சேன் மைப்பூ கத்தே
றித்தா விப்போய்
நெற்ரு ளூற்ரு லைப்பா கிற்சேர் நெய்த்தா னத்தா
னைச்சே வித்தே

என்ற பாடலைப் பாடி ஒட்டக்கூத்தரின் செருக்கையடக் கிஞர் என்ற வரலாற்றுச் செய்தியும் இந்நூலில் காணப்படு கின்றது. இதனை,

'நூலார் கலைவல்ல செம்பியன் கேட்க நொடித்துமிக்க
கோலா கலனொட்டக் கூத்தனை யன்றுதற் கோலியென்று
மேலார் கவிசொல்லி நெய்த்தானத் தேசென்று
வென்றுகொண்ட
மாலார் களந்தைப் புகழேந்தி யுந்தொண்டை
மண்டலமே'

என வரும் செய்யுளால் நாம் அறியலாம்.

நமக்குக் கிடைத்திருக்கும் தமிழ் இலக்கணங்களில் மிகவும் தொன்மையான நூல் ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியமே. இந்நூலினை இயற்றிய ஆசிரியரான தொல்காப்பியரின் ஒருசாலை மாணவரான பனம்பாரனுர் தொண்டைமண்டலத்தே வாழ்ந்தவர் என்று கூறப்படு கின்றது. இவரே தொல்காப்பியத்திற்குப் பாயிரம் பாடினுர் என்றும் கருதப்படுகின்றது. இதனை இந்நூலா சிரியர் 'தொல்காப்பியப் பாயிரஞ்சொல். . . . பனம்பாரர்' என்று கூறி அவர் தம் மண்டலத்தே வாழ்ந்தவர் என்றும் சிறப்பித்துப் பாடுகின்ருர்.

கி. பி. எட்டாம் நூற்ருண்டில் வாழ்ந்தவர் என்று கூறப் படும் திருமழிசை யாழ்வார் பற்றியும் இந்நூலில் குறிப்புகள் உள்ளன. இவர் நான்முகன் திருவந்தாதி, திருச்சந்த விருத்தம், திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி முதலிய நூல்களேப் பாடியுள்ளார்.

இவர் தமது அடியவரான கணிகண்ணன் என்பாருடன் மன்னன் ஆணேக்கஞ்சிக் காஞ்சியைவிட்டு நீங்க முற்பட்டு அங்குள்ள இறைவனிடம்,

'செந்நாப் புலவன்யான் செல்கின்றேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய் சுருட்டிக்கொள்'

என வேண்டி இறைவனுடன் குடந்தை சென்ருர் என்றும் பின் மன்னன் தன் தவற்றுக்கு வருந்தவே மீண்டும் கச்சிநகர் திரும்பினுர் என்றும் ஒரு வரலாறு உள்ளது. இந்நிகழ்ச் சியை உள்ளிருத்திய புலவர் இதனே ஓர் உவமை முகத் தானும் விளக்கிக் காட்டித் தொண்டை மண்டலத்தின் பெருமையைக் கூறுகின்ருர்.

'துரைத்தியாக ராயர்முன் சுந்தரர்க் காவொரு
தூதுசென்ற
விரைத்தா மரைமணம் வீசுதல் போல்விடப்
பாய்சுருட்டித்
திரைத்தா வணத்தி லொருபுல வோன்பின்பு சென்ற
செந்தா
மரைத்தாண் மணமின்ன நாறுங்கண் டீர்தொண்டை
மண்டலமே'

என வரும் பாடலில் தமிழ்மீது அன்புகொண்டு புலவன் ஏவலுக்கு அடிபணிந்த இறைவன் புகழ் மணம் கச்சித் திருப் பதியில் இன்னும் மணக்கின்றது என்று கூறுகின்ருர் புலவர்.

திருக்குறளுக்கு உரையெழுதிய ஆசிரியர் பதின்மர். இவர்களில் பரிமேலழகர் எழுதிய உரையே சிறந்ததென்று கருதப்படுகின்றது. எனவேதான் 'நூலிற் பரித்தவுரையெல்

லாம் பரிமேலழகர் தெரித்தவுரையாமோ தெளி' என்ற வழக்கும் எழுந்தது. பரிமேழகர் காஞ்சி நகரில் வாழ்ந்தவர் என்பதை 'திருக்காஞ்சி வாழ் பரிமேலழகன்' என வரும் இந் நூற் செய்யுளடியால் உணர்கின்ருேம். பரிமேலழகரின் உரை விளக்கத்தால் திருவள்ளுவரின் திருக்குறளை அனைவரும் புரிந்துகொள்ளும் நிலைமை கிட்டியது. வள்ளுவரின் குறள் விளக்க உரை எழுதித் தந்த பரிமேலழகர் தொண்டை நாட்டுக் கச்சிப் பதியின் கண்ணே வாழ்ந்தவர் என்று இந்நூலாசிரியர் பெருமையோடு கூறுகின்ருர்.

'திருக்காஞ்சி வாழ் பரிமேலழகன், வள்ளுவனுர்க்கு வழி காட்டினுன்ருெண்டை மண்டலமே' என்று பெருமையோடு இந்நூலாசிரியர் கூறும் பான்மை அறிந்து இன்புறற்பாலது.

தொல்காப்பியத்திற்குப் பின்னே எழுந்த இலக்கிய அமைதிகளைக் கொண்டு எழுந்த நன்னூல் என்னும் இலக்கண நூலை எழுதிய பவணந்தி முனிவர் தொண்டைநாட்டில் சனகாபுரி என்னும் ஊரில் பிறந்தவரே என்றும், சின்னூல் என்னும் நூலைத் தந்த 'மண்பரவும் கேடாத சீர்த்திக் குண வீர பண்டிதன்' என்னும் புலவர் பிறந்த ஊரும் தொண்டை நாட்டின்கண்ணே யுள்ளது என்றும் இந்நூலாசிரியர் பெரு மிதச்சுவை தோன்றக் கூறுகின்ருர்.

இங்ஙனம் 'சான்ருேருடைத்துத் தொண்டைநாடு' என்னும் பெயர்க்கு ஏற்றவாறு திகழும் இந்நாட்டிலுதித்த பிற புலவர்களையும் இந்நூலாசிரியர் போற்றி இம்மண்டலத் தின் பெருமையை விளக்குகின்ருர்.

புலவர்களேயன்றி, கொடைமடம் பட்டு வாழ்ந்த பல் வேறு வள்ளல்களும் இம்மண்டலத்தே வாழ்ந்திருந்தனர்.

'பொன் நெல்லையெல்லாம் பொதிப் பொதியாய்ப் பூசுரர்க்குச் செந்நெல்லே போலச் சிறந்தளித்த களத்தூர் குடிதாங்கி முதலியார் என்னும் வள்ளலும், நெற்குன்ற வாணன் என்ற வள்ளலும் பிற வள்ளல்களும் இத் தொண்டைமண்டலத்தில் வாழ்ந்தனர்.

தொண்டை மண்டலத்தில் உள்ள பேரூர்களைத் தொகுத்து ஒரு பாடலில் கூறுகின்றார் ஆசிரியர்.

'கயிலையுங் கச்சியும் விற்கோ லமுநற் கழுக்குன்றமும்
பயில்வலி தாயமும் பாசூரு மச்சிறு பாக்கமுநல்
லயிலையும் வல்லந் திருவொற்றி யூரு மரசிலியு
மயிலையு மீசன் மகிழ்ந்ததன்றே தொண்டை மண்டலமே'

என வரும் பாடலில் தொண்டைநாட்டில் இறைவன் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள திருப்பதிகள் இன்னின்னவை என்று உரைக்கப்படுதலைக் காணலாம்.

அடுத்து, திருப்பதிகளில் ஒவ்வொன்றின் பெருமையையும் விரித்துரைக்கின்றார். கச்சி நகரில் உமை தவம் புரிந்த காலை வெள்ளம் வரவே தான் வழிபட்ட சிவலிங்க உருவைத் தன் மார்போடு சேர்த்து அணைத்துக்கொண்டதாகவும், அதனால் இறைவன் திருமேனியில் அம்மையின் முலைத் தழும்பும் வளைத் தழும்பும் உண்டாகியது என்பது புராண வரலாறு.

இதனை,

'முளைத்தெழும் பொற்சிக ரம்போலு மம்மை முலைத்
தழும்பும்
வளைத்தழும் பும்பெற்றிருப் பதன்றே தொண்டை
மண்டலமே'

என்று கூறிக் கச்சிநகரின் புராணப் பெருமையை விரித்துரைக்கின்றார்.

மேலும் 'செங் கலினை லெறிந்தே சிவபதஞ் சேர்ந்த சங்கமங்கை சாக்கியர்' என்று பாராட்டப் பெறும் சாக்கிய நாயனார், 'புலனைந்தும் வென்று, எமதூதரையும் வாதிலும் வென்றவர்' என்று பாராட்டப் பெறும் மூர்க்க நாயனார், கலிக்கம்ப நாயனார் ஆகிய சைவ சமயத்து நாயன்மார்கள் பற்றியும் இந்நூலில் குறிப்புகள் உள்ளன. இவர்களைத் திருத்தொண்டத்தொகை யாசிரியர்,

'மறவாது கல்லெறிந்த சாக்கியர்' என்றும்
'நாட்டமிகு தண்டிக்கு மூர்க்கர்' என்றும்
'கை தடிந்த வரிசிலையான் கலிக்கம்பர்' என்றும் குறிப்பிடுகின்ருர்.

தொண்டைமண்டலத்தே வாழ்ந்த வேளாளர்களின் குலப் பெருமையையும், கொடைத் திறத்தையும், உயர் பண்புகளையும் பல்வேறு சான்றுகள் கூறி இந்நூலாசிரியர் விளக்குகின்ற திறம் அறியற்பாலது.

தொண்டை மண்டலத்தே வாழும் வேளாளர்களின் இல்லங்களின் வாயிற் கதவுகள் எப்போதும் திறந்தேயிருக்கின்றன. ஏன் எனில் வெம்பசியால் வாடி வரும் இரவலர்கள் கூப்பிடும்பொழுது அது வீட்டிலுள்ளார் காதில் விழத் தடையாக இருக்கக் கூடாதென்ற எண்ணத்தினுல் வாயிற் கதவைத் திறந்தே வைத்திருக்கும் வள்ளன்மைக் குணம் படைத்த வேளாளர் குடியினர் இத் தொண்டைமண்டலத்தே வாழ்ந்தனர் என்று ஆசிரியர் கூறுகின்ருர்.

இரவலர்கள் தம்மை நாடி வந்து ஈயென இரக்கும்போது 'இலனென்றும் எவ்வம் உரையாது' ஈயும் பண்பினர் இம் மண்டலத்தே வாழ்ந்த வேளாளர். இரவலர் விரும்பிக் கேட்பதற்கு மேலும் அதிகம் தந்து இரவலர் உள்ளத்தில் நிறைவு ஏற்படச் செய்வது இம் மண்டலத்தே வாழ்ந்த வேளாளர் உயர் பண்பு என்று கூறுகின்ருர் ஆசிரியர். இதற்குச் சான்ருக, கூற்றூர்ப் புலவனெருவன் ஆற்றூர்க் கிழான் என்னும் வேளாளரிடம் தம் குறை தீர்க்க உதவியாக ஒரு குதிரை தருமாறு கேட்க வள்ளல் அவருக்கு ஆயிரம் குதிரைகளைக் கொடையளித்தார் என்ற வரலாற்றையும் சான்று காட்டித் தொண்டைமண்டல வேளாளரின் கொடைத் திறத்தைப் போற்றுகின்ருர்.

தொண்டைமண்டல வேளாளரின் கொடைத் திறத்தை மேலும் விளக்குகின்ருர் ஆசிரியர். இரவலர்களுக்கு வேண்டியன ஈந்த பின்னும் அவர் தம் வெட்கத்தால் மேலும் தமக்கு

வேண்டியவற்றைக் கேளாதிருப்பாரோ என்ற ஐயத்துடன் அவர்களிடம்தான் ஒன்றைத் தந்து விரும்புவதை எழுதுமாறு கேட்டு அதன்படி கொடையளிப்பர் என்றும் ஆசிரியர் தொண்டைமண்டல வேளாளர் பெருமையைக் கூறுகின்றார்.

இதனை,

'உணலைப் பசும்பொன் முதலா னவற்றை யுதவிப் பின்னும்
குணல ச்சை யுள்ளவர் கேட்கவுங் கூசுவர்கொல் லெனவே
எணலைக் கருதி யெழுதிவைப் பீரென வின் மறைந்து
மணலைப் பரப்பிய முன்றிலுளான் றொண்டை மண்டலமே'

என வரும் பாடலில் நாம் காணலாம்.

இந்நூல் தொண்டைமண்டலத்தே வாழ்ந்த பல்வேறு புலவர்கள், வள்ளல்கள் ஆகியோரது வரலாற்றை விரித் துரைப்பதுடன் மட்டுமின்றி அம் மண்டலத்தே வாழ்ந்த வேளாளப் பெருமக்களின் வள்ளன்மைக் குணத்தை வாயாரப் போற்றுகின்றார்.

கார்மண்டல சதகத்தை அடியொற்றி எழுந்த இந்நூல் போலவே வேறு பல சதக நூல்களும் எழுந்தன. இங்ஙனம் மண்டல வரலாற்றை விரித்துரைப்பனவாக எழுந்துள்ள சதகங்கள் அனைத்திலும் அந்தந்த மண்டலத்தில் வாழ்ந்த வேளாளர் பெருமையும் கொடைச் சிறப்பும் போற்றப்படு வது காணத்தக்கது.

சொல் வளமும் பொருள் நலமும் கனியப் பெற்ற இந்நூல் தொண்டைமண்டலத்தின் வரலாற்று நூலாக இலங்குகின்றது. இந்நூலைக் கற்றுணர்ந்து அதில் காணப் படும் வரலாற்று நிகழ்ச்சிகளை உய்த்தறிந்து இன்புறுதல் வேண்டும்.

7. செயங்கொண்டார் சதகம்

பெயர்க் காரணம்

இந்நூல் நேம நகரத்தில் எழுந்தருளியுள்ள செயங் கொண்ட சோழீசர் மீது நூறு பாடல்களால் பாடப்பட்ட தொரு நூல். இவ்வூர் மதுரை மாவட்டத்திலுள்ளது. இந் நூல் தண்டலையார் சதகம், கோவிந்த சதகம் போன்று ஒவ்வொரு செய்யுளின் இறுதிதோறும் ஒவ்வொரு பழமொழி யைப் பெற்று விளங்குகின்றது. அத்துடன் செய்யுள்தோறும் மூன்ருமடியில் 'செயங்கொண்டாரே' என்ற ஒரு சொல்லையும் பெற்று விளங்குகின்றது.

நூலாசிரியர் வரலாறு

இந்நூலை இயற்றிய ஆசிரியர் முத்தப்பச் செட்டியார் என்னும் வித்தகராவார். இவர் செட்டிநாட்டில் கீழைச்சிவப் பட்டியில் 1760-ல் அழகப்பச் செட்டியார் இலக்குமி ஆச்சி இவர்கட்கு மகவாய்த் தோன்றியவர்.

இவரது வரலாற்றில் சுவையான கதை யொன்று கூறுவர். இவர் ஒரு முறை வீதியில் சென்று கொண்டிருந்தபோது செல்வமுற்ற விலைமகள் ஒருத்தி இவரை ஏளனம் செய்ய எண்ணி, 'வாருங்கள் சட்டியாரே' என்று அழைத்தாளாம். தன்னை ஏளனம் செய்வதை யுணர்ந்த கவிஞர், 'என் குலப் பெயரில் உள்ள ஒற்றைக் கொம்பைக் கவர்ந்த உனக்கு உன் குலப் பெயர் முன்னர் இரட்டைக் கொம்பு பெறுக' என்று கூறிவிட்டுத் தன் வழியில் சென்ருர். தாசி என்ற அவள் குலப் பெயருடன் இரட்டைக் கொம்பு சேர்ந்தால் 'தோசி' என்ருகும். தோசி என்ருல் ஏழை என்று பொருள் அல்லவா? தாசி இவர் கூற்றை அலட்சியம் செய்து வாளாவிருந்து விட்டாள். சிறிது காலத்திற்குள் தாசியின் செல்வ வளம் குறைந்து ஏழையானுள். புலவர் வாக்குப்படியே இது நேர்ந்தது என்றுணர்ந்த தாசி கவிஞரிடம் சென்று தன் செய்

கைக்கு வருந்தி மன்னிக்குமாறு வேண்ட, கவிஞரும் மன மிரங்கி மன்னித்தார்.

புலவர் இந்நூலை யாத்து அரங்கேற்றம் செய்துகொண் டிருந்த பொழுது ஊனையூர்ப் பாரதியார் என்னும் குறும்பர் ஒருவர் கவிஞரை நோக்கி,

'ஓங்குபத்மா சூரனைக் கண்டோடியொளித் தார்விசயன்
வாங்குதனு வாற்பூசை வாங்கினர்—ஈங்கிருக்கும்
நன்னேமச் சோழீச னார் செயங்கொண் டாரென்றால்
என்னசெயங் கொண்டா ரிவர்'

என்று வினவினர். கவிஞர் அவரது குறும்பை யுணர்ந்து கொண்டார். அவருக்குத் தக்க முறையிலே பதிலிறுக்க வேண்டும் என்ற எண்ணியவராய்,

'என்னசெயங் கொண்டார் இவரென்றீர் முப்புரத்தைச்
சொன்மய மாய்ச்சமைத்த சோழீசர்—பின்னும்
சிரித்துச் செயங்கொண்டார் சித்தசனைக் கண்ணால்
எரித்துச் செயங்கொண் டாரே!'

என்று பாட்டினாலேயே பதிலுமிறுத்தார். இதைக் கேட்ட ஊனையூர்ப் பாரதியின் குறும்பு ஓடி ஒளித்துக்கொண்டது.

இவர் திருமுக விலாசம், செட்டிமார் வரலாறு, செயங் கொண்ட சோழீசர் பிள்ளைத் தமிழ், பதிற்றுப் பத்தந்தாதி, கலித்துறையந்தாதி, நேமக் கலம்பகம், செயங்கொண்ட சோழீசர் ஊசற்றிருநாமம் என்ற வேறு பல நூல்களும் எழுதியுள்ளார்.

இந்நூலுக்குப் பாயிரம் ஒன்றும் உளது. சுந்தரமூர்த்தி முதலியார் என்னும் நல்லார் அதனைச் செய்துள்ளார்.

'திருமதுரைச் சீர்ப்பட் டினையாற்றங் குடிச்செட்டி
சீமா னென்னு
முருமதன னழகப்ப னுதவியமுத் தையனெனு மொப்பில்
சிங்க

மருமறை சாத் திரங்களோ டாகமங்கள் புராணங்கள
ளனைத்துந் தேர்ந்து
பெருகுபழ மொழிநூறுங் கதைநூறுஞ் சதகமெனப்
பேசிற்ருமால்'

என்பது இந்நூல் பாயிரம்.

இந்நூலாசிரியர் பதினெட்டாம் நூற்ருண்டின் பிற் பகுதியில் வாழ்ந்தவர்.

நூலாராய்ச்சி

பிற சதக இலக்கியங்களின் அமைப்பினின்று இச் சதக நூல் மாறுபட்டு ஒரு புதுவகையில் அமைந்துள்ளது. தண்டலையார் சதகம்போன்று செய்யுள்தோறும் பழமொழிகளையுடையதாகவும், பிற சதகங்களைப்போல ஈற்றடியில் மகுடம்பெருது மூன்ருமடியிறுதியில் ஒரு சொல் பயின்றுவருவதாகவும் அவற்றிற்கு மேலும் ஒரு புதுமையும் பெற்று விளங்குகின்றது. தண்டலையார் சதகத்தில் காணப்படுவதுபோன்று பழமொழிகளுக்கேற்ற நீதிகளை நேரே உரைக்காமல் பழமொழிகளுக்கேற்ற நீதிக்கதைகளை யுரைக்கின்றது. இக்கதைகள் பெரும்பாலானவை புராணக் கதைகளாகவும் சிறுபான்மை வரலாறுகளாகவும் உள்ளன.

இராமாயணக் கதையை சில பாடல்களிலேயே இவர் விளக்கி அவற்றுக்குப் பொருத்தமான பழமொழிகளையும் கூறுகின்ருர். இராமனுக்குத் திருமுடி சூட்டமுற்பட்டபொழுது கூனியினுல் அது தடைப்பட்ட நிகழ்ச்சியை இவர் கூறி நீரில் யானைதன் நிழலைப் பார்க்கும்பொழுது தவளை அந்நீரைக் கலக்கியது போன்றது என்ற பழமொழியையும் கூறி விளக்குகின்ருர்.

இராமனைத் தன்னுடன் வேள்வியைப் பாதுகாக்க அனுப்புமாறு விசுவாமித்திரன் தசரதனை வேண்டி இராமனை அழைத்துச் சென்ருன். இதனுல் இராமனது வீரம் சிறப்படைந்த நிகழ்ச்சிகளையும் அவனது அரியகுணங்களை நாம் அறியவும்

முடிகின்றது. இவற்றிற்கும் மேலாக இராமன் சனகன் திருமகள் சீதையை அடைந்தான்; பரசுராமனிடம் வில்வலி காட்டிப் புகழடைந்தான். எனவே பெரியாரைத் துணையாகக் கொண்டவர்கள் பேறுகள் பல எய்துவர் என்ற உண்மையை நாம் அறிகின்றோம். 'பெரியோரைத் துணைகொள்' என்று ஒளவைப்பிராட்டியும் கூறினர். இக்கதையை இந்நூலாசிரியர் கூறி, பெரியோரைச் சார்ந்தவர் பெரும்பேறெய்துவார் என்றும் விளக்குகின்றார்.

உடன்பிறந்தோர்களாகிய வாலிக்கும் சுக்ரீவனுக்கும் பகை ஏற்பட்டது. இவர்களிடையே வந்த இராமன் வாலியைக் கொன்று சுக்ரீவனுக்கு முடிசூட்டுகின்றான். இக்கதையை நினைவுறுத்தி ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண் டாட்டம் என்ற பழமொழியையும் விளக்குகின்றார் ஆசிரியர்.

சிறையிருந்த செல்வியாம் சீதையின் கற்பு நலத்தைப் பாராட்டிய ஆசிரியர் அவள் கற்புநெறி பிறழாது காமுகனான இராவணன் நகரிலே இருந்ததை நினைவூட்டி 'பதிவிரதை யானாற் றேவடியாள் வீட்டினித்தந் தரிக்கலாமே' என்று கூறுகிறார்.

இராமாயணக் கதை நிகழ்ச்சிகளை விளக்கியதுபோலவே வேறுசில பழமொழிகளை விளக்குதற்குப் பாரதக்கதை நிகழ்ச்சி களையும் உதாரணம் காட்டி விளக்குகின்றார் ஆசிரியர்.

துரியோதனர் செய்த கொடுமையால் காடாண்டு பின்னர் திரும்பிவந்து உலகையாண்டனர் பாண்டவர்கள். தருமத்தைத் துணையாக்கொண்ட பாண்டவர்கள் முதலில் இன்னல் அடைந்தபோதும் இறுதியில் நன்மையே பெற்றனர். எனவே தருமம் தலைகாக்கும் என்னும் மொழியுண்மை விளங்கு கிறதன்றோ!

கண்ணன் தன்னைச் சார்ந்த பாண்டவரைக் காத்ததையும் தன் அண்ணன் பலராமனைச் சார்ந்தொழுகிய துரியோதனன் முதலிய நூற்றுவரை அழித்ததையும் எடுத்துக்காட்டி 'மூத்தது

மோழை இளையது காளை' என்னும் பழமொழியை விளக்கு கின்றார் இந்நூலாசிரியர்.

இங்ஙனமே பாரதத்தில் வரும் வேறுபல கதை நிகழ்ச்சி களையும் கருத்துக்களையும் தாம் எடுத்து விளக்குகின்ற பழமொழிகளுக்கேற்ப விரித்துரைத்துள்ளார்.

நாயன்மார்கள் சிலருடைய கதைகளையும் இந்நூலில் காண்கின்றோம். இளையான்குடி மாற நாயனார் வேளாளர் குலத்தில் பிறந்தவர். அவர் சைவ அடியார்களைப் போற்றும் பண்பினர். தாம் நலிவுற்ற காலத்திலும் தம்மை நாடிவந்த சிவனடியார் வேடம்கொண்ட இறைவனுக்கு நிலத்தில் விதைத்த நெல் முளைகளை வாரி வந்து அமுதாக்கிப் படைத்துப் பெருமையுற்றார். எனவே தொழுவாரெல்லாம் உழுவார் தலைக்கடையில் என்ற மூதுரைக்கு இளையான்குடி மாற நாயனாரின் கதையை எடுத்துக்காட்டி விளக்கியுள்ளார் ஆசிரியர்.

நாளும் இன்னிசையால் நற்றமிழ் வளர்த்த ஞான சம்பந்தன் பாண்டியரின் தீராத நோயைத் திருநீற்றால் தீர்த்துப் பெருமையுற்றார். இவ் வரலாற்றை இந்நூலில் விளக்கி 'வெண்ணீறே வினையகற்றும்; தரிப்பவர்க்குச் சிவ கதியும் மேவும்' என்ற உண்மையை உணர்த்துகின்றார்.

ஆசிரியர் தாம் விளக்கக் கருதுகின்ற கருத்துக்களுக்கு ஆதரவாகப் புராணக் கதைகளையும் எடுத்து விளக்கத் தவறவில்லை.

மார்க்கண்டர் சிவலிங்கத்தைத் தழுவி உய்ந்ததை, 'பெரு மரத்தைச் சுற்றி நின்ற வல்லியுஞ் சாகாது' என்ற கருத்திற்கு விளக்கமாகவும் 'வல்லவர்க்குப் புல்லும் ஆயுதமாகும்' என்ற உண்மையை விளக்கக் கண்ணன் பெருமழையினின்று உயிர் களைக் காக்க, கோவர்த்தன மலையைக் குடையாக எடுத்த தையும் காட்டுகின்றார். தன்னுயிர்ச் செல்வன் தேர்க்காலிலே கன்று மாள அது கண்டு பொருது நின்றழும் பசுவின் கண்ணீர்

துடைக்க இன்னுயிர்ச் செல்வனையே தேர்க் காலிலிட்டு நீதி காத்த மனுநீதிச் சோழன் கதையை 'தன்னுயிர்போல் மன்னுயிரையும் எண்ணும் பண்பிற்குக் காட்டாக விளக்கு கின்றார். கபில முனிவரிடத்தில் வேள்விக் குதிரை யிருக்கக் கண்டு வெகுண்டெழுந்த சகரர்கள் முனிவர்க்குத் துன்பம் விளைக்க அவர் சினத்தால் அவர்கள் சாம்பரான கதையைக் காட்டி 'கோபமே பெரும் பாவம்' எனக் கூறுகின்றார்.

இறைவனைப் போல வேறொரு சிவனை உண்டுபண்ணக் கருதித் தக்கன் வேள்வி செய முயன்று அல்லற்பட்டதை 'உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது' என்ற உண்மையை விளக்கக் கூறுகின்றார்.

இங்ஙனமே காளிதாசன், வான்மீகர், கம்பர், அம்பிகாபதி, நக்கீரன், அகலிகை, தாரை, அருந்ததி, நளன், அச்சுதவாணன், அரிச்சந்திரன், உருக்குமாங்கதன், சீவகன், குமணன், திரிசங்கு, விக்கிரமாதித்தன் முதலியோருடைய கதை நிகழ்ச்சிகளையும் கூறி, அவற்றிற்கேற்ற பழமொழிகளையும் கூறி உலகினர்க்கு நீதியுரைக்கின்றார் இந்நூலாசிரியர்.

நெல்லுடன் பதரும் கலந்திருக்கும் என்ற உண்மையை விளக்கக் கருதுகின்றார் ஆசிரியர். தெளிந்த நீரோடையில் பாசி படர்ந்திருப்பதை உவமை காட்டியும் மனம் அமைவுறாது திருமகளுடன் அவளது தவ்வையாய் மூதேவியும் பிறந்திருத் தலைச் சுட்டிக்காட்டி விளக்குகின்றார்.

இந்நூலுள் பிற சதகங்களைப் போலவே வடமொழி யாட்சி மிகுதியாகக் காணப்படுகின்றது. சப்தரிஷி, மந்த்ரம், தருமம், அதர்மம், சௌந்தரியன், பிரியம் என்பன போன்ற சொற்களை இதற்குச் சான்று காட்டலாம்.

வேண்டுமென்று என்பது 'வேணுமென்று' என்றும், வரு கிற விதி என்பது 'வாற விதி' என்றும், தெவிட்டாத என்பது 'தெகிட்டா' என்றும் இங்ஙனம் பல சிதைவுச் சொற்களும் இந்நூலுள் காணப்படுகின்றன.

சதக இலக்கியங்களில் புது வகை அமைப்புப் பெற்ற தனி நூலாக விளங்குகின்றது இந்நூல். பழமொழிகளையும் பல் வேறு புராண வரலாறுகளையும் இந்நூலினின்று நாம் அறிகின் றோம். சொற் சுவையும் பொருட் சுவையும் மலியப் பெற்ற இந்நூல் தமிழ்ச் சுவை காண விரும்புவார்க்கு ஓர் அரிய விருந் தாக அமைந்துள்ளது.

8. கொங்குமண்டல சதகம்

இந்நூல் கொங்குமண்டலத்தின் வரலாற்றுச் சுருக்கமாக அமைந்துள்ள நூலாகும். கொங்குமண்டலத்தே வாழ்ந்த சித்தர்கள், சமயாசாரியர்கள், முடியுடை வேந்தர்கள், குறுநில மன்னர்கள், வள்ளல்கள், புலவர்கள் ஆகியோர் பற்றிய வரலாறும் கொங்குமண்டலத்தே வாழ்ந்த மக்களின் அறம், மறம், கொடை ஆகிய பண்புகளையும் இந்நூல் விரித்துரைக் கின்றது.

கொங்குமண்டலம்

கொங்குமண்டலத்தின் எல்லைகள் என்ன என்பதை விளக்க,

‘வடக்குப் பெரும்பாலை வைகாவூர் தெற்குக்
குடக்குப் பொருப்பு வெள்ளிக் குன்று—கிடக்கும்
களித்தண் டலைமேவு காவிரிசூழ் நாட்டுக்
குளிர்த்தண் டலையளவு கொங்கு’

என வரும் பழம் பாடலொன்று நமக்குத் துணை செய்கின்றது. மேலும்,

‘மதிற்கரை கீட்டிசை தெற்குப் பழநி மதிகுடக்குக்
கதித்துள வெள்ளி மலைபெரும் பாலை கவின்வடக்கு
விதித்துள நான்கெல்லை சூழ வளமுற்று மேவிவிண்ணோர்
மதித்திட வாழ்வு தழைத்திடு நீள்கொங்கு மண்டலமே’

என வரும் இந்நூற் செய்யுளும் நமக்குத் துணை புரிகின்றது. இப் பாடல்களின் துணைகொண்டு பார்க்கும்போது கொங்கு

நாட்டின் எல்லைகள் நமக்குத் தெள்ளென விளங்குகின்றன. தெற்குத் திசையில் பழநியும் மேற்குத் திசையில் வெள்ளியங் கிரியும் வடக்குத் திசையில் பெரும் பாலையும் கிழக்கில் மதிற் கரையும் இக் கொங்குமண்டலத்தில் எல்லைகளாக இருந்தன என்பது போதரும்.

இம் மண்டலத்தோடு இணைந்த நாடுகளில் எல்லாம் முருகவேள், திருமால், சிவன் முதலிய தெய்வங்களுக்குக் கோவில்கள் இருந்தன. அங்கே பக்தி மணம் எப்பொழுதும் கமழ்ந்துகொண்டே இருந்தது. இதனை 'குஞ்சரி நாதனுடன் மால் ஆலகண்ட அமர்பதிசேர் கொங்குமண்டலமே' என வரும் இந்நூற் செய்யுளால் அறிகின்றோம்.

இம் மண்டலத்தின் கண்ணே திருப்பாண்டிக் கொடுமுடி, பவானி, திருமுருகன் பூண்டி, அவிநாசி, பேரூர், குரக்குத் தளி, வெஞ்சமாக் கூடல், திருச்செங்கோடு, அறப்பள்ளி, வெண்ணெய் மலை, கரூர் முதலிய திருப்பதிகள் நிறைந்து சைவத்தையும் வைணவத்தையும் வளர்த்துப் புகழ் பெற் றிருந்தன.

இக் கொங்குமண்டலம் இயற்கை வளம் பலவும் மலியப் பெற்றது. நாடெங்கும் விண்ணையிடிக்கும் மலை பல சூழ்ந்து எழில் நிறைந்த காட்சி தந்தது. கொல்லிமலை, வைகைப் பொன்மலை, அலைவாய் மலை, பழநிமலை, பொன்னூதி மலை, கொங்கணவர் மலை, சேர்வராயன் மலை, ஓதியூர் மலை, வராக மலை, தலைமலை, வெண்ணெய் மலை, சென்னிமலை, கஞ்சமலை, வெள்ளி மலை, நாகமலை, ஆனைமலை ஆகிய பல மலைகள் இந் நாடெங்கும் நிறைந்து விளங்கின. அங்ஙனமே திருமணி முத்தாறு, தொப்பையாறு, பவானியாறு, செய்யாறு, நொய்ய லாறு, ஆம்பிராவதி, நள்ளாறு, சண்முக நதி, பாலையாறு, வாழையாறு முதலிய ஆறுகள் பாய்ந்து கொங்குமண்டலத்தை வளம் பெற்ற நாடாக வாழ வைத்தன.

நூலாசிரியர் வரலாறு

இந்நூலை இயற்றிய ஆசிரியர் கொங்குமண்டலத்திலே குறுப்பு நாட்டில் விசயமங்கலம் என்னும் ஊரிலே பிறந்த

கார்மேகக் கவிஞர் என்பவர். இவரது பிள்ளைப் பருவப் பெயர் சினேந்திரன் என்பதாகும். இவரது தந்தையார் பெயர் பதுமநாபர் என்பது. தந்தையாரிடத்திலேயே வட மொழியும் தென் மொழியும் பயின்ருர் கார்மேகக் கவிஞர். இளமையிலேயே இவரிடம் கவி பாடும் ஆற்றல் மிக்கு இருந்தது. இவர் இளமையில் ஒரு முறை பூந்துறை வந்திருந் தார். அப்பொழுது அவ்வூரில் எழுந்தருளியுள்ள சைன சமயக் கடவுளான நீபாரிச தீர்த்தங்கரர் மீது ஒரு பாடல் பாடுமாறு அங்குள்ளோர் இவரை வேண்டவே கவிஞரும்,

'பச்சை மணிவடிவாய்ப் பாரில் விசுவ சேனனக
மெச்சு மகவாய் வெளிவந்த—உச்சிதனும்
பாரிச நாதன் பதநினைந்தோர் வாழ்வரே
சீரிசைநூ லின்பஞ் சிறந்து'

என்னும் பாடலைப் பாடினர். சமயக் கருத்துக்கள் மலியப் பெற்ற இப் பாடலின் பொருள் சுவையை அறிந்து பிற சமயங் களில் இவருக்கு இருக்கும் ஆராய்ச்சி அறிவை உணர வேண்டி முருகர்மீது ஒரு செய்யுள் கூறுமாறு அவர்கள் வேண்டினர். கவிஞரும் சிறிதும் தாமதமின்றி,

'ஆறு விழியிலுறு மாறுபொறி நீர்க்கரையில்
ஆறுமுக வாயொன்ரு யன்னைசத்தி—வீறுகொடு
ஆறுபடை வீடுற் றசுராறத் தேவர்தொழும்
ஆறுமுக னம்மையளிப் பான்'

என்ற பாடலைக் கூறினர். அங்குள்ளோர் யாவரும் இவரது கவி பாடும் ஆற்றல் கண்டு பேருவகை எய்தினர்.

இடைவிடாது பெரு முழக்காகச் சொரியும் இவரது சொல் வன்மையையும் கவி வன்மையையும் நோக்கிய பலரும் இவரைக் கார்மேகக் கவிஞர் என்று அழைக்கலாயினர். நாளடைவில் இவரது இயற் பெயரான சினேந்திரன் என்பது மறைந்தொழிந்து கார்மேகக் கவிஞர் என்னும் பெயரே நிலை பெறுவதாயிற்று.

தம்மை ஈன்றெடுத்த கொங்குமண்டலத்தின் ஏற்றங்கள் தேற்ற மிகத் தோற்ற சிறு நூல் ஒன்று சாற்ற வேண்டும் என்னும் உளத்தினராய் இந் நூலினை இயற்றினர்.

இவரது பெருமைகளையறிந்து திருச்செங்கோட்டில் வாழ்ந்த வீமணக் கவிராயர் என்பார்,

'தலையவிடா மரை யொளித்த
பேட்டடியிற் சூட்டனந்தன் றலைகீழாக
வளையவணங் கப்புலவி நீங்குவன
வயல்விசய மங்கை யோங்கு
இளையசந் திரப்பிரப நாயகரை
யேத்திமனத் திடரை யெல்லாம்
களையவரு கார்மேகக் கவியரசே
வந்தனனிற் காண வென்றே'

என்று பாடி இக் கவிஞரின் பெருமையை விரித்துரைத்தார்.

இந்நூலாசிரியர் சமண மதத்தைச் சார்ந்தவர் என்றும் கி. பி பதினெட்டாம் நூற்றுண்டின் முற் பகுதியில் வாழ்ந் தவர் என்றும் கருதப்படுகின்றது.

நூலாராய்ச்சி

இந்நூலில் கொங்குமண்டலத்தே வாழ்ந்த பல்வேறு அடியார்களின் வரலாறுகள் விரித்துக் கூறப்பட்டுள்ளன.

கரூரில் உள்ள பசுபதி ஈசுவரருக்காக மாலை கட்டி எடுத்துச் சென்ற சிவகாமியம்மை என்னும் சிவனிடத்தில் பக்திகொண்ட மாதொருத்தியின் கையிலிருந்த பூக் கூடையை மன்னனது யானை தன் மதத்தினுல் பற்றிச் சிதைத்து விடவே இதனைக் கண்ட எறிபத்தர் யானையையும் பாகரையும் கொன்றுர். செய்தியறிந்த மன்னன் சிவனடியாருக்குத் தீங்கு செய்த யானையை வளர்த்த தன்னைக் கொல்லுமாறு வேண்டி வாளை எறிபத்தர் கையில் தர, இத்தகைய அன்புள்ளங்கொண்டாருக்குத் தீங்கு செய்த தம்மையே

துணித்துக்கொள்ள எறிபத்தர் வாளை ஓங்கவே இறைவன் தோன்றி யானை முதல் அனைவரையும் உயிர் பெறச் செய்து இருவருக்கும் அருள் புரிந்தார் என்பது எறிபத்த நாயனாரது வரலாறு. இந்நிகழ்ச்சியை,

'மிதமீறி பூவினைச் சிந்துகை யான்விறன் மீறவெட்டி
மதயானை யைக்கொன் றெழுப்பிய துங்கொங்கு
மண்டலமே'

என்று கவிஞர் கூறுகின்றார்.

இங்ஙனமே புலமையால் வளம் பெற்று நலம் பெற்ற கவிஞர் பலரையும் இந்நூலில் ஆசிரியர் காட்டுகின்றார்.

பவணந்தி முனிவர் சன்மதி முனிவரிடம் உபதேசம் பெற்றுத் துறவு பூண்டது தொண்டை மண்டலமாயினும் பிறந்து வளர்ந்தது கொங்கு மண்டலத்தில் குறுப்பி நாட்டில் உள்ள சனகாபுரம் என்னும் ஊரிலேயாம். எனவே,

'துங்கப் புலமைப் பவணந்தி மாமுனி தோன்றிவளர்...
மங்குற பொழில் சன காபுர முங்கொங்கு மண்டலமே'

என்று இந்நூலாசிரியர் போற்றுகின்றார்.

சிவனை முழுமுதற் கடவுளாக ஒத்துக்கொள்ள வேண்டும் என்பதற்குப் பயந்து சோழ நாட்டை விட்டு வெளியேறிய இராமானுசரை, கொங்குமண்டலத்தே வாழ்ந்த பிராட்டியார் என்பார் கண்டு உபசரித்து அனுப்பினள் என்றொரு வரலாறும் இந்நூலில் காணக் கிடக்கின்றது.

'ராமானுஜன் றனைத் தேற்றியுங் காத்தளித்த கொங்குப் பிராட்டியாரும் கொங்கு மண்டலமே' என்று இந் நூலாசிரியர் பாடுகின்றார்.

தொண்டைமண்டலத்துக் காஞ்சி நகரில் பிறந்து மன வருத்தத்தோடு கொங்குமண்டலத்து பவானி நதி தீரத்துக்கு வந்து 'பரமத பங்கம்' என்னும் நூல் இயற்றினர் வேதாந்த

தேசிகர் என்னும் வித்தகர். அந்நூல் ஐம்பத்துநான்கு பாசுரங்களை உடையது என்றும் தெரிகிறது. இதனை,

'படிபுகழ் தேசிகர் கச்சியி னுைந்து பகரவொண்ணு
வடகொங்கு வானி நதிதீரச் சத்தியமங்கலத்திற்
குடிபுகுந் தாய்ந்து பரமபத பங்கங் குலவுவொண்ணூல்
வடிதமி ழாற்சொலத் தேறிய துங்கொங்கு மண்டலமே'

என்று இதனை இந்நூலாசிரியர் கூறுகின்றார்.

'தமிழ் வளர்த்த குறுமுனி' என்று கூறப்படும் அகத்தியர் தென் திசை நோக்கி வருங்காலை வாதாபி, வில்வலன் என்னும் இரு அசுரர்கள் அவரைக் கொல்லும் பொருட்டு அகத்தியரை வரவேற்று உணவுண்ண அழைத்தனர். வாதாபி ஒரு செம்மறிக் கடாவாக மாறினான். வில்வலன் அதனைப் பக்குவம் செய்து படைத்தான். முனிவர் உண்டதும் வில்வலன் வாதாபியை அழைக்கவே வாதாபி முனிவரது வயிற்றில் எழுந்து அவருக்குத் துன்பம் விளைத்தான். முனிவர் அசுரர் களின் மாயத்தை அறிந்து மந்திரஞ் சபித்து இருவரையும் கொன்றார். அப்பாவத்தை நீக்க, கொங்குமண்டலம் வந்து தவம் புரிந்தார். இவ் வரலாற்றை எண்ணி அகத்திய முனிவன் தவஞ் செய்யும் பெருமை பெற்றது கொங்கு மண்டலம் என்று பாடுகின்றார். அகத்தியர் தவஞ் செய்தது கொங்கு மண்டலத்தில் உள்ள துடியலூரில் என்ற செய்தியை,

'தவநெறி யிடைவிடாச் சரத மாமுனி
பவமறு துடிசையம் பதிபுக் காங்கமர்
சிவபெரு மானையுந் தேவி தன்னையும்
உவகையி னுெடுதொழு தொருங் குற்றனரோ'

என வரும் துடிசைப் புராணச் செய்யுளால் அறிகின்றோம்.

கொங்குமண்டலத்தில் நிரம்பையென்னும் ஊரில் உதித்தவர் சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்குநல்லார். சிலப்பதிகாரத்துக்கு உரை எழுதுங்கால் இயல் இசை நாடகம் என்ற முத்துறையையும் ஐயந்திரிபற ஆராய்ச்சி செய்து இவர்

விரித்துரைத்துள்ளார். எனவே 'அடியார்க்கு நல்லார் அவதரித்து அருமைப் பொழில் நிரம்பைப் பதியுங் கொங்கு மண்டலமே' என்று இந்நூலாசிரியர் கூறிப் பெருமை கொள்கிறார்.

மேலும் கொங்குமண்டலத்தோடு தொடர்புடைய சிவப் பிரகாசர், கபிலதேவர் ஆகிய புலவர்களையும் இந்நூலாசிரியர் தமது நூலில் போற்றுகின்றார்.

கொங்குமண்டலத்தே வாழ்ந்த வள்ளல்கள் வீரர்கள் பலரது வரலாறும் இந்நூலில் விரித்துரைக்கப்படுகின்றன.

குன்றத்தூரில் சங்ககிரி துர்க்கத்தில் இடையர் குலத்தில் உதித்துச் செந்தமிழ்ப் புலமை வாய்ந்த எம்பெருமான் என்னும் கவிஞரைக் கொண்டு கீழ்க்கரை பூந்துறை நாட்டு அதிபனாகவும், சிறந்த வள்ளலாகவும் வாழ்ந்த நல்லதம்பிக் காங்கேயன் என்னும் வள்ளல் பெருந்தகை இசைத் தமிழில் இராம கதையை இயற்றுவித்தான் என்ற வரலாற்றுக் குறிப்பு இந் நூலில் காணக் கிடக்கின்றது.

மோரூரில் வாழ்ந்த காங்கேயன் என்னும் பிறிதொரு புலவர் உரிச்சொல் நிகண்டு எழுதியவர். இதனை,

'இலகு முரிச்சொல் நிகண்டுவெண் பாவி னிசைத்த கலை
வலவெழிற் காங்கேயன் வாழுமோ ரூர்கொங்கு
மண்டலமே'

என வரும் இச் சதகச் செய்யுளாலும்,

'பெருத்த நூல்பலவுஞ் சுருக்கித் தமிழில்
உரிச்சொல் நிகண்டென உரைத்த காங்கேயன்'

என வரும் பாம்பண கவுண்டன் குறவஞ்சிச் செய்யுளாலும் உணரலாம்.

சூரிய காங்கேயன் என்னும் பிறிதொரு கொங்குமண்டல வீரன் ஆறகழூர் வாணனது கோட்டத்தை யடக்கிப் பாண்டி யன் முன்னே நிறுத்தினான் என்றும் அவனது வலிமை கண்ட

பாண்டியன் மகிழ்ந்து 'ஆகவராம பாண்டியன்' என்னும் விருதுப் பெயர் அளித்தான் என்றும் ஒரு வரலாறு இந்நூலில் காணப்படுகிறது.

கொங்குமண்டலத்தில் இராசிபுரத்தில் தித்தன் என்னும் வாலிபன் சோழனுக்கு அடங்காது இருந்த கம்பணன் என்னும் குறுநில மன்னனை வென்று சோழனுக்கு உதவியதால் சோழன் மகிழ்ந்து 'அகளங்கச் சோழன்' என்னும் பட்டப் பெயரை அவனுக்களித்தான் என்ற செய்தியை இந்நூலால் நாம் அறிகின்றோம். இது பற்றிய வரலாறு இராசிபுரக் குறவஞ்சி யில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

பாரியூரில் வாழ்ந்த செட்டி பிள்ளையப்பன் என்னும் வள்ளல் தம்மைப் பாடி வந்த கவிஞனுக்குப் பொருள் கொடுக்க இயலாது புலிவாழிடம் சென்று உயிர் துறக்க முற் பட்டபோது அங்குத் திருடர்கள் பங்கிட்டுக் கொண்டிருந்த பெரும் பொற்குவியல் அவருக்குக் கிடைத்தது என்றும் அதைக் கொண்டு வந்து கவிஞருக்கு அளித்தார் என்றும் இந் நூலில் வேளாளரின் கொடைப் பெருமைக்குச் சான்றாக இவ் வரலாறு கூறப்பட்டுள்ளது. இதனை,

'இட்டமான கவிசொல்லும் பாவலர்க்கு
இல்லையென்று சொலற்கஞ்சிக் காட்டில்வாழ்
துட்டவன் புலித்தூறிற் புகுந்தநற்
றூயவன் கனவாள குலத்தினன்
செட்டி பிள்ளையப் பன்றினந் தொண்டுசெய்
தேவி மாமலை மாதொரு பங்குள
கட்டு செஞ்சடையமர விடங்கனுர்
கதித்து வாழ் பாரிரு ரெங்களூரே'

என வரும் அமரவிடங்கர் குறவஞ்சிச் செய்யுளாலும் உணரலாம்.

சங்ககிரி துருக்கம் என்னும் இடத்தில் வரி கொடுக்காமை யால் அரசாங்கச் சிறையில் வைக்கப்பட்டிருந்த சர்க்கரை

மன்ருடியார் என்னும் பாளேயக்காரரைத் தன் வறுமை தீர்க்கு மாறு சிறைச்சாலேயில் ஒரு புலவர் வேண்டவே மன்ருடியார் தமது மனேவியாரிடம் ஏவலரை அனுப்பி அவள் மங்கல நாணே வாங்கி வரச் செய்து புலவருக்குப் பரிசளித்தார் என்ற சிறப்பு மிக்க வரலாருென்றும் இந்நூலில் காணக் கிடக் கின்றது.

மேலும் பல வள்ளல்களது வரலாறுகளும் சுவைபட இந் நூலில் விளக்கிக் கூறப்பட்டுள்ளன.

கொங்குமண்டலத்தே உள்ள திருப்பதிகள் ஒவ்வொன்றை யும் கூறி அந்தந்த ஊருடன் தொடர்பு பெற்ற புராண வரலாறுகளேயும் கூறி அப்பதிகளின் பெருமை விரித்துக் கூறப் படுகின்றது.

கொங்குமண்டலத்தில் உள்ள கொல்லிமலேயில் கொல் லிப் பாவை உள்ளது என்ற வரலாறு பண்டு தொட்டுக் கூறப் படுகின்றது. இக் கொல்லிப் பாவையை அங்கு வைத்துள்ள மைக்கு ஒரு வரலாறும் கூறுவர். வளம் கொழிக்கும் கொல்லி மலேயில் தவத்தின் பொருட்டுத் தனிமை விரும்பிய முனிவர் களும் தேவர்களும் வசித்தனர். அசுரர்களின் இடையூற்றைப் போக்கக் கருதிய அவர்கள் கூடி விசுவகன்மாவிடம் கூறி ஒரு பாவை செய்து தரச் சொன்னுர்கள். அவனும் காற்ருலும் மழையாலும் இடியாலும் குலேயாது இருக்கக் கூடியதாகவும், பலவகைச் சக்திகள் அதனிடம் ஊட்டப் பெற்றதாகவும் ஒரு பாவை உருவைச் செய்து தந்தான். அசுரர் முதலியோரது காற்றுப் படினும் அப் பாவை மோகனச் சிரிப்பொன்றைச் சிந்தி அசுரர்களேத் தம்மிடத்தே ஈர்த்து முடிவில் உயிரைப் போக்கி விடும். இப்பாவை இயங்குவதையும் நகைப்பதையும் கண்டு உயிருள்ள பெண்ணென்றே எண்ணி மயங்கிக் காம நோய்கொண்டு மடிவர் என்று கூறப்படுகின்றது. கொல்லிப் பாவை பற்றிய இவ் வரலாறு பழங்காலத்திலிருந்தே நம் மிடையே வழங்கி வருகின்றது.

செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லித்
தெய்வங் காக்குந் தீதுதீர் நெடுங்கோட்
டவ்வெள் ளருவிக் குடவரை யகத்துக்
கால்பொரு திடிப்பினுங் கதழுறை கடுகினு
முருமுடன் றெரியினு மூறுபல தோன்றினும்
பெருநலங் கிளரினுந் திருநல வுருவின்
மாயா வியற்கைப் பாவை. . . . .
. . . .
கொல்லிக் குடவரைப்,
பூதம்புணர்த்த புதிதியல் பாவை'

என நற்றிணையிலும்,

'பெரும்பூட் பொறையன் பேளமுதிர் கொல்லிக்
கருங்கட் டெய்வங் குடவரை யெழுதிய
நல்லியற் பாவை'

எனக் குறுந்தொகையிலும் இக் கொல்லிப் பாவையைப் பற்றிய செய்திகள் வந்துள்ளன என்பது ஈண்டு குறிக்கத்தக்க தாகும். இச் சதகத்தில்,

'தாணு முலகிற் கடன்முர சார்ப்பத் தரந்தரமாய்ப்
யூணு முலைமட வார்சேனை கொண்டு பொருதுமலர்ப்
பாணன் முதலெவ ராலுங் கொல்லியம் பாவைமுல்லை
வாணகை யாலுள் ளுருக்குவ துங்கொங்கு மண்டலமே'

என வரும் செய்யுளில் கொல்லிப் பாவையின் இயல்பு விளக்க மாகக் கூறப்பட்டிருத்தலை அறியலாம்.

இந்நூலில் காணப்படும் அவையடக்கச் செய்யுளால் இக் கவிஞர் தனக்கு முன்னே வாழ்ந்த கவிஞரின் கருத்துக்களை எடுத்துப் போற்றும் இயல்பினர் என்பது தெரிய வரு கின்றது.

'கடல்சூழ் புவியிற் கண்டமற்றுங்
காணுஞ் சுவரிற் கீறிமகிழ்
மடமார் சிறுவர் போற்கொங்கு
வளமுஞ் சீரு மோராதேன்

திடமாய் வினவி நோக்கியிசை
தெளிவோர் முன்னிம் மண்டலத்தின்
அடைவாங் கதைகள் பொதிசதக
மாக்கி லறிஞ ரிகழ்வாரே'

என வரும் பாடல் அவையடக்கச் செய்யுளாகக் காணப்படு கின்றது. பூமியின் உருவைச் சுவரில் கோடிட்டு எழுதிக் களிக்கும் அறியாச் சிறுவர்போல என்ற உவமை இப் பாடலில் காணப்படுகின்றது. இக் கருத்தைக் கம்ப ராமாயண அவை யடக்கச் செய்யுளிலும் காண்கின்றோம்.

'அறையு மாடரங் கும்மடப் பிள்ளைகள்
தறையிற் கீறிடிற் றச்சருங் காய்வரோ'

என்ற செய்யுளின் கருத்து இச் சதகத்தின் அவையடக்கச் செய்யுளிலும் பிரதிபலிக்கக் காண்கின்றோம். எனவே இந் நூலாசிரியர் தமக்கு முன்னே வாழ்ந்த அறிஞர்களின் கருத் துக்களையும் ஆங்காங்கே பொதிந்து கூறும் மாண்பை அறியலாம்.

கொங்குமண்டலம் படைப் பயிற்சியில் சிறந்த கோசர் களால் ஒரு காலத்தில் ஆளப்பட்டது என்பதை இந் நூலாசிரியர் கூறுகின்றார். கோசர் கொங்கு நாட்டினை ஆண்டனர் என்பதைச் சிலப்பதிகாரம் உரைபெறு கட் டுரையில் 'அது கேட்டுக் கொங்கிளங்கோசர் தங்கணுட்டகத்து நங்கைக்கு விழவொடு சாந்தி செய்ய மழை தொழிலென்றும் மாருதாயிற்று' என வருவதால் அறியலாம்.

இங்ஙனம் கொங்குமண்டலத்தின் பெருமைகளை விரித் துரைக்கும் இந்நூல் இலக்கிய வரலாற்றில் ஒரு சிறந்த இடம் பெற்றுள்ளது. கொங்குநாட்டு வரலாற்றுக்குத் துணைபுரியும் பல்வேறு சான்றுகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குவது இந்நூல். சொன்னலமும் பொருள் நலமும் பொதிந்துள்ள இவ்வரலாற்றுக் கருவூலம் தமிழருக்குக் கிடைத்த ஒப்பற்ற பெருஞ் செல்வமாகும்.

7. பிற சதகங்கள்

1. அண்ணுமலையார் சதகம்

இந்நூல் திருவண்ணுமலையில் கோயில் கொண்டருளிய அண்ணுமலையார் மீது நூறு பாடல்களால் பாடப் பெற்ற நூல். இந்நூலாசிரியர் திருச்சிற்றம்பல நாவலர் என்னும் பெயருடைய நல்லார். அவரது ஊர்ப் பெயரையும் சேர்த்து மாம்பாக்கம் திருச்சிற்றம்பல நாவலர் என்று அழைக்கப் பெறுவர்.

திருவண்ணுமலைக் கோயில் அறக்காப்பாளராக விளங்கிய சிங்கபுரி வசந்தராயர் என்பார் திருச்சிற்றம்பல நாவலர் மீது அன்பு காட்டி ஆதரித்து வந்தார். எனவே தம்மை யாதரித்த வள்ளலுக்கு நன்றிக் கடன் செலுத்தும் வகையில் நாவலர் தாம் இயற்றிய சதக நூலுக்கு வசந்தராயர் பெயரையும் சூட்டி மகிழ்ந்தார்.

இதனை நூற்பெயர் பற்றிக் கூறுகின்ற

'மன்னுதிரு வண்ணு மலைச்சதக மென்றும்பேர்
பின்னு மொருநாமம் பேசுவாம்—இந்நிலத்திற்
றங்கு புகழ்வசந்த ராயச் சதகமென்று
மெங்குந் துதிப்பதா மே'

என்ற பாடலால் அறியலாம். எனவே, அண்ணுமலைச் சதகம் வசந்தராயச் சதகம் என்ற இரட்டைப் பெயருடன் இந்நூல் திகழ்கின்றது.

இந்நூலில் அறப்பளீசுர சதகம் போன்று வள்ளலின் பெயரும் இறைவன் வாழ்த்தும் சேர்ந்து செய்யுள்தோறும் மகுடமாகக் காணப்படுகின்றது.

'அருள் பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெய் உண்ணு முலைக்குரிய
அண்ணு மலைத்தேவனே'

என்பது இந் நூலில் காணப்படும் மகுடம்.

இந்நூலில் திருவண்ணுமலைக் கருகில் உள்ள திருக்கோவலூர் திருப்பதியின் பெருமை விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அந்நகரை முற்காலத்தில் ஆண்ட தெய்வீக மன்னனின் சிறப்புகளையும், அவன் பாரிமகளிரான அங்கவையையும் சங்கவையையும் மணந்த செய்தியையும், இந்நூல் விரிவாகக் கூறுகின்றது.

இத் திருப்பதி யமைந்த திருமுனைப்பாடி நாட்டு வளத்தையும், அந் நாட்டில் தோன்றி, பெரும் புகழ் பெற்ற மெய்ப்பொருள் நாயனுர், நரசிங்க முனையர், குலசேகர நாயனுர் ஆகிய நாயன்மார்கள் வரலாற்றையும் இந் நூலாசிரியர் கூறுகின்ருர்.

நான்கு வருணத்தார் இயல்பும், அவர்களில் ஒவ்வொரு வருக்குமுரிய அறுவகைத் தொழில்கள் இன்னின்னவை யென்றும் விளக்கப்பட்டுள்ளன.

மற்ருெரு பாடலில் பதினறு வகைப் பேறுகள் இன்னின் னவை என்று கூறப்பட்டுள்ளது. தானியப் பெருமை, நற்குணம், நன்மனைவி, நன்மக்கள், நிறைகல்வி, அறிவுச் செல்வம், இளமை, அழகு, நோயின்மை, ஆயுட்காலம், மனவலிமை, செயல்களில் துணிவு, புகழ், ஊழ், அறுசுவை நுகர்ச்சி, செல்வம் என்ற பதினறுமே பதினறு பேறுகள் என்று கூறப் படுவனவாகும்.

பெண்ணுக்குரிய இலக்கணம், ஆணுக்குரிய இலக்கணம், தாம்பூலம் தரித்திருக்கும் முறை, பெண் கொள்ளும் முறை முதலிய செய்திகளும் இந்நூலில் காணப்படுகின்றன.

அறம் முப்பத்திரண்டின் விளக்கம், விபூதி குழைக்கும் காலமும் முறையும், பூசைக்குரிய பூக்கள், உருத்திராக்கம் தரிக்கும் முறை முதலிய விதிகளும் இந்நூலில் உள்ளன.

பத்துப் பாடல்களில் அசுவ இலக்கணம் பற்றி விரித்துக் கூறுகின்முர் இந் நூலாசிரியர். அசுவ இலக்கணக் கலைகளில் ஆசிரியருக்குள்ள புலமையை இவற்ருல் நாம் அறிகின்ருேம்.

இந்நூல் பொதுவாக உலகியலுக்குத் தேவையான பல் வகை நீதிகளையும் மக்களுக்கு இருக்க வேண்டிய இன்றி யமையாத கடவுள் வழிபாட்டின் சிறப்பையும் முறைமை யையும் கூறி விளக்குகின்றது.

மற்ருெரு செய்யுளில் சைவக் குரவர்களான சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவரும் பாடிய தேவாரங்களின் தொகை இவ்வளவு என்று கூறுகின்ருர்.

'பன்னருந் திருஞான சம்பந்தர் செந்தமிழ்ப்
பதிகமீ ரெண்ணுயிரம்
பண்பான சுந்தர ரிசைத்ததே வாரமுப்
பஃதுமே லேழாயிரம்
நன்னுதற் றிலகவதி யாரொடுந் தோன்றுதிரு
நாவினுக் கரசர் சொன்ன
நற்றமிழ்ப் பதிகநாற் பத்தொன்ப தாயிர
நாடுமிம் மூவர் மொழியுட்
பின்னரெண் ணூற்ருறு பத்துநாற் பதிகமிப்
பேருலகு தனில் விளங்கும்
பேசுமிரு நூற்றேமு பத்தைந்து சிவதலப்
பெருமைசேர் பதிகமாகும்
அன்னதிரு முறையோதி நின்னடிப் பூசைசெய்
தருள்பெறு வசந்த ராயர்
அண்ணுவி னிற்றுதிசெய் யுண்ணு முலைக்குரிய
வண்ணுமலைத் தேவனே!'

என்று வரும் பாடலில் இச் செய்தியின் விளக்கத்தைக் காணலாம்.

சொன்னலமும் பொருணலமும் செறிந்து சுவை பயக்கும் ஒரு சில சதகங்களுள் இதுவும் ஒன்ருகும்.

இந் நூலாசிரியர் சைவ சமயத்தைச் சார்ந்தவர். இவர் பத்தொன்பதாம் நூற்ருண்டின் பிற் பகுதியில் வாழ்ந்தவர் என்று கூறுவர்.

2. அருணசல சதகம்

இந்நூல் அண்ணுமலைச் சதகம் போன்று திருவண்ணுமலை யில் எழுந்தருளியிருக்கும் இறைவன்மீது நூறு பாடல்களால் பாடப் பெற்ற நூல்.

இந்நூல் பிற சதகங்களைப் போன்று உலக நீதியுரைக்க எழவில்லை. மாருக முற்றும் இறைவனைத் துதிப்பதாகவே அமைந்துள்ளது. ஒவ்வொரு பாடலிலும் இறைவன் பெருமை களைப் பாராட்டிப் பாடப் பெற்ற துதி நூலாக இது அமைந் துள்ளது. ஒவ்வொரு செய்யுளின் இறுதிதோறும் "அருணசலா அருணசலா" என்ற மகுடம் அமைந்துள்ளது.

பிற செய்திகள் எவையும் கூருது நூல் முழுதும் ஏற்றுக் கொண்ட கடவுளின் அருட் செயல்களையும் புகழ்ப் பெருமை களையும் பலவாறு பாராட்டிக் கூறுகின்ற இந்நூலைப் போலவே சதக இலக்கிய வரிசையில் இடம் பெற்ற பிற நூல்களும் உள. அவை அவையாம்பிகை சதகம், எம்பிரான் சதகம், வட வேங்கட நாராயண சதகம் ஆகியனவாம்.

இந்நூலினை இயற்றியவர் காஞ்சிபுரம் சபாபதி முதலியார் என்பார். இவர் சான்ருேர் பலர் தோன்றிய தொண்டைவள நாட்டில் பிறந்தார். சென்னையில் உள்ள பச்சையப்பன் கல்லூரியில் தமிழாசிரியராக வாழ்ந்தார். திரிசிரபுரம் மீனுட்சி சுந்தரம் பிள்ளைக்கு இந்நூலாசிரியர் ஆசிரியராகவிருந்து கல்லாடம், திருவாசகம் முதலிய இலக்கியங்களைப் பாடம் கூறினுர் என்று கூறுவர்.

சைவ சமய விளக்க வினு விடை, பிரம்மோத்திர காண்டப் பொழிப்புரை, பெரிய புராண உரை முதலிய பிற நூல்களும் இந் நூலாசிரியர் செய்துள்ளதாகத் தெரிகிறது.

இவர் பத்தொன்பதாம் நூற்ருண்டின் பிற் பகுதியில் வாழ்ந்தவர் என்று கூறுவர்.

இந்நூலில் காணப்படும் பாடல்கள் அனைத்தும் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட விளங்குகின்றன.

'புல்லாகியே பூடாகியே புழுவாகியே மரமாகியே
கல்லாகியே னுந்நின்னகர்க் கண்மேவிலே னினியெங்ஙனே
பொல்லாப்பிறப் பொழிந்துய்குவேன் புலைநாயினே
னிமயந்தரும்
அல்லார்குழற் கொருபாகனே அருணுசலா அருணுசலா'

என்று வரும் பாடலில் மாறி மாறிப் பிறவியில் அழுந்தும் தன்னை ஆட்கொண்டருளுமாறு இறைவனிடம் நெக்குருக வேண்டுகின்ருர் ஆசிரியர்.

மற்ருெரு பாடலில் இறைவன் வானுக, மண்ணுக, அமரர்க்கெல்லாம் கோனுக, அடியாருள்ளங்களில் குடிகொண் டானுக, தேனுக, அமுதாகக் காட்சி தந்து அங்கிங்கெனுதபடி எங்கும் நிறைந்திருக்கும் பான்மையைப் போற்றி மகிழ் கின்ருர்.

ஆண்டுதோறும் கார்த்திகைத் திங்களில் கார்த்திகை உடுமீன் வருநாளில் திருவண்ணுமலையில் இறைவன் சோதிப் பிழம்பாய்க் காட்சி தரும் மாட்சியை,

'வளர்கார்த்திகை மாதந்தொறும் வருகார்த்திகை
நாடன்னிலே
பளகானதில் லாவன்பர்கள் பரிவாகவே யேத்தித்தொழக்
கிளர்மாமலை தனிலேயொளி கெழுசோதிகாட்
டாநின்றநின்
அளவார்தெரி பவரையனே அருணுசலா அருணுசலா'

என்று பக்திப் பெருக்கு ஊற்றெடுக்கப் பாடிப் பரவுகின்ருர் ஆசிரியர்.

பிறிதொரு பாடலிலே அவர் இறைவன் மானேந்தி, மழுவேந்தி, மதியேந்தி, நதியேந்தி, எருக்கேந்தி, கமலன் முடியேந்தி நிற்கும் உருவப் பொலிவைக் கண்டு உள்ளம் குழையப் பரவுகின்றார்.

உவமைகளை ஏற்றவிடத்தில் கூறி, கவிதைக்கு நலம் கூட்டும் பாடல்கள் இந்நூலில் பலவுண்டு.

'எள்ளுக்குளெண் ணெய்போலவு மெறிமாமணி
யொளி போலவுங்
கள்ளுற்றபூ மணம்போலவுங் கனகத்துறு
மொளிபோலவும்
விள்ளுற்றிடா துயிர்தோறுநீ மேவுற்றதோர்ந்
தவர்ப் போற்றுவேன்
அள்ளுற்றநீ றணிமெய்யனே அருணசலா அருணசலா'

என்று வரும் பாடலில் ஒன்றுக்கு மேற்பட்ட பல உவமைகள் தம்மில் கூடி நின்று கவிதை நலம் காட்டும் அழகைக் காணலாம்.

குறள் முதலிய இலக்கியங்களின் கருத்துக்களை தம் நூலிலும் பொதிந்து பலசெய்யுட்கள் இயற்றியுள்ளார்.

'காலாழ் களரி னரியடுங் கண்ணஞ்சா
வேலாண் முகத்த களிறு'

என்ற குறளின் கருத்து

'காலாழ்களர் படுமாயின்வெங் கரிதன்னையும்
நரிசொல்வது
போல்'

என்று இந்நூலில் எடுத்துக்காட்டப்படும் உவமையில் உள்ளதைக் காணலாம்.

சைவமதத்தில் ஆசிரியர் கொண்டுள்ள தீவிரப்பற்றினை நாம் அறிய,

'மாயோனையுந் தொழுகின்றிலன் மலரோனையுந்
தொழுகின்றிலன்
நாயேன்நினை யேபோற்றுவேன்'

என வரும் பாடல் அடிகளில் காணலாம்.

இறைவன் திருவிளையாடல்களைக் குறிக்கும் தொடர்களும் இந்நூலுள் காணப்படுகின்றன.

இங்ஙனம் நூல்முழுதும் கடவுளின் அருட்செயல்களை விரித்துக்கூறி வணங்கும் இந்நூல் பிற சதக இலக்கியங்களினின்று சற்றே மாறுபட்டு, புதுவகையில் அமைந்துள்ளது. சதக இலக்கணப்படி அமைந்த துதிநூல் என்று இதனை நாம் கூறலாம்.

3. அவையாம்பிகை சதகம்

இந்நூல் மாயூரத்திலுள்ள அம்பிகை அவையாம்பிகை மீது பாடப்பெற்ற நூல்.

இந்நூலினை இயற்றிய ஆசிரியர் கிருட்டிணையர் என்னும் பெருமகனுர். இவர் மாயூரத்தையடுத்த நல்லதுக்குடி என்னும் ஊரினர்.

இவர் சைவமதத்தைச் சார்ந்தவர் என்றும் பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர் என்றும் கூறப்படுகிறது.

இந்நூல் அருணசல சதகம், எம்பிரான் சதகம், வடவேங்கட நாராயண சதகம் ஆகியவற்றைப் போன்று முற்றும் துதிநூலாக அமைந்துள்ளது. நூல்முழுதும் ஏற்றுக்கொண்ட அவையாம்பிகையம்மையின் அருட்பெருமைகள் பலபடப் பாராட்டிப் போற்றப்படுகின்றன. நூலில் ஒவ்வொரு செய்யுளின் இறுதிதோறும் 'மயிலா புரியில் வளரீசன் வாழ்வே அவையாம் பிகைத் தாயே' என்ற மகுடம் காணப்படுன்றது.

அவையாம்பிகையம்மையின் தோற்றப் பொலிவை முதற் கண் வர்ணிக்கின்ருர் ஆசிரியர். பாதத்தில் சதங்கையும் சிலம்பும், கிண்கிணியும், பாடகமும், தண்டையும், கொலுசும் அணிந்து, தழைத்தருளும் மேனியில் பீதாம்பரமும் துவளும் இடையில் அரைஞாண் மாலேயும், முத்துநவமணி மாலேகளும் இன்னபிற அணிகளும் அணிந்து புண்டரீகத் திருநுதலும், பொன்போன்ற சடையிீனயும், மதியொத்த முகத்திீனயும் கொண்ட அம்மையின் தோற்றத்தில் ஈடுபடுகின்ருர் ஆசிரியர்.

இங்ஙனமே,

'உச்சிக் கிளியே யருட்கிளியே யுணர்வுக்
குணர்வா யுயிர்க்குயிரா
யுதித்த கிளியே பரவெளியி லொளிவான்
பழத்தை யுன்னிவரும்
நற்சொற் கிளியே கதம்பவன நகரில்
வாழும் பரைக்கிளியே
ஞானக்கிளியே மறைவனத்தி டைக்
கிளியே சிவக்கிளியே'

என வரும் பாடலிலும்,

'பண்டு மறையின் முடிவினுள்ளே பழுத்த
பழமே யருட் பழமே
பரிபா கத்துப் பத்தர்நெஞ்சிற் படர்ந்த
பழமே நவமுடியே
என்றும் கனிந்த திருப்பழமே யிமையோர்
தேடித் தேடியுமே
யெட்டாப் பழமே காசினியி லெவர்தாந்
தீனயே யுணர்ந்தோர்கள்'

என வரும் பாடலிலும் அம்மையை ஆசிரியர் கிளியாகவும் கனியாகவும் உருவகித்துப் பாடும் பான்மையைக் காணலாம்.

அம்மையின் அருட்குணத்தைப் பாடிப்பரவும் ஆசிரியருக்கு அம்மை தேனுகவும், பாலாகவும், சருக்கரையாகவும், தெவிட்டா ருசியாகவும், கற்கண்டாகவும், சீனியுடன் முப்பழச்

சாற்றில் சிறந்த ரசமாகவும், செம்பொன் மலை மாணுகவும், மடக்கொடியாகவும், மயிலாகவும், குயிலாகவும், அன்பரெல் லாம் வாரிச் சொரியும் மனுநிதியாகவும் காட்சி தருகின்ருர்.

சோலைகள் பூத்துக்குலுங்கும் காவிரிக்கரையில் ஏற்ற முடன் திகழ்வது மாயூரப் பெருநகர்.

அவையாம்பிகை அம்மை எழுந்தருளியுள்ள மாயூரத் தைப் புலவர் போற்றுகின்ருர்.

'காவே யிலங்கும் பொன்னிநதிக் கரையே
யிலங்கு மயிலைநகர்
கங்கை முதலாம் புண்யநதி கருதிப்
பணியு மூதூரே'

என்று ஆசிரியர் மாயூரத்தின் சிறப்பையும் பழமையையும் பாராட்டுகின்ருர்.

மேலும் கவிவாணர்கள் கூறும் வேத, ஆகம ஒலிகள் இந்நகரின் வீதியிலே நிறைந்திருக்கும்; கமுகும், இளநீரும், வாழையும் சோலைதோறும் பூத்துக்குலுங்கவும், பசுமையுடன் நெற்கதிர்கள் வயலிலே காய்த்துக்குலுங்கவும் வளம்பெற்று விளங்குவது மாயூரம். இத்தகைய எழில்தரு காட்சிகள் பல கொண்டு இலங்குவதால் கயிலை நகரையொத்து மாட்சி பெற்று விளங்குகின்றது மயிலாபுரி என்று நகரின் பெருமை யையும் வளத்தையும் பாடுகின்ருர் ஆசிரியர்.

இந்நூலில் காணும் பாடலில்களில் குமரகுருபரரின் பக்திப் பாடல்களின் கவிதைச் சாயலைக் காணலாம். தாயுமானவர் பக்திப் பாடல்களின் உருக்கச் சாயலையும் காணலாம்.

'கொஞ்சும் கிளியே யருள்பழுத்த கொம்பே
கதம்ப வனத்தில் வளர்
குயிலே யிமயா சலத்தில்வருங் கொடிவான்
மதியே பேரொளியே'

என்று வருகின்ற பாடலில் குமரகுருபரரும் தாயுமானவரும் நம் அகக் கண்களில் காட்சிதருதலைக் காணலாம்.

இவ்வுலக வாழ்விலீடுபட்டுக் குடும்பமென்னும் மாயையில் அகப்பட்டு உழல்வதாகக் கூறுகின்ற இவர் அதனை உவமை முகத்தான் விளக்குகின்றார்.

'கான லதனைப் புனலாகக் கருதி
நினைக்கும் வாறதுபோல்'

என்று வரும் உவமையும், இதுபோன்று நலம்கூட்டும் பிற உவமைகளும் இந்நூலுள் மலிந்துள்ளன.

அம்மையின் அருட்கொடையும், கருணைத்திறமும் விளக்குகின்ற இந்நூல் சிறந்ததொரு துதிநூலாக மிளிர் கின்றது.

4. எம்பிரான் சதகம்

இந்நூல் காஞ்சிபுரம் அத்தகிரிப்பெருமானை முன்னிலை யாகக்கொண்டு பாடப்பெற்ற நூல். இந்நூல் வடவேங்கட நாராயண சதகம், அருணாசல சதகம் அவையாம்பிகை சதகம் ஆகிய நூல்களைப்போன்று ஏற்றுக்கொண்ட கடவுளின் அருட் செயல்களைப் பாடிப் பரவும் துதி நூலாக அமைந்துள்ளது.

இந்நூலினை இயற்றிய ஆசிரியர் கோபால கிருட்டிண தாசர் என்னும் புலமையாளர். இவர் ஸ்ரீபெரும்புதூரைச் சார்ந்தவர்; இடையர் மரபினர்; வைணவகுலத்தினர். கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர்.

இந்நூலில் பிற சதகத் துதி நூல்களைப்போன்றே 'எம்பிரானே' என்ற மகுடமும் காணப்படுகின்றது.

இந்நூலாசிரியர்,

'ஆழ்வார்கள் பன்னிருவர் பாடல் போற்றும்
அரிபத்தன் கோபால கிருஷ்ணன்'

என்று தம்மை அறிமுகப்படுத்திக் கொள்கின்றார்.

இறைவன் ஐம்பெரும் பூதங்களிலும் கலந்துள்ளான் என்ற தத்துவ உண்மையை மிகவும் அழகாக இவர் கூறும் விதம் அறியத்தக்கது.

'உன்னுடைய வுடன்மயமே பூமியெல்லாம்
உனதுசெவ்வாய் நீர்மயமே யுதகமெல்லாம்
மின்னியநின் கண்மயமே தேயு வெல்லாம்
வீறியநின் சுவாசமய மேகாற் றெல்லாம்
நின்னினைவின் மயமேயா காய மெல்லாம்'

என்று அவர் கூறுகின்றார். இறைவன் ஐம்பெரும் பூதங்களில் நீக்கமறக் கலந்திருக்கும் நீர்மையை இவர் கூறுகின்ற தன்மை சுவை பயப்பதாயுள்ளது.

திருமாலே பிரமனாக உயிர்களைப் படைத்தும், விஷ்ணுவாய் உயிர்களைக் காத்தும், உருத்திரனாய் உயிர்களை அழித்தும் மூன்றுருவாய்த் தோன்றுகின்றான் என்பது இந்நூலாசிரியரின் தத்துவக் கொள்கையாகும்.

பிறவித் துன்பம் இன்னது என்று இவர் ஒரு பாடலில் சுவைபட விளக்கியுள்ளார். மிகவும் கொடியதாகிய பிறவியெடுத்தால் நூறாண்டுகளில் பாதிநாள் உறக்கத்தில் கழிந்து விடுகின்றது. மிகுந்துள்ள ஐம்பதாண்டுகளில் குழந்தை, பாலன் முதலிய நிலைகளையடைந்து அவற்றிற்கும் மேலாக பசி, பிணி, மூப்பு ஆகிய துன்பங்களை அடைந்து, கறுத்தமயிரும் வெளுத்த உடலும் கூனிய உருவுமுமாய் மாறி, காதுகெட்டு, கண்மூடிக் குழறிப் பேசி நடைப்பிணமாய் உலவுவது இப் பிறவி. இதனை,

'அறக்கொடிய பவமெடுத்தா லதினூ றாண்டில்
ஐம்பதுநித் திரைபோய்மற் றைம்ப தாண்டில்
சிறுகுழந்தை பேதையொடு பால னென்றே
திரிந்துபசி பிணிமூப்புத் துன்ப மேவிக்
கறுத்தமயிர் வெளுத்துடலங் கூனிப் பல்போய்
காதுகெட்டுக் கண்மூடிக் குழறிப்பேசி
இறக்கமுற்றுக் கிடந்திறக்கும் பிறவி வேண்டேன்
இனிக்கரையேற் றச்சுதனே யெம்பி ரானே'

என வரும் பாடலில் காணலாம். 'பிறவித் துயரினின்று கரை யேற்றுவாய் அச்சுதனே! எம்பிரானே!' என்று அவர் உள்ள முருக வேண்டுகின்ருர்.

இறைவனின் குணங்களை நூலாசிரியர் போற்றுகின்ருர். அடியவர்கள் உள்ளன்போடு படைக்கும் பொருள் சிறிதெனி னும் அதனை விருப்போடு உயர்ந்த அளவினதாக எண்ணி ஏற்றுக்கொள்வது இறைவனின் உயர் பண்பு. இதனை,

'அச்சுதநின் மெய்யடியா ருகந்தே யிட்ட
தணுவெனினு மகமேரு வாகக் கொள்வாய்'

என்று பாடுகின்ருர்.

இறைவன் அருளால் ஏழையும் பெருஞ் செல்வமுற்று மகிழ்ந்திருப்பர். ஏழைக்கும் அருள் புரியும் தண்ணளியுடை யான் இறைவன். இதனை,

'அன்னமரி தாயிரந்து திரிந்த பேரை
அதிகராய் வாழ்ந்துசுகித் திருக்க வைப்பாய்'

என்று கூறுகின்ருர். இங்ஙனமே இறைவனுடைய பிற திருக் குணங்களையும் பாடி மகிழ்கின்ருர்.

இந்நூலாசிரியர் ஏற்றவிடங்களில் சிறந்த உவமைகளைக் கூறிக் கருத்தை விளக்குவதில் வல்லவர். மானிடர்களுக்கு நல்லறிவு வளர்ச்சி பெறுவதைத் தடுத்துப் புல்லறிவு விரை வாக வளர்ச்சியுறுவதைக் காட்ட,

'பெருத்திருந்த பூசினிப்பூ வின்கீழ்க் கொட்டை
பெருத்துயர்ந்து காயாப்பூத் தேய்ந்துற் ருற்போல்'

என்ற உவமையை ஆளுகின்ருர்.

தனது முன்னேர்களை எண்ணிச் செய்யும் படையல் முதலிய அனைத்தையும் இறைவன் ஏற்றுக் கொள்கின்ருன். இக்கருத்தை விளக்கக் கருதிய ஆசிரியர்,

'நதியின் வெள்ளம் இச்சையுடன் சமுத்திரத்தே சேருமா போல்' என்ற உவமை கூறி விளக்குகின்ருர்.

தனிப் பாடல்களில் தனித்தனியே உவமைகளை ஆண்டு கருத்தை விளக்குவதுடன் மட்டுமின்றி ஒரே பாடலில் பல உவமைகளைக் கூறி ஒரு கருத்தை விளக்குகின்ற தன்மையை யும் இவர் பாடலில் காண்கின்றோம்.

மனைவி மக்களுடன் கூடியிருந்து வாழும் இல்லற வாழ்க் கைக்கு உவமை கூறப் புகுந்தவர்,

'பலர்கூடியிருந்த சந்தை கலைந்த தொக்கும்
பழுத்தாலிற் பறவைகள்சேர்ந் தகன்ற தொக்கும்
நலமாகச் சூளையொன்றில் வெந்த பாண்டம்
நாற்றிசையும் போயுடைந்து போவதொக்கும்'

என்று இங்ஙனம் வேறு பல உவமைகளையும் கூறி விளக்கு கின்றார். பலரும் கூடியிருக்கும் சந்தை போன்றது இல்லற வாழ்வு. சந்தையில் ஒருவர் பின் ஒருவராகக் கலைந்து செல்லுவது போலவே இல்லற வாழ்விலும் ஒருவர் பின் ஒருவ ராக இறந்து விடுகின்றனர். இங்ஙனமே பிற உவமைகளையும் பொருத்திச் சுவைக்க வேண்டும். எனவே வாழ்க்கை என்பதன் பொய்மை தெளிந்து இறைவன் திருத்தாள் போற்றி ஈடேறும் நினைவு கொள்ளுமாறு அனைவரையும் வேண்டுகின்றார்.

இங்ஙனமே இந்நூலின் பிற நலங்களையும் விரித் துரைப்பின் இடம் போதாது. கருத்தாழமும் பக்திச் சுவையும் கனியப் பெற்ற இந்நூலைப் படித்துச் சுவைத்தல் வேண்டும்.

5. திருவேங்கட சதகம்

இந்நூல் திருவேங்கடமலையில் எழுந்தருளியுள்ள இறை வன் மீது இயற்றப்பட்ட நூல். இந்நூலை இயற்றிய ஆசிரியர் நாராயண பாரதி என்பார்.

இவர் தொண்டை நாட்டில் வெண்மணி என்னும் ஊரில் பிறந்தவர். இவரது தந்தையார் பெயர் முத்தாரையன் என்பது.

இதனை,

'தேங்குநீர் வயல்சூழும் வெண்மணியில் வாழுமுயர்
செல்வன்முத் தாரையனுர்
செழுந்தவ முதித்தநா ராயணபாரதி'

என வரும் தனியன் செய்யுளொன்ருல் அறியலாம். இவர் தமக்கு உதவி செய்த ஓமலூர் மணவாள நாராயணன் என்னும் வள்ளலுக்கு நன்றிக் கடன் செலுத்தும் நினைவாகத் தம் நூலில் பாடல்தோறும் அவரது பெயரையும் பொருத்தி யாண்டுள்ளார். இவர் திருவெள்ளூரந்தாதி என்னும் நூலொன்றும் செய்துள்ளதாகத் தெரிகின்றது.

இந்நூலுக்கு மணவாள நாராயண சதகம் என்றும் திருவேங்கட சதகம் என்றும் இரு பெயர்கள் உள. வட வேங்கட நாராயண சதகம் என வழங்கும் கோவிந்த சதகத்தை இயற்றிய நாராயண பாரதி என்பார் இவரல்லர்.

இந்நூல் அறப்பளீசுர சதகம் போன்று வள்ளல் பெயரும் இறைவன் வாழ்த்தும் இணைந்த ஈற்றடியை மகுடமாகப் பெற்றுள்ளது.

'மணவாள நாராயணன் மனதிலுறை யலர்மேலு
மங்கைமண வாளனே வரதவேங் கடராயனே'

என்பது இந்நூலின் செய்யுள்தோறும் மகுடமாக உள்ளது.

இந்நூலில் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் முதலிய நால்வகை வருணத்தார் இயல்பும் தன்மையும் விளக்கப்பட்டுள்ளன.

திருமால் கிடந்த கோலத்தில் காட்சி தரும் திருவரங்க நகரின் பெருமையை விளக்கிக் காட்டுகின்ருர்.

இந்நூலில் அறப்பளீசுர சதகத்தை அடியொற்றி, பல்வேறு நீதிகள் உரைக்கப்பட்டிருத்தலையும் காண்கின்ருேம்.

கவிதைச் சிறப்பு, சங்கீதச் சிறப்பு, பரதச் சிறப்பு, நாடகச் சிறப்பு, விநோத வித்தைச் சிறப்பு எனப் பல்வேறு கலைகளைப்பற்றியும் விளக்கமாகக் கூறியுள்ளதை நோக்க அக் கலைகளில் இந் நூலாசிரியருக்குள்ள ஆழ்ந்த பயிற்சி நமக்குத் தெரிகின்றது.

மாதர்களின் உறுப்புக்களை நலம் பாராட்டுதலைக் குறித்து இந் நூலாசிரியரது கருத்து அறியத்தக்கது.

''சிக்குமிக வேநாறு கின்றகுழல் முகிலென்பர்
திரளூத்தை மாறுதவாய்
செம்பவள மென்பர்சளி கொண்டுநீர் மாறுத
சிறுநாசி குமிழதென்பர்
பக்குவம தன்றிவிழு கின்றமுலை யானதோற்
பையைமக மேருவென்பர்
பாராத நரகத் துவரமாங் குழிதனைப்
பகரின்ப வாரியென்பர்
மிக்குவரு ரத்தமுஞ் சீயுமென் பும்போர்த்த
மேனிமலர் மாலையென்பர்
மீளாத நரகந் தருஞ்சிறிய வின்பமதை
மேலின்ப வீடென்பரிம்
மைக்கருங் கடலிலெனை வீழாம லாளுவாய்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே''

என்பது பாடல். மாதர்களின் உறுப்புக்களைப் பழித்துக் கூறும் இவரது பாடல் இவரது உள்ளத்துறவு நிலையை நமக்குத் தெற்றென விளக்குகின்றது. இத்தகைய படுகுழியில் வீழாது தன்னைக் காத்தருளுமாறு இறைவனை மனங் குழைந்து வேண்டுகின்றார்.

உலகியல் வாழ்வைச் சுட்டிக் காட்ட வருகின்ற ஆசிரியர் உயர்ந்த பொருள் இருக்குமிடத்திலே இழிந்த பொருளும் இருக்குமென்று கூறுகின்றார். இக் கருத்தினை விளக்க ஆசிரியர் பிறிது மொழியும் திறம் அறிந்து இன்புறற்பாலது.

கோகனக மலர்மலர்ந் துறுகின்ற வாவியிற்
கொட்டியு மலர்ந்திருக்குங்
கோகிலந் தொனிசெயுந் தேமா வனந்தனிற்
கூறுவாய்ப் பக்ஷியுறையும்
ஏகமென வுலகம் புரந்தமன் னவர்சபையில்
ஈனமன் னருமேவுவார்
இலகுமா ணிக்கங்கள் விற்கின்ற கடைவீதி
யிற்பாலே மாணியும் விற்பார்'

என இங்ஙனம் பிறவற்றைக் கூறி, தம் கருத்தை ஆசிரியர் விளக்குகின்றார்.

பக்தி நூலாக மட்டுமின்றி, பல்வேறு கலைகளைப் பற்றிய விளக்க நூலாகவும், மக்களுக்கு உயர்நீதி யுரைக்கும் பெரு நூலாகவும் அமைந்து இந்நூல் சிறந்து விளங்குகின்றது.

6. சிவசங்கர சதகம்

சிவசங்கர சதகம் என்ற இந்நூல் தில்லையில் எழுந்தருளி யுள்ள இறைவன்மீது பாடப் பெற்ற நூல். சிவபெருமா னுடைய கருணைத் திறத்தை வியந்து முற்றும் துதி நூலாகப் பாடப் பெற்றுள்ளது இந்நூல்.

'சிற்சபையி லாடுஞ் சிவசங்க ரேசுரன்மேல்
பொற்சதக நாளும் புகலவே'

என வரும் காப்புச் செய்யுள் இதனை நமக்கு நன்கு தெளிவு படுத்துகின்றது. நூல் முழுதும் செய்யுள்தோறும் 'சிவசங்கரா, சிவசங்கரா' என்ற மகுடத்தையும் காண்கின்றோம்.

ஆசிரியர் வரலாறு

இந்நூலினை இயற்றிய ஆசிரியர் வீராசாமி உபாத்தியாயர் என்பவர். இவர் எழுமூரில் வாழ்ந்ததாகக் கூறப்படுகின்றது. இவர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந் தவர் என்று கூறுவர். நூலாசிரியர் பற்றிய பிற செய்திகள் அறிதற்கியலவில்லை.

நூல் நயம்

சிவபெருமானுடைய அருட் செயல்களையும் கருணைத் திறத்தையும் பலபடப் பாராட்டிப் பாடப் பெற்றுள்ளது இந்நூல்.

இந்நூலுள் பல்வேறு புராண நிகழ்ச்சிகள் விரித்துரைக்கப் பட்டுள்ளன. வாசுகியை நாணுகவும் மந்தர மலையை மத்தாக வும் கொண்டு வானவரும் அசுரரும் கடல் கடைந்தபோது வெளி வந்த ஆலகாலத்தைச் சிவன் உண்டு அனைவரையும் காத்தான் என்ற புராண வரலாறு,

'நாணுகவா சுகிமந்தர நன்மத்தாய்த் திருமாலுடன்
கோணுமல்வா னவர்தானவர் கூடிக்கடல்
கடையன்றவர்
வாணுளமாய்த் திடவந்தவவ் வன்னஞ்சையுண்
டுயவைத்திடுஞ்
சேணுர்பிறை யணிவேணியா சிவசங்கரா சிவசங்கரா'

என வரும் பாடலில் சுவைபட விளக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

இங்ஙனமே கூற்றுவனைக் காலாலுதைத்து மார்க் கண்டனைக் காத்தது, பிட்டுக்கு மண் சுமந்து பாண்டியனிடம் பிரம்படிபட்டது, மனுநீதிச் சோழன் மகனையும் பசுவின் கன்றையும் உயிர்ப்பித்தது முதலான பல்வேறு புராண நிகழ்ச்சிகளும் இந்நூலுள் இடம் பெற்று இறைவனின் உயர் குணத்தைப் பாராட்டுகின்றன.

இந்நூலாசிரியர் இறைவன்மீது மிகவும் பக்தி பூண்டவர் என்று தெரிகின்றது. 'தாய் வேண்டேன், தமர் வேண்டேன், பிதா வேண்டேன், சேய் வேண்டேன், இல்லவள் வேண்டேன், நலம் வேண்டேன்' என்று சுற்றத்தின்மீது பற்றினை யொழித்து 'மாதேவ நின்னருள் வேண்டும்' என்று உளமுருக வேண்டு கின்றார்.

'வாஞுடனே நிலையென்றெழின் மடவார்மயற்
கடன்மூழ்கியே
வீஞுள்கழித் தேயுன்னிரு விரையார்மலர்ப் பதநாடியே
பேஞுதுழன் றிடுமெற்குநீ பெருவாழ்வளித்
தருள்செய்குவாய்
சேஞுகரர் பணிதேவனே சிவசங்கரா சிவசங்கரா'

என்று அவர் மனங் குழைந்து பாடுகின்ற பாடலில் இறைவன் மீது அவர் கொண்ட பக்தியைக் காண்கின்றோம்.

மேலும் மடவார்மீது ஆசை கொண்டு பிறவியில் நொந் துழலும் ஆசையை என்னிடமிருந்து தீர்த்தருளுவாய் என்று அவர் வேண்டுவதையும் காண்கின்றோம். தாமரை போன்ற முகமும், சேலொத்த இருவிழியும், வரையன்ன கொங்கையும், துடியன்ன சிற்றிடையும், முகிலன்ன குழலும் கொண்ட மடவார் மீதுள்ள 'ஆசையாஞ் சிந்தாகுலம்' தீர்த்தருளுவாய் என்று அவர் இறைவனை வேண்டுகின்றார்.

இங்ஙனம் பக்திச் சுவை சொட்டும் பாடல்கள் பல இந் நூலில் உள. போதுக்குள் நறையாகவும், பொருளுக்குள் பொருளாகவும், வேதத்துள் ஒளியாகவும், விண்ணுக்குள் வெளியாகவும், நாதத்துள் விந்தாகவும் இறைவனை உருவகித் துப் பாடுகின்றார் ஆசிரியர்.

பக்தி நூல்களாக அமைந்த பிற சதகங்களைப் போலவே இந்நூலும் சிறப்புப் பெற்று விளங்குகின்றது. இறைவனது அருட்குணம் பாராட்டப் பெற்று முற்றும் துதி நூலாக அமைந்த இச் சதக நூலைப் படித்து இன்புறுதல் வேண்டும்.

7. கோவிந்த சதகம்

இந்நூல் திருமலையில் எழுந்தருளியுள்ள இறைவன்மீது பாடப் பெற்ற நூல். தண்டலையார் சதகம் போன்று பழ மொழிகளைச் செய்யுள்தோறும் தொடர்புபடுத்திப் பாடப் பெற்றது இந்நூல்.

மணவாள நாராயண சதகம் என வழங்கும் திருவேங்கட சதகமும் வடவேங்கட நாராயண சதகம் என வழங்கும் இக் கோவிந்த சதகமும் வெவ்வேறு ஆசிரியர்களால் இயற்றப் பெற்றவை என்று கூறப்படுகின்றது.

இந்நூலின் இறுதிதோறும் தண்டலையார் சதகம் போன்று பழமொழியும் அண்ணுமலைச் சதகம்போல் 'அச்சுதாநந்த கோவிந்தனே' என இறைவனுடைய பெயரும் மகுடமாக அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர் வரலாறு

இந்நூலினை இயற்றிய ஆசிரியர் பெயர் நாராயண பாரதி என்பது. இவர் கி. பி. பதினெட்டாம் நூற்றுண்டின் முற் பகுதியில் வாழ்ந்தவர்.

நூல் நயம்

இந்நூலில் உலகில் வழங்கும் பழைமைத்தாகிய பழ மொழிகள் தொடர்புறச் செய்யுள்தோறும் அமைக்கப்பட்டுப் பாடல் பெற்றுள்ளன.

கல்வியின் சிறப்பைக் கூறவந்த வள்ளுவர்,

'தொட்டனைத்து ஊறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறு மறிவு'

என்று கூறினர். வள்ளுவர் கூறிய இக் கருத்தினை விளக்க முற்பட்ட இந்நூலாசிரியர்,

'எடுத்தாலு மூறு மிறைத்தாலு மூறு மிடைநடுவே
மடுத்தால் மறிபடு மோமணற் கேணித்தண்
ணீரதுபோல்
அடுத்தாரை வாழ்விக்கக் கல்வியுண் டானவ ரன்புடனே
கொடுத்தாற் குறைவரு மோவச்சு தாநந்த
கோவிந்தனே'

என்று கூறுகின்றுர்.

மன்னன் செங்கோன்மை பூண்டு ஆளுதலே சிறப்புடைய தாகும். மன்னன் கொடுங்கோலனுகிவிடின் அந்நாட்டில் அற முறை வழுவும்; ஆபயன் குன்றும்; அறுதொழிலோர் நூல் மறப்பர். எல்லாவற்றுக்கும் மேலாகப் பருவம் தவறி வானம் பொழியா தொழியும். எனவேதான் வள்ளுவர்,

'முறைகோடி மன்னவன் செய்யி னுறைகோடி
யொல்லாது வானம் பெயல்'

என்று கூறினர். 'கோன் நிலை திரிந்திடில் கோள் நிலை திரிந் திடும்' என்னும் உண்மையை உணர்ந்ததன்றோ தமிழர் சமுதாயம்! எனவேதான் இந்நூலாசிரியரும்,

'படியாளு மன்னர் மனுநீதி தப்பும் படிநடந்தால்
விடியாது நாடுமழை பொழியாது விளைவுகுன்றும்'

என்று கூறுகின்ருர். அரசன் செங்கோலனுய் இருத்தல் வேண்டும் என்பதை,

'பாவுக்கழகு பொருட்சுவை சொற்சுவை பன்மலர்ப்பூங்
காவுக்கழகு மயிலுங் குயிலுங்கண் டாய்கமலப்
பூவுக் கழகு மணமுந் திருவும் புவிபுரக்கும்
கோவுக் கழகுசெங் கோலச்சு தாநந்த கோவிந்தனே'

என மிகவும் சுவைபடக் கூறியுள்ளார்.

உலக இயல்பை எழிலுற விளக்கும் இவர் திறமை அறிந்து இன்புறற்பாலது.

'அடித்தமு தூட்டி வளர்த்திடுந் தாய்தன் னகமெலிவாய்
மிடித்திடி னும்பெற்ற பிள்ளைக ளைக்கை விடநினையாள்'

என்ற உலகியல் வழக்கை எடுத்துச் சுவையையும் கூட்டி யுரைக்கும் இவர் திறன் வியக்கத்தக்கதாகும்.

உலகியல் வழக்குகளை மட்டுமின்றி காவியங்களிலிருந்தும் கதைப் பகுதிகளை எடுத்து உதாரணங் காட்டித் தனது கருத்தை விளக்குவதிலும் இவர் வல்லவராயுள்ளார்.

தமிழகத்தின் ஒப்பற்ற பெருங்காவியமான கம்பராமாயணத்திலிருந்து சில கதைக்குறிப்புகளை இவர் மேற்கோள் காட்டி விளக்கியுள்ளார்.

'வாலியைக் கொன்றுசுக் ரீவனைப் பட்டத்தில் வைத்து
முந்நீர்
வேலிக டந்திலங் கைவீ டணனை விளங்கவைத்தாய்'

என வரும் பகுதியில் இராமர் வாலியைக்கொன்று சுக்ரீவனுக்கு அரசுரிமை யளித்ததையும், இராவணனைக்கொன்று விபீடணனுக்கு அரசுரிமை யளித்ததையும் குறிப்பிட்டுள்ளதைக் காணலாம்.

சொற்களையும் தொடர்களையும் சுவையுற ஆளுவதிலும் இவர் வல்லவர். நமது உடலைக் குறிக்க 'சோற்றுக்கடன் கொண்டிருக்குஞ் சரீரம்' என்றும், பரத்தையரைக் குறிக்க 'பிஞ்சுப்பருவ முலைவிலைப் பெண்கள்' என்றும் குறித்துள்ளதைக் காணலாம்.

இங்ஙனம் சொல்லாட்சியிலும் பொருளமைதியிலும் சிறப்புற்று விளங்கும் இச்சதகம் சதக இலக்கிய வரிசையில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்வதில் வியப்பில்லை.

8. தில்லைக் கற்பக விநாயகர் சதகம்

இந்நூல் தில்லையில் உள்ள கற்பக விநாயகர் மீது நூறு செய்யுட்களால் பாடப் பெற்ற நூல். தில்லையில் கோவிலின் மேலைக் கோபுரத்தருகே எழுந்தருளியுள்ளார் இவ் விநாயகர் என்ற செய்தியை,

'பொற்பொதுவாய்ந்த புலியூர்க்
குடக்கோபுரத் தினில்வாழ்
கற்பக நாம விநாயகன்'

என வரும் காப்புச் செய்யுளடியால் உணரலாம்.

இந்நூல் தொண்டைமண்டல சதகம், கோகுல சதகம், கோவிந்த சதகம் போன்று கட்டளைக் கலித்துறைப் பாவால் அமைந்துள்ளது.

விநாயக புராணத்தில் கூறப்படும் புராண வரலாறுகள் இந்நூலில் சுருக்கமாக உரைக்கப்பட்டுள்ளன என்பது குறிக்கத் தக்கது.

இந்நூலில் செய்யுள் இறுதிதோறும் மகுடம் காணப் பட்டாலும் பிற சதகங்களைப்போல் மகுடத்திற் கேற்றவாறு நூல் பெயர் பெறவில்லை என்பது கருதத்தக்கது. திருத் தொண்டர் சதகம்போல மகுடம் ஒன்றும் பெயரொன்றுமாக இந்நூல் அமைந்துள்ளது. நூலின் இறுதிதோறும் 'அடியேன் துயர் கெடுத்து ஆண்டருளே' என்ற மகுடம் காணப் பெறு கின்றது.

இந்நூலினை இயற்றிய ஆசிரியர் சிதம்பரச் செட்டியார் என்பவர். இவர் தேவிகோட்டையில் பிறந்தவர். இவரைப் பற்றிய பிற விவரங்கள் அறிதற்கியலவில்லை. இந் நூலாசிரியர் கி. பி. இருபதாம் நூற்றுண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர்.

இந்நூலில் வழக்குச் சொற்களும் வடசொற்களும் ஏராளமாகப் பயின்று வந்துள்ளன.

நூல் அமைப்பு

முதலில் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றின் விசேடங் குறித்துப் பாடப்பெற்றுள்ளது. பின்னர் விநாயக புராணத்தில் உள்ள உபாசநா காண்டத்தின் கதைகள் சுருக்கியமைக்கப் பட்டுக் கூறப்பட்டுள்ளன.

முருகன் கோவில் கொண்டுள்ள ஆறு படைவீடுகள் இன்னவென்பதை ஒரு செய்யுளில் கூறுகின்றூர்.

'சீரலைவாய்தென் பழமுதிர் சோலை திருப்பரங்குன்
றேரகங் குன்றுதோ ருடல் பழனியில் லேய்ந்தகுகன்'

என்று முருகனின் அறுபடை வீடுகள் இன்னின்னவென விளக்குகின்றூர். இதுபோன்ற கருத்தமைந்த செய்யுளைச் சிலப் பதிகாரம்—குன்றக்குரவைப் பகுதியிலும் காண்கின்றோம்.

'சீர்கெழு செந்திலுஞ் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா விறைவன்'

என வருதல் காண்க.

முருகனே விநாயக ஷடாக்ஷர மந்திரத்தை அனுட்டித்தான் என்றால் அதன் மேன்மையினை யாரே சொல்லவல்லார் என்று கூறுகின்றார் ஆசிரியர்.

விநாயகரின் பன்னிரு திருப்பெயர்கள் இன்னின்னவை என ஆசிரியர் விளக்கியுள்ளார்.

'தணுர்பால சந்திரர் லம்போ தரர்விக டர்கபிலர்
கணுத்தியக் கர்தூம கேதேக தந்தர் கசகன்னரே
கணுதிபர் விக்கிந ராசர் சுமுகர் கசா நனரென்
றணுறிரு நாமவடியேன் றுயர்கெடுத் தாண்டருளே'

என வரும் செய்யுளால் விநாயகரின் பன்னிரு திருநாமங்கள் இன்னின்னவை என அறியலாம்.

பின்னர் விநாயக புராணத்தில் உள்ள இலீலா காண்டக் கதைகள் சுருக்கியமைத்துக் கூறப்பட்டுள்ளன. இப்பகுதியில் விநாயகரது பன்னிரு திருவவதாரங்கள் பற்றிக் கூறப்படுகின்றன.

இங்ஙனம் விநாயகரைப்பற்றிய துதி நூலாகவும், விநாயக புராணத்தின் சுருக்கமாகவும் இந்நூல் விளங்குகின்றது. விநாயக புராணத்தைப் படிக்க இயலாதாயினும் அதன் சுருக்கமாக அமைந்த இந்நூலைக் கற்றுணர்தல் நம் கடனாகும்.

9. அகத்தீசர் சதகம்

இந்நூல் மத்தான் சாகிப்பு என்பவரால் பாடப்பட்டது. இவர் குணங்குடியார், குணங்குடி மத்தான் சாகிப் என்றும் அறியப்படுவார்.

இவர் திருச்சியில் அத்தர் வியாபாரியாக இருந்தவரென்று கூறப்படுகின்றது. வாலையை வழிபட்டுச் சித்தர் நெறியில் நின்ற முகம்மதியப் புலவர் இவர். இவரது பாடல்கள் சித்தர் பாடல்கள்போன்று கருத்துச் செறிவும், தத்துவங்களும் அமைந்தவை. தாயுமானவர் பாடல்கள்போன்று இவர் இயற்றிய பாடல்களும் மிகவும் உருக்கமுடையவனுகத் திகழ் கின்றன.

இவர் இந்நூலேயன்றி நந்தீசர் சதகம், கிறித்துமத கண்டன வச்சிரத்தண்டம் முதலிய வேறு இரு நூல்களும் எழுதியுள்ளார்.

குணங்குடியார் என்று புகழ்பெற்ற இப் புலவர்மீது ஐயாச்சாமி முதலியார் என்பார் 'குணங்குடிநர்தர் பதிற்றுப் பத்தந்தாதி' என்னும் பெயரில் ஒரு நூல் பாடியுள்ளார்.

இந்நூலாசிரியர் பத்தொன்பதாம் நூற்முண்டின் முற் பகுதியில் வாழ்ந்தவர் என்று கருதப்படுகின்றது. இந்நூலைப் பற்றிய பிற விவரங்கள் அறிய இயலவில்லை.

10. இயேசுநாதர் திருச் சதகம்

இந்நூல் அருணுசலம் சதாசிவம் பிள்ளை என்பவரால் இயற்றப்பட்டது. இவர் யாழ்ப்பாணத்தில் உள்ள மானிப் பாயிலே பிறந்தவர்.

ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளையும் கற்ற புலமையாளர். இவர் கிறித்துவ மதத்தைத் தழுவி ஆணல் (ARNOLD) என்னும் பெயரால் வழங்கப்பட்டார். உதய தாரகை பத்திரிகையின் ஆசிரியராக இருந்தவர்.

இவர் இல்லற நொண்டி, கீர்த்தனு சங்கிரகம், நன்னெறிக் கதா சங்கிரகம், பாவலர் சரித்திர தீபகம், சாதாரண இதிகாசம், வானசாத்திரம், வெல்லையந்தாதி முதலான பல நூல்களையும் எழுதியுள்ளார்.

கி. பி. பதினேழாம் நூற்றூண்டில் தொண்டை மண்டலத்துச் செங்குந்தர் மரபில் பிறந்த தமிழ்ப் புலவரான காங்கேயர் என்னும் பெருமகன் இயற்றிய உரிச்சொல் நிகண்டை இவர் பதிப்பித்துள்ளார்.

கி. பி. பத்தொன்பதாம் நூற்றூண்டின் பிற்பகுதியில் இவர் வாழ்ந்தார். இந்நூலைப்பற்றிய பிற விவரங்கள் அறிதற்கு இயலவில்லை.

11. இலக்குமிகாந்த சதகம்

இந்நூலினை இயற்றிய ஆசிரியர் சீனிவாச ஐயர் என்னும் பெருமகனுர். ஆசிரியர் பற்றிய வேறு விவரங்களும், நூலைப் பற்றிய பிற விவரங்களும் யாதும் அறிதற்கியலவில்லை.

சென்னை அரசாங்க நூல்நிலையக் கையெழுத்துப் பிரதிகள் சம்பந்தமான குறிப்புகளில் இந்நூலின் பெயரும் நூலாசிரியர் பெயரும் மட்டுமே காணப்படுகின்றன. பிற விவரங்கள் தெரியவில்லை.

12. அரபிச் சதகம்

இந்நூலினை இயற்றிய ஆசிரியர் அப்துல் ரஹ்மான் என்ற பெயருடைய நல்லாராவர். இவர் பாலக்காட்டில் வாழ்ந்தவர். முகம்மதிய மதத்தைச் சார்ந்தவர். பவானிப் புலவர் என்னும் பெயரால் புகழ்பெற்றவர். இவர் அரபிச் சதகத்தைத் தவிர பிற நூல்கள் எழுதியதாகத் தெரியவில்லை. இந்நூல் கி. பி. 1895ஆம் ஆண்டில் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இந் நூலைப் பற்றிய பிற விவரங்கள் அறிய இயலவில்லை.

13. ஈழ மண்டல சதகம்

இந்நூல் தொண்டைமண்டல சதகம், சோழமண்டல சதகம் ஆகிய நூல்களைப்போன்று ஈழமண்டலம்பற்றி விரித்துரைக்கும் நூல்.

இந் நூலாசிரியர் க. வேற்பிள்ளை என்பார். இவர் மட்டுவில் என்னும் ஊரில் பிறந்தவர். இவரது தந்தையார் பெயர் வேலாயுதபிள்ளை கணபதிப்பிள்ளை உடையார் என்பார்.

இவர் புலோலிபர்வதத் தனியம்மை தோத்திரம், புலோலி வயிரவக் கடவுள் தோத்திரம் ஆகிய பிற நூல்களும் எழுதி யுள்ளார்.

கி. பி. பதினெட்டாம் நூற்ருண்டின் பின்பகுதியில் வாழ்ந்த கடவுள் முனிவர் என்னும் புலவர் எழுதிய வாதவூர்ப் புராணத்திற்கு இவர் விரிவுரை எழுதியுள்ளார்.

கி. பி. **1873-1911**-ல் வாழ்ந்த சிவானந்தையர் என்பார் இயற்றிய புலியூரந்தாதிக்கு இந்நூலாசிரியர் உரை எழுதி யுள்ளார்.

கி. பி. பதினெட்டாம் நூற்ருண்டின் முற்பகுதியில் வாழ்ந்த அபிராமிபட்டரின் அபிராமியந்தாதி என்னும் நூலுக்கும், மற்றும் கௌளி சாத்திரம் பற்றிய நூல் ஒன்றுக்கும் இந்நூலாசிரியர் உரை எழுதியுள்ளார்.

இவர் தமது இறுதிக் காலத்தில் சிதம்பரத்தில் காலமானதாகக் கூறுவர். இவர் கி. பி. **1847-1930**-ல் வாழ்ந்தவர்.

14. உமாயேசுர சதகம்

இந் நூலை இயற்றிய ஆசிரியர் பற்றியோ நூலைப் பற்றியோ நமக்கு எவ்விதக் குறிப்புகளும் கிடைக்கவில்லை. சென்னை அரசாங்க நூல் நிலையக் கையெழுத்துப் பிரதியாக நமக்குக் கிடைக்கும் பல சாத்திரத் திரட்டு என்னும் நூலில் இப் பெயர் காணப்படுகின்றது.

பல சாத்திரத் திரட்டு என்ற இந்நூல் ஆறுமுக சுவாமி களின் சீடராகிய திருப்பாதிரிப்புலியூர் சிவசண்முக மெய்ஞ்

ஞான சிவாசார்ய சுவாமிகளின் சீடர்களுள் ஒருவரால் தொகுக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கருதப்படுகின்றது.

இந்நூலைப் பற்றி வேறு விவரங்கள் நமக்குக் கிடைக்க வில்லை.

15. கந்தபுராண சதகம்

இந்நூலை இயற்றியவர் முத்துக்குமார தாசர் என்னும் புலவர். இவர் சைவ மதத்தைச் சார்ந்தவர் என்றும் இருபதாம் நூற்ருண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர் என்றும் கூறப்படுகின்றது.

நூலைப் பற்றிய பிற விவரங்களும், ஆசிரியர் பற்றிய விவரங்களும் கிடைக்கவில்லை.

16. கறுப்பண்ணசாமி சதகம்

இந்நூல் சிவகங்கையிலுள்ள கறுப்பண்ணசாமி மீது செய்யப்பட்டுள்ள நூல்.

இந்நூலினை இயற்றிய ஆசிரியர் மிதிலைப்பட்டி இராம சாமிக் கவிராயர் என்பார். இவர் மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக் கவிராயரது புதல்வர். அழகிய சிற்றம்பலக் கவிராயர் இரகுநாத சேதுபதியின் புகழைச் சிறப்பித்து, தளசிங்கமாலை என்னும் நூலைக் கட்டளைக் கலித்துறையில் யாத்துள்ளார். இவரது பரம்பரையினரான மங்கைபாகக் கவிராயர் என்பார் கொடுங்குன்றூர்ப் புராணம் பாடியவர்.

இந் நூலாசிரியரது காலம் கி. பி. பதினேழாம் நூற்ருண்டின் பிற் பகுதி என்று கருதப்படுகிறது. இந் நூலைப் பற்றிய பிற விவரங்கள் அறிதற்கியலவில்லை. இந்நூல் சென்னையில் 1897-ஆம் ஆண்டில் பதிப்பித்து வெளியிடப் பெற்றதாகவும் தெரிகிறது.

17. கைலாசநாதர் சதகம்

இந்நூல் சேலம் மாவட்டம் இராசிபுரத்திலுள்ள கைலாச நாதர் மீது நூறு பாடல்களால் இயற்றப் பெற்ற நூல்.

இந்நூல் குமரேச சதகம் முதலியன போன்றே கடவுளை முன்னிலைப்படுத்தி, பல்வேறு வகையால் நிகழும் உலக இயல்பு களையும் மக்கள் நல்வாழ்வுக்குப் பயன்படற் கேற்ற அறவுரை களையும் உரைக்கின்றது. மேலும் நீதி நெறிகளேயன்றி மக்கள் அறியத்தக்க சோதிடம், சுகாதாரம், அசுவ சாஸ்திரம், காமநூல் முதலிய கலைகளைப் பற்றியும் விளக்கமாகக் கூறப் பட்டுள்ளது.

இந்நூலில்,

'கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரி வாசனே'

என்ற மகுடம் செய்யுள்தோறும் அமைந்துள்ளது.

ஆசிரியர் வரலாறு

இந்நூலினை இயற்றிய ஆசிரியர் சிதம்பரவாணர் என்பவர். இவர் வீர சைவ மரபைச் சார்ந்தவர் என்பதும், இவரது தந்தையார் பெயர் விசுவலிங்கன் என்பதும்,

'சாதியில் வீரசை வன்விசுவ லிங்கன்பர்
தருசிதம் பரவாணன் யான்
சதகமெனு மிப்பநுவ னின்னடிக் கன்புகொடு
சாற்றினன் உவந் தாளுவாய்'

என வரும் இந்நூற் செய்யுளால் அறிகின்றோம். இவரைப் பற்றிய பிற செய்திகள் அறிய இயலவில்லை.

நூல் பாடிய காலம்

இந்நூல் கி. பி. 1753-ல் இயற்றப்பட்டுள்ளது. இச் செய்தியை யறிய,

'ஆதிகவி நாலாயிரத்துத் தொளாயிரத்
தாகுமுப் பானிரண்டி
லாயிரத் தெழுநூற் றைம்பத்து மூன்றுவரு
டஞ்சகாப்தம் விகுர்தியா
நீதி சேராண்டுமே டத்திங்கள் குருவார
நேர்ந்த பனி ரண்டாந் தின
நிறைகன்னி திதியைந்தி னேடமிர்த யோகமிவை
நீடிரே வதி நாளினில்'

என வரும் செய்யுள் பகுதி நமக்குத் துணை புரிகின்றது. எனவே கி. பி. பதினெட்டாம் நூற்ருண்டில் இந் நூலாசிரியர் வாழ்ந்ததாகக் கொள்ளலாம்.

நூலாராய்ச்சி

இந்நூல் உலக மக்களுக்கு நீதியுரைப்பதுடன் மட்டுமின்றி முக்கிய கலைகளைப் பற்றிய விளக்கங்களும் அமைந்து விளங்கு கின்றது. அசுவ சாஸ்திரம் எனக் கூறும் குதிரை பற்றிய செய்திகளை இந் நூலாசிரியர் தமது நூலில் விளக்கிக் கூறி யுள்ளார். அசுவ இலக்கணங்கள் இன்னின்னவை அசுவத் திற்கு ஆகாத சுழிகள் இன்னின்னவை என்பன போன்ற விளக்கங்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

சாமுத்திரிக லட்சணம் என்ருல் என்ன என்பதைப் பற்றிச் சுவையாக இந் நூலில் விளக்கியுள்ள ஆசிரியர் திறம் அறிந்து இன்புறற்பாலது. இங்ஙனமே மங்கையரில் பதுமினிப் பெண், சித்தினிப் பெண், சங்கினிப் பெண், அத்தினிப் பெண் முதலிய நால்வகைப் பிரிவினரது இயல்புகள் இன்னின்னவை என விளக்கி, கணவனும் மனைவியும் கூடியிருக்கும் நாட்களும் இன்னின்னவை என அழகுற விளக்குகின்ருர்.

சகுனம் முதலியவற்றைப் பற்றிய செய்திகளும் இந் நூலில் காணப்படுகின்றன. நீர்க்குடம், பாற்குடம், எருக் கூடை, சுமங்கலிப் பெண்டிர், கர்ப்பிணிகள், வேசையர்,

சிறுர், மறையோர், பலாக்கனி ஆகிய இவை எதிரில் வந்தால் காரியம் கைகூடும் என்று ஆசிரியர் சகுனம் முதலிய பழக்க வழக்கங்களேப் பற்றி விரித்துரைத்துள்ளார். இங்ஙனம் வீதியில் செல்லுகையில் இடமாக வேண்டுவன இன்னின்னவை எனவும் விளக்கியுள்ளார்.

புத்தாடையுடுக்கும் நாள், நட்சத்திரம் இன்னின்னவை, பயணம் போகும் நாட்கள் இன்னின்னவை என்பனவற்றை ஆய்ந்து கூறுகின்ருர்.

பல்லி சொல்லல், தும்மல், ஆந்தை அலறல், காகம் கூவுதல் ஆகியவற்றிற்கு உரிய பலன்கள் இன்னின்னவை எனவும், புதுமனே கட்டும் இலக்கணமும், பன்னிரண்டு மாதங்களிலும் இன்னின்ன நட்சத்திரத்தில் அமாவாசை வரும் என்ற செய்தியும் இது போன்ற பிற செய்திகளும் இந்நூலுள் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

பரத்தையர் இயல்பு இன்னது எனக் கூறுகின்ற ஆசிரியர்,

'அருணிறைந் தவர்போல விருகையி ஞற்றழுவி
யாவலொடு முத்த மிடுவார்;
ஐய நீ பிரியில்எம துயிர்பிரியும் என்றவர்கள்
ஆவி முழுதும் பறிப்பார்'

என்று சுவையுற விளக்குகின்ருர். பரத்தையர் இயல்பும், அவரது வெளித்தோற்ற நடிப்பையும் நலம்பட விளக்கியுள்ள ஆசிரியர் திறமறிந்து இன்புறத்தக்கது.

மற்றும் 96வகைத் தத்துவங்கள், 32 இராகங்கள், 18 புராணங்கள் முதலிய செய்திகள் பற்றியும் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன.

மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத நீதிகளேயும், செய்திகளேயும் கூறிச் சுவையூட்டும் இச்சதகம் சதக இலக்கியங்களில் தனிச் சிறப்புப் பெற்று மிளிர்கின்றது.

18. பர்த்ருஹரி நீதி சதகம்

இந்நூல் பொதுவாக உலக நீதிகளைப்பற்றி நூறுசெய்யுட்களால் இயற்றப்பட்ட நூல். வடமொழியில் பர்த்ருஹரி என்பவர் இந்நூலைச் செய்தார். அது தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு வடமொழியில் இதனைச் செய்த ஆசிரியர் பெயருடன் இணைந்து பர்த்ருஹரி நீதி சதகம் என வழங்கப் பெறுகின்றது.

இந்நூல் மொழிபெயர்ப்பு நூலாகையால் தமிழில் பிற சதகங்களில் காணப்பெறும் எவ்வகைச் சிறப்பையும் காண இயலவில்லை. செய்யுளின் இறுதிதோறும் மகுடம் அமைய வில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நூலினை வடமொழியில் இயற்றிய ஆசிரியர் பர்த்ருஹரி என்பார் வடமொழியில் சிறந்த புலமையாளர். இவர் கி. பி. ஆறும் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பது பி. சா. சுப்ரமணிய சாஸ்திரியார் கருத்து. பர்த்ருஹரி இந்த நீதிசதகமேயன்றி வைராக்கிய சதகம், சிருங்கார சதகம் ஆகிய நூல்களையும் வடமொழியில் இயற்றியுள்ளார். அவைகளும்' தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன என்று தெரிகின்றது.

இந்நூலைத் தமிழில் மொழிபெயர்த்தவர் ம. மாணிக்க வாசகம் பிள்ளை என்பவர்.

இவர் கி. பி. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர். வடமொழியினின்று இந்நூலை இவர் மொழி பெயர்த்திருந்தாலும் மூலநூலின் கருத்தோடு இயைபுபட்டு இந்நூல் விளங்குகின்றது கருதத்தக்கது.

இந்நூலில் கல்வி, வீரம், பொருள், தீயோர், நல்லோர், உதவி, துணிவு, கடவுள், ஊழ் முதலிய பொருள்களைப்பற்றி விரித்துரைக்கப்பட்டுள்ளன.

மூர்க்கர் குணத்தை மாற்றுதல் இயலாது என்ற கருத்தை விளக்கும் செய்யுளில்,

'...அலைவீசும் ஆர்கலியைத் தாண்டலாம்
மூர்க்கனைச்சீ ராக்கலா மோ?'

என்று கூறப்பட்டுள்ளது. அலைகடலைத் தாண்டுவது கூட எளிய செயல்; ஆனால் மூர்க்கர் மனத்தை மாற்றுதல் அரிய செயல் என்ற கருத்தை மிகவும் சுவைபட விளக்கியுள்ளார் ஆசிரியர்.

இறுதியில்,

'அற்பமதியால் அனைத்துமுணர்ந் தோமென்னும்
அற்பருக்கார் சொல்வார் அறிவு'

என்ற கேள்வியை எழுப்பியுள்ளார்.

கல்வியின் பெருமைபற்றிப் பேசும் பாடல்,

'கள்ளன் கொடுபோகான் கல்விச்செல் வத்தையது
கொள்ளைகொள்ள இன்பங் கொடுக்குமே—அள்ளக்
குறையா தழியாது கூர்ந்ததுபெற் றோரைத்
தறையாளு வோனுமொவ்வான் சால்பு'

என வருகின்றது பெரும்பாலும் கீழ்க்காணும் நாலடியார் பாடலொன்றின் கருத்தை ஒத்துள்ளதைக் காணலாம்.

வீரத்தின் உயர்வை விளக்க,

'சிங்கம் பசித்தாலும் தீரவிளைத் தோய்ந்தாலும்
மங்கியுடல் வாடி மடிந்தாலும்—பொங்குமத
யானையையே கொல்ல வெண்ணும் அன்றியுலர் வைக்கோலைத்
தீனியெனத் தின்னுமோ சென்று'

என வந்துள்ள பாடல் நலம்பலவும் கனிந்து விளங்கக் காணலாம்.

இங்ஙனம் பிற நீதிகளைப் பற்றியும் இந்நூலில் சுவை மலிந்த பாடல்கள் பல காணப்படுகின்றன. மொழிபெயர்ப்பு நூலாயினும் முதல் நூல்போலவே அமைந்து இன்பம் பயக்கின்றது இந்நூல். நூலின் நலமறிந்து சுவையறிந்து கற்றுணர்தல் வேண்டும்.

பிற்சேர்க்கை - 1

[இதுவரை வெளிவந்துள்ள சதக நூல்கள், அவற்றை இயற்றிய ஆசிரியர்கள், அவர்கள் வாழ்ந்த காலம் ஆகிய விபரங்கள் நமக்குக் கிடைத்துள்ள சான்றுகளின் துணைகொண்டு அறிந்த வரையில் கீழே தொகுத்துத் தரப்பட்டுள்ளன. சிற்சில நூல்கள் பெயரளவில்அறியப்படுகின்றனவே யன்றி, அவற்றைப் பற்றிய பிற விவரங்கள் அறிதற்கியலவில்லை. அறிய இயலாத இடங்களில் கேள்விக் குறிகள் இடப்பட்டுள்ளன.]

எண்	நூற் பெயர்	ஆசிரியர் பெயர்	காலம்
1.	அகத்தீசர் சதகம்	மத்தான் சாகிப்பு	19-ஆம் நூற். முற்பகுதி
2.	அண்ணுமலையார் சதகம்	மாம்பாக்கம் திருச்சிற்றம்பல நாவலர்	19-ஆம் நூற். பிற்பகுதி
3.	அரபிச் சதகம்	அப்துல் ரஹ்மான்	19-ஆம் நூற்ருண்டு
4.	அருணுசல சதகம்	காஞ்சி சபாபதி முதலியார்	20-ஆம் நூற். முற்பகுதி
5.	அவையாம்பிகை சதகம்	நல்லத்துக்குடி கிருஷ்ணையர்	19-ஆம் நூற். பிற்பகுதி
6.	அறப்பளீசுர சதகம்	அம்பலவாணக் கவிராயர்	18-ஆம் நூற். முற்பகுதி
7.	இயேசுநாதர் திருச்சதகம்	ஆணல்	19-ஆம் நூற். பிற்பகுதி
8.	இலக்குமிகாந்த சதகம்	சீனிவாச ஐயர்	?
9.	ஈழமண்டல சதகம்	க. வேற்பிள்ளை	கி. பி. 1847-1930
10.	உமாயேசுர சதகம்	?	?
11.	எம்பிரான் சதகம்	கோபாலகிருட்டிண தாசர்	18-ஆம் நூற்ருண்டு
12.	கந்தபுராண சதகம்	முத்துக்குமார தாசர்	20-ஆம் நூற். முற்பகுதி
13.	கறுப்பண்ணசாமி சதகம்	இராமசாமிக் கவிராயர்	19-ஆம் நூற். பிற்பகுதி

எண்	நூற் பெயர்	ஆசிரியர் பெயர்	காலம்
14.	காந்தி சதகம்	கா. மு. சுந்தர முதலியார்	20-ஆம் நூற். முற்பகுதி
15.	கார்மண்டல சதகம்	ஆறைகிழார்	கி. பி. 1025–1070
16.	கானாட்டுச் சதகம்	?	?
17.	குமரேச சதகம்	குருபாததாசர்	18-ஆம் நூற். முற்பகுதி
18.	குருநாதர் சதகம்	கருணையானந்த சுவாமி	?
19.	கைலாசநாதர் சதகம்	சிதம்பரவாணர்	?
20.	கொங்குமண்டல சதகம்	கார்மேகக் கவிஞர்	?
21.	கோகுல சதகம்	பாலூர் அமிர்த கவிராயர்	?
22.	கோதண்டராம சதகம்	இராமதாசன்	19-ஆம் நூற். பிற்பகுதி
23.	கோவிந்த சதகம்	நாராயண பாரதி	18-ஆம் நூற். முற்பகுதி
24.	சங்கர சதகம்	லா.சி. சுப்பிரமணியசெட்டியார்	20-ஆம் நூற். முற்பகுதி
25.	சதானந்த சதகம்	பொன்னுசாமி	19-ஆம் நூற். பிற்பகுதி
26.	சதுரலிங்க சதகம்	?	?
27.	சன்மார்க்க சதகம்	வேதகிரி முதலியார்	கி. பி. 1795-1852
28.	சிங்காரவேலர் சதகம்	முத்துச்சாமி கவிராயர்	20-ஆம் நூற். முற்பகுதி
29.	சிருங்கார சதகம்	சுவாமிநாத தேசிகர்	17-ஆம் நூற். பிற்பகுதி
30.	சிவசங்கர சதகம்	வீராசாமி உபாத்தியாயர்	19-ஆம் நூற். பிற்பகுதி
31.	சிறீ விருத்தீசுரர் சதகம்	சுப்பராயப் புலவர்	20-ஆம் நூற். முற்பகுதி
32.	சீறாச் சதகம்	மகமத் சுல்தான் இபின் அஹமத்	19-ஆம் நூற். பிற்பகுதி
33.	சுமதி சதகம்	சமரபுரி முதலியார்	20-ஆம் நூற். முற்பகுதி
34.	செயங்கொண்டார் சதகம்	முத்தப்பச் செட்டியார்	18-ஆம் நூற். பிற்பகுதி
35.	செல்லாண்டியம்மன் சதகம்	சக்கரபாணி ஆச்சாரியார்	?
36.	சோழமண்டல சதகம்	ஆத்மநாத தேசிகர்	கி. பி. 1650-1728

எண்	நூற் பெயர்	ஆசிரியர் பெயர்	காலம்
37.	தண்டலையார் சதகம்	படிக்காசுப் புலவர்	கி. பி. 1686-1723
38.	திருச்செங்கோட்டுச் சதகம்	கிருட்டிணசாமி முதலியார்	19-ஆம் நூற். பிற்பகுதி
39.	திருத்தொண்டர் சதகம்	மலைக்கொழுந்து நாவலர்	?
40.	திருப்போரூர் சதகம்	புரசை சபாபதி முதலியார்	?
41.	திருப்போரூர் பிரணவாசல சதகம்	புரசை சபாபதி முதலியார்	?
42.	திருவேங்கட சதகம்	நாராயண பாரதி	18-ஆம் நூற். முற்பகுதி
43.	தில்லைக் கற்பக விநாயகர் சதகம்	சிதம்பரச் செட்டியார்	20-ஆம் நூற். முற்பகுதி
44.	தொண்டமண்டல சதகம்	வடலூர் இராமலிங்க சுவாமி	
45.	தொண்டைமண்டலசதகம்	படிக்காசுப் புலவர்	கி. பி. 1686-1723
46.	நடராச சதகம்	சிதம்பரநாத முனிவர்	18-ஆம் நூற்றாண்டு
47.	நந்தமண்டல சதகம்	?	?
48.	நந்திசர் சதகம்	மத்தான் சாகிப்பு	19-ஆம் நூற். முற்பகுதி
49.	நானிலைச் சதகம்	தண்டபாணி அடிகள்	19-ஆம் நூற். முற்பகுதி
50.	நியாய சதகம்	?	?
51.	நீதி சதகம்	சுவாமிநாத தேசிகர்	17-ஆம் நூற். பிற்பகுதி
52.	பர்த்ருஹரி நீதி சதகம்	ம. மாணிக்கவாசகம் பிள்ளை	20-ஆம் நூற். முற்பகுதி
53.	பழனியாண்டவர் சதகம்	சேலம் குமாரசாமி முதலியார்	
54.	பாண்டிமண்டல சதகம்	ஐயம்பெருமாளாசிரியர்	20-ஆம் நூற். முற்பகுதி
55.	பிரதான சதகம்	?	?
56.	புவனேசுவரி சதகம்	?	?
57.	மகாபாரத சதகம்	கிருட்டிணமூர்த்தி ஐயர்	20-ஆம் நூற். முற்பகுதி
58.	மழவை சிங்கார சதகம்	மகாலிங்க ஐயர்	19-ஆம் நூற். பிற்பகுதி

எண்	நூற் பெயர்	ஆசிரியர் பெயர்	காலம்
59.	மனுநீதி சதகம்	வேதகிரி முதலியார்	கி. பி. 1795-1852
60.	மனுவியாக்கியான சதகம்	வேதகிரி முதலியார்	கி. பி. 1795-1852
61.	மிழலைச் சதகம்	சர்க்கரைப் புலவர்	17-ஆம் நூற். முற்பகுதி
62.	மீனுட்சியம்மை சதகம்	மீனுட்சிசுந்தரம் பிள்ளை	
63.	மெய்கண்ட வேலாயுத சதகம்	அழகுமுத்துப் புலவர்	19-ஆம் நூற். பிற்பகுதி
64.	வடவேங்கட நாராயண சதகம்	நாராயணதாசர்	?
65.	வானமாமலை சதகம்	தெய்வநாயகப்பெருமாள்நயினுர்	19-ஆம் நூற். பிற்பகுதி
66.	வீரபத்ர சதகம்	சின்னத்தம்பி	கி. பி. 1830-1878
67.	வேலாயுத சதகம்	கந்தப்பையர்	18-ஆம் நூற். பிற்பகுதி
68.	வைகுந்த சதகம்	?	?
69.	வைராக்கிய சதகம்	சாந்தலிங்க சுவாமிகள்	17-ஆம் நூற். முற்பகுதி

பிற்சேர்க்கை - 2

[பழமொழிகளைத் தொடர்புற அமைத்துப் பாடப் பெற்றன சில சதகங்கள். அவற்றில் காணப்பெறும் பழமொழிகள் இங்கு அகரவரிசைப்படுத்தித் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.]

1. தண்டலையார் சதகம்

அக்காள் இருந்தால் மச்சான் உறவு.

அச்சிக்குப் போனாலும் அகப்பை அரைக்காசுதான்.

அரைக்காசுக்குப் போனமானம் ஆயிரம் பொன் கொடுத்தாலும் வராது.

அற்பருக்கு வாழ்வுவந்தால் அர்த்தராத்திரியில் குடை பிடிப்பர்.

அன்னநடை நடக்கப் போய் தன்னடையும் கெட்டதாம்.

ஆடு கிடந்த இடத்தில் அதன் மயிரும் கிடவாது.

ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு.

ஆலமரம் பழுத்தால் பறவையிடம் சீட்டனுப்புவார் யார்?

இட்டபடியே ஒழிய ஆசைப்பட்டுப் பலனில்லை.

இரக்கப் போனாலும் சிறக்கப்போ.

இரப்பான் சோற்றுக்கு வெண்சோறு பஞ்சமா?

இரவு வேளையில் உருத்திராட்சப் பூனை போல்.

இல்லாதது வராது; உள்ளது போகாது.

இளஞ்சிங்கம் மதயானைக் கஞ்சுமா?

இளைத்தவன் பெண்டாட்டி எல்லோருக்கும் மைத்துனி.

உப்பிட்டவரை உள்ளளவும் நினை.

உயரஉயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?

உள்ளே பகை; உதட்டில் உறவு.

ஊரில் ஒருவனே தோழன் ஆரும் அற்றதே தாரம்.
ஊரோட உடன் ஓடு; நாடு ஓட நடுவோடு.
எட்டி பழுத்தால் என்? ஈயாதார் வாழ்ந்தால் என்?
எண்ணமெல்லாம் பொய், எழுத்தின்படி மெய்.
எய்தவர் இருக்க அம்பை நோவதேன்?
எலியழுதாலும் பூனை பிடித்தது விடுமா?
எறும்பைப் பார்த்துக் கழுதையைக் கைவிட்டதுபோல்.
ஏன்கருடா சுகமா என்றதுபோல்.
ஐங்காதம் போனாலும் தன்பாவம் தன்னோடு.
கங்கையிலே படர்ந்தாலும் பேய்ச்சுரைக்காய் நல்லதாமோ?
கடும் தேட்டுக் கண்ணைக் கெடுக்கும்.
கலியாணத்தில் பஞ்சம் இல்லை.
கழுதை புவியில் இருந்தால் என்ன? பாதாளத்தில் இருந்தாலென்ன?
காட்டுக்கு எறித்த நிலவும் கானலுக்குப் பெய்த மழையும்.
காதவழி பேரில்லான் கழுதையோடு ஒக்கும்.
காதுக்குக் கடுக்கன் முகத்துக்கு அழகு.
காரிகை கற்றுக் கவிபாடுவதினும் பேரிகைகொட்டிப் பிழைப்பது நன்று.
காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.
குங்குமஞ் சுமந்த கழுதைபோல.
குரங்கின் கையிற் கொடுத்த பூமாலை.
குருடனுக்குக் குருடன் கோல் கொடுத்தால்போல.
குறுணி மை இட்டாலும் குறிவடிவம் கண்ணுகாது.
கைப்புண்ணுக்குக் கண்ணாடி எதற்கு?
கொக்கென்று நினைத்தனையோ கொங்கணவா?
கொடிறும் பேதையும் கொண்டது விடா.
கொடுங்கோல் மன்னன் நாட்டிலும் கடும் புலி வாழும் காடுநன்று.

கொல்லத் தெருவினில் ஊசி விற்க முடியாது.

கோடாரிக் காம்பு குலத்துக்கீனம்.

சந்திரனைப் பார்த்து நாய் குரைத்தாற்போல.

சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தாற்போல.

சருகு அரிக்க நேரமேயொழிய குளிர் காயநேர மில்லை.

சற்குருவைப் பழித்தோர் சாய்ந்தே போவார்.

சன்னதம் குலைந்தால் கும்பிடு எங்கே?

சாகுங் காலத்தில் சங்கரா என்றால் முடியுமோ?

சிவபூசையில் கரடி வந்ததுபோல.

செங் கோல ரசனே தெய்வமாவான்.

செவிடன் காதில் சங்கு ஊதினாற்போல்.

சொக்கட்டான் சூது பொல்லாச் சூது.

சொர்க்கத்துக்குப் போகும்போது கக்கத்தில் ராட்டினத்தைச் சுமந்தானும்.

சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை.

சோற்றுக் கில்லாச் சுப்பன் சொன்னவெல்லாங் கேட்பான்.

தன்வினை தன்னைச் சுடும்; ஓட்டப்பம் வீட்டைச் சுடும்.

தன்னுயிரைப் போல் மன்னுயிரை நினை.

தாயைப் பழித்து மகள் அவிசாரி யானாளாம்.

தானென்று நினைக்கத் தெய்வமொன்று நினைத்தது.

திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை.

திருடிச் சென்ற கள்ளன் நல்லவர் ஆனானும்.

திருவிளக்கிட்டார்தமையே தெய்வம் அளித்திடும்.

தினை விதைத்தவன் தினையறுப்பான்; வினை விதைத்தவன் வினையறுப்பான்.

துறவறமும் பழிப்பின்றேல் எழிலதாகும்.

துறவிக்கு வேந்தனும் துரும்பு.

தேசமெல்லாம் பறக்கும் காகம் அதுஇருக்கும் கொம்பறியாது.

நல்லதுகண்டால் பெரியோர் நாயகனுக்கு நல்குவார்.
நல்லமாட்டுக்கு ஓரடி; நல்ல மனிதருக்கு ஒரு சொல்.
நாணமில்லாக் கூத்திக்கு நாலு திக்கும் வாயில்.
நாய் அறியுமோ ஒரு சந்திப் பானையை.
நாழிநெல்லுக்கு ஒரு புடவை விற்ருலும் நாய்
நிர்வாணந்தான்.
நிறைகுடம் தளும்பாது; குறை குடம் கூத்தாடும்.
நெருப்பைச் சிறிதென்று நினைக்கலாமா ?
நெற்றிக்கண் காட்டினும் குற்றம் குற்றமே.
பகடிக்கோ பணம் பத்து; திருப்பாட்டுக்கு ஒரு காசு.
பசுவைக் கொன்று செருப்பு தானமா ?
படுக்கை சுகம் மெத்தை யறியாது.
பணம் பந்தியிலே; குலம் குப்பையிலே.
பன்றிபல ஈன்றும் என்ன ?
பனங்காட்டு நரி சலசலப்புக் கஞ்சாது.
பனி பெய்து குளம் நிறையுமா ?
பனையடியிலிருந்து பாலைக்குடித்தாலும் கள்குடித்தா
னென்பார்.
பிச்சைச் சோற்றினுக் கில்லை பேச்சுத்தான்.
பிடாரியைப் பெண்டுவைத்துக் கொண்டதுபோல.
பித்தருக்குத் தங்குணமே செம்மையான பெற்றியாகும்.
பித்தளை நாற்றம் போகாது.
பிள்ளைபெற்ருரைப் பார்த்து பெருமூச்செறிந்தாற்போல.
புற்றடி மண் மருந்தும் ஆகும்.
பெண் என்ருல் பேயும் இரங்கும்.
பெற்ற தாய் பசித்திருக்கப் பிராமணபோசனமா ?
பொய்சொல்லும் வாய்க்குப் போசனமில்லை.
பொற்பூவில் நாற்றமும் புன்முருக்கும் பூவுமென.
பொறுத்தார் பூமியாள்வார்; பொங்கினவர் காடாள்வார்.

மகாதேவர் ஆடிடத்தில் பேய்களும் ஆடிடுமே.
மரம் வைத்தவன் தண்ணீர் வார்ப்பான்.
மலைமீதில் இருப்பவர்மீது பன்றிபாய்வதெவ்வாறு ?
மழை விட்டும் தூவானம் விடவில்லை.
மாரிபதின் கலநீரில் கோடைதனில் ஒரு குடம் நீர்வண்மை.
முதுகினைத் தேய்என்றால் முலைமீது கையிட்டானும்.
முலைகுத்தும் வலி சவலை மகவுக்குத் தெரியாது.
முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கமுடியுமா ?
வழுவழுத்த உறவைவிட வயிரப்பகை சிறந்தது.
வான் செய்த நன்றிக்கு வையகம் என்செய்யும் ?
விபசாரம் செய்தாரைச் சுட்டாலும் விட்டிடாரே.
விருந் தில்லாத சோறு மருந்து.
வீட்டில் அடங்காத பிள்ளை ஊரில் அடங்கிவிடும்.
வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைந்தானும்.

2. செயங்கொண்டார் சதகம்

ஆகாசக் கோட்டைக் கட்டியதுபோல.
ஆமை தன் வாயால் கெட்டதுபோல்.
ஆற்றில் ஒரு காலும் சேற்றில் ஒரு காலும்.
இச்சையுள்ள காமுகர்க்குக் கண் கண்டவிடத்திலே.
இடுவது பிச்சை ; பின்பு பெறுவது மோட்சம்.
இராமன் ஆண்டால் என்ன ? இராவணன் ஆண்டால் என்ன ?
உண்டென்ற பேருக்கு ஈசன் உண்டு ; இல்லையென்ற பேர்க்கு இல்லை.
உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது.
உறவைப் போலிருந்து குளவியைப்போல் கொட்டினாராம்.
உனக்கு மழை பெய்யும் ; எனக்கு இரவல் நீர்தா வென்றானும்.
ஊரிரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்.
எண்சாண் உடம்பில் சிரசே பிரதானம்.

எண்ணெயைத் துடைக்கலாம் ; எழுத்தைத் துடைக்க முடியாது.

எதிரிக்கஞ்சி, படைக்குப் போகாதவன் நல்ல சேவகன் என்று கூறிக்கொண்டானும்.

எறும்புக்கும் தன் கையால் எண்சாண் மெய்யே.

கடுகு சிறுத்தாலும் காரம் போகாது.

கண்டதைக் கற்பவன் பண்டிதனுவான்.

கண்ணாரக் கண்டதும் பொய் ; காதால் கேட்டதும் பொய் ; தீர விசாரித்தறிவதே மெய்.

கணக்கனுக்குக் கைக்கூலி கட்டிக் குடியிருக்கக் கடனென்றாராம்

கம்மாளன் பசுவைக் காதறுத்துக் கொள்வானும்.

கல்விக் கழகு கசடற மொழிதல்.

காணியை நட்டபின் களத்தில் நிற்பதே நன்மை.

காத்திருந்தோன் பெண்டாட்டியை நேத்து வந்தவன் கொண்டு போனன்.

காமிக்கு முறையில்லை.

கீர்த்தியும் அபகீர்த்தியும் வந்தாற் போகாது.

குப்பையில் கிடந்தாலும் குன்றிமணி நிறத்திற் குறையாது.

குலவித்தை கல்லாமல் பாகம்படும்.

கொண்டவனே தூற்றும்போது கூரையொக்கத் தூற்றும்.

கொன்றாரைக் கொல்லும் அல்லால் கொலை விடாது.

கோபம் பெரும் பாவம்.

சாகத் துணிந்தவனுக்குச் சமுத்திரம் முழங்காலளவு.

சாட்சிக்காரன் காலில் விழுவதைவிட சண்டைக்காரன் காலில் விழுவதுமேல்.

சிறுக்கி மனந் தெரியாமல் செடி தூக்கி அலைந்தானும்.

சின்னப் பாம்பானுலும் பெரிய கொம்பால் அடி.

சீனிவெல்லம் போட்டு நாழிப்பால் வார்த்தாலும் நடுவே சொல்வார் அறிவுள்ளார்.

சுங்கம் மாறியபோது சுண்ணும்பும் கொடுக்கார்.

செய்தவம் மறந்தால் கைதவ மாகும்,

தகப்பனெரு பாக்கு ; பிள்ளையொரு தோப்பு.

தம்பி பிறந்து தரையாம்.

தருமம் தலைகாக்கும்.

தவத்தோர் மனமழுங்கச் செய்யக் கூடாது.

தன்பானை தனைச்சாயப் பிடிப்பதுண்டோ?

தன்னுலே தான் மெலிந்தால் அண்ணுவி என்ன செய்வான் ?

தன்னுயிர்போல் மன்னுயிரையும் எண்ணுக.

தாய்க்கு விளைந்தாலும் தனக்கு விளையத் தவஞ் செய்வாராம்.

தீவினை தானும் செய்தவர்க்கே சேரும்.

தொழுவாரெல்லாம் உழுவார் தலைக்கடையில்.

நல்லது கண்டால் இறைவன் தனக்கென்பார் நல்லோர்.

நாவிதன் செய்தியறிந்து குடுமியைப் பத்திரப்படுத்திஞனும்.

நாளை யென்பது இல்லை யென்பதற் கடையாளம்.

நிழலினருமை வெய்யிலில் தெரியும்.

நெருப்பை அறியாது தொட்டாலும் சுட்டிடுமே.

நெல்லுடன் பதரும் சேர்ந்தே இருக்கும்.

பகைவரிடம் நல்ல வார்த்தை சொன்னுல் பொல்லாப்புஇல்லை.

பசுத்தோல் போர்த்தி வந்த புலியின் கதை போலவே.

படைக்கு ஒடிப் பிழைப்பர் ; பஞ்சத்திற்கிருந்து பிழைப்பர்.

பத்தருளத்தில் ஈசன் குடியிருப்பான்.

பத்தினி வாக்கும் உத்தமி வாக்கும் பலித்தே விடும்.

பதிவிரதையானுல் தேவடியாள் வீட்டிலும் தங்கலாம்.

பழக்கமேனும் சரசமிஞ்சி ரவிக்கையிற் கை போடக் கூடாது.

பாத்திரமறிந்து பிச்சையிடு.

பார்ப்பாரிடத்தில் வாயளவிலும் பேசக் கூடாது.

புண்ணியத்துக் குழும் எருதைப் பல் பிடித்துப் பார்ப்பார்.

புத்திமான் பலவானுவான்.

புதுவெள்ளம் வர, பழைய வெள்ளமும் போனதாம்.
பெண்ணென்றால் பேயு மிரங்கும்.
பெரியோரைத் துணைகொள்.
பெருங்காற்றில் நீச்சறியாதவரை வெள்ளம் கொண்டுபோம்.
பெருமரத்தைச் சுற்றிய கொடியும் சாகாது.
போரில் குதிரை நடவாவிடின் வீரர் பறந்திடுவார்.
மலை பெரிதாயினும் சிற்றுளியால் தகர்க்கப்படும்.
மன்னவன் எப்படியோ மன்னுயிரும் அப்படியே.
மானமிழந்தபின் வாழாமை நன்று.
முள்ளாலே எடுப்பதைக் கோடாலியால் எடுத்தானும்.
மூத்தது மோழை ; இளையது காளை.
யானை நிழல் பார்க்கும்போது, தவளை வந்து கலக்கியதாம்.
யோசனையில் துற்புத்தி மந்திரியால் அரசுக்கே ஈனம்.
வஞ்சம் நெஞ்சைப் பிளக்கும்.
வரும் விதி வந்தால் வளைந்தாடும் பானையும்.
வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.
வலியாருக்கு வலியாரும் இருப்பர்.
வித்துவானும் மதயானையும் இரண்டும் ஒப்பாகும்.
வெண்ணீறே வினையகற்றும்.
வெண்ணெய் திரண்டு வரும் வேளையில் தாழி யுடைந்தது போல.
வெள்ளத்தோடு போனாலும் ஓடக்காரனுக்கு அரைக்காசு கொடுக்கமாட்டார்.
வெள்ளம் வருமுன்னர் அணையைக் கோலவேண்டும்.
வேண்டுமென்று நூற்றால் மெல்லியதாய் நூற்றிடுவர்.

3. கோவிந்த சதகம்

அயன் கணக்கு யாருக்கும் தப்பாது.
அரைக்காசுக்குப் போன கற்பு ஆயிரம் கொடுத்தாலும் வராது.

அழிந்த நந்தவனத்தில் அசுவமேய்ந்தென்ன? கழுதை மேய்ந்தென்ன?

அற்பருக்கு வாழ்வு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பர்.

ஆடு கொழுப்பது இடையனுக்கு லாபம்.

ஆண்டி கையில் அகப்பட்ட குரங்காய் அலேவர்.

ஆயிரம் பசுக்களி லொரு பசு வுதைத்துக் கொண்டால் என்ன?

ஆனே தன்னேக் கட்டுதற்குச் சங்கிலியைத் தானே எடுத்துக் கொடுக்கும்.

இயல்பாய் மணமில்லாச் சந்தனக் கட்டை இழைத்தாலும் மணக்காது.

இராவுத்தனேத் தள்ளின குதிரை குழியும் பறித்ததாம்.

இறந்தவன் பிள்ளே இருந்தவன் அடைக்கலம்.

உடும்பு போனுலும் போகட்டும் ; கையை விட்டால் போதும்.

உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது.

எய்தவனிருக்க அம்பை நோவதேன்?

எருது ஈன்றதென்ருல் கொட்டாயில் கட்டென்பாராம்.

எல்லே பாழ்பட்டாலுங் கொல்லேக் கடமை விடார்.

ஏர் பிடித்தவன் என்ன செய்வான் ? பானே பிடித்தவள் பாக்கியம்.

ஐங்காதம் போனுலும் அகப்பைவிலே அரைக்காசுதான்.

ஒரு புத்திரனும் குரு புத்திரன் ஆகான்.

கங்கையில் மூழ்கினுலும் காக்கை அன்னம் ஆகுமா?

கசக்கி முகரல் கூடாது.

கப்பலேறிப்பட்ட கடன் கொட்டை நூற்ருே விடியும்?

கரும்பு கசப்பது வாயின் குற்றம்.

கரும்பு தின்னக் கூலி கொடுப்பார்களா?

கரும்பு ருசியென்று வேரோடு பிடுங்கலாகாது.

கரையான் புற்றில் அரவம் குடி கொண்டதுபோல்.

கவி கொண்டார்க்குங் கீர்த்தி கலைப்பார்க்குங் கீர்த்தியா?
கழுதைக்கு வரி கட்டினுல் குதிரையாகுமா?
காலத்துக்குத் தக்க கோலம் கொள்ள வேண்டும்.
கிளியை வளர்த்துப் பூனை கையில் கொடுப்பாரா?
குங்குமஞ் சுமந்த கழுதை மணமறியாது.
குட்டிக்கரணம் போட்டாலும் கொடுப்பதரிது.
குட்டுப்பட்டாலும் மோதிரக் கையால் குட்டுப்பட வேண்டும்.
குடியிருக்கும் வீட்டில் கொள்ளிவைத்ததுபோல்.
குருவிக்கூட்டைக் கோலால் குலைப்பார்களா?
குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே.
குளத்துக்கு மழை குந்தாணிபோல் பெய்யுமா?
குளத்தைக் கலக்கிப் பருந்துக் கிரையிட்டதுபோல்.
குளப்படி நீரிறைத்தால் கடற்பள்ளம் நிரம்புமா?
கூடியிருந்து குலாவுவார் வீட்டில் ஓடியுண்ணும் கூழுமினிது.
கொக்கரிப்பார்க்கா சொர்க்கம்? தீயில் குதிப்பவர்க்கல்லவா சொர்க்கம்!
கொட்டினுல் தேள்; கொட்டாவிட்டால் பிள்ளைப்பூச்சி.
கொடிக்குக் காய் கனமா?
கொடுங்கோல் அரசர்க்கீழ் குடியிருக்கலாகாது.
கொடுத்தால் குறை வராது.
கொடுப்பதைக் கெடுப்பாரைத் தெய்வமே கெடுக்கும்.
கொல்லை பாழானுலும் குருவிக்கு இரைபஞ்சமா?
கொழுமீதி கொள்ளும் குடிச்செல்வமே செல்வம்.
கொள்ளைக்குப் போனுலும் கூட்டாகாது.
கோடாலிக் காம்பு குலத்துக்கீனம்.
கோணக் கொம்பேறி யென்ன? குதிரை யேறியென்ன?
கோவுக் கழகு செங்கோல்.
கோழிகூப்பிட்டு விடியும் போது, குக்கல் குரைத்தா விடியும்?

செம்பாலடித்தகாசுங் கொடாத லோபி போல்.

தலைவன் நிற்கத் தண்டு நிற்கும்; தலைவன் மயங்கச் சர்வம் மயங்கும்.

தன்னைக் கொல்லவந்த பசுவைத் தான் கொன்றால் பாவமில்லை

தானே கனியாத காய் தடிகொண்டடித்தால் கனியாது.

திக்கு விஜயங் கொள்பவனுக்கும் வெற்றிதோல்விகாலந் தெரியாது.

துட்டப் பிள்ளைக்கு ஊரார் புத்திசொல்வார்.

தோட்டத்து நரி கூட்டத்திலே வராது.

தோட்டி போலுழைக்க வேண்டும் ; துரைபோல் சுகிக்கவேண்டும்.

நடந்தார்க்கு நாடெங்குமுறவு; கிடந்தார்க்குப் பாயே உறவு.

நரிவால் பற்றி நதி கடக்கலாகாது.

நல்லவர் கண்ணில் பட்ட நாகமுஞ் சாகாது.

நன்றிசெய்த கீரியைக் கொன்றபழங் கதைபோல.

நாய்வாலைக் குணக்கெடுக்க யாராலாகும் ?

நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தது போலாம்.

நீந்த லறியாதவனை ஆறு இழுத்துப்போம்.

நெருப்பு சிறிதென்று முன்றானையில் முடியலாமா ?

நூற்றுக்கு இருந்தாலும் கூற்றுக்கு இரை.

பட்சிக்குப் பசித்தாலும் எட்டியைத் தின்னாது.

படிக்கு அரசனிருந்தால் குடிக்குச் சேதமில்லை.

படியாள்வார் நீதி தப்பில் குடியாரிருப்பார் குவலயத்தில் ?

பரத்தைக்குக் கொடுக்கும் பணயத்தைக் குடிப்பெண் வாங்கிக் குலம்கெடுவாளா ?

பன்றிக்குட்டிக் கொரு சந்தியேன் ?

பன்றிக் குட்டி பருத்த யானைக்குட்டி யாகுமா ?

பன்றியின் பின்போன பசுக்கன்றும் மலந்தின்னும்.

பனங்காட்டிலிருந்து கொண்டு பால்குடித்தாலும் கள் என்பர்.

பாலைப்புகட்டுவாள் பாக்கியத்தையும் புகட்டுவாளோ ?

பிடாரியைப் பெண்டுவைத்துக் கொண்டவன் பேயன்.

புண்ணிலே கோலை விட்டதுபோல்.

புலையனுக்கு வாக்கு சுத்தியும் ஆணையுமில்லை.

பூவிற்கும் கடையிலே புல்லும் விற்பதுபோல்.

பெருமாள் நினைத்தால் வாழ்வுகுறைவா? பிரமா நினைத்தால் ஆயுள் குறைவா?

பொருளும் போகமும் கூடவாரா.

பொல்லாக் குணத்துக்கு நல்லமருந்துண்டோ?

பொன்னின் குடத்துக்குப் பொட்டிட்டுப் பார்க்கவேண்டுமா?

மழைக்குத் தண்ணீர் மொண்டுவார்ப்பவர் யார்?

மானுக்கொரு புள்ளி ஏறினுலென்ன? குறைந்தாலென்ன?

மீன்குஞ்சுக்கு நீச்சுப் பழக்கவேண்டுமா?

முத்து குலத்தால் பெருமைப்படும்; மூடர் குலத்தால் பெருமைப்படார்.

முலைசரிந்தால் வயிறு தாங்கும்.

முழுக்கட்டி பேர்க்கிற பன்றிக்குக் கொழுக்கட்டி விட்டதுபோல.

முற்ற நனைந்தார்க்குக் குளிரில்லை.

வஞ்சகரிடத்தில் வாஞ்சை காட்டினுலும் நெஞ்சகத்திலே நேசம் கொள்ளார்.

வம்பு துரைத்தனத்தாரைக் கும்பிடத்தகுமோ?

வயிற்றைப் பீறிக் காட்டினுலும் மகேந்திரசாலம் என்பார்.

வல்லார் இளைத்தால் வந்திளைப் பாறுமென்று சொல்லாதி காரர்கள் சுத்த வீரர்கள்.

வீணர்க்குங் கீர்த்திக்கும் மெத்தவுந் தூரம்.

வெள்ளாட்டிமேல் சன்னதம் வந்தால் விழுந்துவிழுந்து கும்பிடவேண்டும்.

பிற்சேர்க்கை - 3

[தொண்ணூற்ருறு வகைப் பிரபந்தங்களும் அவற்றின் விளக்கங்களும் கீழே தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.]

1. சாதகம்

திதி, வார, நட்சத்திர, யோக, கரண, ஓரை, கிரக நிலைகளை நன்கறிந்து தலைவனுக்குக் கூறுதல்.

2. பிள்ளைக்கவி

காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர் இவற்றை முறையே அகவல் விருத்தத்தால் பத்துப்பத்துப் பாடல்களில் கூறுவது ஆண்பால் பிள்ளைக்கவி. இவ்வுறுப்புகளுள் இறுதியில் உள்ள மூன்றையும் நீக்கிக் கழங்கு, அம்மானை, ஊசல் என்பவற்றைக் கூட்டிச் சொல்வது பெண்பால் பிள்ளைக்கவி.

3. பரணி

போரிடை ஆயிரம் யானைகளைக் கொன்ற தலைவனைப் பாட்டுடைத் தலைவனுகக்கொண்டு கடவுள் வாழ்த்தும், கடை திறப்பும் பாலைநிலமும், காளிகோயிலும், பேய்களோடு காளியும், காளியோடு பேய்களும் சொல்லத், தான் சொல்லக் கருதிய தலைவன் புகழ் விளங்கலும், அவன் வழியாகப் புறப் பொருள் தோன்ற வெம்போர் வழங்க விரும்பலும் என்றிவை எல்லாம் இருசீரடி முச்சீரடி ஒழித்து ஒழிந்த மற்றையடியாக ஈரடிப் பஃருழிசையால் பாடுவது.

4. கலம்பகம்

ஒருபோகும் வெண்பாவும் கலித்துறையும் முதல்கவி உறுப்பாக முற்கூறி, புயவகுப்பு, மதங்கம், அம்மானை, காலம்,

சம்பிரதம், கார், தவம், குறம், மறம், பாண், களி, சித்து, இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, தழை, ஊசல் என்னும் இப்பதினெட்டு உறுப்புகளும் இயைய, மடக்கு, மருட்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, ஆசிரியவிருத்தம், கலி விருத்தம், கலித்தாழிசை, வஞ்சித்துறை, வஞ்சிவிருத்தம், வெண்டுறை இவற்றால் இடையே வெண்பா, கலித்துறை விரவி, அந்தாதித் தொடையால் முற்றுறக் கூறுங்கால் தேவர்க்கு நூறும், அந்தணர்க்குத் தொண்ணூற்றைந்தும், அரசர்க்குத் தொண்ணூறும், வைசியர்க்கு ஐம்பதும், சூத்திரர்க்கு முப்பதுமாகப் பாடுவது.

5. அகப்பொருட் கோவை

இருவகைப்பட்ட முதற்பொருளும், பதினான்குவகைப் பட்ட கருப்பொருளும், பத்துவகைப்பட்ட உரிப்பொருளும் பொருந்திக் கைக்கிளை முதலுற்ற அன்புடைக் காமப் பகுதிய வாகும் களவு ஒழுக்கத்தினையும், கற்பு ஒழுக்கத்தினையும் கூறுதலே எல்லையாகக் கட்டளைக் கலித்துறை நானூற்றால் திணைமுதலாக, துறை ஈறுகக் கூறப்பட்ட பன்னிரண்டு அகப் பாட்டு உறுப்பும், வழுவின்றித் தோன்றப் பாடுவது. இது வெண்பா, அகவல், கலி, வஞ்சி, வண்ணம் இவற்றானும் வழங்கப்படும்.

6. ஐந்திணைச் செய்யுள்

புணர்தல் முதலிய ஐந்து உரிப்பொருளும் விளங்கக் குறிஞ்சி முதலிய ஐந்திணையும் கூறுவது.

7. வருக்கக் கோவை

அகர முதலாகிய எழுத்து வருக்கமொழிக்கு முதலாம் எழுத்தும் முறையே காரிகைத்துறைப் பாட்டாகப் பாடுவது.

8. மும்மணிக் கோவை

ஆசிரியப்பாவும் வெண்பாவும் கலித்துறையும் முப்பது பெறப் பாடுவது.

9. அங்கமாலை

ஆண்மகனுக்கும் பெண்மகளுக்கும் மிக்கென எடுத்துக் கூறும் அவயவங்களை வெண்பா வாயிலானும், வெளிவிருத்தத் தாலாயினும் பாதாதிகேசம் கேசாதிபாதம் முறை பிறழாது தொடர்வுறப் பாடுவது.

10. அட்டமங்கலம்

கடவுளைப்பாடி அக்கடவுளர் காக்க என ஆசிரியவிருத்தம் எட்டில் அந்தாதித்துக் கூறுவது.

11. அநுராகமாலை

தலைவன் கனவில் ஒருத்தியைக் கண்டுகேட்டு உண்டுயிர்த்து இனிமையுறப் புணர்ந்ததைத் தன் உயிர்ப் பாங்கற்கு உரைத்ததாக நேரிசைக் கலிவெண்பாவாற் கூறுவது.

12. இரட்டைமணிமாலை

முறையானே வெண்பாவும் கலித்துறையும் இருபஃது அந்தாதித் தொடையால் வருவது.

13. இணைமணிமாலை

வெண்பாவும் அகவலும், வெண்பாவும் கலித்துறையுமாக இரண்டிரண்டாக இணைத்து வெண்பா அகவலிணை மணிமாலை, வெண்பாகலித்துறை இணைமணிமாலை என நூறுநூறு அந்தாதித்தொடை நான்காலும் பாடுவது.

14. நவமணிமாலை

வெண்பா முதலாக வேறுபட்ட பாவும், பாவினமுமாக ஒன்பது செய்யுள் அந்தாதித்துப் பாடுவது.

15. நான்மணிமாலை

வெண்பாவும், கலித்துறையும், விருத்தமும், அகவலும் அந்தாதித் தொடையாக நாற்பது கூறுவது.

16. நாமமாலை

அகவல் அடியும் கலி அடியும் வந்து மயங்கிய வஞ்சிப் பாவால் ஆண் மக்களைப் புகழ்ந்து பாடுவது.

17. பல்சந்தமாலை

பத்துப் பத்துச் செய்யுள் ஒவ்வோர் சந்தமாக நூறு செய்யுள் கூறுவது.

18. கலம்பகமாலை

கலம்பகத்துள் கூறிய ஒருபோகும் அம்மானையும் ஊசலும் இன்றி ஏனை உறுப்புகள் எல்லாம் அமைய அவ்வாறு கூறுவது. இதனை நான்மணிமாலை என்றும் கூறுப.

19. மணிமாலை

எப்பொருள் மேலும் வெண்பா இருபதும் கலித்துறை நாற்பதும் விரவி வருவது.

20. புகழ்ச்சிமாலை

அகவல் அடியும் கலி அடியும் வந்து மயங்கிய வஞ்சிப் பாவால் மாதர்களின் சீர்மையைக் கூறுவது.

21. பெருமகிழ்ச்சிமாலை

தலைவியின் அழகு, குணம், ஆக்கம், சிறப்பினைக் கூறுவது.

22. வருக்கமாலை

மொழிக்கு முதலாம் வருக்க எழுத்தினுக்கு ஒவ்வோர் செய்யுள் கூறுவது.

23. மெய்க்கீர்த்திமாலை

சொற்சீர் அடி என்னும் கட்டுரைச் செய்யுளால் குல முறையிற் செய்த கீர்த்தியைக் கூறுவது.

24. காப்புமாலை

தெய்வம் காத்தலாக மூன்று செய்யுளானும் ஐந்து செய்யுளானும் ஏழு செய்யுளானும் பாடுவது.

25. வேனின்மாலை

இளவேனிலையும் முதுவேனிலையும் சிறப்பித்துப் பாடுவது.

26. வசந்தமாலை

தென்றலைச் சிறப்பித்துப் பாடுவது.

27. தாரகைமாலை

அருந்ததிக் கற்பின் மகளிர்க்கு இன்ன இயற்கைக் குணங்களை வகுப்பிற் கூறுவது. தூசிப்படையின் அணியைப் புகழ்ந்த வகுப்பு என்பாரும் உளர்.

28. உற்பவமாலை

திருமால் பிறப்புப் பத்தினையும் ஆசிரிய விருத்தத்தால் கூறுவது.

29. தானைமாலை

அகவலோசையில் பிறழாது ஆசிரியப்பாவால் முன்னர் எடுத்துச் சொல்லும் கொடிப் படையைக் கூறுவது.

30. மும்மணிமாலை

வெண்பாவும் கலித்துறையும் அகவலும் அந்தாதித் தொடையின் முப்பது பாடுவது.

31. தண்டகமாலை

வெண்பாவால் முப்பது செய்யுள் கூறுவது. இது வெண் புணர்ச்சி மாலை என்ப.

32. வீரவெட்சிமாலை

சுத்த வீரன் மாற்றார் ஊரில் சென்று பசு நிரை கோடற்கு வெட்சிப் பூமாலை சூடி அவ்வண்ணம் போய் நிரைக் கவர்ந்து வரில் அவனுக்கு முன்பு தசாங்கம் வைத்துப் போய் வந்த வெற்றி பாடுவது.

33. வெற்றிக் கரந்தை மஞ்சரி

பகைவர் கொண்ட தன்னிரை மீட்போர் கரந்தைப் பூமாலை சூடிப் போய் மீட்பதைக் கூறுவது.

34. போர்க்கு எழுவஞ்சி

மாற்றார்மேல் போர் குறித்துப் போகின்ற வயவேந்தர் வஞ்சிப்பூ மாலை சூடிப் புறப்படும் படை எழுச்சிச் சிறப்பை ஆசிரியப் பாவாற் கூறுவது.

35. வரலாற்றுவஞ்சி

குலமுறை பிறப்பு முதலிய மேம்பாட்டின் சிறப்பை வஞ்சிப் பாவால் கூறுவது.

36. செருக்களவஞ்சி

போர்க்களத்திலே அட்ட மனிதர் உடலையும், யானை குதிரைகளின் உடலையும், நாயும், பேயும், காகமும், கழுகும், பருந்தும் விருந்து உண்டு களித்திருக்கும் பூதமும் பேயும் பாடி ஆடும் சிறப்பைப் பாடுவது. இதனைப் பறந்தலைப் பாட்டு என்பர்.

37. காஞ்சிமாலை

மாற்றார் ஊர்ப்புறத்துக் காஞ்சிப்பூ மாலை சூடி யூன்றலைக் கூறுவது.

38. நொச்சிமாலை

புறத்து ஊன்றிய மாற்றார் கோடலின்றி நொச்சிப்பூ மாலை சூடித் தன் மதில் காக்கும் திறம் கூறுவது.

39. உழிஞைமாலை

மாற்றாரது ஊர்ப்புறம் சூழ உழிஞைப் பூமாலை சூடிப் படை வளைப்பதைக் கூறுவது.

40. தும்பைமாலை

மாற்றாருடன் தும்பை மாலை சூடிப் பொருவதைக் கூறுவது.

41. வாகைமாலை

மாற்றாரை வென்று புகழ் படைத்து வாகைமாலை சூடுவதை ஆசிரியப் பாவால் கூறுவது.

42. வாதோரண மஞ்சரி

கொலைபுரி மத யானையையும், எதிர்பொரு களிற்றினையும் அடக்கியும் வெட்டியும் பிடித்துச் சேர்த்தவரின் வீரத்தின் சிறப்பை வஞ்சிப் பாவால் கூறுவது.

43. எண் செய்யுள்

பாட்டுடைத் தலைவனது ஊரினையும் பெயரினையும் பத்து முதல் ஆயிரம் அளவும் பாடி எண்ணால் பெயர் பெறுவது.

44. தொகைநிலைச் செய்யுள்

நெடிலடிச் செய்யுளால் தொகுத்த நெடுந்தொகையும், குறளடிச் செய்யுளால் தொகுத்த குறுந்தொகையும், கலிப்பாவால் தொகுத்த கலித்தொகையும் போல்வது.

45. ஒலியலந்தாதி

பதினாறு கலை ஓரடியாக வைத்து, இங்ஙனம் நாலடிக்கு அறுபத்துநாலு கலைவகுத்துப் பல சந்தமாக வண்ணமும் கலை வைப்பும் தவறாமல் அந்தாதித்து முப்பது செய்யுள் பாடுவது சிறுபான்மை எட்டுக் கலையானும் வரப்பெறும். அன்றியும் வெண்பா, அகவல், கலித்துறை ஆகிய இம்மூன்றையும் பத்துப் பத்தாக அந்தாதித்துப் பாடுவதுமாம்.

46. பதிற்றந்தாதி

பத்து வெண்பா, பத்துக் கலித்துறைப் பொருட்டன்மை தோன்ற அந்தாதித்துப் பாடுவது.

47. நூற்றந்தாதி

நூறு வெண்பாவினாலேனும், நூறுகலித்துறையினாலேனும் அந்தாதித் தொடையால் கூறுவது.

48. உலா

இளமைப் பருவம் உற்ற தலைமகனைக் குலம், குடிப்பிறப்பு, மங்கலம், பரம்பரை இவற்றால் இன்னான் என்பது தோன்றத் தலைமையாய் மாதர் நெருங்கிய வீதியிடத்து அவன் பணிவரப் பேதை முதலிய ஏழுபருவப் பெண்களும் கண்டு தொழ உலா வந்ததாக நேரிசைக் கலிவெண்பாவால் கூறுவது.

49. உலாமடல்

கனவில் ஒரு பெண்ணைக் கண்டு கலவி இன்பம் நுகர்ந் தோன் விழித்தபின் அவள் பொருட்டு மடல் ஊர்வேன் என்பதைக் கலிவெண்பாவால் முற்றுவிப்பது.

50. வளமடல்

அறம் பொருள் இன்பம் ஆகிய அம்முக் கூறுபாட்டின் பயனை எள்ளி மங்கையர் திறத்துறூஉம் காம இன்பத்தினையே பயனெனக் கொண்டு பாட்டுடைத் தலைமகன் இயற் பெயருக்குத் தக்கதை எதுகையாக நாட்டி உரைத்து அவ் வெதுகைபட, தனிச் சொல்இன்றி இன்னிசைக் கலிவெண்பா வால் தலைமகன் இரந்து குறைபெறாது மடலேறுவதால் ஈரடி எதுகைவரப் பாடுவது.

51. ஒருபாஒருபது

அகவலும் வெண்பாவும் கலித்துறையுமாய் இவற்றுள் ஒன்றனால் அந்தாதித் தொடையால் பத்துப் பாடுவது.

52. இருபா இருபது

பத்து வெண்பாவும், பத்து அகவலும் அந்தாதித் தொடையான் இருபதிணைந்து வருவது.

53. ஆற்றுப்படை

அகவற்பாவால் விரலி, பாணர், கூத்தர், பொருநர் இந்நால்வரில் ஒருவர் பரிசிற்குப் போவாரைப் பரிசுபெற்று வருவார் ஆற்றிடைக் கண்டு தலைவன் கீர்த்தியும், கொடையும், கொற்றமும் கூறுவது

54. கண்படை நிலை

அரசரும் அரசரைப் போல்வாரும் அவைக்கண் நெடிது வைகியவழி மருத்துவர், அமைச்சர் முதலியோர் அவர்க்குக் கண்துயில் கோடலைக் கருதிக் கூறுவது.

55. துயிலெடை நிலை

தம்வலியால் பாசறைக்கண் ஒரு மனக் கவற்சியின்றித் துயின்ற அரசர்க்கு நல்ல புகழைக் கொடுத்தலைக் கருதிய சூதர் துயில் எழுப்புதலாகப் பாடுவது.

56. ஊரின் னிசை

பாட்டுடைத் தலைவன் ஊரினைச்சார இன்னிசை வெண்பாவால் தொண்ணூறேனும், எழுபதேனும், ஐம்பதேனும் பாடுவது.

57. பெயரின் னிசை

பாட்டுடைத் தலைவன் பெயரினைச்சார நேரிசை வெண்பாவால் தொண்ணூறேனும் எழுபதேனும் ஐம்பதேனும் பாடுவது.

58. பெயர் நேரிசை

பாட்டுடைத் தலைவன் பெயரினைச்சார இன்னிசை வெண்பாவால் தொண்ணூறேனும், எழுபதேனும், ஐம்பதேனும் பாடுவது.

59. ஊர் நேரிசை

பாட்டுடைத் தலைவன் ஊரினைச்சார நேரிசை வெண்பாவால் தொண்ணூறேனும், எழுபதேனும், ஐம்பதேனும் பாடுவது.

60. ஊர் வெண்பா

வெண்பாவால் ஊரைச் சிறப்பித்துப் பத்துச் செய்யுள் பாடுவது.

61. விளக்கு நிலை

வேலும், வேற்றலையும் விளங்காதோங்கியவாறுபோலக் கோலொடு விளக்கும் ஒன்றுபட்டு ஓங்குமாறு கூறுவது.

62. புறநிலை

நீ வணங்கும் தெய்வம் நின்னைப் பாதுகாப்ப நின் வழிவழி மிகுவதாக எனக் கூறுவது.

63. கடை நிலை

சான்றோர் சேணிடை வருதலால் பிறந்த வருத்தந்தீர வாயில் காக்கின்றவனுக்கு என் வரவினைத் தலைவற்கு இசை எனக் கடைக்கணித்துக் கூறுவது.

64. கையறு நிலை

கணவன் ஒரு மனைவி கழிந்துழி அவர் கட்பட்ட அழிவுப் பொருள் எல்லாம் பிறர்க்கு அறிவுறுத்தித் தாம் இறந்து படாது ஒழிந்த ஆயத்தாரும் பரிசில் பெறும் விறலியரும் தனிப்படர் உழந்த செயல் அறுநிலையைக் கூறுவது.

65. தசாங்கப்பத்து

நேரிசை வெண்பாவால் அரசன் படைத்த தசாங்கத்தினைப் பத்துச்செய்யுளால் கூறுவது.

66. தசாங்கத்தயல்

அரசன் தசாங்கத்தினை ஆசிரியவிருத்தம் பத்தினால் கூறுவது.

67. அரசன் விருத்தம்

பத்துக் கலித்துறையும், முப்பது விருத்தமும் கலித் தாழிசையுமாக மலை, கடல், நாடு, நில வருணனைகளையும், வாள்மங்கலமும், தோள்மங்கலமும் பாடிமுடிப்பது.

68. நயனப் பத்து

கண்ணினைப் பத்துச் செய்யுளால் கூறுவது.

69. பயோதரப் பத்து

முலையினைப் பத்துச் செய்யுளால் கூறுவது.

70. பாதாதி கேசம்

கலிவெண்பாவால் அடிமுதல் முடிவரையில் கூறுவது.

71. கேசாதி பாதம்

கலிவெண்பாவால் முடிமுதல் அடிவரையில் கூறுவது.

72. அலங்கார பஞ்சகம்

வெண்பா, அகவல், கலித்துறை, ஆசிரிய விருத்தம், சந்த விருத்தம் இவ்வகையே மாறிமாறி நூறு செய்யுளந்தாதித்துப் பாடுவது.

73. கைக்கிளை

ஒருதலைக் காமத்தினை ஐந்து செய்யுளால் கூறுவது அன்றி வெண்பா முப்பத்திரண்டு செய்யுளாற் கூறுவதுமாம்.

74. மங்கலவள்ளை

உயர்குலத்து உதித்த மடவரலை வெண்பா ஒன்பதாலும் வகுப்பு ஒன்பதாலும் பாடுவது.

75. தூது

ஆண்பாலும் பெண்பாலும் அவரவர் காதலைப் பாணன் முதலிய உயர்திணையுடனும் கிள்ளை முதலிய அஃறிணையுடனும் கூறித் தூதுபோய் மீள்க எனக் கலிவெண்பாவால் பாடுவது.

76. நாற்பது

காலமும் இடமும் பொருளும் ஆகிய இவற்றுள் ஒன்றினை நாற்பது வெண்பாவாற் கூறுவது.

77. குழமகன்

கலிவெண்பாவால் மாதர்கள் தங்கையிற் கண்ட இளமைத் தன்மையுடைய குழமகனைப் புகழ்ந்து பாடுவது.

78. தாண்டகம்

இருபத்தேழு எழுத்து முதலாக உயர்ந்த எழுத்தடியின வாய் எழுத்தும் குருவும் லகுவும் ஒத்துவந்தன அளவியற் ருண்டக மெனவும், எழுத்தொவ்வாதும் எழுத்தல கொவ் வாதும் வந்தன அளவழிதாண்டகம் எனவும் படும்.

79. பதிகம்

ஒரு பொருளைக் குறித்துப் பத்துச் செய்யுள் கூறுவது

80. சதகம்

அகப்பொருள் ஒன்றன் மேலாதல், புறப்பொருள் ஒன்றன் மேலாதல் நூறு செய்யுள் கூறுவது.

81. செவியறிவுறூஉ

பொங்குதலின்றிப் புரையோர் நாப்பண் நவிலுதல் கடனென அவை யடக்கியற் பொருள்உற வெண்பா முதலும் ஆசிரியம் இறுதியுமாகக் கூறுவது.

82. வாயுறை வாழ்த்து

வேம்பும் கடுவும் போல்வனவாகிய வெஞ்சொற்கள் முன்னர்த் தாங்கக்கூடாவாயினும் பின்னர்ப் பெரிதும் பயன் தருமென மெய்ப்பொருளான வெண்பா முதலும் ஆசிரியம் இறுதியுமாகக் கூறுவது.

83. புறநிலை வாழ்த்து

வழிபடு தெய்வ நிற்புறங் காப்பப் பழிதீர் செல்வமொடு வழிவழி சிறக்க என வெண்பா முதலும் ஆசிரியம் இறுதியுமாகப் பாடுவது.

84. பவனிக் காதல்

உலாக் காட்சியால் எய்திய காம மிகுதியைப் பிறரோடு கூறி வருந்துவது.

85. குறத்திப் பாட்டு

தலைவன் பவனி வரவு, மகளிர் காமுறுதல், மோகினி வரவு, உலாப் போந்த தலைவனைக் கண்டு வருந்தல், திங்கள், தென்றல் முதலிய ஆலம்பனம், பாங்கி உற்றதென்னென வினவல், தலைவி பாங்கியொடு உற்றது கூறல், பாங்கி தலைவனைப் பழித்துக் கூறல், தலைவி பாங்கியைத் தூது வேண்டல், தலைவி பாங்கியொடு தலைவன் அடையாளம் கூறல், குறத்தி வரவு, தலைவி குறத்தியொடு மலைவளம் முதலிய வினவல், குறத்தி மலைவளம் நாட்டு வளம் ஆகியன கூறல், தலைவன் தல வளம், கிளைவளம் முதலிய கூறல், குறத்தி குறிசொல்லி வந்தமை கூறல், தலைவி குறி வினவல், குறத்தி தெய்வம் பரவல், குறிதேர்ந்து நல்வரவு கூறல், தலைவி பரிசில் உதவி விடுத்தல், குறவன் வரவு, புள்வரவு கூறல், கண்ணி குத்தல், புட்படுத்தல், குறத்தியைக் காமுற்றுத் தேடல், குறவன் பாங்கனொடு குறத்தி அடையாளம் கூறல், குறவன் குறத்தியைக் கண்ணுறல், குறவன் அணி முதலிய கண்டு ஐயுற்று வினவலும், ஆண்டாண்டு குறத்தி விடை கூறலுமாகக் கூறல், பெரும்

பான்மை இவ்வகை உறுப்புகளால் அகவல், வெண்பா, தரவு கொச்சகம், கலித்துறை, கழிநெடில் விருத்தம், கலிவிருத்தம் இச் செய்யுட்களை இடையிடைக் கூறி, சிந்து முதலிய நாடகத் தமிழால் பாடுவது.

86. உழத்திப் பாட்டு

கடவுள் வணக்கம் முதலாக முறையே மூத்த பள்ளி, இளைய பள்ளி, குடும்பன் வரவோடவன் பெருமை கூறல், முறையே அவர் வரலாறு, நாட்டு வளன், குயிற் கூக்கேட் டல், மழை வேண்டிக் கடவுட் பரவல், மழைக்குறி ஓர்தல், ஆற்றின் வரவு, அதன் சிறப்பைக் காண்டல், இவற்றிற்கு இடையிடை அகப் பொருட்டுறையுங் கூறிப் பண்ணைத் தலை வன் வரவு, பள்ளிகள் இருவர் முறையீடு, இளையாளை அவனு ரப்பல், பள்ளன் வெளிப்படல், பண்ணைச் செயல் வினவல், அவனது கூறல், ஆயரை வருவித்தல், அவர் வரவு, அவர் பெருமை கூறல், மூத்த பள்ளி முறையீடு, குடும்பன் கிடை யிலிருந்தான் போல வரல், அவனைத் தொழுவின் மாட்டல், அவன் புலம்பல், மூத்த பள்ளியடிசிற் கொடுவரல், அவனவ ளோடு கூறல், அவனவளை மன்னித்தல், கேட்க வேண்டல், அவள் மறுத்தல், அவன் சூளுறவு செய்தல், அவளவனை மீட்க வேண்டிப் பண்ணைத் தலைவனை வேண்டல், விதை முதலிய வளங் கூறல். உழவருழல், காளை வெருவல், அது பள்ளனைப் பாய்தல், பள்ளிகள் புலம்பல், அவனெழுந்து வித்தல், அதைப் பண்ணைத் தலைவற் கறிவித்தல், நாறு நடல், விளைந்தபின் செப்பம் செய்தல், நெல் அளத்தல், மூத்த பள்ளி முறையீடு, பள்ளிகளுள் ஒருவர்க்கொருவர் ஏசல் என இவ்வுறுப்புகள் உற, பாட்டுடைத் தலைவன் பெருமை ஆங்காங்குத் தோன்றச் சிந்தும் விருத்தமும் விரவப் பாடுவது.

87. ஊசல்

ஆசிரிய விருத்தத்தானுதல் கலித் தாழிசையானுதல் சுற்றத்தோடும் பொலிவதாக ஆடீரூசல் ஆடாமோவூசல் என முடியப் பாடுவது.

88. எழுகூற்றிருக்கை

ஏழறையாக்கிக் குறுமக்கள் முன்னின்றும் புக்கும் போந்தும் விளையாடும் பெற்றியாகும் பெற்றியால் வழுவாது ஒன்று முதலாக ஏழ் இறுதியாக முறையானே பாடுவது.

89. கடிகை வெண்பா

தேவரிடத்தும் அரசரிடத்தும் நிகழும் காரியம் கடிகையளவிற் ரோன்றி நடப்பதாக முப்பத்திரண்டு நேரிசை வெண்பாவால் கூறுவது.

90. சின்னப் பூ

நேரிசை வெண்பாவால் அரசனது சின்னமாகிய தசாங்கத்தினைச் சிறப்பித்து, பத்து, அறுபது, எழுபது, ஐம்பது, முப்பது என்னும் எண்கள்படக் கூறுவது.

91. விருத்த இலக்கணம்

வில், வாள், வேல், செங்கோல், யானை, குதிரை, நாடு, ஊர், கொடை இவ்வொன்பதினையும் பத்துப் பத்து விருத்தங்களால் ஒன்பது வகையுறப் பாடுவது.

92. முதுகாஞ்சி

இளமை கழிந்து அறிவுமிக்கோர் இளமை கழியாத அறிவின் மாக்கட்குக் கூறுவதாம்.

93. இயன்மொழி வாழ்த்து

இக்குடிப் பிறந்தோர்க்கெல்லாம் இக்குணம் இயல்பு என்றும் அவற்றை நீயும் இயல்பாக உடையை என்றும் ஆன்றோர் போல நீயும் இயல்பாக ஈ என்றும் உயர்ந்தோர் வாழ்த்துவதாகக் கூறுவது.

94. பெருமங்கலம்

நாடோறுந் தான் மேற்கொள்ளுகின்ற சிறை செய்தன் முதலிய செற்றங்களைக் கைவிட்டுச் சிறை விடுதன் முதலிய

சிறந்த தொழில்கள் பிறந்ததற்குக் காரணமான நாளிடத்து நிகழும் வெள்ளணியைக் கூறுவது.

95. பெருங்காப்பியம்

தெய்வ வணக்கமும், செயப்படு பொருளும் இவற்றிற்கு இயைய வாழ்த்து முன்னுள்ளதாய் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பொருளும் பயக்கும் நெறியுடைத்தாய் நிகரில்லாத் தலைவனையுடைத்தாய் மலையும் கடலும் நாடும் நகரும் பருவமும் இருசுடர்த் தோற்றமும் என்றிவற்றின் வளங்களைக் கூறுதலும், மணமும் முடிகவித்தலும், பொழில் விளையாட்டும், நீர் விளையாட்டும் உண்டாட்டும், மகப் பேறும், புலவியும் கலவியும் என்றிவற்றைப் புகழ்ந்து கூறலும் ஆகிய இவை முறையே தொடர்வுறச் சுருக்கம், இலம்பகம், பரிச்சேதம் என்னும் பகுதியை உடைத்தாய் வீர முதலிய அவையும் அவற்றை விளக்கும் கருத்தும் விளங்கக் கற்றோரானியற்றப் படுவதாம். நாள் பொருள் ஒழிந்து ஏனைய உறுப்புக்களுள் சில குறைந்தியலினும் குற்றமின்று.

96. காப்பியம்

அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்களுள் ஒன்றும் பலவும் குறைந்து ஏனைய உறுப்புக்கள் மேற்கூறியவாறு இயல்வது.

துணைபுரிந்த நூல்கள்

1. அகநானூறு
2. அபிதான சிந்தாமணி - சிங்காரவேலு முதலியார்.
3. அமரவிடங்கன் குறவஞ்சி.
4. அறப்பளீசுர சதகம், குமரேச சதகம் - கா. நமச்சிவாய முதலியார் பதிப்பு - 1932
5. இலக்கண விளக்கம் - வைத்தியநாத தேசிகர்.
6. இலக்கியக்கலை - அ. ச. ஞானசம்பந்தம்.
7. இலக்கியத் தோற்றம் - மு. கோவிந்தசாமி.
8. கம்ப இராமாயணம்.
9. கலிங்கத்துப் பரணி.
10. கலைக் களஞ்சியக் கட்டுரைகள்.
11. கார் மண்டல சதகம் - ப. அ. முத்துத்தாண்டவராயப் பிள்ளை உரையுடன் - 1930.
12. குறுந்தொகை.
13. கொங்குமண்டல சதகம் - தி. அ. முத்துச்சாமிக்கோனுர் உரையுடன்.
14. சதகத்திரட்டு - முதல் பாகம் - பழைய பதிப்பு - 1921.
15. சதகத்திரட்டு - இரண்டாம் பாகம் - பழைய பதிப்பு.
16. சதகத்திரட்டு - புலவர் அரசு உரையுடன்-கழகப் பதிப்பு.
17. சிதம்பரப் பாட்டியல் - கி. இராமானுஜையங்கார் பதிப்பு
18. சிலப்பதிகாரம்.
19. சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள் - கழகப் பதிப்பு.
20. சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள் - ,,

21. சிறுபஞ்சமூலம்.

22. சிறுபிரபந்தவகைகள் - தொகுப்புநூல் -
ஒற்றுமை ஆபீஸ் வெளியீடு.

23. சீவக சிந்தாமணி - திருத்தக்கத்தேவர்.

24. சுந்தரமூர்த்தி சுவாமிகளும் கொங்குநாடும்.

25. சோழமண்டல சதகம் - சோமசுந்தரதேசிகர்
விளக்கவுரையுடன் - 1916.

26. தண்டலையார் சதகம் - சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்
குறிப்புரை - 1921.

27. தமிழ் இலக்கிய அகராதி - ந. சி. கந்தையா பிள்ளை.

28. தமிழ்ப்புலவர் அகராதி - ந. சி. கந்தையா பிள்ளை.

29. தமிழ்ப்புலவர் அகராதி - பாலூர் கண்ணப்பமுதலியார்.

30. தமிழ்ப்புலவர்கள் வரலாறு - (17-ஆம் நூற்றாண்டு)
- சு. சோமசுந்தரதேசிகர்.

31. தமிழ்ப்புலவர் வரிசை நூல்கள் – கழகப் பதிப்பு.

32. தமிழ் லெக்சிகன்.

33. திருக்குறள்

34. திருமந்திரம்

35. திருவாசகம் - தருமையாதீனப் பதிப்பு.

36. திருவாசகம் - திருச்சதகம் - பண்டிதமணி உரை.

37. தில்லைக் கற்பக விநாயகர் சதகம் - பழைய பதிப்பு-1937.

38. துடிசைப் புராணம்.

39. தொண்டைமண்டல சதகம் - பழைய பதிப்பு.

40. தொல்காப்பியம்

41. நன்னெறி.

42. நாலடியார்